## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | திருமறையின் கருத்து | 5 |
| 2. | நல்ல உணவு | 11 |
| 3. | வருமானம் பற்றி | 15 |
| 4. | படித்தரங்கள் | 17 |
| 5. | இடைப்பட்டவை | 28 |
| 6. | முதற்கோணம் | 32 |
| 7. | இரண்டாம் கோணம் | 40 |
| 8. | மூன்றாம் கோணம் | 55 |
| 9. | நான்காம் கோணம் | 62 |
| 10. | பொருளுக்குரியவன் | 69 |
| 11. | குற்ற நிவர்த்தி | 77 |
| 12. | அதிகாரிகள் குறித்து | 99 |
| 13. | பெறுகிறவர் குறித்து | 123 |
| 14. | ஆதாரங்கள் சில | 130 |
| 15. | இன்னும் சில வினாக்கள் | 170 |


# 1. திருமறையின் கருத்து

''நல்லதைச் சாப்பிடுங்கள்; நல்லதைச் செய்யுங்கள்'' என்று திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது. நல்லதையே சாப்பிட வேண்டும் என்பதும், நல்லதையே செய்யவேண்டும் என்பதும், இங்கு வலியுறுத்தப்படுகின்றன. கெட்ட உணவையும், கெட்ட செயலையும் இந்த இறைவசனம் எதிர்க்கிறது.

''உங்கள் பொருளில் தீயது கலந்தால் அதைச் சாப்பிடாதீர்கள்''.

''உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் வட்டியில் கிடைப்பதை விட்டுவிடுங்கள்''.

இந்த இறைவசனங்கள் இரண்டும், வருமானம் எப்படி இருக்கவேண்டும் என்பதைக் காட்டுகின்றன. இப்படி நல்லதையும் கெட்டதையும் பிரித்துக் காட்டும் இறை வசனங்கள், திருக்குர்ஆனில் ஏராளமாக இருக்கின்றன.

திருக்குர்ஆனைப் போலவே, நபி கருத்துக்களிலும் நல்லது கெட்டது பற்றிய பிரச்சினை மிகப் பெரும் இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

மாதிரிக்கு ஒன்று அடுத்து இடம் பெறுகிறது. ''தன் மனைவி மக்களுக்கு நல்ல உணவைச் சம்பாதிக்கும் முயற்சியில் ஒருவன் ஈடுபட்டால், அவனை அறவழியில் போர் புரியும்

வீரனுக்கு ஒப்பிடலாம். நல்ல விதமாக உலகில் வாழ்கிறவன் தியாகி எனக் கணிக்கப்படுகிறான்!''

இதோ மற்றொன்று: ''நாற்பது நாட்கள் ஒருவன், நல்ல உணவைச் சாப்பிட்டால் அவனுடைய உள்ளத்தை இறைவன் ஒளிமயமாக்கி விடுவான். அவனுடைய உள்ளத்தில் பொங்கும் அறிவு அவனது நாவின் வாயிலாக வெளியில் வரும்!''

சுஅது (ரலி) என்ற நபித்தோழர் ஒரு நாள் பெருமானாரிடம் கேட்டார். ''என் பிரார்த்தனைகள் இறைவனால் அங்கீகரிக்கப் படவேண்டும். அதற்கு ஏதேனும் வழியுண்டா?''

பெருமானார் கொடுத்த விடையில் இரண்டே இரண்டு சொற்றொடர்கள் அடங்கியிருந்தன. ''நாக்கின் சுவைக்கு நல்ல உணவைக் கொடும், நீர் கேட்கும் பிரார்த்தனைகள் அங்கீகரிக் கப்படும்.''

''ஒரு மனிதன் பத்து ரூபாய்க்கு ஒரு துணி வாங்குகிறான். அதில் தப்பான வழியில் கிடைத்த ஒரே ஒரு ரூபாய் கலந் திருந்தால் போதும், அந்தத் துணியை அவன் அணியும் போதெல்லாம் அவனுடைய இறைவணக்கம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.''

''கெட்ட வழியில் கிடைத்ததைச் சாப்பிடுவதைவிட, நெருப்பை அள்ளிப் போட்டுத் தின்பது மேலானது.''

''இறைவணக்கம் பத்துப் பகுதிகள் கொண்டது. அதில் ஒன்பது பகுதிகள் நல்ல உணவைத் தேடியடைவதில் இருக்கின்றன.''

''தீய வழியில் கிடைத்ததை வைத்து ஒருவன் தர்மம் செய்தால், அந்த தர்மம் இறைவனால் புறக்கணிக்கப்படும்.''

''மனிதனின் இரைப்பை ஒரு குளத்தைப் போன்றது. நாலாபுறமுள்ள ரத்த நாளங்கள் குளத்திலிருந்து பிரியும் வாய்க்காலைப் போன்றவை. குளத்தின் நீர் சுத்தமாக இருந்தால் தான், வாய்க்காலின் நீர் சுத்தமாக இருக்கும்!''



''உணவு என்பது வாழ்க்கைக்கு அவசியமானது, அதனை வாழ்க்கையின் அஸ்திவாரம் என்றும் சொல்லாம். ஒரு கட் டிடம் நிலைத்து நிற்க வேண்டுமென்றால், அதன் அஸ்திவாரம் உறுதியாக இருக்கவேண்டும். அஸ்திவாரத்தின் பலவீனம் அவசியம் கட்டிடத்தைப் பாதிக்கும். இதே போன்று ஒரு மனிதனின் உணவு தூயதாக இருந்தால், அவனுடைய வாழ்வு முழுதும் தூயதாக இருக்கும். அதில் கோளாறு ஏற்பட்டால், அந்தக் கோளாறு வாழ்வு முழுவதையும் பாதிக்கும். இதைத் தான் திருக்குர்ஆன், 'இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டிடம் எழுப்பியவர்கள்' என்று சுட்டிக் காட்டுகிறது.

மேற்குறிப்பிட்ட நபி கருத்துக்கள் அத்தனையும் நல்லது, கெட்டது பற்றிய தெளிவை நமக்குக் கொடுக்கின்றன. நல்ல உணவை ஆதரித்தும், தீய வருமானத்தை எதிர்த்தும் வந்திருக்கும் நபி கருத்துக்கள் எண்ணற்றவை.

இப்போது நபித்தோழர்களின் கருத்துக்களைப் பார்ப்போம். இஸ்லாத்தின் கொள்கைகளுக்குச் செயல் ரீதியாக விளக்கம் கொடுத்த அவர்கள், நம்முடைய பிரச்சினைக்கும் விளக்கம் கொடுக்கத்தான் செய்கிறார்கள்.

அபூபக்ர் (ரலி) அவர்களின் பணியாள் ஒரு சமயம், சிறிது பால் கொண்டுவந்து கொடுத்தார். அதனை அவர்கள் குடித் தார்கள். குடித்து முடித்ததும் சந்தேகம் முளைவிட்டது.

''ஆம், இது உனக்கு எப்படிக் கிடைத்தது? எந்த வருமானத்தில் இதை வாங்கினாய்?''

பணியாள் கொடுத்த விடை இதுதான்: ''சிலருக்கு நான் ஆரூடம் பார்த்துச் சொன்னேன்; அவர்கள் கொடுத்தார்கள்....''

அபூபக்ர் (ரலி) அவர்களின் முகம் மாறிற்று. விரல்களை வாயில் திணித்து, குடித்திருந்த பாலை வாந்தி எடுத்து விட்டார்கள். இந்தக் குறிப்பு 'பாவ மன்னிப்பு' என்ற நூலில் இடம் பெற்றிருந்தாலும், நபித்தோழர்களின் நேர்மை யுணர்வைக் காட்டுவதற்காகவே இதனை இங்கு மீண்டும் எழுதுகிறேன்.

''இறைவனே! உன் மன்னிப்புக்கு முறையிடுகிறேன். என் குடலும், வயிறும் பெற்ற ஒன்று குறித்து மன்னிப்புக் கேட் கிறேன்'' என்று பிரார்த்தனை செய்தார்கள்.''

இந்தச் சம்பவத்தைச் சில நபித்தோழர்கள் பெருமா னாரிடம் கூறினார்கள்.

பெருமானாரின் முகம் மலர்ந்தது. ''உங்களுக்குத் தெரி யாதா? 'ஸித்தீக்' இருக்கிறாரே, அவருடைய வயிற்றுக்குள் நல்லதைத் தவிர்த்து, வேறு எதுவும் செல்லாது. அதற்கு அவர் அனுமதி கொடுக்க மாட்டார்!''

இது போன்ற சம்பவம் ஒன்று உமர் (ரலி) அவர்களின் வாழ்விலும் நடந்திருக்கிறது. தர்மத்திற்குரிய ஒட்டகம் ஒன்றின் பாலை அவர்கள் தவறுதலாகக் குடித்து விட்டார்கள். தொண் டைக்குள் விரலைத் திணித்து வாந்தி எடுத்த பிறகுதான், அவர்கள் அமைதியடைந்தார்கள்.

''தன் வயிற்றுக்குள் செல்வது எத்தகையது என்று ஆழ்ந்து ஆராய்ந்தவர்களே, உயர்ந்த நிலையை அடைந்தார்கள்'' என்று துறவி இப்ராஹீம் பின் அத்ஹம் கூறினார்.

''நீங்கள் ஏன் 'ஸம்ஸம்' கிணற்றிலிருந்து தண்ணீர் குடிப்பதில்லை?'' என்று ஒருவர் கேட்டார்.

இப்ராஹீம் பின் அத்ஹம் விடையளித்தார்: ''தண்ணீர் எடுப்பதற்கு என்னிடம் வாளி கிடையாது. என்னிடம் ஒரு



வாளி இருந்தால், எனக்குச் சொந்தமான ஒரு வாளி இருந்தால் அவசியம் நான் தண்ணீர் குடிப்பேன்!''

''தீயதைச் சாப்பிடுகிறவர்களின் இறைவணக்கத்தை இறைவன் ஏற்றுக்கொள்ள மாட்டான்'' என்று இப்னுஅப்பாஸ் (ரலி) கூறுகிறார்.

சஹல் துஸ்தரீ (ரஹ்) கூறுகிறார்: ''நான்கு குணங்கள் ஏற்படும் வரை ஒரு மனிதன் முழுமையான நம்பிக்கையைப் பெற முடியாது. கடமையை நிறைவேற்றுவது, நல்ல உணவை உட் கொள்வது, தீயதைத் தவிர்த்து நடப்பது, ஏற்படும் சூழல்களைப் பொறுமையோடு அனுபவிப்பது!''

''இறையன்புக்கு உரித்தானவர்களின் நிலையைப்பற்றி நீங்கள் அறிய ஆசைப்படுகிறீர்களா? அப்படியானால் நல்ல உணவை மட்டுமே உட்கொள்ளுங்கள்!'' என்பதும் சஹல் துஸ்தரீ ரஹ் அவர்களின் கருத்துத்தான்.

''ஒரு மனிதன் நாற்பது நாட்கள் தீய உணவை உட் கொண்டால் அவன் உள்ளத்தில் இருள் சூழ்ந்துவிடும்'' என்பது பிரசித்தமான ஒரு சொற்றொடர்.

''அவர்கள் சம்பாதித்ததிலிருந்தே, அவர்களின் உள்ளத்தில் கறை படிந்துவிட்டது'' என்று திருக்குர்ஆன் மறுப்புத் தெரி விக்கிறது.

இதோ இப்னு முபாரக் பேசுகிறார். கேளுங்கள்: ''சந்தேகத் திற்கிடமான ஒரு வெள்ளி நாணயத்தைத் திருப்பிக் கொடுப்பது, ஒரு லட்சம் வெள்ளி நாணயங்களைச் செலவிடுவதைவிட மேலானது என்பது என் கருத்து. பின்னதைவிட முன்னதை நான் பெரிதும் விரும்புகிறேன்.''

முற்கால அறிஞர்களில் ஒருவர், தமக்குக் கொடுக்கப்பட்ட உணவை மறுத்துவிட்டார். அது குறித்து வினவப்பட்டபோது,

அவர் இப்படிப் பதில் கொடுத்தார்: ''நல்ல உணவைத் தவிர்த்து வேறு எதையும் நாங்கள் சாப்பிடுவதில்லை. இதனால் எங்கள் உள்ளம் நேர்மையோடு செயலாற்றுகிறது; எங்கள் சூழல் சீர்படுகிறது; ஆவியுலகத்தை எல்லாம் பார்க்கிறோம். நீங்கள் சாப்பிடுவதை நாங்கள் மூன்றே மூன்று நாள் சாப்பிட்டால் போதும், எங்கள் உள்ளத்திலுள்ள நம்பிக்கை மறைந்து போய் விடும்; மனத்தெளிவும் இறையச்சமும் அழிந்து போய் விடும்.....''

இப்படிக் கூறிய அறிஞரைப் பார்த்து ஒருவர் கூறினார்: ''நான் காலமெல்லாம் நோன்பு பிடிக்கிறேன். வருடத்தில் முப்பது தடவைகள் திருக்குர்ஆனை ஓதிமுடிக்கிறேன்.''

அறிஞரின் விடை கணீரென்று தெறித்து விழுந்தது. ''நேற்றிரவு நான் அருந்திக்கொண்டிருந்த பானம், இந்த வணக்கம் அனைத்தையும்விடச் சிறந்தது. காட்டு மானில் இருந்துகிடைத்த பால் அது.....''

நல்ல உணவை உயர்த்திக் காட்டும் கருத்துக்கள், மேலே நான் குறிப்பிட்டதுபோல், திருக்குர் ஆனில் மட்டுமின்றி, நபி கருத்துக்களிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஏனெனில் மனித வாழ்வுக்கு அத்தியாவசியமானது உணவு. நல்ல உணவை உட்கொள்ளும்போது நற்பண்புகளும், தீய உணவை உட்கொள்ளும்போது தீய குணங்களும் உருப்பெறுகின்றன. நல்ல உணவைக் தேடியடையாமல், கண்டதை எல்லாம், கிடைத்ததை எல்லாம் வாரிக்கொட்டி, வயிற்றை நிரப்பு கிறவர்கள் என்றைக்கும் உயர்ந்த பண்புக்கு நிலைக்களனாக முடியாது.

எனவே தீய உணவையும், அதனைக் கண்ணை மூடிக் கொண்டு உட்கொள்கிறவர்களையும் இஸ்லாம் வன்மையாக எதிர்க்கிறது.

# 2. நல்ல உணவு

நல்ல உணவு எது, கெட்ட உணவு எது, எதைச் சாப்பிடலாம், எதைச் சாப்பிடக்கூடாது என்ற பிரச்சினைகளை எல்லாம் விரிவாக ஆராயவேண்டிய கவலை நமக்குக் கிடையாது. அது சட்ட நிபுணர்களின் வேலை. இந்தப் பிரச் சினைகள் சட்ட நூல்களில் விரிவாக ஆராயப்பட்டிருக் கின்றன.

என்றாலும், 'நல்ல உணவு' எனும் தலைப்பின் கீழ் விரிவுரை கொடுக்க முற்பட்டிருக்கும் நமக்கு, ஓரளவு விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் கெட்ட உணவைப் பற்றியும் சிறிது விளக்கம் கொடுத்துத் தான் ஆக வேண்டும். ஏனெனில் கெட்டதைத் தெரிந்து கொள்ளாதவர்களால் நல்லதைப் பிரித்தறிய முடியாது. சில பொருள்கள், அவற்றிலுள்ள தீங்குகளினால் மறுக்கப் படுகின்றன. இன்னும் சில பொருள்கள், அவற்றைச் சம்பாதிக்கும்போது ஏற்படும் ஊழல்களால் மறுக்கப்படுகின்றன. இந்த இரண்டையும் மார்க்கம் கெட்டவை என்று குறிப்பிடுகிறது. அவற்றை உட்கொள்ளும் உரிமை எந்த முஸ்லிமுக்கும் கிடையாது.

உலகில் வாழும் மனிதன், உலகிலிருந்து தான் உட்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் இறைவன் மனிதனுக்கு வானத்தைப் பிய்த்துக்கொண்டு உணவு கொடுப்பதில்லை.

மனிதனின் பசிக்குப் பயன்படக் கூடியவை மூன்று. ஒன்று மண்ணிலிருந்து மனிதனுக்குக் கிடைக்கிறது, உப்பு இதற்கு சரியான உதாரணம். மற்றொன்று, மண்ணுக்கு அடியிலிருந்து மரமாகவும் செடியாகவும் வளர்ந்து வருகிறது. கனி வகைகள், கீரை வகைகள் முதலியவை இதற்கு உதாரணங்கள். வேறொன்று, உயிரினங்களிலிருந்து கிடைக்கிறது. இதற்கு உதாரணம் தேவையில்லை.

இப்படிப் பாக்கும்போது மனிதனின் உணவை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்: மண்ணிலிருந்து கிடைப்பது; மரத்திலிருந்து, செடி கொடியிலிருந்து கிடைப்பது; ஆடு மாடு முதலான உயிரினங்களிலிருந்து கிடைப்பது.

மண்ணிலிருந்து கிடைப்பது எதுவானாலும் சரி, தீங்கு ஏற்படாது என்று தெரிந்தால் சாப்பிடலாம்; தவறு கிடையாது. மண்ணிலிருந்து கிடப்பவற்றில் சில விஷத்தைப் போன்றவை. அவற்றைச் சாப்பிடக்கூடாது. உடல் நிலையில் கோளாறு ஏற்படுத்தும் எதையும் சாப்பிடுவதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை. ஆரோக்கியத்துக்காகவே உணவு வேண்டப்படுகிறது. உணவே வியாதியைத் தோற்றுவித்தால், அதனை உணவு எனும் பட்டியலிலிருந்து நீக்கிவிட வேண்டியதுதான்.

மண்ணிலிருந்து முளைவிட்டு வளரக்கூடியவை பல விதம், அவை அனைத்தும் மனிதனின் பசிக்குப் பயன்படும் என்று சொல்ல முடியாது. அவற்றில் சில ஆரோக்கியத்துக்குத் தீங்கு செய்கின்றன. வேறு சில பகுத்தறிவை மங்கவைக்கின்றன. இன்னும் சில உயிருக்கே உலை வைக்கின்றன. நோய்க்கு மருந்தாகப் பயன்படக்கூடியவை மூலிகைகள். நோயற்றவர்கள் அவற்றை உட்கொண்டால் அவசியம் ஆரோக்கியத்துக்குப் பாதகம் ஏற்படும். கள், சாராயம் முதலியவை மரத்திலிருந்தும், செடி கொடிகளிலிருந்தும் தயாரிக்கப்படுகின்றன. இவை பகுத்தறிவை மங்கவைக்கும் ஆற்றல் படைத்தவை. மரம்



செடி கொடிகளிலிருந்து கிடைக்கும் விஷ வித்து முதலானவை மனிதனின் உயிருக்கே உலை வைத்து விடுகின்றன.

இந்த மூன்றும் மனிதனுக்கு ஏதோ ஒரு விதத்தில் தீங்கு செய்கின்றன. எனவே இவற்றைப் பசிக்குப் பயன்படுத்துவது கூடாது. இவற்றைத் தவிர்த்து, மற்ற அனைத்தையும் சாப்பிடலாம்.

இப்போது நம் கவனம் ஆடு, மாடு முதலான உயிரினங்களுக்குத் திரும்புகிறது. எந்த மிருகத்தை சாப்பிடலாம், எந்த மிருகத்தை சாப்பிடக்கூடாது என்ற விவரம், உணவு பற்றி நான் எழுதியிருக்கும் நூலில் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாப்பிடத் தகுந்த மிருகங்களுக்கும் பல நிபந்தனைகள் இருக்கின்றன. மார்க்கத்திற்குட்பட்ட விதத்தில் அறுப்பது, அறுக்கும்போது அதற்குரிய ஷரத்துகளைப் பேணிக் காப்பது முதலிய நிபந்தனைகள் எல்லாம் உருவாகிவிட்டால், அவற்றைச் சாப்பிடலாம். மார்க்க ரீதியாக அறுக்கப்படாத மிருகத்தையோ, தானாகவே செத்துப்போன மிருகத்தையோ, சாப்பிடுவது கூடாது.

ஆனால் செத்துப்போன மீனைச் சாப்பிடுவது தவறல்ல. ஏனெனில் செத்துப் போவதால் அது அசுத்தமானதாக மாறி விடுகிறது என்று நம்மால் சொல்ல முடியாது.

இங்கு ஒரு விஷயத்தை மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். சட்ட ரீதியாக அறுக்கப்பட்ட ஒரு மிருகத்தை-மார்க்கம் அனுமதித்த ஒரு மிருகத்தைச் சாப்பிடலாம் என்பது உண்மைதான். என்றாலும், அந்த மிருகத்தின் பகுதிகள் அனைத்தையும் சாப்பிடுவதற்கு அனுமதியில்லை. ரத்தம் முதலானவற்றைச் சாப்பிடக்கூடாது. உறைந்துபோன உதிரத்தை வெட்டி எடுத்துச் சாப்பிடும் வழக்கம் சில இடங்களில் காணப்படுகிறது. இது வியாதிக்குத் தூது அனுப்புகிறது. எனவே இஸ்லாம் இதை மறுக்கிறது.

பொதுவாகச் சொல்வதானால், அசுத்தமான பொருள்கள் அனைத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். இப்படி ஒதுக்கித் தள்ளவேண்டிய அசுத்தப் பொருள்கள் எங்கிருந்து வருகின்றன என்றால், உயிரினத்திலிருந்தே அவை வருகின்றன. செடி கொடிகளிலிருந்து கிடைக்கும் போதைப் பொருள் களையும் நாம் அசுத்தம் என்றே குறிப்பிடுகிறோம். இவற்றைத் தவிர்த்து மற்ற அனைத்தும் மிருகங்களிலிருந்தே வருகின்றன.

ஒரு சொட்டுச் சாராயம் எண்ணெய்யிலோ, தண்ணீரிலோ விழுந்து விட்டால், அதனைச் சாப்பிடக்கூடாது. அதனைச் சாப்பிடத்தான் கூடாது. வேறு உபயோகங்களுக்குப் பயன்படுத்து வதில் குற்றம் கிடையாது. எண்ணெய்யைத் தலையில் தேய்த்துக் கொள்ளலாம்; தண்ணீரை முகம் கழுவப் பயன்படுத்தலாம்.

# 3. வருமானம் பற்றி.....

நல்ல உணவு, கெட்ட உணவு என்று பிரித்துப் பார்ப்பது போல, நல்ல வருமானம் கெட்ட வருமானம் என்றும் பிரித்துப் பார்க்கத்தான் வேண்டும். ஏனெனில் வருமானமே அனைத் துக்கும் அடிப்படை.

ஒரு மனிதனுக்கு கிடைக்கும் வருமானத்தை, ஆறு வகைகளாகப் பிரிக்கலாம்.

முதல் வகை: புதையல் எடுப்பது, வேட்டையாடுவது, ஆற்றிலிருந்து நீர் கொண்டு வருவது முதலியவை இந்த வகையைச் சேர்கின்றன். இவற்றில் வேறு யாருக்கும் உரிமை யில்லை என்றால், அவற்றை அடைந்தவர்கள் உபயோகித்துக் கொள்ளலாம். அந்நியன் ஒருவனின் தோட்டத்திற்குள் நுழைந்து வேட்டையாடுவதோ, அங்கு பாழடைந்து கிடந்த கட்டிடத்தைப் பெயர்த்துப் புதையல் எடுப்பதோ கூடாது.

இரண்டாம் வகை: போர் முனையில் கிடைக்கும் பொருள்கள் இந்த வகையைச் சேர்கின்றன. முஸ்லிம்கள் அவற்றை உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் இதற்குச் சில நிபந்தனைகள் இருக்கின்றன. அவற்றை நான் உரிய இடத்தில் எழுதியிருக்கிறேன்.

மூன்றாம் வகை: உங்களுக்குச் சேரவேண்டிய பொருள், மற்றவர்களிடம் இருந்தால், அவர்களின் திருப்தியில்லாமலே,

அதனை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். 'தானதர்மம்' எனும் நூலில் இது பற்றிய விரிவுரை அடங்கியிருக்கிறது.

**நான்காம் வகை:** ஒரு பொருளைக் கொடுத்து, அதற்குப் பதிலாக மற்றொரு பொருளைப் பெற்றுக் கொள்வது இந்த வகையில் வருகிறது. வர்த்தகம் பற்றிய நூலில் இதைப் பார்த்துக் கொள்ளுங்கள். இந்தப் பிரச்சினைகள் அங்கு விரிவாக ஆராயப் பட்டிருக்கின்றன. அவற்றை மீண்டும் இங்கு எழுதவேண்டிய தில்லை என்று நான் நினைக்கிறேன்.

**ஐந்தாம் வகை:** மற்றவர்களிடமிருந்து அன்பளிப்பாக வரும் பொருள்கள் இந்த வகைக்கு வருகின்றன. நிபந்தனை களை முறைப்படி நிறைவேற்றிவிட்டால், இவற்றை உபயோ கித்துக் கொள்ளலாம். அந்த நிபந்தனைகள் 'அன்பளிப்பு' எனும் நூலில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

**ஆறாம் வகை:** உறவினர் என்ற முறையில் கிடைக்கும் சொத்துக்கள் இந்த வகையைச் சேர்கின்றன. இதைப்பற்றிய விரிவுரை உரிய இடத்தில் வரும்.

வாசகர்களுக்குத் தெளிவு ஏற்படவேண்டும் என்பதற் காகவே இந்தப் பிரிவுகளை இங்கே விவரிக்கிறேன். இந்த வழிகளில் கிடைக்கும் வருமானம், எல்லா இடத்திலும் மார்க் கத்தின் அனுமதியைப் பெற்றதாகத்தான் இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. நிபந்தனை கவனிக்கப்படாதபோது, அது மார்க்கத்தின் கண்டனத்துக்கு இலக்காகலாம். எனவே உங்களுக்கு இப்படியொரு சந்தர்ப்பம் ஏற்பட்டால், அறிஞர் களை அணுகித் தெளிவு பெற்றுக் கொள்ளுங்கள். எடுத்த எடுப்பில் தீர்மானம் செய்து விடாதீர்கள். ஏனெனில் சட்டம் என்பது, சூழ்நிலையையொட்டி உருவாகக்கூடிய ஒன்று. சூழ்நிலை மாறும்போது சட்டமும் மாறுபடுகிறது.

# 4. படித்தரங்கள்

மார்க்கத்தின் சட்டங்களையும், தத்துவங்களையும் விளக்குவதற்கு நான் ஆரம்பத்திலிருந்தே வைத்தியத்தை உவமானமாகக் கையாண்டு வந்திருக்கிறேன். வாசகர்களுக்கு இலகுவாகப் புரியவேண்டும் என்பதற்காகவே இந்த வழியை நான் கையாண்டு வருகிறேன். எனவே, இப்போதும் வைத்தி யத்தையே நமக்குரிய உவமானமாக அமைத்துக் கொள்வது நல்லது என்று நினைக்கிறேன்.

வைத்தியர்கள் சில பொருள்களைக் குளிர்ச்சியானவை என்றும், வேறு சில பொருள்களை சூடானவை என்றும் குறிப்பிடுகிறார்கள் அல்லவா? இதே போன்றுதான் இறைவன் சில பொருள்களை நல்லவை என்றும், வேறு சில பொருள் களைக் கெட்டவை என்றும் குறிப்பிடுகிறான். முன்னதை 'ஹலால்' என்றும் பின்னதை 'ஹராம்' என்றும் சட்ட நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள். இவற்றிற்கு முறையே 'சாப்பிடத் தகுந்தது' என்றும் 'சாப்பிடக் கூடாதது' என்றும் பொருள். இவற்றையே நாம் 'நல்லது' என்றும் 'கெட்டது' என்றும் குறிப்பிடுகிறோம்.

சாப்பிடத் தகுந்த, உபயோகிக்கத் தகுந்த பொருள்களை நான்கு வகைகளாகக் கூறு போடலாம். ஆனால், இந்த நான்கு வகைகளிலேயே அவற்றைக் கட்டுப்படுத்திவிட முடியாது. அவை ஒவ்வொன்றும் எத்தனையோ உட்பிரிவுகளைப் பெற்றி ருக்கின்றன. ஏனெனில், இனிப்புப் பொருளை சூடானது என்று

வைத்தியர்கள் குறிப்பிட்டாலும், இனிப்புப் பொருள்களில் சில, வேறு சிலவற்றைவிட அதிக சூடானதாக இருக்கின்றன. இனிப்புப் பொருள் எனும் பிரிவில் இப்படி எத்தனையோ துணைப் பிரிவுகள் தோன்றுகின்றன.

***முதற் பிரிவு:*** சில பொருள்களை மார்க்கம் தடை செய்திருக்கிறது. நீதியும் நேர்மையும் உள்ளவர்கள் அவற்றை உபயோகிக்கக் கூடாது என்று நம்பப்படுகிறது. அவற்றை அவர்கள் உபயோகிக்கும்போது 'பாவிகள்' என்று பெயர் கொடுக்கப்படுகிறது. மார்க்கத் தீர்ப்புப் பெற்ற பிரச்சினைகள் அத்தனையும், இந்தப் பிரிவைச் சேர்கின்றன. அந்தப் பொருள் கள் அனைத்தையும் சட்ட நிபுணர்கள் தடை செய்திருக் கிறார்கள். அதற்குரிய ஆதாரங்களையும், உதாரணங்களையும் அவர்கள் தாம் கொடுத்த தீர்ப்புக் காகிதத்தில் தெளிவுபடுத்தி யிருக்கிறார்கள்.

எனவே இந்தப் பிரிவுக்கு இங்கு நாம் ஆதாரம் தேட வேண்டியதுமில்லை; உதாரணம் பார்க்க வேண்டியதுமில்லை. இந்தப் பிரிவில் பட்ட பொருள்கள் எதையும் யாரும் உபயோ கிக்கக்கூடாது.

**இரண்டாம் பிரிவு:** வேறு சிலவற்றைச் சட்ட நிபுணர்கள் தடை செய்யாமல் விட்டு வைத்திருக்கிறார்கள். ஏனெனில், வெளிப்படையாகப் பார்க்கும்போது, அவற்றை உபயோகிப் பதில் தவறு தெரிவதில்லை. அவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

மரத்திலிருக்கும் குருவிகளை வேட்டையாடுவது, அன்பளிப்பாக வரும் பொருள்களைச் சாப்பிடுவது முதலியவை இந்தப் பிரிவைச் சேர்கின்றன. இவற்றையும், இவை போன்ற எண்ணற்ற காரியங்களையும் மார்க்கம் தடை செய்யாமல் விட்டு வைத்திருக்கிறது. எனவே அவற்றை உபயோகிப்பதில் தவறு கிடையாது.



என்றாலும், முன்னெச்சரிக்கையுடன் இருக்க நினைப்ப வர்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்வது வரவேற்கத் தகுந்தது. ஏனெனில், மரத்திலிருக்கும் பறவை மற்றொருவனின் பிடிப் பிலிருந்து பறந்து வந்திருக்கக் கூடும். அதன் உரிமையாளன் எங்கோ ஒரு மூலையில் அதனை வலை போட்டுத் தேடிக் கொண்டிருக்கக் கூடும். இதே போன்று, அன்பளிப்பாக வந் திருக்கும் பொருள் தீய வழியில் ஈட்டப்பட்டதாகவோ, மார்க் கத்தின் கண்டனத்துக்குரிய விதத்தில் தேடப்பட்டதாகவோ இருக்கக்கூடும்.

இவ்வளவு தூரம் தூண்டித் துருவி ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசியமில்லை. என்றாலும், மார்க்கத்தில் ஆழமான பற்றுதல் உள்ளவர்கள், இது போன்ற காரியங் களையும் தவிர்த்துக் கொள்ளத்தான் செய்கிறார்கள்.

***மூன்றாம் பிரிவு:*** இந்தப் பிரிவில் வேறு சில பொருள்கள் இடம் பெறுகின்றன. அவற்றை அறிஞர்கள் மறுக்கவுமில்லை; அவை நல்ல பொருள்கள் தான் என்பதில் சந்தேகமுமில்லை. என்றாலும், அவை தீய உணர்வுகளையும், தீய செயல்களையும் தூண்டிவிடக்கூடும் என்று நம்பப்படுகிறது.

''நல்லவற்றில் பத்தில் ஒன்பது பகுதியை நாங்கள் விட்டு விடுகிறோம் - கெட்டதுக்கு வழி ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக'' என்று உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

இதுபோன்ற காரியங்களில் பாமரர்கள் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள முடியாது. என்றாலும், ஆழ்ந்த இறையச்ச முள்ளவர்கள் இவற்றில் அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள்.

அவர்கள் கையாண்ட முறைகள், வரலாற்று ஏடுகள் முழுவதிலும் விரிவாகக் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் நமக்கு, அவர்களின் பக்தியை, அசையாத இறை நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றன. அவை அனைத்தையும்

இந்தச் சிறிய நூலில் எழுதிவிட முடியாது. அதற்கு இந்த நூல் நிச்சயமாக இடம் தராது.

எனவே உதாரணத்திற்குச் சிலவற்றைப் பார்த்துவிட்டு, அடுத்த பிரச்சினைக்குப் போவோம்.

தர்மம் செய்வதற்கென்று குவித்து வைக்கப்பட்டிருந்தது கனிவகை. அதிலிருந்து பேரீச்சைக் கனி ஒன்றை ஹஸன் (ரலி) எடுத்தார்.

நேரடியாகப் பார்க்கும்போது, இதில் தவறு கிடையாது. என்றாலும், பெருமானார் தடை செய்து விட்டார்கள். ''அதைப் போட்டுவிடு, எடுக்காதே!'' என்று கூறினார்கள்.

மரணப் படுக்கையில் கிடந்தவர் இறந்தார். அங்கு உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் இப்படிக் கூறினார்:

''அந்த விளக்கை அணைத்து விடுங்கள். அது எரியக் கூடாது. அந்த விளக்கிலுள்ள எண்ணெய்க்குரியவர் இறந்து விட்டார். அது இப்போது வாரிசுகளின் உடைமையாகி விட்டது. அவர்களின் அனுமதியில்லாமல், அதனை நாம் உபயோகிப்பது நல்லதல்ல.''

சட்ட ரீதியாகப் பார்த்தால் இதில் தவறு கிடையாது. இறந்து போனவரின் வாரிசுகளில் யாரும் இதை மறுக்கப் போவதில்லை. உண்மையில் விளக்கிலுள்ள எண்ணெய் குறித்து அவர்கள் எண்ணியும் பார்த்திருக்க மாட்டார்கள். என்றாலும், அதிக முன்னெச்சரிக்கையுள்ளவர்கள், இதையெல்லாம் தூண்டித் துருவிப் பார்த்துத் தவிர்த்து ஒழுகினார்கள்; ஒழுகுகிறார்கள்.

இதனால்தான் நபித்தோழர் அபுத் தர்தா (ரலி) இப்படிக் கூறுகிறார்: ''சிறிய காரியங்களையும் துருவிப் பார்த்துத் தவிர்க்கும் வரை, ஒரு மனிதனின் இறையச்ச உணர்வு முழுமையடைவதில்லை. அப்புறம், அவன் நல்லதையும் விட்டு



விடுவான்- அது கெட்டதாக மாறிவிடக் கூடும் என்ற அச்சத்தினால்!''

தெருவில் சென்று கொண்டிருக்கும் ஒருவர் தவறவிட்ட காகிதத்தை எடுத்து, அவருக்குத் தெரடியாமல் அதிலுள்ள நபிக் கருத்தை நகல் செய்து கொள்ளலாமா?-இப்படி ஒரு வினா எழுப்பப்பட்டது.

அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) கொடுத்த விடை இதுதான்: ''கூடாது. முதலில் அந்தக் காகிதத்துக்குரியவரிடமிருந்து அனுமதி பெறவேண்டும். அப்புறம்தான் அதிலுள்ளதை நகல் செய்து கொள்ளலாம்!''

இப்படிப் பதில் கூறியதற்குக் குறுகிய மனப்பான்மை காரணமல்ல. மற்றவர்களின் உடைமையில் சிறிதளவும் தலையிடக்கூடாது என்ற பரந்த மனப்பான்மையே இதற்கு அடிப்படைக் காரணம்.

நீங்கள் கண்டெடுத்த காகிதத்துண்டு, மற்றொருவரின் உடைமையாகும். அதில் இடம் பெற்றிருந்த நபிக் கருத்தை, அவர் உங்களுக்குக் கொடுக்கச் சம்மதிப்பார் என்பது என்ன நிச்சயம்? எனவேதான் அஹ்மதின் விடை அப்படி வந்தது.

இப்படி நம்மால் எத்தனையோ உவமானங்களைக் கொடுக்க முடியும். நல்ல காரியங்கள்-மார்க்கத்தின் மறுப்பைப் பெறாத காரியங்கள் எண்ணற்றவை. அவற்றில் சில உயர்ந்த லட்சியத்துக்கும், பாராட்டுக்குரிய செயலுக்கும் வழி செய்கின்றன. இப்படி ஒரு சிலவற்றையே நம்மால் பார்க்க முடியும். ஆகுமானவை எனும் பெயருடன் காணப்படும் காரியங்களில், பெரும்பாலானவை படிப்படியாகத் தீமைக்கே வழி வகுக்கின்றன. அவற்றில் தவறு கிடையாது. திருமறையோ, திரு நபியோ அவற்றை ஒதுக்கித் தள்ளுமாறு கூறவில்லை. நீதி மன்றமும், சட்ட நிபுணர்களும் அவற்றிற்கு

நல்ல பெயர் கொடுத்து வைத்திருக்கிறார்கள். அவற்றில் தவறு கிடையாது என்று ஒவ்வொரு மனிதனும் நம்புகிறான்.

தேவைக்கு அதிகமாகச் சாப்பிடுவது, நாலு பேர் ஒன்று சேர்ந்து உரையாடுவது முதலியவை இப்போது நம் கவனத்திற்கு வருகின்றன.

மேலே, நான் குறிப்பிட்டதுபோல், இவற்றில் தவறு கிடையாது. எனினும் இவற்றில் அதிகமாக ஈடுபடும்போது வரவேற்கத்தகாத பல தீமைகள் உருப்பெறுகின்றன. அதிகமாகச் சாப்பிடுவதையே இப்போது நாம் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

உடல் எப்போதும் ஆரோக்கியத்துடன் இருந்தால்தான் மனிதனால் செயலாற்ற முடியும். செயலுக்கு ஊறு செய்யக் கூடிய எதையும் இஸ்லாம் அனுமதிக்காது. இதனால்தான் உணவுக்கு மதிப்புக் கொடுக்கப்படுகிறது. ஒரு மனிதன் சாப்பிட உட்காரும்போது, இந்தக் குறிக்கோளையே அவன் மனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

இந்தக் குறிக்கோள், அதிகமாகச் சாப்பிடுகிறவர்களுக்கும் சாத்தியமானதுதான். என்றாலும், அத்துடன் அது நின்றுவிடப் போவதில்லை. அது அதிகமான ரத்தத்தை உற்பத்தி செய்யும். இதனால் காமம் வளரும். அடுத்து வரும் விளைவுகள் பற்றி நான் சொல்லித்தானா நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்?

இப்படிக் குறிக்கோளுக்கு மாறுபட்ட, வேண்டப்படாத பல விளைவுகளுக்குத் தூண்டுதல் கொடுக்கிறது என்ற காரணத்தை வைத்துச் சிலர் அதிகமாகச் சாப்பிடுவதையே விட்டு விட்டார்கள். அவர்கள், ஒழுக்கத்திலும், நேர்மையிலும் ஆழமான அக்கறை கொண்டிருந்தார்கள். அவர்கள் தேவைக்கு மட்டுமே சாப்பிட்டார்கள்; தேவைக்கு மிஞ்சிச் சாப்பிடுவதை மறுத்தார்கள்.



இப்படி நடப்பது உங்களுக்கு அவசியமல்ல என்று மீண்டும் நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

ஆடம்பரமாக வாழ்கிறவர்களின் மாளிகைகளை ஆச்சரியத்துடன் பார்ப்பதும் இத்தகையதுதான். அதைப் பார்க்கும் போது, உங்கள் மனத்தில் விந்தையுணர்வு தோன்றுகிறது. அப்புறம், அவர்கள் எழுப்பியிருப்பது போன்ற ஒரு மாளிகையை நீங்களும் எழுப்பவேண்டும் என்று ஆசைப்படுவீர்கள். இந்த ஆசை வலுப்பெறும்போது, நேர்மைக்கும் நீதிக்கும் திரை போடப்படுகிறது. உங்கள் ஆசையை எப்படியாவது நிறை வேற்றி விடவேண்டும் என்று திட்டம் போடுவீர்கள்.

இப்படி ஏற்படும் சூழல்கள் ஆயிரக்கணக்கிலோ லட்சக் கணக்கிலோ அல்ல, கோடிக்கணக்கில் இருக்கின்றன. அவற்றை எல்லாம் விரிவுரை கொடுத்து விளக்குவது அசாத்தியமான ஒன்று. எனவே பிரச்சினையை உங்கள் சிந்தனைக்கு விட்டு விட்டேன்.

இங்கு நீங்கள் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். ஆடம்பரமாக வாழ்கிறவர்களின் மாளிகையைப் பார்ப்பதோ, அது போன்ற ஒன்றை நீங்கள் எழுப்பி வாழ்வதோ தவறான காரியங்கள் அல்ல. எனினும், இந்தக் குறிக்கோளை அடையும் வழியில், தீயவை கலந்து விடக்கூடாது என்பதே இஸ்லாத்தின் தீர்ப்பு.

நிலைமையை இன்னும் கொஞ்சம் விளக்குவதனால் இப்படிச் சொல்லலாம்: ஆசையோடு, ஆர்வத்தோடு செய்யப் படும் காரியங்களில், பெரும்பாலானவை தீய விளைவு களுக்கே வழி செய்கின்றன. இத்தகைய தீமைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள நினைக்கிறவர்கள், நிதானத் துடன் நடந்து கொள்ளவேண்டும். இல்லையேல் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்கள் தான் பொறுப்பாளியாக வேண்டும்.

இதனால் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) சுவர்களுக்குச் சுண் ணாம்பு பூசுவதைக்கூட வெறுத்தார். இது பயனில்லாத ஒரு வேலை என்று அவர் காரணம் காட்டினார். இதன் அடிப் படையில் தான் அவர் பள்ளிவாசல்களை அழகு படுத்துவ தற்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

நமது முன்னோர் இன்னும் ஒருபடி முன்னேறியிருந் தார்கள். மெல்லிய துணி அணிவதைக்கூட அவர்கள் வெறுத்தார்கள். ''ஒரு மனிதன் மெல்லிய துணிகளை அணிய ஆரம்பித்தால் அவனுடைய மார்க்கப்பற்று மெலிந்து விட்டது என்பதே பொருள்!'' என்று அவர்கள் விரிவுரை கொடுத்தார்கள்.

இப்படியெல்லாம் நடக்கவேண்டும் என்பது சட்டமு மல்ல; இறை தீர்ப்புமல்ல. எனினும் தீய விளைவுகள் தோன்றி விடக்கூடாது என்ற நேர்மையுணர்வினால்தான் அவர்கள் அப்படி நடந்தார்கள்; பேசினார்கள்; தீர்ப்புக் கொடுத்தார்கள். இந்த உண்மையை மீண்டும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**நான்காம் பிரிவு:** இந்தப் பிரிவில் இடம் பெறும் உணவுப் பொருள்கள், முந்திய பிரிவுகளில் இடம் பெற்ற பொருள்களுக்கு முற்றிலும் மாறுப்பட்டவை. அவற்றைச் சட்ட நிபுணர்கள் தடை செய்யவுமில்லை; நல்லதா கெட்டதா என்ற சந்தேகம் தோன்றுவதற்கு வழியுமில்லை; அவற்றிலிருந்து தீமை உருவாக முடியும் என்று எண்ணிப் பார்ப்பதற்கும் இடமில்லை.

இறைபணியைக் குறிக்கோளாகக் கொண்டு, உட்கொள் ளப்படாத உணவு வகைகள் அத்தனையும் இந்தப் பிரிவில் சேர்கின்றன. மேலே நான் குறிப்பிட்டதுபோல், நான் எழுதிய இதர நூல்களில் தெளிவு படுத்தியதுபோல், இறைபணியைக் குறிக்கோளாகக் கொண்டே எதையும் சாப்பிடவேண்டும்.



இறைபணிக்கும் இறைவணக்கத்துக்கும் துணை செய்யாத உணவு வகைகள், மார்க்கத்தின் கண்ணோட்டத்தில் சிறந்து விளங்குவதில்லை.

எனவே, மெய்ஞ்ஞானிகள் இறை வழிக்குத் துணை செய்யாத, எல்லாப் பொருள்களையும் ஒதுக்கித் தள்ளு கிறார்கள். மார்க்கத்தின் தீர்ப்பு எதைத் தீயது என்று குறிப்பிடுகிறதோ அதை மட்டுமின்றி, அதற்கு அப்பாற்பட்ட எத்தனையோ பொருள்களை அவர்கள் தீயவை என்று நீக்கி வைக்கிறார்கள். பாமரர்களுக்கும், பொதுமக்களுக்கும் இது எப்படிப்பட்டாலும் படட்டும். ஆனால் இந்த ஞானிகளைப் பொறுத்தமட்டில், இறை வழிக்குப் பயன்படாத அத்தனையும் தீயவைதான்.

இறை வணக்கத்துக்குத் துணை செய்யும் விதத்தில், பசியினால் உடல் நிலையில் சோர்வு ஏற்படாத விதத்தில் அவர்கள் சாப்பிடுகிறார்கள், இந்தக் குறிக்கோளுக்குப் பங்கம் ஏற்படுத்தும் பொருள்களை மட்டுமின்றி, அதற்குத் துணை செய்யாத அனைத்தையும், அவர்கள் 'ஹராம்' என்று குறிப் பிடுகிறார்கள். ஹராம் என்றால் 'உட்கொள்ளத் தகாதது' என்று அர்த்தம்.

மக்கட் திரளில் ஒவ்வொருவரும் இப்படி நடந்துகொள்ள முடியாது; அதற்குத் தேவையுமில்லை. இப்படி நடப்பவர்கள் அனேகமாக ஆசைகளையே துறந்தவர்கள். இறைவணக்கம் ஒன்றைத் தவிர்த்து, அவர்களுக்கு வேறு எந்த லட்சியமும் கிடையாது. அந்த லட்சியத்துக்குத் துணைசெய்யாத அனைத் தையும் அவர்கள் வெறுத்ததில் அப்படியொன்றும் அதிசய மில்லை.

கெட்டதைத் தவிர்க்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளைகளில் ஒன்று. நீங்கள் இப்படித் தவிர்க்க முற்படும் போது, தோன்றும் பிரிவுகளையே மேலே நான் விவரித்தேன்.

இந்த நான்கு பிரிவுகளும் உங்கள் கவனத்திற்குரியவைதான். இறைவன்மீது நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும், அவனுடைய கட்டளைகள்மீது நீங்கள் வைத்திருக்கும் கண்ணோட்டமும் மாறும்போது, உங்கள் ஒழுக்க உணர்வும் மாறுபடத்தான் செய்யும். இன்றைக்கு, ''இதில் தவறு ஒன்றுமில்லையே. மார்க்கம் இதை 'ஹராம்' என்று சொல்லவில்லையே!'' என்று கூறிக்கொண்டு, சாப்பிடும் பொருள்களை நீங்கள் நாளைக்கு ஒதுக்கி தள்ளலாம். அப்போது, ''இதில் தவறு இல்லாவிட்டால் சாப்பிடத்தான் வேண்டுமா? இதைச் சாப்பிடுவதால் இறை வழியில் எனக்குப் பலம் கிடைக்கப் போவதில்லை, எனவே இதை நான் சாப்பிட முடியாது'' என்று நீங்கள் விளக்கம் கொடுக்கலாம்.

மேற்குறிப்பிட்ட பிரிவுகள் நான்கும், ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல், பலதுணைப் பிரிவுகளை பெற்றிருக்கின்றன. அவற்றைப்பற்றிய முழு விவரத்தைச் சட்ட நூல்களில் நீங்கள் காணலாமே தவிர, அதனை இங்கு எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இந்தச் சிறிய நூல் கடல்போன்ற சட்ட விரிவுரைகளுக்கு நிச்சயமாக இடம் கொடுக்காது. தவிர, சட்டங்களை விவரித்துக்கொண்டிருப்பது நம்முடைய நோக்கமல்ல; அது சட்ட நிபுணர்களின் வேலை.

நல்லதை எடுத்து நடக்க வேண்டிய பொறுப்பும் கெட்டதைத் தவிர்த்து ஒழுகவேண்டிய பொறுப்பும், மனிதனின் தலையில் சுமத்தப்பட்டிருக்கின்றன. இந்தப் பொறுப்புகள் மனிதனைத் தவிர்த்து, வேறு யாருக்கும் கிடையாது. ஏனெனில் மனிதன் பகுத்தறிந்து செயல்படக் கூடியவன் மட்டுமல்ல, பொறுப்பு ஏற்று செயலாற்றுகிறவனும் கூட.

இந்தப் படித்தரங்களில் முந்தியது மறுக்க முடியாதது. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நீங்கள் தவிர்த்துதான் ஆகவேண்டும். அதை அடுத்துவரும் பிரிவுகள் உங்கள் சிந்தனைக்குரியவை. அவற்றையும் தவிர்த்துதான் ஆக



வேண்டும் என்று நான் சொல்லவில்லை; என்னால் சொல்லவும் முடியாது. ஏனென்றால் மார்க்கமே அப்படி உங்களை வற்புறுத்தவில்லை.

என்றாலும், உங்கள் பக்தியும் பற்றுதலும் வரவேற்கத் தகுந்த விதத்தில் மாறும்போது, உங்கள் மனநிலையில் அவசியம் மாறுதல் ஏற்படும். அப்புறம் உங்கள் ஒழுக்க உணர்வு படிப்படியாக முன்னேறி வந்து, கடைசிப் பிரிவைத் தொட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் என்ன என்று கேட்கிறீர்களா? இதுதான் காரணம்; நீங்கள் மனிதர். இறைவனின் கட்டளைகளைப் பேணிக் காக்கும் திறனுள்ளவர். அந்தக் கடைசிப் படித்தரத்திலிருந்தவர்களும் உங்களைப் போன்ற மனிதர்கள் தான். அவர்களுக்குச் சாத்தியமான ஒன்று ஒரு நாள், உங்களுக்கு ஏன் சாத்தியமாகக் கூடாது? ஆரம்ப நிலையில் அவர்களும் உங்களைப் போல் தான் எண்ணியிருப்பார்கள்; செய்திருப்பார்கள்.

எனவே முதல் பிரிவை அடுத்து வரும் மூன்று பிரிவுகள் குறித்து நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. பிரச்சினையை உங்கள் தேர்வுக்கு விட்டுவிட்டேன். உங்கள் மனம் இன்னும் தெளியவில்லை என்று எண்ணினால், முதல் படித்தரத்திலேயே நில்லுங்கள். தேவையான மனோபலம் உங்களுக்குக் கிடைத்து விட்டது என்று கருதுகிறீர்களா? அப்படியானால் நான்காம் படித்தரத்துக்கு வந்து சேருங்கள். இறையன்பைப் பெற்ற பெருந்தகைகளெல்லாம் அங்கே உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள்.

# 5. இடைப்பட்டவை

நல்லது கெட்டது பற்றிய இந்த நூலில், அந்த இரண்டுக்கும் இடைப்பட்ட பொருள்களே பெரும்பகுதியை அடைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை நாம் தெரிந்து கொள்வதற்கு முன், நல்லது கெட்டது பற்றிய நமது அறிவை ஓரளவுக்கு வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

நல்ல உணவு எது, கெட்ட உணவு எது என்று யாரும் எண்ணிக் குழம்ப வேண்டியதில்லை. இந்தப் பிரச்சினை வரையறுக்கப்பட்ட ஒன்று. ''நல்லது தெளிவானது; கெட்டதும் தெளிவானது தான். குழம்பத் தேவையில்லை. இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட பெருள்கள் தான் பெரும்பாலோருக்குத் தெரியாமல் இருக்கின்றன. இவற்றைத் தவிர்த்துக் கொள்கிறவர்கள், தீமையைவிட்டு விலகியவர்கள். இவற்றைச் செய்கிறவர்கள், நாளடைவில் கெட்டதையே சாப்பிடக்கூடும்'' என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள்.

இங்கு நாம் உணவுப் பொருள்களை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம்.

1. நல்லவை அத்தனையும் இந்தப் பிரிவைச் சேருகின்றன. நல்லவை எவை என்று கேட்கிறீர்களா? தீயவிளைவை உருவாக்காத, அன்னியருக்கும் உடைமையல்லாத,



மார்க்கத்தின் கண்டனத்துக்கு இலக்காகாத எல்லாப் பொருள்களும் நல்லவைதான்.

2. இங்கு தீயவை வருகின்றன. வட்டி, அநியாயம் முதலிய வழிகளில் கிடைத்தவை - மார்க்கத்தின் கண்டனத்துக் குரியவை அத்தனையும் தீயவைதான்.

3. இந்தப் பிரிவில் வரும் பொருள்களில்தான் ஆழ்ந்த சிந்தனை செலுத்தவேண்டும். ஏனெனில், இவற்றில் சில, சூழலின் சக்தியால், கெட்டவையாகவும் நல்லவை யாகவும் மாறுகின்றன. நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடைப்பட்ட பொருள்கள், இந்தப் பிரிவுக்கு வந்து சேரு கின்றன. இந்தப் பொருள்களைச் சந்தேகத்திற்குரியவை என்று குறிப்பிட்டாலும் தவறு கிடையாது.

முதற்பிரிவைப் பற்றி நாம் ஒன்றும் ஆராய வேண்டிய தில்லை. அதில் சேரும் பொருள்கள், பெருமானார் குறிப் பிட்டது போல், வரையறுக்கப்பட்டவை. அவற்றில் நிச்சய மாகத் தெளிவு இருக்கிறது.

முதற்பிரிவு எப்படி வரையறுக்கப்பட்டதோ அப்படியே இரண்டாம் பிரிவும் வரையறுக்கப்பட்டதுதான். எனவே இதுவும் நாம் சிந்திக்க வேண்டாத பிரச்சினைதான்.

இப்போது நம்முடைய முழுச் சிந்தனைக்குரிய பிரச்சினை, மூன்றாம் பிரிவைப் பற்றியது தான். இந்தப் பிரிவில் வரும் பொருள்களுக்கு நம்மால் எடுத்த எடுப்பில் தீர்ப்புக் கூறிவிட முடியாது.

உழைத்து உண்பதையும், வர்த்தகம் செய்து பொருளீட்டு வதையும் நாம் நல்லவை என்று கூறுகிறோம். இவற்றிற்கு மார்க்கம் 'ஹலால்' என்று பெயரிடுகிறது.

ஏய்த்துப் பிழைப்பதையும், வட்டிக்கு விட்டுப் பொருளீட்டுவதையும் நாம் தீயவை என்று குறிப்பிடுகிறோம். இவற்றிற்கு மார்க்கம் 'ஹராம்' என்ற பெயர் கொடுக்கிறது.

இந்த இரண்டுக்கும், நம்மால் தீர்க்கமாகத் தீர்ப்பு வழங்க முடியும். முறைப்படிச் சம்பாதிக்கப்பட்ட எந்தப் பொருளும், மார்க்கத்தின் பார்வையில் தாழ்த்தப்படுவதில்லை. எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், உழைப்புக்கு ஊதியமாகக் கிடைக்கும் பொருள் தூய்மை வாய்ந்ததுதான். இதே போன்று ஏய்த்துப் பிழைப்பதையும், வட்டிக்கு விட்டுப் பொருளீட்டு வதையும், நம்மால் எடுத்த எடுப்பிலேயே தீயவை என்று ஒதுக்கிவைக்க முடியும்; தீர்ப்புக் கூற முடியும்.

ஆனால் இந்த இரு பிரிவுகளுக்கும் இடைப்பட்ட ஆயிரக்கணக்கான,-லட்சக் கணக்கான பிரச்சினைகளில் நாம் சற்று நின்று யோசித்துத்தான் ஆக வேண்டியிருக்கிறது.

வேட்டையாடப் போன நீங்கள், ஒரு பறவையுடன் வீட்டுக்குத் திரும்பி வருகிறீர்கள். அந்தப் பறவையின் உடலில் ஒரு சிறு காயம் காணப்படுகிறது. அந்தப் பறவையை நீங்கள் சாப்பிடலாமா, சாப்பிடக் கூடாதா?

இந்த வினாவுக்குக் கொஞ்சம் யோசித்துத்தான் பதில் சொல்லவேண்டும். வேட்டையாடுவதும், வேட்டையில் கிடைத்தவற்றை உண்பதும் நல்லவைதான். மார்க்கம் அனுமதி கொடுத்திருக்கிறது. ஆனால், நீங்கள் கொண்டு வந்திருக்கும் பறவையின் உடலில் காணப்படும் காயம்தான் இப்போது குழப்பத்தை உண்டாக்குகிறது. அது சுதந்திரமாகத் திரிந்த பறவையா அல்லது வேறு யாருக்கேனும் உடைமையாயிருந்து அவன் பிடியிலிருந்து தப்பிப் பறந்து வந்திருக்கிறதா?

இந்த இரண்டும் சாத்தியம்தான். முதல் கோணத்திலிருந்து பார்த்தால், அந்தப் பறவை இப்போது, உங்களுக்கு உரிமையாகி விட்டது. அது வேறொருவருக்கு உடைமையாக இருந்தது என்பதற்குப் பகிரங்கமாக, எந்த ஆதாரமும் கிடையாது.

இரண்டாம் கோணத்திலிருந்து பார்க்கும்போது, அது மாற்றானின் பொருளாக இருந்து, அவனுடைய பிடியிலிருந்து



தப்பி வந்திருக்கக்கூடும் என்று எண்ணுவதற்கு இடமுண்டு. அந்தச் சிறிய வடு ஒன்றே அந்தப் பறவையை மாற்றானின் சொத்து என்று நிரூபிக்காவிட்டாலும், அது உங்கள் கவனத்தைக் கவர்வதற்குப் போதுமானது.

எனவே, இந்த இடைப்பட்ட பொருள்களை இயன்றவரை ஆராயவேண்டிய தேவை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனை நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றால், நல்லது கெட்டது பற்றிய இந்த நூலில் குறிப்பிடும் அளவுக்கு எதுவும் இருக்காது. இதனை முழுமையானது என்று சொல்லவும் முடியாது.

நல்லது கெட்டது ஆகிய இரண்டிற்குமிடையில், குழப்பத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவிக்கும் பொருள்களை நாம் 'இடைப்பட்டவை' என்று பெயர் கொடுத்து வைத்துக் கொள்வோம்.

# 6. முதற்கோணம்

நாம் இப்போது மேற்கொண்டிருக்கும் பிரச்சினைக்கு, ஆழ்ந்த சிந்தனையும், முறையான உள் நோக்கும் தேவை. இல்லையேல் 'இடைப்பட்டவற்றை' முறைப்படி தெரிந்து கொள்ள முடியாது.

முதல் அத்தியாயத்தில் நாம் உணவு வகைகளை, வருமான வகைகளை மூன்று பிரிவுகளில் கட்டுப்படுத்தினோம்: நல்லவை; கெட்டவை; இடைப்பட்டவை. நல்லவற்றுக்கும், கெட்டவற்றுக்கும் இருப்பதுபோல், இடைப்பட்டவற்றுக்கும் காரணங்கள் இருக்கின்றன. தரமான காரணங்களின் அடிப் படையிலேயே மார்க்கம் ஒரு பொருளை நல்லது என்றோ, கெட்டது என்றோ, இடைப்பட்டது என்றோ குறிப்பிடுகிறது.

நல்லவற்றுக்கும் கெட்டவற்றுக்கும் சரியான காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பெருமானாரின் வாக்கையும், வாழ் வையும் வைத்துப் பார்க்கும்போது நமக்குத் தெளிவு கிடைக்கிறது. திருக்குர்ஆனும் அவற்றை எல்லையிட்டு விவரித்திருக்கிறது.

ஆனால், இத்தகைய தெளிவு, மூன்றாம் பிரிவுக்குக் கிடைப்பதில்லை. ஏனெனில் தெளிவுபடுத்தி விளக்க முடியாத அளவுக்கு அது விரிந்து கிடக்கிறது.

எனவே மூன்றாம் பிரிவை ஆராயப் புகுந்திருக்கும் நாம், நல்லவற்றுக்கும் கெட்டவற்றுக்குமுள்ள காரணங்களை



முதலில் பார்க்கவேண்டும். அப்புறம் அந்தக் காரணங்களை வைத்துத் தீர்ப்பு வழங்கிக் கொள்ளலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட, பல கோணங்களிலிருந்து பொருளின் தரத்தை நாம் தீர்மானிக்கிறோம். நல்ல பொருள் கெட்ட பொருளாக மாறுவதும், கெட்ட பொருள் நல்ல பொருளாக மாறுவதும் காரணங்களைப் பொறுத்தே இருக் கின்றன. இதே காரணங்களினால்தான் சில வேளைகளில், நல்லதும் கெட்டதும் இடைப்பட்டவையாக மாறுகின்றன.

இப்போது உங்களை முதற்கோணத்திற்குத் திருப்ப விரும்புகிறேன். இந்த முதற் கோணச் சிந்தனைக்குக் காரணமாக இருப்பது சந்தேகம். நல்ல பொருள்கள் என்று சிலவற்றை மார்க்கம் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறதல்லவா? சில சூழல் களில், அந்தப் பொருள்களில் சந்தேகம் கலக்கும்போது, அவை 'இடைப்பட்டவை' எனும் இனத்துக்கு வந்து விடுகின்றன.

இதேபோன்று, வேறு சிலவற்றை இஸ்லாம் கெட்டவை என்று தீர்ப்புக் கூறி ஒதுக்கி வைத்திருக்கிறது அல்லவா? சூழலின் காரணத்தால், அவை உருவாக்கும் தீங்குகளில் சந்தேகம் தோன்றினால், அவற்றையும் இடைப்பட்ட இனத் திலேயே அறிஞர்கள் சேர்க்கிறார்கள்.

மேற்குறிப்பிட்ட விளக்கத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்றால், ஓர் உதாரணத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏற்கனவே நான் கொண்டு வந்த உதாரணத்தையே இங்கு நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

'வேட்டையில் கிடைக்கும் நல்ல மிருகங்களை உட் கொள்வது ஆகும்' என்று நான் குறிப்பிட்டேனல்லவா? நல்ல மிருகம் என்றால், மார்க்கத்தின் கண்டனத்தைப் பெறாத மிருகம் என்று அர்த்தம். பாய்ந்தோடும் முயல் ஒன்றைக் குறி வைத்து நீங்கள் முன்னேறுகிறீர்கள். அந்த முயல் இப்போது உங்களுக்குரிய பொருளாகி விட்டது. அதை நீங்கள் நிச்சயமாகச் சாப்பிடலாம்.

ஆனால், வீட்டுக்கு வந்ததும், உங்கள் மனத்தில் சந்தேகம் தோன்றுகிறது. அந்த வெண்முயலைத் தூக்கிப் பிடித்துப் பார்க்கிறீர்கள். ''யாருக்கும் சொந்தமில்லாத பொதுவான வனத்தில் தான் இதனை நான் வேட்டையாடியிருக்கிறேன். ஆனால் இந்த முயல் வேறு யாருக்கேனும் சொந்தமானதாக இருக்கக் கூடாதா? அவனுடைய பிடியிலிருந்து தப்பி ஓடி வந்திருக்கும் இதனை உரியவனின் அனுமதியில்லாமல் நான் எப்படிச் சாப்பிடலாம்?'' என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்கிறீர்கள்.

இப்படி நீங்கள் ஏன் சந்தேகப்படுகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. உண்மையில் அது உங்களுக்கும் தெரியாது. மனத்தில் தோன்றும் குழப்பங்கள் அத்தனைக்கும், ஒரு மனிதனால் காரணம் காட்ட முடியாது. அடி மனத்தின் தூண்டுதலால் உருவாகும் எண்ணங்கள் எண்ணற்றவை. ஆதாரமில்லாத அந்த எண்ணங்களை, சந்தேகங்களை, அரபி மொழியில் 'வஸ்வாஸ்' என்று குறிப்பிடுகிறார்கள். 'வஸ்வாஸ்' என்றால் 'பயனற்ற உணர்வு' என்பது பொருள். இந்த உணர்வுக்கு இஸ்லாத்தில் மதிப்புக் கிடையாது. அது நல்லதைக் கெட்டதாக மாற்றாது. ஏனெனில், அது பயனற்ற உணர்வாயிற்றே. பயனுள்ள மார்க்கம் பயனற்ற உணர்வுக்கு எப்படி மதிப்புக் கொடுக்கும்?

வேட்டையில் கிடைப்பது நல்லது என்பதற்கு ஆதாரமுண்டு. எனவே அது நிச்சயமானது. உங்களிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கும் முயல் மற்றொருவனின் சொத்து என்பது உங்கள் எண்ணம். இந்த எண்ணத்திற்கு உங்களிடம் ஆதாரம் கிடையாது. வேண்டுமானால் அதனை 'வஸ்வாஸ்' என்று சொல்லலாமே தவிர, நிச்சயமானது என்று சொல்ல முடியாது.

ஆகவே, அந்த முயலை நீங்கள் தாராளமாகச் சாப்பிடலாம். நிச்சயமான ஒரு சட்டத்தைச் சந்தேகமான ஓர் எண்ணம், என்றைக்கும் மாற்றாது; மாற்றும் என்று எதிர்பார்க்கவும் கூடாது.



இதுவரை பிரச்சினையை நீங்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கலாம். இல்லையென்றால் மற்றோர், உதாரணத்தை எடுத்துக் கொள்வோம்.

மத்தியானத் தொழுகைக்கென்று கொடுக்கப்பட்ட அழைப்பொலி உங்களுக்குக் கேட்கிறது. ஏற்கெனவே சுத்தமாக எடுத்து வைத்திருந்த பாத்திரத்தைப் பார்க்கிறீர்கள். நீங்கள் நிரப்பி வைத்திருந்த நீர் அப்படியே இருக்கிறது. தற்செயலாக ஏறிட்டுப் பார்த்த நீங்கள் ஒரு கோழியையோ காக்கையையோ பார்க்கிறீர்கள். அவ்வளவுதான். உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது.

''தண்ணீர் எடுத்து வைத்தது நான்தான். சுத்தமாகத் தான் எடுத்து வைத்தேன். அது சுத்தமானது என்பது நிச்சயமான ஒன்று. ஆனால், பிறகு அதில் ஏதேனும் அசுத்தப் பொருள் கலந்திருக்க முடியாது என்பது என்ன நிச்சயம்? மேலே பறக்கும் காக்கை, பருந்து முதலியவற்றிலிருந்து எச்சம் விழுந்திருக்க முடியாதா என்ன?'' என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்கிறீர்கள்.

இந்தக் கட்டத்தில், நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அந்தத் தண்ணீரில் 'உலூ' செய்துகொண்டு, பள்ளிக்குச் செல்வீர்களா? இல்லை, அசுத்தப் பொருள் விழுந்திருக்கக் கூடும் என்று நீங்கள் சந்தேகப்படுவதால், அதனைக் கீழே கொட்டிவிட்டு, மேலேயிருந்து மழை பெய்வதை எதிர்பார்ப்பீர்களா?

இந்த இரண்டில் சிலர் பிந்தியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். சந்தேகத்தின் அடிப்படையில் நிச்சயமான ஒன்றை மறுத்து ஒதுக்குகிறார்கள். ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர் சுத்தமானது என்பது நிச்சயமான ஒன்று. அதில் அசுத்தம் கலந்துவிட்டது என்பதற்கு ஆதாரம் கிடையாது. அசுத்தம் கலந்திருக்கலாம் என்பது சந்தேகம். அந்தச் சந்தேகம் நிச்சயமானதை மாற்றாது.

இந்தக் கட்டத்தில் நீங்கள் செய்யவேண்டியது, சந்தேகத்தை மறந்து விட்டு வேலையைக் கவனிக்கவேண்டியதுதான்.

அப்புறம் நீங்கள் பள்ளிக்குச் செல்கிறீர்கள். இறைவனின் கட்டளையை நிறைவேற்றுகிறீர்கள், வீட்டுக்குத் திரும்பி வரும்போது மற்றொரு சந்தேகம் உங்களுக்குத் தோன்றுகிறது.

''நான் தொழுததை இறைவன் ஏற்றுக்கொள்வானோ என்னவோ! நான் முறைப்படி தொழுகையை நிறைவேற்றினேனா? தொழுதுகொண்டிருந்தபோது தொழுகைக்கு மாறுபட்ட எண்ணங்கள் எனக்கு ஏற்பட்டிருக்குமோ?''- இப்படித் தேவையில்லாமல் புலம்புகிறீர்கள்.

வேண்டாம்; தயவுசெய்து மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். மீண்டும் உங்கள் சிந்தனையை மேலே நான் கூறியவற்றுக்கும் திருப்ப நினைக்கிறேன். ஆதார பூர்வமான நல்ல காரியம் ஒன்று ஆதாரமில்லாத சந்தேகத்தினால் தீயகாரியமாக மாறாது.

ஒரு நற்காரியம், ஆதாரமற்ற சந்தேகத்தினால் தீய காரியமாக மாறாததுபோல், ஆதார பூர்வமான தீய காரியம் ஒன்று, ஆதாரமற்ற சந்தேகத்தினால் நற்காரியமாக மாறாது. இந்தக் கட்டத்தில் நம் கவனத்தை இரண்டு பொருள்கள் கவர்கின்றன. ஒன்று, சந்தேகத்தினால் தீயதாக மாறாத நற்காரியம். மற்றொன்று, சந்தேகத்தினால் நல்லதாக மாறாத தீயகாரியம். இவற்றில் முந்தியதை ஓரளவு ஆராய்ந்து விட்டோம். எனவே, இப்போது நாம் பிந்தியதற்கு வருவோம்.

சிலவற்றை மார்க்கம் நல்லவை என்று கூறுவதுபோல், வேறு சிலவற்றை அது கெட்டவை என்று குறிப்பிடுகிறதல்லவா? இவற்றை நிச்சயமானவை என்று நாம் நம்புகிறோம். அவற்றில் ஆதாரமில்லாத சந்தேகம் ஏற்படும்போது, அவை நல்லவையாக மாறுவதில்லை.

உதாரணத்திற்கு ஒன்று வேண்டுமல்லவா? கள்ளையோ, சாராயத்தையோ எடுத்துக்கொள்ளுங்கள். அவற்றை இஸ்லாம், முழுப்பலம் கொண்டு தடுத்திருக்கிறது. அவற்றைக் குடிப்பது



மார்க்கத்தின் பார்வையில் பெரிதும் இகழப்படுகின்றது. அவற்றிலிருக்கும் போதையே மூல காரணம்.

சாராயம் குடிக்கத் தீர்மானித்திருக்கும் ஒருவன், சிந்தனை செய்கிறான். தன் நோக்கத்துக்குத் தக்கவாறு ஆதாரம் தேடுகிறான். எனவே அவன், தனக்குத் தானாக இப்படிப் பேசிக் கொள்கிறான்: ''சாராயம் குடிப்பது கூடாது என்பது இஸ்லாத்தின் சட்டம். இதை நான் மறுக்கவில்லையே. ஆனால் ஒன்று. சாராயம் மறுக்கப்படுவதற்கு முக்கிய காரணம் போதை. எனக்குப் போதை ஏற்படும் என்பது என்ன நிச்சயம். நீண்ட நாள் சேமிப்பு அறையிலேயே கிடந்ததால், அதன் குணம் மாறிப்போயிருக்கக் கூடாதா? எனக்கு இப்படியொரு சந்தேகம். எனவே இதில் போதை இருக்காது. தண்ணீர் குடிப்பது போல் இதை நான் குடிக்கப்போகிறேன்.''

ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல், இது மனத்தின் புரளியாகும். அதை நம்பிக்கொண்டு வேலை செய்கிறவர்கள், தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.

போதையை அடிப்படையாக வைத்தே மதுபான வகைகள் மறுக்கப்படுகின்றன. குறிப்பிட்டதொரு சூழலில், ஒருபுட்டிச் சாராயத்தில் போதையே இல்லை என்று வைத்துக் கொள்வோம். 'அப்பொழுது அதனை நீங்களும் சாப்பிடலாம்; நானும் சாப்பிடலாம். ஏனெனில் அது இப்போது சாராயம் என்று அழைக்கப்படுவதில்லை. தண்ணீருக்கும் அதற்குமிடையில் அதிக வேற்றுமையில்லை.

இந்தக் கட்டத்தில், மறுத்து ஒதுக்கப்பட்ட ஒன்று, நல்ல பொருளாக உருமாறுகிறது. ஆனால் ஒன்று: அதில் சிறிதளவும் போதை கிடையாது என்று ஆதாரத்துடன் நிரூபிக்கப் படவேண்டும். போதை மறைந்திருக்கலாம் என்ற வெற்று எண்ணம் ஆதாரமல்ல.

எனவே, அந்த மனிதன் சாராயப் புட்டியைத் தூரத்தில் எறியவேண்டுமே தவிர, நொண்டிக்காரணங்களைச் சொல்லிக்

கொண்டு அதனைக் குடிக்கக்கூடாது. காரணம்தான் உங்களுக்குத் தெரியுமே! அதாவது, போதை அழிந்துபோயிருக்கக் கூடும் எனும் சந்தேகம், ஹராமான ஒன்றை 'ஹலாலா'க மாற்றாது. அதுகெட்டது என்பது ஆதாரபூர்வமான ஒன்று. அதிலுள்ள போதை மறைந்துவிட்டது என்பதற்கு ஆதாரம் கிடையாது. எனவே அதனை அவன் குடிக்கக் கூடாது.

இன்னும் சில வேளைகளில் நல்ல பொருளில் சந்தேகம் தோன்றுகின்றது. மேலே குறிப்பிட்டதுபோல் அது ஆதாரமற்ற சந்தேகமல்ல; இஸ்லாமிய ஆதாரத்துடன் கூடிய சந்தேகம். ஆழ்ந்து பார்க்கும்போது அந்தச் சந்தேகம் அந்தப் பொருளின் தரத்தை மாற்றுகிறது என்பதை நீங்கள் நன்கு உணர்கிறீர்கள்.

இரண்டு பாத்திரங்களில் நீங்கள் தண்ணீர் எடுத்து வைத்திருக்கிறீர்கள். அவற்றில் ஒன்றில் அசுத்தப் பொருள் கலந்துவிட்டது என்று நீங்கள் நன்கு உணர்கிறீர்கள். ஆனால், அசுத்தப் பொருள் கலந்த பாத்திரம் எது என்று உங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. அருகில் சென்று உற்றுப் பார்க்கிறீர்கள். இரண்டிற்குமிடையில் எவ்வித வேறுபாடும் தெரியவில்லை.

இந்தக் கட்டத்தில் நல்ல பொருள் தன்னுடைய தரத்தை இழக்கிறது. இங்கு ஏற்படும் சந்தேகம், ஆதார பூர்வமானது எனினும், எந்தப் பாத்திரத்திலுள்ள தண்ணீர் அசுத்தமானது எனும் குழப்பமும் உருப்பெற்று விடுகிறது. அந்த இரண்டு பாத்திரத் திலுள்ள தண்ணீரையும் கொட்டிவிடத்தான் வேண்டும். அதனைக் குடிக்கவும் கூடாது; அதிலிருந்து, 'உளு'ச் செய்யவும் கூடாது.

வேறு சில வேளைகளில் கெட்ட பொருளில் ஆதார பூர்வமான சந்தேகம் தோன்றுகிறது. உதாரணத்திற்கு கள்ளையும் சாராயத்தையும் எடுத்துக் கொள்வோம். மதுபானம் அருந்துவது கெட்ட செயல் என்று உங்களுக்குத் தெரியும். எனினும் அதில் ஒரு கோணத்திலிருந்து சந்தேகம் தோன்றுகிறது.

ஒரு பாத்திரத்தில் சாராயம் நிரப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதில் போதை கிடையாது என்று நீங்கள் வாதிக்கிறீர்கள்.



ஏனெனில் சற்றுமுன், அதே சாராயத்தைக் குடித்தவன் போதை அடையவில்லை. எனவே, அதிலிருந்த போதை மறைந்து விட்டது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அல்லது அதில் போதை கிடையாது என்பதை எப்படியோ நிரூபித்துக் கொள்கிறீர்கள்.

இந்தக் கட்டத்தில் அதனை நீங்கள் சாப்பிடலாம் என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்து. ஏனெனில், போதையற்ற பானத்தைச் சாராயம் என்று சொல்ல முடியாது. என்றாலும், ஆழ்ந்த ஒழுக்கமுள்ளவர்கள் இதையும் தவிர்த்துக் கொள்கிறார்கள். மதுபானம் என்ற பெயரே அவர்களின் மனத்தில் வெறுப்பைத் தோற்றுவிக்கிறது.

உங்களுக்குத் தெளிவு பிறக்கவேண்டும் எனும் எண்ணத் துடனேயே இதனை நான் எழுதுகிறேன். 'முதற் கோணம்' எனும் இந்த அத்தியாயத்தின் சாரத்தை இங்கு எழுதிவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். நல்ல பொருளில் ஆதாரமாற்ற சந்தேகம் உருப் பெறும்போது, அது கெட்ட பொருளாக மாறாது. இது முதற் பிரிவு. கெட்ட பொருளில் ஆதாரமற்ற சந்தேகம் தோன்றும்போது, அது நல்ல பொருளாக மாறாது. இது இரண்டாம் பிரிவு. இந்தப்பிரிவுகளில் தோன்றும் சந்தேகத்துக்கு மதிப்புக் கிடையாது. ஏனெனில் அவை ஆதாரமற்றவை. எனவே அந்தச் சந்தேகங்களை மறந்துவிட்டுச் செயலாற்ற வேண்டியது அவசியமாகும். இந்தப் பிரிவு களுக்குரிய உதாரணங்கள் ஏற்கனவே இடம் பெற்றுவிட்டன.

நல்ல பொருளில் ஆதாரபூர்வமான சந்தேகம் தோன்றும் போது, அது தவிர்க்கப்படவேண்டிய பொருளாக மாறுகிறது. இது மூன்றாம் பிரிவு. கெட்ட பொருளில் ஆதாரபூர்வமான சந்தேகம் முளைக்கும்போது, அது உபயோகிக்கத் தகுந்த பொருளாக உருமாறுகிறது. இதனைத் தவிர்த்துக் கொள்கி றவர்களும் இருக்கிறார்கள். இது நான்காம் பிரிவு. இந்தப் பிரிவுகள் இரண்டிற்கும் தெளிவான உதாரணங்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

# 7. இரண்டாம் கோணம்

சந்தேகத்தினால் மாறும் பொருள்களை முந்திய அத்தியாயத்தில் பார்த்தோம். அவற்றில் ஒரு கோணத்திலிருந்து சந்தேகம் தோன்றுகிறது. ஒரு பொருளில் கலப்படம் ஏற்படுவதால், இன்னும் சில வேளைகளில் அவற்றின் தரத்தில் சந்தேகம் ஏற்படுகிறது. இதனை நாம் இந்த அத்தியாயத்தில் ஆராயப் புகுந்திருக்கிறோம்.

சுத்தமான தண்ணீரில் அசுத்தப் பொருள்கள் கலக்கும்போது, அது அசுத்தத் தண்ணீராக மாறுகிறது. நல்ல வருமானத்தில் கெட்ட வருமானம் கலக்கும்போது, அதன் தரம் குறைகிறது. இது உங்களுக்கு நன்கு தெரிந்த விவரம்.

இந்த விவரத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, நம் சிந்தனைக்குப் பல்வேறு வழிகளில் தூண்டுதல் ஏற்படுகிறது.

பாலூட்டிய ஒருத்தியைப் பால் குடித்த ஒருவன் மணக்கக்கூடாது என்பது இஸ்லாத்தின் சட்டம். ஏனெனில் பாலூட்டிய ஒருத்தியை இஸ்லாம், பெற்றெடுத்த அன்னைக்கு நிகராக உயர்த்தி மதிக்கிறது. என்றாலும், தவிர்க்க முடியாத சூழல் தோன்றும்போது பிரச்சினையில் புரட்சி தோன்றுகிறது.



ஒரு சிற்றூரில் நீங்கள் வசிக்கிறீர்கள். அந்த ஊரிலுள்ள எல்லாப் பெண்களையும் உங்களுக்குத் தெரியும். அவர்களில் சிலர், அல்லது பலர் ஒரு காலத்தில் உங்களுக்குப் பாலூட்டியிருக்கிறார்கள் என்ற செய்தியை, உங்கள் அன்னையார் தெரிவிக்கிறார். உங்களுக்குப் பாலூட்டியவர்கள் யார், பாலூட்டாதவர்கள் யார்? என்று உங்களால் கண்டுபிடிக்க முடிய வில்லை. உங்கள் அன்னையாருக்கும் அது தெரியவில்லை. கடந்த காலத்தை மறந்து விடக்கூடிய பெண்கள் எத்தனையோ பேர்.

இந்தச் சூழலில் உள்ளூரிலேயே நீங்கள் மணம் முடிக்க விரும்புகிறீர்கள். அப்படி யாரையேனும் மணந்து கொண்டால் அவள் உங்களுக்குப் பாலூட்டியவளாகவோ, அவளுடைய மகளாகவோ இருக்கக் கூடும் என்று அஞ்சுகிறீர்கள்.

இது போன்ற ஒரு பிரச்சினை தோன்றும்போது, குழம்பவேண்டிய அவசியமே கிடையாது. நன்கு சிந்தனை செய்து பார்த்தால் உண்மை தெளிவாகும். உங்களுக்குப் பாலூட்டியவர்கள் பலர் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். உண்மையில் நிலைமை அப்படி இருக்க முடியாது. ஒரு குழந்தைக்கு ஊரிலுள்ள பெண்களில் பெரும்பாலோர் பாலூட்டியிருக்க முடியும் என்று நம்புவது சிரமமான காரியம். எனவே அதிகப்பட்டால் நீங்கள் பத்துப் பேரிடம் பால் குடித்திருக்கலாம். இந்த விதத்தில், அந்தப் பத்துப் பேரில் யாரையும் நீங்கள் மணக்க முடியாத நிலையில் இருக்கலாம். அதற்காக, அந்த ஊரிலுள்ள யாரையும் மணக்கக்கூடாது என்று தீர்ப்பு வழங்க முடியாது. அந்த ஊரில் யாரை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம். ஏனென்றால், பாலூட்டியவர்கள் யார் என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது.

இங்கு நீங்கள் எதிர்வாதம் புரியலாம். ''எங்கள் குடும்பம் மிகப் பெரியது. எங்கள் ஊரில், எங்கள் குடும்பத்தார் மட்டுமே இருக்கிறார்கள். என்மீது எல்லாரும் அன்பு வைத்திருந்ததால்,

எனக்கு அனேகமாக எல்லாருமே பாலூட்டியிருக்கிறார்கள் என்று என் அன்னையார் கூறுகிறார். குறைந்தது நான் பெரும் பாலோரிடம் பால் குடித்திருக்க வேண்டும். இது என்னுடைய கருத்து வளர்வதற்கு முன் நடந்தது. இப்போது எங்கள் குடும்பம் இன்னும் விரிந்துவிட்டது. எனக்குப் பாலூட்டி யவர்கள், அவர்களின் குமாரிகள், சகோதரிகள் முதலியோர் இன்றைக்கு எங்கள் ஊரில் வாழ்கிறார்கள். கால ஓட்டத்தில் பாலூட்டியவர்களில் சிலர் இறந்து போயிருக்கலாம். என்றாலும், அவர்களின் குமாரிகள் இன்றைக்கு இருக்கத்தான் செய்கிறார்கள். பாலூட்டிய ஒருத்தியை மணக்கக் கூடாதது போல், அவளுடைய குமாரியையும் மணக்கக் கூடாது என்பது இஸ்லாத்தின் சட்டம். ஏனெனில், அவள் என் சகோதரிக்கு நிகரானவள். இதனால் தான் நான் தயங்குகிறேன்!''

இது உண்மையிலேயே நியாயமான வாதம்தான். இது போன்ற கட்டத்தில் கல்யாணத்திற்கு வேறு ஊரைப் பார்ப்பது தான் நல்லது. ஏனெனில், உங்கள் வாதத்தை வைத்துப் பார்க்கும்போது, நீங்கள் மணந்து கொள்ளும் ஒருத்தி உங்களுக்கு அன்னையாகவோ, சகோதரியாகவோ, சிற்றன்னையாகவோ இருக்கக் கூடும். இதற்குப் பொருத்தமான சூழல் அமைந் திருக்கிறது. உங்களுக்குப் பாலூட்டியவள், உங்கள் அன்னை; அவள் குமாரி உங்களுக்குச் சகோதரி; பாலூட்டியவளின் சகோதரி உங்களுக்குச் சிற்றன்னை.

ஆனால் நீங்கள் குறிப்பிடுவது போன்ற ஒரு சூழ்நிலை ஏற்படுவது மிகச் சிரமம்.

கலப்படம் பற்றிப் பேசும்போது, சிலர் தம் சிந்தனையைப் புதியதொரு கோணத்திற்குத் திருப்பி, அதிலிருந்து புதிய தொரு சட்டத்தை உருவாக்குகிறார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: பொருள்களின் தரம் இன்றைக்குப் பெரிதும் குறைந்து போய்விட்டது. ஏனெனில் தற்போதைய



மக்கள், நல்லவற்றையும் கெட்டவற்றையும் பிரித்துப் பார்ப்பதில்லை. சூழ்நிலைக்குத் தகுந்தபடி, நல்லதையும் கெட் டதையும் கலந்து வைத்துச் செய்கிறார்கள். நல்ல வருமானத்தை விடக் கெட்ட வருமானம் அதிகமாக இருக்கிறது. திருட்டு, கொள்ளை, வட்டி வியாபாரம், முதலிய எத்தனையோ வழி வகைகள் இன்றைக்குச் சர்வ சாதாரணமாகக் கையாளப்பட்டு வருகின்றன. எனவே தற்போதைய சூழலில், எந்த வியாபாரமும் செய்ய முடியாது. தூய வழியில் சம்பாதிப்பதற்கு இடம் கிடையாது. ஏனெனில் இன்றைக்கு நல்லதும் கெட்டதும் கலந்து விட்டன. நல்லதைவிடக் கெட்டது மிக அதிகமாக இருக்கிறது.

இவர்களின் வாதத்தை நம்மால் அப்படியே ஏற்றுக் கொண்டுவிட முடியாது. நல்லதும் கெட்டதும் கலந்து போயிருப்பதால், கைக்கு வரும் பொருள் ஒன்று கெட்டதாக இருக்க முடியும் என்பது அவர்கள் வாதம். எனவே சம்பாதிக் கவே கூடாது என்று மறைமுகமாக வாதிக்கிறார்கள்.

இது முற்றிலும் தவறு. இன்றைய உலகில் நல்லதும் கெட்டதும் கலந்து போயிருக்கின்றன என்பதை நாமும் ஒப்புக் கொள்ளத்தான் செய்கிறோம். அதற்காக, கைக்கு வரக்கூடிய பொருள்கள் அனைத்தையும் கெட்டவை என்று தீர்மானித்து, ஒதுக்கித் தள்ளவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர்களின் கருத்துப்படி நடக்க ஆரம்பித்தால், வர்த்தக நிலையே குலைந்து போய்விடும்.

அவர்களின் கூற்றை நாம் இன்னும் சிறிது ஆழ்ந்து ஆராயவேண்டும். நல்லதைவிடக் கெட்டது மிக அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள் அல்லவா? தற்போதைய மக்கள் நல்லவற்றையும் கெட்டவற்றையும் பிரித்துப் பார்ப்பதில்லை என்றும் அவர்கள் வாதாடுகிறார்கள் அல்லவா?

மனிதர்கள் அனைவரையும் இப்படித் தீர்மானிப்பது தவறு. தீங்கு செய்கிறவர்கள், அநியாயம் செய்கிறவர்கள், வரம்பு மீறுகிறவர்கள் அதிகம் என்பதை நாம் ஒப்புக் கொள் கிறோம். ஆனால் மிக அதிகம் என்று நம்மால் ஒப்புக்கொள்ள முடியாது.

மார்க்கத்தின் எல்லைக் கோடுகளை, எல்லாரும் கடப் பதில்லை, அதிகாரமும் வலிமையும் உள்ளவர்களே அவற்றைக் கடக்கிறார்கள். இத்தகையவர்களை மற்றவர்களுடன் சேர்த்துப் பார்க்கும்போது, மிக அதிகம் என்று நம்மால் சொல்ல முடியாது. நீதி நெறியை உணராதவர்கள், நேர்மையை மதிக்கா தவர்கள், ஒரு நாட்டில் என்றைக்குமே மற்றவர்களைவிட மிக அதிகமாக இருக்க முடியாது. வேண்டுமானால், பெருமா னாரின் காலத்தைவிடத் தற்காலத்தில் அதிகம் என்று சொல்லலாமே தவிர, தற்காலத்தில் நீதி நெறியுள்ளவர்கள் மிகக் குறைவு எனும் பொருள் தோன்றும்படி யாராலும் சொல்ல முடியாது.

சில இடங்களில் செல்வர்கள் அட்டூழியம் செய்கிறார்கள்; வேறு சில இடங்களில் அதிகாரிகள் அந்த வேலையைச் செய்கிறார்கள். இவர்களையும், மற்றவர்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது, பின்னவரின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கும். முன்னவரே மிக அதிகம் என்று கூறுவதற்கு இடம் கிடையாது.

உலகிலுள்ள செல்வர்களையும், அதிகாரிகளையும், கெட்டவர்கள் என்று பெயர் பெற்ற அனைவரையும் எண்ணிப் பாருங்கள். அப்புறம் உலகின் மக்கட் தொகையை எண்ணிப் பாருங்கள். அப்போது தெரியும், யார் அதிகம் என்று.

பெருமானாரின் காலத்தில் நடந்த வர்த்தகத்துக்கும், இப்போது நடக்கும் வர்த்தகத்துக்கும் வேற்றுமையுண்டு என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். அப்போது திக்கெட் டிலும் பரவிநின்ற நேர்மையுணர்வை, இப்போது பெரும் பாலான இடங்களில் காண முடியவில்லை என்பதையும் நாம் மறுக்கவில்லை. நம்மைச் சுற்றிலும் மார்க்கத்துக்கு முரண்பட்ட எத்தனையோ வியாபாரங்கள் நடைபெறுகின்றன. நல்ல வியாபாரி யார் என்று தேடியலைய வேண்டியிருக்கிறது. வட்டிக் கடைகளுக்குப் பஞ்சமில்லை. மார்க்கம் அனுமதிக்காத குறுக்கு வழி வியாபாரத்துக்குக் குறைவில்லை. இவை அனைத்தையும் நாம் ஒப்புக் கொள்கிறோம்.



ஆனால் நல்ல வியாபாரத்தைவிடக் கெட்ட வியாபாரம் மிக அதிகமாக இருக்கிறது என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொள்ள தயாராயில்லை. சந்தேகமிருந்தால், உங்கள் ஊரிலுள்ள வட்டிக் கடைகளையும், குறுக்கு வழி நிறுவனங்களையும் எண்ணிப் பாருங்கள். அவற்றின் எண்ணிக்கையையும், மற்ற நிலை யங்களின் எண்ணிக்கையையும் மோதவிட்டுப் பாருங்கள். அப்போது தான் உங்களுக்கு உண்மை தெரியும்.

எனவே, தூய வழியில் சம்பாதிப்பதற்கும் இடம் கிடையாது எனும் அவர்களின் கருத்தை, நாம் வன்மையாக எதிர்க்கிறோம். தப்பான கண்ணோட்டத்தினாலும் ஆதாரமற்ற சிந்தனையினாலும் உருப்பெற்றிருக்கும் ஒரு கருத்தை நம்மால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எனவே, நம் தீர்ப்பு இதுதான்: தற்போதைய உலகில் நல்லதும் கெட்டதும் கலந்திருந்தாலும், தூய உணவைச் சம்பாதித்துக் கொள்வதற்குப் போதிய வழியுண்டு.

மார்க்கம் நல்லவற்றுக்கும், கெட்டவற்றுக்கும் வரம்புகள் ஏற்படுத்தியிருக்கிறது. என்றாலும், அலசி ஆராய்ந்து பார்ப் பதாக எண்ணிக்கொண்டு, மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நல்லது எது? கெட்டது எது? நடக்க வேண்டிய வழி எது? தவிர்க்கவேண்டிய செயல் எது? என்னும் பிரச்சினைகளை நீங்கள் ஒன்றும் ஆராய்ந்து பார்க்க

வேண்டியதில்லை. ஆழ்ந்த அனுபவங்களும், ஒய்வில்லாத சிந்தனையும் பெற்ற நமது முன்னோர், அவற்றை எல்லாம் தெளிவுபடுத்திக் காட்டிவிட்டார்கள். அவர்கள் எதன் அடிப்படையில் செயலாற்றினார்கள் என்பதை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதனை நான் எழுதுகிறேன்.

நீங்கள் சிறந்த சிந்தனையாளராயிருக்கலாம்; நான் மறுக்க வில்லை. கடந்த காலத்தை இறைபணிக்குச் செலவிட்டுவிட்ட நீங்கள், எதிர்காலத்தையும் அந்தப் புனிதப் பணிக்கே ஒதுக்கி வைத்திருக்கிறீர்கள்; நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால், நிச்சயமாக நம்புங்கள், சட்டங்கள் வகுக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்குக் கிடையாது. அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள், ஏற்கனவே அதனைச் சிறப்பாகச் செய்து முடித்துவிட்டார்கள். உங்கள் முன்னோர் எப்படி இருந்தார்கள் தெரியுமா? காலத்தால் மட்டுமல்ல, சிந்தனையாலும், திறமையாலும் கூட உங்களைவிடப் பெரிதும் முன்னேறி நின்றார்கள்.

அவர்கள் தெரிந்து கொள்ளாத நுட்பங்களைத் தான் புரிந்து கொண்டு விட்டதாக ஒருவன் வாதாடினால், அவன் மதி மயக்கம் கொண்டவன். நாம் குழம்பவேண்டிய தேவையில் லாதபடி அவர்களே, அனைத்தையும் வகுத்து வைத்திருக் கிறார்கள். அவர்களும் தேவைக்கதிகமாக மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளவில்லை என்பதற்கு வரலாற்று நூல்கள் ஆதரவு தருகின்றன.

வீதிகள் ஒரு கட்டுப்பாடு இல்லாத பொதுச் சொத்து. அங்கு அசுத்தம் கலந்திருக்க முடியும் என்பது பகுத்தறிவின் கூற்று. என்றாலும், கண்கூடாக அசுத்தம் தெரிந்தால் மட்டுமே, தெரு மண்ணை அசுத்தம் எனக் கொள்ளலாம் என்று சட்டம் வகுத்தார்கள். தெரு மண்ணில் இறைவனை வணங்கலாம்;



அந்த மண்ணை எடுத்துத் துணியில் பட்டிருக்கும் அசுத்தப் பொருளை அகற்றலாம்.

விக்கிரக ஆராதனைக்காரர்களுக்குரிய பாத்திரங்களிலி ருக்கும் தண்ணீரில் 'உளூ'ச் செய்யலாம். விக்கிரக ஆராதனைக் காரர்கள் சுத்தத்துக்கும் அசுத்தத்துக்கும் வேற்றுமை பார்க் காதவர்கள். அவர்களின் உடைமையில், அந்த இரண்டும் கலந்திருக்கலாம். இருந்தும் அவர்களின் பாத்திரங்களை உபயோகித்துக்கொள்வதற்கு இஸ்லாத்தில் இடமுண்டு.

விக்கிரக வணக்கத்தை ஆதரிக்கும் ஒருத்தியின் பாத்திரத் திலிருந்த தண்ணீரில் பெருமானாரே 'உளூ'ச் செய்திருக் கிறார்கள்.

கிறிஸ்துவப் பெண் ஒருத்தியின் பாத்திரத்திலிருந்த தண்ணீரில், உமர் (ரலி) 'உளூ'ச் செய்திருக்கிறார்கள். தண் ணீருக்கும், சாராயத்துக்குமிடையில் – கிறிஸ்துவர்கள் அதிக வேற்றுமை பார்ப்பதில்லை என்று உங்களுக்குத் தெரியும். பன்றிக் கறிக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவமும் உங்களுக்குத் தெரிந்ததே.

இப்படிப் பார்க்கும்போது, நாம் உபயோகிக்கும் பொருள் களில் பெரும்பாலானவை, அசுத்தக் கலப்புடனேயே வந்திருக் கின்றன. அவற்றை எல்லாம் ஒதுக்கித் தள்ளுவதானால், உலகினில் நம்மால் வாழவே முடியாது. மனிதனின் வாழ்வுக் கென்று அருளப்பட்டிருக்கும் ஒரு மதத்தில், அப்படி ஒரு சட்டத்தைப் பார்க்க முடியாது. எனவே தான் பெருமானார் நமக்கு வழிக் காட்டிச் சென்றிருக்கிறார்கள். கெட்டதைச் சாப்பிடக் கூடாது என்று எல்லை காட்டிய அவர்கள், கெட்டது என்று தீர்மானிக்கத் தெரியாத ஒன்றை, நல்லது என்றே நமக்குக் காட்டியிருக்கிறார்கள். சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் காட்டிச் சென்றிருக்கிறார்கள்.

தெருவில் கிடக்கும் மண்ணைச் சுத்தமானது என்று நான் குறிப்பிட்டேனல்லவா? அதைக் கொஞ்சம் எண்ணிப்

பாருங்கள். கலப்படம் ஏற்பட்டுவிட்டதால், இன்றைய உலகில் நல்ல வருமானத்துக்கே இடமில்லாமற் போய்விட்டது என்று வாதிக்கிறவர்கள் எண்ணிப் பார்க்கட்டும்.

தெருவில் நாய்கள் ஓடுகின்றன; பன்றிகள் மேய்கின்றன; ஆடு, மாடு, குதிரை முதலான கால் நடைகள் அசுத்தத்தைப் பரப்புகின்றன. தெருவில் விளையாடும் குழந்தைகள் வேறொரு விதத்தில் அசுத்தத்தைப் பரப்புகின்றன. தெரிந்தோ தெரியாமலோ தெரு ஓரங்களில் பலர் சிறுநீர் கழிக்கிறார்கள்.

இப்படியிருக்கும் போது தெருமண்ணைச் சுத்தமானது என்று எப்படிச் சொல்ல முடியும்?

அசுத்தம் கண்கூடாகத் தெரியும் வரை அல்லது ஆதார பூர்வமான சந்தேகம் ஏற்படும்வரை, தெருமண்ணைச் சுத்த மானது என்று தான் நாம் கொள்ளவேண்டும். பல வழிகளில் அசுத்தம் ஏற்பட்டாலும், வெய்யிலும் மழையும் அவற்றைப் போக்குகின்றன.

தற்போதைய வர்த்தகத்திலும், வருமானத்திலும் என்ன தான் தீமைகள் கலந்திருந்தாலும் அதற்காக, வர்த்தகம் செய்வதே கூடாது என்று சொல்லிவிட முடியாது என்பதைக் காட்டுவ தற்காகவே இதை எழுதுகிறேன்.

வாசகர்களாகிய நீங்கள் இங்கு ஒரு வினாவை எழுப்பக் கூடும். ''நல்லதைவிடக் கெட்டதும், சுத்தத்தைவிட அசுத்தமும், இரண்டறக் கலந்துவிட்டன என்று நாம் நிச்சயமாக அறிகிறோம் என்று வைத்துக் கொள்வோம். உலகின் வர்த்தக நிலை, வருமான வழி பல்லாயிரம் மடங்கு மோசமாகி விட்டது என்று கற்பனை செய்து கொள்வோம். அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?'' என்று நீங்கள் கேட்கிறீர்கள்.

முதலில், நல்லதும், கெட்டதும், 'ஹலாலு' ம், ஹராமு'ம், இரண்டறக் கலக்கும் சூழ்நிலை ஒன்று உருவாகும் என்று



என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. இருளும் ஒளியும் பின்னிப் பிணைந்து கலக்கும் ஒரு சூழலை, ஒரு மனிதனால் எப்படித்தான் கற்பனை செய்து பார்க்க முடியும். அப்படியே நாம் பல்லைக் கடித்துக் கொண்டு கற்பனை செய்து கொண்டால், அப்போது ஐந்து விதங்களில் நடந்து கொள்ளலாம். இதற்கு முன் நீங்கள் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படி ஒரு சூழல் ஏற்பட்டால், ஒரே ஒரு நல்ல பொருள் கூட உலகில் மிஞ்சி நிற்கவில்லை எனும் நிலை ஏற்பட்டால்- அப்போது கெட்டவை அனைத்தும் நல்லவையாக மாறிவிடும்!

கற்பனைக்கும் சிந்தனைக்கும் எட்டாத இந்த விசித்திர சூழ்நிலை ஏற்படும்போது, அப்போதைய மக்கள், மேலே நான் குறிப்பிட்டதுபோல் நான்கு விதங்களில் நடந்து கொள்ளலாம்.

1. சாப்பிடுவதையே அவர்கள் விட்டுவிட வேண்டும். பசியின் நச்சுப் பல்லுக்கு இரையாகி, அவர்கள் அனைவரும் மாண்டு போகட்டும்.

இப்படி நடப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பது விரிவுரைக்குத் தேவையில்லாத ஒன்று. ஏனெனில் பட்டினி கிடந்து சாவது அறிவுடைமையல்ல; மார்க்கத்திலும் அதற்கு அனுமதியில்லை.

2. அல்லது, பேராசையை ஒழித்துக் கட்டிவிட்டுத் தேவை யின் அளவுக்குச் சாப்பிட்டு உயிர் வாழ வேண்டும்.

இதுவும் நடக்காத காரியம்தான். மக்கள் அனைவரும் இந்த வழியில் நடக்க ஆரம்பித்தால், அப்புறம் அவர்களிடம் எந்த முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. தொழில் துறைகளில் தேக்கம் ஏற்பட்டுவிடும். இதனால் உலக வாழ்வே அஸ்தமித்துப் போய்விடும். உலக வாழ்வுக்கு இப்படிப் பாதகம் ஏற்படும்போது, அது நிச்சயமாக மார்க்கத்தையும் பாதிக்கும். உலகில் தான் மார்க்கம் மலர்கிறது. மார்க்கத்தைப்

பயிர் என்றால், உலக வாழ்வை மார்க்கப் பயிர் வளர்வதற்குரிய நிலம் என்று சொல்லலாம்.

3. அல்லது, நல்ல பொருள், கெட்ட பொருள் என்று வேற்றுமை பார்க்காமல், திருட்டில் கிடைத்த பொருளையும் வர்த்தகத்தில் கிடைத்த பொருளையும், பிரித்துப் பார்க்காமல்-தேவையின் அளவுக்கு உட்கொள்ள வேண்டும்.

இந்த முறை அமுலுக்கு வந்தால், தீயவர்களுக்கு அது பெரிதும் துணை செய்யும்; மார்க்கத்தின் எல்லைகளைத் தகர்த்தெறியும், உடல் வலிமை பெற்றவர்கள், செல்வர்களின் மாளிகைகளில் புகுந்து கொள்ளையடிக்க நேரிடலாம். வலியவர்கள், எளியவர்களை ஏமாற்றத் தொடுக்கலாம். இப்படி ஏற்படும் விளைவுகளை நம்மால் தடுக்க முடியாது. அவர்கள் இப்படிக் கூறலாம்: ''எங்கள் தேவையே, எங்களுக்குப் பெரியது. தேவைக்காகவே நாங்கள் கொள்ளையடிக்கிறோம். நல்ல பொருள், கெட்ட பொருள் என்று வேற்றுமை பார்க்க வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. அவை, பிரித்துப் பார்த்துச் செயலாற்ற முடியாதவாறு, இரண்டறக் கலந்துபோய் விட்டன!''

இதனால் அரசியல் அமைப்பே குலைந்துபோகும். நீதி மன்றங்களையும், சிறைச்சாலைகளையும் இடித்துத் தள்ள வேண்டி ஏற்படும். நல்லவர்களுக்கு ஆதரவு கிடைக்காது. அவர்கள் மேலும் மேலும் துன்பத்துக்கு இலக்காவார்கள். கெட்டவர்களுக்குப் புதுத் தெம்பு கிடைக்கும். அவர்களின் அட்டூழியம் திக்கெட்டும் பரவும்.

எனவே உலக அமைதிக்கு இதுவும் சிறந்த வழி முறையல்ல.

4. அல்லது, மார்க்கத்தின் எல்லைகளை மதித்து, அது அனுமதி கொடுத்த விதத்தில் தேவைக்கு மட்டும் சாப்பிட



வேண்டும். சம்பாத்தியத்திற்கென்று இஸ்லாம் வகுத்திருக்கும் சட்டங்களைப் பேணிக்காக்கவேண்டும். இறை வழி நடப்பவர்கள், பின்பற்றுவதற்கு இது சிறந்தமுறை என்பது என் கருத்து.

ஆனால் இந்த வழிமுறையை, எல்லோரும் பின்பற்றுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. பொதுமக்களுக்கென்று அளிக்கப்படும் மார்க்கத் தீர்ப்புகளிலும், இதனைத் திணிக்க முடியாது. ஏனெனில் தேவையின் அளவிற்கு மட்டும் சாப்பிட்டுத் திருப்தியடைய மறுக்கிறவர்கள், மக்கட் திரளில் பெரும்பாலோர். தேவைக்குமேல் பொருளைச் சேமித்து வைத்திருப்பவர்களும் மக்கள் மத்தியில் காணப்படலாம். இதனால் பொருள் வளம் படைத்தவர்களை மற்றவர்கள் கொள்ளையடிக்க முற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், மேலே நான் குறிப்பிட்டதுபோல், உலகிலுள்ள பொருள் அத்தனையும் கெட்டவையாகிவிட்டால், அவற்றில் வேற்றுமை பார்க்கவேண்டிய அவசியம் மிஞ்சி நிற்கப்போவதில்லை.

இப்படிக் கொள்ளையடிப்பவர்களை நாம் கண்டிக்க முற்பட்டால் அவர்கள் நம்மைத் திருப்பிக் கேட்கக் கூடும்.

''தேவைக்கு மட்டுமே மனிதன் சாப்பிடவேண்டும்; சேமிக்கவேண்டும். தம் தேவையையே முடித்துக்கொள்ள முடியாத நிலையில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஒரு சாரார் இப்படியிருந்தால், மற்றொரு சாரார் தம் தேவைக்கு மேல் சேமித்து வைத்துக் கொள்கிறார்கள். இவர்களையே நாங்கள் கொள்ளையடிக்கிறோம். அவர்களுடைய தேவைக்கு மேல் குவிந்து கிடக்கும் பொருள், எங்கள் தேவைக்குப் பயன் படட்டும்!''

இப்படிப் பார்க்கும்போது, நாட்டை ஆளுகிறவர்கள் தேவைக்குமேல் மக்களிடமிருக்கும் செல்வங்களை எல்லாம்

பலவந்தமாகப் பறிக்க வேண்டி ஏற்படும். மக்கள் பதுக்கி வைத்திருக்கும் பொருள்களை எல்லாம் வெளியில் கொண்டு வருவது, அப்படியொன்றும் இலகுவான காரியமல்ல. இந்த வழியில் அரசாங்க அதிகாரிகள் பெரிதும் சிரமப்பட வேண்டி ஏற்படும். அப்படியே இதில் அவர்கள் வெற்றி பெற்றாலும், மக்களின் தேவைக்குமேல் மிஞ்சி நிற்கும் பொருள்களை எல்லாம், கடலில் கொட்ட வேண்டி ஏற்படலாம். ஒரே வாழ்வு, ஒரே உணவு என்று பார்க்கும்போது, உற்பத்திக்கும் செலவுக்கு மிடையில் நிச்சயமாகத் துண்டுவிழும்.

இந்தச் சமத்துவ அரசியலை நிறுவும்போது, ஜகாத், ஹஜ் முதலான செயல் முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படும். ஏனெனில், தேவைக்கு மிஞ்சிய பொருளிலிருந்தே, ஜகாத் கொடுக்கப் படுகிறது; ஹஜ் செய்யப்படுகிறது. சுருங்கச் சொன்னால், செல்வத்தை அடிப்படையாகக்கொண்டு, உருவாக்கப்பட் டிருக்கும் வணக்க வகைகள், நற்காரியங்கள், அத்தனையும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விடும். தேவைக்குமேல் மக்களிடம் ஒன்றும் இருக்காது. எதிலிருந்து அவர்கள் தர்மம் செய்யப்போகிறார்கள்? எதை வைத்து அவர்கள் அன்னதானம் செய்யப்போகிறார்கள்?

இப்படி ஒரு காலம் வரும்போது, அந்தக் காலத்துக்குத் தகுந்தபடி ஒரு மார்க்கத்தை இறைவனே அனுப்பித்தர வேண்டும். அந்த மார்க்கத்தையே அனைவரும் பின்பற்ற வேண்டும். இல்லையேல், இந்தச் சமத்துவ அரசியலில், குறிப் பிடத் தக்க எந்த முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது.

இப்போது உங்கள் சிந்தனையைப் பெருமானார் தோன்றிய காலத்திற்குத் திருப்ப விரும்புகிறேன். இப்போதைய வருமான நிலை எப்படியிருக்கிறதோ, அப்படித்தான் அப்போதும் இருந்தது. ஈஸா நபியின் மார்க்கமும், அவர்களின்



ஆத்மீகக் கருத்துக்களும், மக்களுடைய மனத்தில் நன்கு பதிய வில்லை. இன்றையச் சூழலைப் போலவே, அன்றையச் சூழலிலும் பல கோளாறுகள் ஏற்பட்டிருந்தன. மக்களில் பெரும்பாலோர் சம்பாதித்தார்கள்-சம்பாத்தியத்திற்கென்று வகுக்கப்பட்டிருந்த நீதிகளை மறந்து.

பெருமானாருக்கும், ஈஸா நபிக்குமிடையில் ஏறத்தாழ 600 ஆண்டுகள் கழிந்து போயின. இந்த நீண்ட இடைவெளியில் எத்தனையோ விதமான பொருளாதாரக் கோளாறுகள் தோன்றியிருந்தன. மக்கள் ஒன்றுபட்டு வாழவில்லை. சிலர் ஈஸா நபியை நம்பினார்கள்; வேறு சிலர் மறுத்தார்கள். மறுத்தவர்களில், ஒரு சாரார் யூதர்கள்; மற்றொரு சாரார் விக்கிரக ஆராதனைக்காரர்கள். இதனால் நாட்டின் அமைதிக்குப் பாதகம் ஏற்பட்டது. தற்போது ஏற்பட்டிருப்பது போன்ற, இக்கட்டான நிலை அப்போது ஏற்பட்டிருந்தது.

செல்வம் என்பது யாருக்கும் கட்டுப்பட்டதல்ல. மறுப்பாளர்களிடம் மட்டுமன்றி, நம்பிக்கையாளர்களிடமும் அது இருந்தது. மறுப்பாளர்கள் மனம் போனபடி எல்லாம் செலவு செய்தார்கள். அவர்கள் தமக்குச் சட்டங்களை வகுத்துக் கொண்டார்கள். ஈஸா நபியின் சட்டங்களை அவர்கள் பின் பற்றவில்லை.

ஈஸா நபியை நம்பியவர்களும், மோசமாகவே இருந் தார்கள். மார்க்கத்தை அவர்கள் மதிக்கவில்லை; வர்த்தக விதிகளை அனுசரிக்கவில்லை.

இதனால், அப்போது புழக்கத்திலிருந்த பொருள்களில் பெரும்பாலானவை மார்க்கத்தின் பார்வையில் 'தவறானவை' என்றே பெயர் பெற்றன.

ஆனால், பொருமானார் அவற்றை எல்லாம் துண்டித் துருவி ஆராயவில்லை. நேர்மையாகவோ, தப்பாகவோ

நடந்து போனவை பற்றி அவர்கள் வெறுப்புத் தெரிவிக்க வில்லை. அனைத்தையும் மன்னித்துவிட்டார்கள்.

கடந்துபோன பொருளாதாரத்தைக் கட்டோடு மறந்து விட்டு, புதியதொரு பொருளாதாரத் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்கள். நல்லவை என்று சிலவற்றை அவர்கள் ஒதுக்கித் தந்தார்கள். வேறு சிலவற்றுக்கு, அவர்கள் கெட்டவை என்று பெயர் கொடுத்தார்கள். முன்னவை பின்னவையாகவோ, பின்னவை முன்னவையாகவோ மாற முடியாது.

முரண் வழியினரிடமிருந்து நாம் பெறும் பணம், அவர்களால் எந்த வழியில் ஈட்டப்பெற்றது என்று நமக்கு நிச்சயமாகத் தெரியாது. வட்டியில் கிடைத்தாகவோ, சாராயத் தில் கிடைத்ததாகவோ இருக்க முடியுமல்லவா? ஆனால், அது நிச்சயமாகத் தீய வழியில் தான் கிடைத்திருக்கிறது என்று தெரிந்தால் அதனை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

# 8. மூன்றாம் கோணம்

சில வேளைகளில் ஒரு பொருளின் தரம் வேறொரு கோணத்திலிருந்து பாதிக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினையை நாம் இந்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

வெள்ளிக்கிழமையன்று தொழுகைக்கு அழைப்புக் கொடுக்கப்படும்போது விற்பனை செய்வது, அந்நியன் ஒருவனிடமிருந்து பலவந்தமாகப் பிடுங்கிய கத்தியின் உதவி யால் ஆட்டையோ, மாட்டையோ அறுப்பது முதலியவை இந்த இனத்தில் சேர்கின்றன. இப்படிச் சூழ்நிலை ஏற்படும்போது, நல்ல பொருளின் தரத்தில் குறை ஏற்படுகிறது. அவற்றைச் சட்ட ரீதியாகத் தவறானவை என்று சொல்ல முடியாவிட்டாலும், அழுத்தமான ஒழுக்கமுள்ளவர்கள் பேணிக் காத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு ஆதரவாகச் சம்பவம் ஒன்று குறிப்பிடப்படுகிறது.

ஓர் அறிஞர், ஒரு மனிதனிடம் ஏதோ ஒரு பொருளை விலை கொடுத்து வாங்கினார். அந்த மனிதன், அதனை வெள்ளிக் கிழமையன்று வாங்கிய செய்தியை அந்த அறிஞர் அறிந்து கொண்டார். உடனே அவனிடம் அதனைத் திருப்பிக் கொடுத்து விட்டார். ஏனெனில் அந்த மனிதன், அதனை வெள்ளியன்று வாங்கியிருக்கிறான். ஒருக்கால் இந்த

விற்பனை, தொழுகைக்கு அழைப்புக் கொடுக்கப்பட்டபோது நடந்திருக்க முடியுமல்லவா?

தொழுகைக்கு அழைப்பு விடுக்கப்பட்டதும், வர்த்தக நிலையங்களை மூடி விட்டுப் பள்ளி செல்லவேண்டும் என்பது திருக்குர்ஆனின் கருத்து. ஒருவன் இப்படிச் செய்யவில்லை என்றால், அப்போது நடக்கும் வியாபாரம் சட்டப்படி செல்லாது என்று சொல்ல முடியாது. போதாததற்கு, மேற்குறிப்பிட்ட சம்பவத்தில், அந்த மனிதன் தொழுகைக்குரிய அழைப்பின் போதுதான், அந்தப் பொருளை வேறொருவனிடமிருந்து வாங்கியிருக்க வேண்டும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

இப்படியெல்லாம், எல்லையைக் கடந்து சிந்திக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஏற்கனவே இதற்குரிய ஆதாரங்களை நான் தெளிவு படுத்தியிருக்கிறேன். இத்தகைய ஆராய்ச்சியினால் சில வேளைகளில், அடிப்படையான ஒழுக்கத்துக்கே ஆபத்து ஏற்பட்டு விடுகிறது. தற்காலத்திய மக்களில் பெரும்பாலோர் இதுபோன்ற நிலையில்தான் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். நல்லதையும் கெட்டதையும் அலசி ஆராய்ந்து பார்த்து ஒழுகுவதாக நினைத்துக்கொண்டு, அவர்கள் மார்க்கத்துக்கு முரண்பட்டதையே செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள்.

குழப்ப வசப்பட்டவர்களில் சிலர், தொழுகைக்காக 'உளூ'ச் செய்யும் போது, என்ன செய்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். வெளியுறுப்புக்களில் சிலவற்றைச் சுத்தப்படுத்த வேண்டும் என்பது அவர்களின் எண்ணம். இந்த எண்ணம் செயல்படும்போது, அவர்களின் மனத்தில் எத்தனையோ விதமான குழப்பங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இதனால் அவர்களின் குறிக்கோளுக்கே ஆபத்து ஏற்பட்டு விடுகிறது.

இதேபோன்று, நல்லதையும் கெட்டதையும் பிரித்தறியும் வழியில், தேவைக்குமேல் முன்னேறிச் செல்கிறவர்கள்,



இறுதியில் தப்பான தீர்மானத்திற்கு வந்துவிடுகிறார்கள். தற்போதைய சூழலில் நல்லதையும் கெட்டதையும் பிரித்தறிய முடியாது என்று எண்ணுகிறார்கள். கைக்குக் கிடைக்கும் பொருள்கள் அனைத்திலும், ஏதோ ஒருவிதத்தில் தீமை கலந்து விடுகிறது என்று தீர்மானிக்கிறார்கள். எனவே, இன்றைய உலகில் நல்லதையும் கெட்டதையும் பிரித்துப் பார்க்க வேண்டியதில்லை. கையில் கிடைப்பதை மகிழ்வுடன் உட்கொள்ளலாம் எனும் முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். ஆகவேதான் தேவையின் எல்லையைக் கடந்து சிந்தித்துக் குழம்ப வேண்டியதில்லை என்று நான் சொல்கிறேன்.

இன்னும் சில வேளைகளில், விற்பனையாளரின் தவறுகள் பிரச்சினையைக் குழப்புகின்றன. வழிப்பறிக் கொள்ளைக்காரனுக்கு வாளை விற்பது, குடிகாரனுக்குத் திராட்சையை விற்பது முதலியவை நம் சிந்தனையைக் கவர்கின்றன. இவற்றைப் பற்றிய பிரச்சினையில், அறிஞர் குழுவில் கருத்து வேற்றுமை நிலவுகிறது. ஏனெனில், முன்னவன் அந்த வாளைப் பயன்படுத்திக் கொள்ளையடிக்கலாம். பின்னவன் திராட்சையை மதுவாக மாற்றலாம். இந்த விற்பனையில் கிடைக்கும் இலாபத்தைப் பற்றியும் கருத்து வேற்றுமையே நிலவுகிறது. எனினும், அந்த இலாபத்தில் தீங்கு கிடையாது என்பதுதான் சரியான கருத்து. வாளையும், திராட்சையையும் வாங்கிச் சென்றவர்கள் அவற்றை முறை கெட்ட வழிக்குப் பயன்படுத்தினால் அது, அவர்கள் செய்யும் தவறு. அந்தத் தவற்றுக்கு விற்பனையாளன் பொறுப் பாளியல்ல.

எனினும், மேற்குறிப்பிட்ட கட்டங்களில் தீங்கு நடப்பதற்கு வழியுண்டு. எனவே இந்த விற்பனை 'மக்ரூஹ்' என்று கருதப்படுகிறது. 'மக்ரூஹ்' என்றால் விரும்பத்தகாதது-வெறுக்கத் தகுந்தது என்று அர்த்தம். எனவே அதனைத் தவிர்ப்பது நல்லது; தவிர்க்கா விட்டால் பெரும் தவறு ஒன்றைச் செய்துவிட்ட குற்றம் கிடையாது.

நாட்டின் அமைதிக்குச் சோதனை ஏற்பட்டிருக்கும்போது, வாள் போன்ற கருவிகளை விற்பனை செய்வது 'மக்ரூஹ்' என்று முன்னோர் சட்டம் போட்டு வைத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், அந்தப் போர்க் கருவிகள், அட்டூழியக்காரர்களின் கைக்குப்போகும்போது, அவை இஸ்லாத்துக்கு எதிராக – நாட்டின் பாதுகாப்புக்கு எதிராக இயங்கக் கூடும் என்பது தான்.

சுருங்கச் சொன்னால், சட்டத்தின் நுணுக்கங்களை எல்லாம் அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டிய அவசியம் உங்களுக்குக் கிடையாது. நீங்களாகவே எந்தப் பிரச்சினையிலும் முடிவு கண்டு திருப்தியடையத் தேவையும் கிடையாது. குழப்பம் ஏற்படுகிறதா? ஏற்பட்டிருக்கும் பிரச்சனைக்கு விளக்கம் வேண்டுமா? சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்தால்தான் பிரச்சினைக்கு ஒரு வழி பிறக்கும் என்று உண்மையாகவே நினைக்கிறீர்களா?

அப்படியானால் ஒழுக்கமுள்ள மார்க்க அறிஞர்களை அணுகி விளக்கம் கேளுங்கள். உங்களுக்குத் தெரியாத சட்ட நுணுக்கங்கள் அவர்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். நீங்கள் ஆராய்ந்து முடிவு கட்டவேண்டிய பிரச்சினைகள், அவர்களால் ஏற்கனவே ஆராய்ந்து முடிவு கட்டப்பட்டவையாக இருக்கக் கூடும்.

அவர்கள் நேர்மையை உங்களுக்குக் காட்டுவார்கள். அவர்கள் காட்டும் வழியில் கண்ணை மூடிக்கொண்டு நடந்து செல்லுங்கள். எந்த ஆதாரமும் இல்லாமல், அவர்களின் கருத்தை மீறாதீர்கள். ஏனெனில், மனம் போனபடி நீங்கள் நடக்க ஆரம்பித்தால் ஏற்படும் விபரீதங்கள் எதிர்பார்க்கப்படும் நன்மைகளைவிட அதிகமாக இருக்கும்.

சஅது பின் அபீ வக்காஸ் செய்த காரியத்துக்கு நீங்கள் தப்பாகப் பொருள் கொடுக்காதீர்கள். திராட்சைக் கொடிகளை



எல்லாம், அவர் தீயிட்டுப் பொசுக்கி விட்டாராம்! அவற்றிலிருந்து கிடைக்கும் திராட்சைக் கனிகளை எவனோ ஒருவன், எவனாகிலும் ஒருவன் வாங்கிச் சென்று மதுபானம் தயாரிக்கக் கூடும் என்று அவர் அஞ்சினாராம்!

செடிகளை எரித்துச் சாம்பலாக்குவதற்கு இது ஒன்றுதான் காரணமா அல்லது அதற்கு வேறு பல காரணங்கள் இருக்க முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. என்றாலும், மதுபானம் தயாரிக்கும் ஒருவனுக்கு அந்தச் செடிகள் துணை செய்யக்கூடும் என்ற ஒரே காரணத்தை வைத்துத்தான் அவர் அப்படிச் செய்தார் என்று என்னால் சொல்ல முடியாது. ஏனெனில், நபித்தோழர்களில் அவரைவிட உயர்ந்த நிலையிலிருந்தவர்கள் கூடத் திராட்சைச் செடிகளையோ, பேரீச்சை மரங்களையோ தீயிட்டுக் கொளுத்தியதில்லை.

அவர் செய்ததுபோல, தீமை விளையக்கூடும் என்ற ஒரே காரணத்தை வைத்துச் செடிகளைக் கொளுத்தி அழிப்பது கூடும் என்றால், ஆண்மகன் ஒருவன், தன்னுடைய அபத்தை அறுத்தெறிந்து விடுவதும் கூடும் என்று அர்த்தம் கொள்ள வேண்டி ஏற்படும்; நாக்கைப் பிடுங்கி எறிந்து விடுவதும் ஆகும் என்று சட்டம் வகுக்கவேண்டி ஏற்படும். அபத்தினால் மாற்றாள் கலவை ஏற்படக் கூடுமல்லவா? எலும்பற்ற நாக்கு எப்போதாகிலும் பொய் பேசக் கூடுமல்லவா?

ஆனால் இவற்றை எல்லாம் இஸ்லாம் ஆதரிக்கவில்லை. பயனுள்ள எதையும் பாழ்படுத்துவதற்கு மார்க்கத்தில் அனுமதி கிடையாது. நாக்கையோ, மூக்கையோ அறுத்துக்கொள்ள முடியாது. அதற்குத் தேவையுமில்லை. அது அறிவுடைமையுமல்ல.

எனினும் ஒழுக்க சீலர்களின் வாழ்க்கையை எண்ணிப் பார்க்கும்போது, நமக்குப் பெருமிதம் தான் ஏற்படுகிறது. இறைவனுக்காக வாழ்ந்த அவர்கள், இறைவன் வகுத்த வழியில் நடந்த அவர்கள், நம்மைவிடப் பல மடங்கு உயர்ந்து விளங்கினார்கள். மிகச் சிறிய தவற்றைக்கூட அவர்கள் செய்யத்

தயங்கினார்கள். அவர்களின் ஒழுக்கம், சட்டத்தைப் பேணிப் பாதுகாக்கும் மனப்பான்மை, சூறாவளிக்கும் அசையாத நம்பிக்கை முதலியவற்றை வரலாற்று நூல்கள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

மதுபானம் தயாரிக்கும் ஒருவனுக்குத் துணை செய்தது போல் ஆகிவிடக் கூடாது என்பதற்காக அவனுக்குத் திராட்சையை விற்பனை செய்வதை 'மக்ரூஹ்' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பிஷ்ர் பின் ஹர்ஸ் என்பவர், ஓர் ஆற்றில் தண்ணீர் குடிக்க மறுத்து விட்டாராம். அந்த ஆறு அநியாயக்காரர்களால் வெட்டப்பட்டது என்பது காரணம்.

மற்றொருவர் திராட்சைக் கனியை ஒதுக்கி வைத்தாராம், அந்தத் திராட்சைச் செடி, அநியாயக்காரர்களால் வெட்டப் பட்டிருந்த ஓர் ஆற்றுத் தண்ணீரைக் குடித்து வளர்ந்தது என்பது இதற்குக் காரணம்.

இப்படி எத்தனையோ சம்பவங்களை நம்மால் குறிப்பிட முடியும். என்றாலும், அவற்றை எல்லாம் மார்க்க அறிஞர்களின் தீர்ப்புக் காகிதங்களில் நம்மால் நிச்சயமாகக் காண முடியாது. ஒழுக்கம் என்றும் அவர்கள் அவற்றிற்கும் பெயர் கொடுப்பதில்லை. ஒழுக்கத்திற்கு இலக்கணம் கூறுவதுபோல் அமைந்த சம்பவங்களை அங்கு பார்க்க முடியாது. ஏனெனில் பொது மக்களுக்கு அவை தேவையற்றவை.

பொது மக்களின் சக்தியை அனுசரித்து, அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். எனவே அது எல்லாருக்கும் எல்லா விதத்திலும் பயன்படும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

எனவே, அறிஞர்களின் தீர்ப்புக்கு அடுத்தபடியாக, உங்கள் மனச்சான்றிடம் தீர்ப்புக் கேளுங்கள். அது நிச்சயமாக உங்களுக்கு உண்மையைக் கூறும். மனச்சான்று பொய் பேசுவதில்லை.



இந்தத் தீர்ப்பைத்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் வாபிஸாவுக்குக் கூறினார்கள்: ''உன் மனத்தைக் கேட்டுப் பார்!''

ஒரு செயலை அல்லது பொருளை உங்கள் மனச்சான்று கெட்டது என்று குறிப்பிடுகிறதா? அதனை மறந்துவிடுங்கள். கொடிய மனம் படைத்தவர்களைப்போல், மனச்சான்றைக் கொன்று விட்டு எல்லையை மீறாதீர்கள். இல்லையேல் உங்கள் உள்ளம் இருள் படிந்த குகையாக மாறிவிடும். அதில் அறிவொளியைப் பார்க்கவே முடியாது.

மார்க்கத் தீர்ப்பு ஒரு பொருளைக் கெட்டது என்று ஒதுக்கி வைத்திருக்கிறது. ஆனால், அது உங்கள் மனச்சான்றின் பார்வையில் நல்லது என்று தோன்றுகிறது, சந்தேகத்திற்கோ குழப்பத்திற்கோ இடமில்லாதவாறு, அதனை நீங்கள் நல்லது என்று உறுதியாக நம்புகிறீர்கள். அப்படியானால் மனச் சான்றினை ஆதாரமாக வைத்துச் செயலாற்றுங்கள். இது உங்கள் உள்ளத்திற்கு நிச்சயமாகத் தீங்கு செய்யாது. ஆனால் ஒரு நிபந்தனை: அதனை உங்கள் உள்மனம் நல்லது என்று நிச்சயமாக நம்பவேண்டும்.

மார்க்க அறிஞர்கள் ஒரு செயலை நல்லது என்று குறிப் பிட்டு 'பத்வா' கொடுத்து வைத்திருக்கிறார்கள். உங்கள் மனச் சான்று அதனை மறுக்கிறது. அதனைக் கெட்டது என்று நீங்கள் உறுதியுடன் நம்புகிறீர்கள். அப்படியானால் அதனைச் செய்யா தீர்கள். இது உங்கள் மனப்பரப்பில் தீமையை வளர்க்கும் ஆற்றல் படைத்தது.

சுத்தமான மனத்தில், நடுநிலையிலிருக்கும் உள்ளத்தில், நல்லது குறித்து வெறுப்பும் ஏற்படாது; கெட்டது குறித்து விருப்பும் ஏற்படாது. அந்த உள்ளத்தின் இயக்கத்தில் உயிர் இருக்கும். அதிலிருந்து வரும் சான்றில் தெம்பு இருக்கும் . அது கொடுக்கும் தீர்ப்புகளில் நேர்மை இருக்கும்; நீதி இருக்கும்; பண்பு இருக்கும்; ஒழுக்கம் இருக்கும். இவை அந்தனைக்கும் மேலாக இறை பக்தியும், இறையன்பும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து நிற்கும். வேறென்ன வேண்டும் உங்களுக்கு?

# 9. நான்காம் கோணம்

**ந**ல்ல பொருளாயினும் கெட்ட பொருளாயினும் மார்க்கத்தில் அவற்றிற்கு ஆதாரமுண்டு. அந்த ஆதாரங்களின் அடிப்படையிலேயே ஒரு பொருளை நல்லது என்றோ, கெட்டது என்றோ தீர்மானிக்க முடியும். அந்த ஆதாரங்களில் குழப்பமோ முரண்பாடோ தோன்றும்போது, அந்தப் பொருள் களைப் பற்றிய பிரச்சினையில் குழப்பம் ஏற்படுகிறது. அப்படி இரண்டு ஆதாரங்கள் ஒன்றோடொன்று மோதும்போது, அவற்றில் ஒன்றை மட்டில் திடீரென்று தேர்ந்தெடுத்துவிட முடியாது. அப்படித் தேர்ந்தெடுப்பதற்குத் தக்கவாறு வேறு ஆதாரம் கிடைக்கும்வரை குழப்பம் இருக்கத்தான் செய்யும்.

இவ்வாறு இரண்டிற்கு மிடையில் நாம் குழம்பிக் கொண்டிருக்கும்போது, அந்தப் பொருள் நல்லதல்ல என்பதற்கு வேறு ஆதாரம் ஏதும் கிடைத்தால், அதனைக் கெட்டது என்று தீர்மானிக்க வேண்டும். அந்தப் பொருள் நல்லது என்பதற்கு ஆதாரம் கிடைத்தால அந்தப் பொருள் நல்லதுதான்.

இத்தகைய கருத்து வேற்றுமைகளுக்கு இலக்கான பிரச்சினைகளில், தீர்ப்பு வழங்குகிறவர்கள் எச்சரிக்கையோடு இருப்பதே நல்லது. அவர்கள் நல்லது என்று குறிப்பிடும் பொருள் கெட்டதாக இருக்கக்கூடும். அவர்கள் கெட்டது என்று தீர்ப்பு வழங்கும் பொருள் நல்லதாக இருக்கக் கூடும்.



ஆனால் பாமரர்களுக்கு இவ்வளவு தூரம் கண்டிப்புக் கிடையாது. மார்க்க அறிஞரின் தீர்ப்பை நம்பிக்கொண்டு அவர்கள் தாராளமாகச் செயலாற்றலாம். சட்ட நுணுக்கங்களை ஆராயவேண்டிய தேவை அவர்களுக்குக் கிடையாது. ஒரு பிரச்சினையில் குழப்பம் ஏற்பட்டால் அவர்கள் செய்ய வேண்டிய ஒரே வேலை மார்க்க அறிஞர்களிடம் சென்று விளக்கம் கேட்பது. அந்த அறிஞர்கள் உண்மையிலேயே மார்க் கத்தையும், அதன் சட்டங்களையும் கரைத்துக் குடித்தவர்களாக இருக்கவேண்டியதில்லை. அப்படி யாரையும் உலகில் பார்க்க முடியாது. எனவே மார்க்க அறிஞர்கள் கொடுக்கும் தீர்ப்புப்படி நடந்துகொள்ள வேண்டியது பாமரர்களுக்கு அவசியம்.

ஆனால் ஓர் அறிஞர் கொடுக்கும் தீர்ப்பை, மற்றோர் அறிஞர் மறுத்தால், பொது மக்கள் அவ்விருவரையும் மறந்துவிட்டு, அவர்களின் கருத்தையும் மறந்துவிட்டுக் கருத்து வேற்றுமையற்ற பிரச்சினைக்குச் சென்றுவிட வேண்டும். இந்தக் கட்டத்தில் கருத்து வேற்றுமையற்ற பிரச்சினைக்குச் செல்வதே சிறந்தது.

சட்டம் இயற்றும் அறிஞர்கள் இதுபோன்ற கட்டங்களில் பெரிதும் நிதான மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

அவர்கள் ஏதோ ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு ஆராய்கிறார்கள். ஆராய்ச்சியின் மத்தியில் முன்னுக்குப் பின் முரணான ஆதாரங்கள் குறுக்கிடுகின்றன. எதை எடுப்பது, எப்படி எடுப்பது என்று தெரியாமல் அவர்கள் குழம்புகிறார்கள். இப்படி எத்தனையோ சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அவற்றை எல்லாம் தவிர்த்துக் கொள்வது நல்லது.

வேட்டைக்குச் செல்கிறவர்கள் ஒரு நாயை அழைத்துச் செல்கிறார்கள். ஏற்கனவே அதனை அவர்கள் பழக்கி வைத்திருக்கிறார்கள். ஏதேனும் வேட்டை மிருகம் ஓடினால்,

அந்த நாயை அவர்கள் அனுப்புகிறார்கள். அது அந்த மிருகத்தைப் பிடித்துக்கொண்டு வந்து விடுகிறது. நாயினால் கொண்டு வரப்படும் மிருகங்களில் சில உயிருடன் இருக்கின்றன. வேறு சில செத்துப் போய் மரக்கட்டையாக வருகின்றன.

உயிருடன் வரும் மிருகம் பற்றிப் பிரச்சினையில்லை. சட்டப்படி அதனை அறுத்துப் புசிக்கலாம். வரும் வழியில் அது செத்துப் போய்விட்டால், அதனைச் சாப்பிடலாமா, சாப்பிடக் கூடாதா என்பது ஒரு பிரச்சினை. சில வேளைகளில் அந்த வேட்டை நாய் தன் பிடியிலிருக்கும் பொருளில் ஒரு பகுதியைத் தின்று விடுவதுமுண்டு.

இதுபோன்ற நிலைமைகளில், நுண்ணிய காரணம் ஒன்றை வைத்துச் சிலர் அந்தப் பொருளுக்கு 'நல்லது' என்று தீர்ப்பு வழங்கலாம். ஆனால், அது கெட்டது எனும் செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது.

ஒரு பிரச்சினையில் இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களுக்கும், இமாம் அபூஹனீபா(ரஹ்) அவர்களுக்கு மிடையில் வேற்றுமை தோன்றுவதுண்டு. முன்னவர் வைத்திருக்கும் ஆதாரத்திற்கு மாறுபட்ட ஓர் ஆதாரத்தைப் பின்னவர் வைத்திருக்கக் கூடும். இத்தகைய பொருள்களைத் தவிர்த்துக் கொள்வதே சிறந்தது.

மார்க்கத்தின் வரம்புக்குட்பட்ட ஒரு பிராணியை அறுக்கும் போது அதன் வயிற்றில் அதன் குட்டி காணப்படுவதுண்டு.

அந்தக் குட்டியைச் சாப்பிடலாமா, கூடாதா என்பது மற்றொரு பிரச்சினை. அதனைச் சாப்பிடலாம் என்பதற்கு ஆதாரப் பூர்வமான நபி கருத்து நம்மிடம் இருக்கிறது. முறைப்படி அதன் தாய் அறுக்கப்பட்டதும், அது நல்ல பொருளாகி விடுகிறது. இதற்கு ஆதாரமான சம்பவம் ஒன்றில் பெருமானாரே கலந்திருக்கிறார்கள்.

ஆனால் அதனை இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் பார்க்கவில்லை என்று நான் நினைக்கிறேன்; எனவேதான்



கருத்து வேற்றுமை தோன்றுகிறது. போதிய ஆதாரம் இருக்கும் போது, அவர் கருத்து வேற்றுமை கொள்வது தவறு என்றே எண்ணுகிறேன்.

இன்னும் சில வேளைகளில், ஒரு பொருளின் தரம், அதற்குரிய ஆதாரத்தைக் கூறுகிறவரின் தரத்தையொட்டி மாறுபடுகிறது. இப்படிச் சில பொருள்கள் இருக்கின்றன. அது கெட்டது என்னும் கருத்தோ, அது கெட்டதாக இருக்கக்கூடும் என்னும் சந்தேகமோ அங்குத் தோன்றுவதில்லை. என்றாலும், அந்தப் பொருளுக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டிருக்கும் நபி கருத்து ஒரே ஒரு மனிதரின் வாயிலாகவே நமக்குக் கிடைத்திருக்கிறது. நபிக் கருத்துக்களில் சிலவற்றை நூற்றுக் கணக்கான நபித் தோழர்கள் கூறும்போது. ஒரே ஒரு நபித் தோழர் கூறும் நபிக் கருத்துக்கு மதிப்பு குறையத் தானே செய்யும்? நூற்றுக் கணக்கானவர்களிடமிருந்து, பெருமானார் கூறியதான ஒரு செய்தி வரும்போது, அதில் சந்தேகம் தோன்றுவதற்கே இடம் கிடையாது. ஒரே ஒருவர் கூறும்போது சந்தேகம் தோன்றுவதற்குப் போதிய இடமுண்டு.

இப்படி ஒரே ஒரு நபித்தோழர் ஒரு கருத்தை நமக்குத் தெரிவிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அதற்கு ஆதாரமாகப் பெருமானாரின் சொல்லையோ, செயலையோ அவர் கூறுகிறார். அல்லது, பெருமானார் சொன்னதாகவோ, செய்ததாகவோ அவர் குறிப்பிடும் விவரத்தை வைத்து நாம் ஒரு பொருளை நல்லது என்று தீர்மானிக்கிறோம்.

இந்தக் கட்டத்தில் சிலர் மறுப்புத் தெரிவிக்கக் கூடும் அவர்கள் இப்படிக் கூறலாம்: ''ஒரே ஒரு மனிதரின் வார்த்தையை வைத்து நீங்கள் தீர்ப்பு வழங்குகிறீர்கள். எனவே, அதனை நாங்கள் ஏற்க முடியாது. தனி மனிதர் ஒருவரின் கருத்தை ஆதாரமாகக் கொள்ளலாமா என்பது கருத்து வேற்றுமையுள்ள ஒரு பிரச்சினை. அதனைக் கட்டோடு மறுக்கிறவர்களும் இருக்கிறார்கள்.''

இந்த வாதம், ஒரு கோணத்திலிருந்து பார்க்கும்போது, நியாயமானதுதான். நபிக் கருத்தையோ, நபி செயலையோ கூறுகிற ஒருவர் எவ்வளவு பெரிய மனிதராயிருந்தாலும், சிலவேளைகளில் தவறு செய்யக்கூடும். தமக்கே தெரியாமல் அவர் பொய்யுரைக்கக் கூடும். சுய நலத்தின் தூண்டுதலால், யாருக்கும் தெரியாத உள்ளுணர்வின் வலியுறுத்தலால், பொய்யுரைக்கும் பெரிய மனிதர்கள் அந்தக் காலத்திலும் இருந்திருக்க முடியும்.

என்றாலும், நபிக் கருத்தைக் கூறுகிறவர், தனி மனிதர் என்ற ஒரே காரணத்தை வைத்து, அவரது செய்தியை ஆதாரமாகக் கொண்டு உருவாகும் தீர்ப்பை மறுத்து விடுவது நல்லதல்ல. நபித் தோழர்களின் காலத்திலேயே இதற்கு ஆதாரம் கிடையாது. தமது நம்பிக்கைக்குரிய ஒரே ஒரு மனிதரின் வார்த்தைகளை நபித் தோழர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பெருமானார் கூறியதாக, அவர் குறிப்பிடும் தகவலை அவர்கள் ஆமோதித்திருக்கிறார்கள். எனவே, தனி மனிதர் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு எதிர்வாதம் புரிவதில் அர்த்தமில்லை. அவர் பொய்யுரைத்திருக்க முடியும் என்றோ, விரிவுரையில் அவர் தவறு செய்திருக்கக் கூடும் என்றோ நாம் எதற்காக அவர்மீது தப்பெண்ணம் கொள்ள வேண்டும்?

எனினும், நபி கருத்தைக் கூறுகிற ஒருவர் தம்முடைய விளக்கத்தில் தவறு செய்திருக்கிறார் என்பதற்கு வேறு வழிகளில் குறிப்புத் தெரிந்தால், அது உண்மையிலேயே ஆராய வேண்டிய பிரச்சினைதான். மனிதன் என்றைக்கும் தவறு செய்யக் கூடும். இது உலக நியதி. இந்த நியதி குறிப்பிட்டதொரு நபித் தோழருக்குப் பொருந்தாது என்று நான் சொல்லவில்லை.

இதை விட்டுவிட்டு, தனி மனிதர் கூறும் கருத்துக்களை எல்லாம் புறக்கணித்து விடுவது என்று கங்கணம் கட்டிக்



கொண்டிருப்பது முறையல்ல. சந்தேகத்தை வளர்த்துக் கொள்ளும் போது எத்தனையோ விளைவுகள் தோன்றுகின்றன. காரணம் இல்லாமல் சந்தேகப்படுவது அறியாமை, காரணம் இருக்கும் போது சந்தேகப்படாமலிருப்பது புத்திசாலித் தனமல்ல என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், அதற்காகத் தனி மனிதரின் கருத்துக்களை எல்லாம் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை அறிவுடைமை என்று நம்மால் ஒப்புக்கொள்ள முடியாது.

எனவே, ஒரு பிரச்சினையில் உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால், மேலே நான் குறிப்பிட்டதுபோல், உங்கள் உள்ளத்தையே கேட்டுப் பாருங்கள். நியாயமான சந்தேகம் ஏற்படும் பிரச்சினைகளை விட்டு விட்டுச் சந்தேகமற்ற பிரச்சினைகளுக்குத் திரும்பிச் செல்லுங்கள். ஒரு செயலை அல்லது ஒரு பொருளை உங்கள் மனம் கெட்டது என்று குறிப்பிடுகிறதா? அதனை விட்டு விடுங்கள். உங்களுக்குத் தெரியாமல் உங்கள் அடிமனத்திலேயே அதற்கு ஆதாரம் இருக்கக் கூடும். அடிமனத்தின் தீர்ப்பு பெரும்பான்மை நேர்மையானதுதான்.

இங்கு மற்றொரு விஷயத்தை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். எல்லாருக்கும் மனம் உண்டு. ஆனால் எல்லாருடைய மனமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சூழ்நிலை, மாறுபடுகிறது. தூய கருத்துக்குச் சிலரது உள்ளம் இடம் கொடுத்தால், வேறு சிலரது உள்ளம் பொருளற்ற குழப்பத்தைத் தன்னுள் மறைத்துக் கொண்டிருக்கிறது. இதனைத் தான் நான் 'வஸ்வாஸ்' என்று குறிப்பிட்டேன்.

'வஸ்வாஸை' நீங்கள் நம்பக்கூடாது. அது கெட்டதை நல்லது என்று காட்டும்; நல்லதைக் கெட்டது என்று குறிப்பிடும். இதனை நம்பிக்கொண்டு நடப்பவர்கள் இறுதியில் பெரிதும் வேதனைப் படவேண்டி ஏற்படும்.

தேவைக்கதிகமாகக் குழம்பாமலும், நல்லது கெட்டது பற்றிய வேற்றுமையை அறவே துறக்காமலும், நடுநிலையில்

நின்று செயலாற்றுவதே சிறந்தது. உணர்வுகளுக்கு அடிமைப் படுவதோ, சட்டங்களைப் புறக்கணிப்பதோ கூடாது.

தவிர, சட்டம் என்பது, எடுத்த எடுப்பில் தீர்மானித்துவிட முடியாத ஒன்று. சட்டத்திற்கு உயிர் கொடுத்த அறிஞர்களின் வாழ்வைப் பார்க்கும்போது நமக்கு வியப்பு ஏற்படுகிறது. அவர்கள் ஈடுபட்டதுபோல் உங்களால் ஈடுபட முடியாது. எனவே, அவர்களில் ஒருவரை வெள்ளை மனத்துடன் பின் பற்றுங்கள். சட்டம் இயற்றும் திறமையோ நுணுக்கம் அறியும் திறமையோ உங்களுக்கு இருக்கவேண்டிய அவசியமில்லை.

இந்த அத்தியாயத்திற்கு உங்கள் கவனம் ஓரளவு தேவை தான். என்றாலும், நீங்கள் செலுத்தும் கவனம் உங்களைச் சட்ட நிபுணராக்க வேண்டும் என்று எண்ணி விடாதீர்கள். கடல் போன்ற அந்தத் துறையில் முழுத்திறமை பெறுவது மிகச் சிரம மான ஒன்று. அந்தத் துறையில் முழுத்திறமை பெற்றவர்களும் குறைவுதான்.

# 10. பொருளுக்குரியவன்

**நா**லுபேருடன் கலந்துறவாடும்போது, கொடுக்கல்-வாங்கல் ஏற்படத்தான் செய்யும். உங்களை ஒரு மனிதர் விருந்துக்கு அழைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் கொடுக்கும் உணவை நீங்கள் துப்பறிந்து பார்க்க வேண்டி யதில்லை.

நீங்கள் இப்படிச் சொல்லக்கூடாது: "நீங்கள் ஏற்பாடு செய்திருக்கும் விருந்து பற்றி எனக்கு நிச்சயமாக எதுவும் தெரியாது. முதலில் உணவை நான் அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்புறம்தான் உங்கள் விருந்தில் நான் கலந்து கொள்வேன்."

இது பண்புக்கு மட்டுமின்றி, பழகும் அழகுக்கும் மாறுபட்டதாகும். ஆனால், அதற்காக யார் எது கொடுத்தாலும் கண்ணையும் மனத்தையும் மூடிக்கொண்டு சாப்பிட வேண்டும் என்றும் அர்த்தமல்ல. எந்த வேளையில், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி இங்கு நாம் ஆராயவேண்டும். கொடுக்கப்படும் பொருள் கெட்டது என்பதற்குப் போதிய அறிகுறிகள் காணப்படவில்லை என்றால், அதனைச் சாப் பிடலாம். இது விருந்துக்கு மட்டும் சொந்தமானதல்ல. அன் பளிப்பாக வரும் பொருள்கள், ஒரு வர்த்தகரிடமிருந்து நீங்கள் பணம் கொடுத்து வாங்கும் பொருள்கள் அத்தனைக்கும் இது பொருத்தமானதுதான்.

பொருளுக்குரியவரிடம் அந்தப் பொருளைப் பற்றிக் கேட்பது சில வேளைகளில் கடமை-அதாவது 'வாஜிப்'. இன்னும் சில வேளைகளில் கூடாது-அதாவது 'ஹராம்'. மற்றும் சில வேளைகளில் வரவேற்கத் தகுந்தது-அதாவது 'முஸ்தஹப்பு'. வேறு சில வேளைகளில் வரவேற்கத் தகாதது-அதாவது 'மக்ரூஹ்'.

ஒரு சமயம் பொருளில் சந்தேகம் தோன்றுகிறது; மறுசமயம் பொருளுக்குரியவர் மீது சந்தேகம் தோன்றுகிறது.

உங்களுக்கு அன்பளிப்பாக வரும் ஒரு பொருளையே இங்குநாம் உதாரணமாக வைத்துக் கொள்வோம். அதைப் பற்றிய உங்கள் கருத்து மூன்று விதங்களில் அமையலாம். ஒன்று, அந்தப் பொருளைப்பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. அது நல்ல பொருள் என்பதற்கோ, கெட்ட பொருள் என்பதற்கோ எவ்வித அறிகுறியும் கிடையாது. மொத்தத்தில் அதன் தரத்தைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. இரண்டு, அந்தப் பொருள் குறித்து உங்களுக்குச் சந்தேகம் கொள்ள வைக்கிறது. மூன்று, அந்தப் பொருள் நல்லது என்றோ கெட்டது என்றோ உங்களுக்கு நன்றாகத் தெரிகிறது.

இந்த மூன்று கோணங்களையும் இப்போது நாம் விரிவாக ஆராயவேண்டும்.

**முதற் கோணம்:** தரம் தெரியாத பொருள்கள் இங்கு வருகின்றன. வெளியிடத்திலிருந்து வரும் பொருள்கள், வேற்று மனிதரிடமிருந்து வரும் பொருள்கள் எல்லாவற்றையும் இதில் சேர்க்கலாம்.

நீங்கள் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது, ஒரு கிராமத்தில் நுழைகிறீர்கள்; அங்கு ஒரு மனிதனைப் பார்க்கிறீர்கள். அவனைப்பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. அவன் உங்களுக்கு விருந்து கொடுத்தால் அந்த விருந்துக்கு 'தரம் தெரியாதது' என்று பெயரிடலாம்.



அல்லது, அந்தக் கிராமத்தில் ஒரு மனிதன் உணவுப் பொருள்களை விற்பனை செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனை உங்களுக்குத் தெரியாது. அவன் கெட்டவனா, நல்லவனா என்ற விவரம் உங்களுக்கு அறவே தெரியாது. இந்தக் கட்டத்தில் அவனிடமிருந்து நீங்கள் வாங்கும் பொருள்களுக்குத் 'தரம் தெரியாதவை' என்று பெயர் கொடுக்கலாம்.

உதாரணத்திற்கு நாம் இரண்டை எடுத்துக் கொண்டோம். தினசரி வாழ்க்கையில் இது போன்ற எத்தனையோ உதாரணங்களை உங்களால் பொறுக்கி எடுக்க முடியும்.

இப்போது பிரச்சினைக்கு வருவோம். முற்றும் புது மனிதனான ஒருவன் உங்களுக்கு விருந்து கொடுக்கிறான்; அல்லது ஏதோ ஓர் அன்பளிப்பை உங்களுக்காக எடுத்துக் கொண்டு வருகிறான்; அப்படியும் இல்லாவிட்டால், அவனிடமிருந்து ஏதோ ஒரு பொருளை நீங்கள் விலை கொடுத்து வாங்க முற்படுகிறீர்கள்.

இத்தகைய சூழலில் அவனிடம் பொருளின் தரம் பற்றி எதுவும் கேட்க வேண்டிய அவசியமில்லை. அவனுடைய உடையும், அவன் முகத்தில் படர்ந்து நிற்கும் மகிழ்ச்சிப் புன்னகையும், அவனை ஒரு முஸ்லிம் என்று உங்களுக்கு நிரூபிக்கின்றன. அவனை நம்பிக்கொண்டு அவன் கொடுக்கும் பொருளைத் திருப்தியுடன் பெற்றுக் கொள்ளுங்கள்.

'மனிதன் தவறு செய்யக் கூடியவன். இவன் ஒரு முஸ்லிம் தான் என்றாலும், முஸ்லிம்களில் எத்தனையோ பேர் தவறு செய்கிறார்கள். தவறு செய்கிறவர்களில் இவனும் ஒருவனாக இருக்கக்கூடும்....' என்று எண்ணாதீர்கள். இப்படித் தப் பெண்ணம் கொள்வது சரியல்ல. ஏனெனில், தவறு செய்கிறவர்களில் அவனும் ஒருவனாக இருக்கக்கூடும் என்னும் எண்ணத்திற்கு ஆதாரம் கிடையாது. தவறு செய்யாத

முஸ்லிம்களில் அவன் ஒருவனாக இருக்கக்கூடாது என்பதற்கும் உங்களிடம் ஆதாரம் கிடையாது.

நபித்தோழர்களின் வாழ்வில் நமக்குப் போதிய ஆதாரம் கிடைக்கிறது.

பிரயாணத்தின்போது அவர்கள் அறிமுகமில்லாத ஊர் களிலெல்லாம் தங்கினார்கள்; பரிச்சயமில்லாத மனிதர்களிட மெல்லாம் பழகினார்கள்; தரம் தெரியாத கடைவீதிகளி லெல்லாம் வியாபாரம் செய்தார்கள். நல்லது கெட்டது பற்றிய பிரச்சினை அப்போதும் இருக்கத்தான் செய்தது. இருந்தும் நபித்தோழர்கள் தாம் வியாபாரம் செய்யும் கடைகளைத் துப்பறிந்து பார்க்கவில்லை.

நபித்தோழர்கள் மட்டுமல்ல, பெருமானாரே, அப்படித் தான் நடந்திருக்கிறார்கள். தம்மிடம் கொண்டுவரப்படும் பொருள்கள் அனைத்தையும் அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வில்லை. ''இது நல்லதுதானா? உன்னை நான் எப்படி நம்பமுடியும்? உண்மையில் நீ ஏன் ஓர் அயோக்கியனாக இருக்கக் கூடாது?'' என்றெல்லாம் அவர்கள் சொல்லம்பு வீசவில்லை.

மதீனமாநகர் சென்ற பெருமானாருக்கு எதிரில் கொணர்ந்து வைக்கப்பட்ட பொருள் குறித்து அவர்கள், ''இது அன்பளிப்பா, தர்மமா?'' என்று மட்டுமே கேட்டார்கள். வேறு எந்தப் பிரச்சினையையும் அவர்கள் எழுப்பவில்லை.

இப்படி அவர்கள் கேட்டதற்குக் காரணம் உண்டு. மக்காவிலிருந்து பலர் மதீனாவிற்குக் குடியேறிய நேரம் அது. அவர்கள் பெரும்பான்மை ஏழைகளாகவே இருந்தார்கள். எனவே, அவர்களுக்குக் கொடுக்கப்படும் பொருள் தர்ம மாகவும் இருக்கக் கூடும் என்று எண்ணுவதற்கு இடமுண்டு. அதனைக் கொண்டுவந்து கொடுப்பவர் ஒரு முஸ்லிம் என்பதால், அவர் கொடுப்பது அன்பளிப்புத்தான் என்று



நிச்சயமாகச் சொல்ல முடியாது. எனவேதான் பெருமானார் வினா எழுப்பி விளக்கம் பெற்றார்கள்.

மதீனாவில் பெருமானார் விருந்துக்கு அழைக்கப் பட்டார்கள். மதீனா அவர்களுக்கு பரிச்சயமில்லாத இடம்; மதீனாவாசிகள் நன்கு பழகாதவர்கள். இருந்தும் பெருமானார் விருந்தின் தரம்பற்றி எதுவும் கேட்காமல் விருந்துக்குப்போய் வந்தார்கள். அப்போதெல்லாம் அவர்கள், ''இது அன்பளிப்பா, தர்மமா?'' என்று கூடக் கேட்டது கிடையாது.

அன்பளிப்புக்கும் தர்மத்துக்குமுள்ள இலேசான வேற்றுமையை நீங்கள் கவனிக்கவேண்டும். முன்னதில் பெறுகிறவருக்குக் கண்ணியம் காட்டப்படுகிறது; பின்னதில் அது கிடையாது.

பெருமானார் கலந்துகொண்ட விருந்துகள் பல. அவர்கள் மகிழ்வுடன் பெற்றுக் கொண்ட அன்பளிப்புகள் பல. அப்போ தெல்லாம் அவர்கள் எந்த விதமான விசாரணையையும் வைத்துக்கொள்ளவில்லை என்ற உண்மை வரலாற்றிலிருந்து நமக்கு தெரிகிறது.

எனவே நம்முடைய கருத்து இதுதான்: பரிச்சயமில்லாத ஒருவர் கொடுக்கும் விருந்தில் கலந்துகொள்வதால் குற்றம் கிடையாது. ஏனெனில் இது பெருமானாரும், நபித் தோழர் களும் நடந்து கட்டிய வழி.

ஆனால் உங்கள் சந்தேகத்தைக் கிளறும் அளவுக்கு ஏதேனும் அறிகுறி தெரிந்தால் விசாரணை செய்யத்தான் வேண்டும். அப்படியில்லையேல் அதற்குத் தேவையில்லை. ஏதோ ஒன்றைக் கூறி, விருந்து கொடுப்பவரின் மனத்தைப் புண் படுத்துவது பண்புள்ளவர்களின் செயலல்ல. அவர் உங்களை அன்புடன் அழைத்திருக்கிறார். எனவே அந்த அன்பை அவருக்குத் திருப்பிக் கொடுங்கள். தவிர, எடுத்ததற்கெல்லாம்

சந்தேகப்படுவது புத்திசாலித்தனமுமல்ல. அவசியமும் அறிகுறியும் தோன்றும்போது சந்தேகப்படத்தான் வேண்டும். என்றாலும் அத்தகைய சூழ்நிலை எப்போதும் தோன்றுவதில்லை.

தம்முடைய ஒழுக்க உணர்வை உயர்த்திக்காட்டும் எண்ணத்துடன் சிலர் பிறரை இழித்துக் கூறுகிறார்கள். இதுவும் தவறுதான். ஏனெனில் அவர்கள் ஏதோ ஒன்றை மனத்தில் வைத்துக் கொண்டு, பெரியதொரு தவற்றைச் செய்து விடுகிறார்கள். ஒழுக்க உணர்வையும்,மார்க்கப் பற்றுதலையும் வெளிப்படுத்துவது கடமையல்ல. ஆனால் தரமான காரணம் இல்லாமல் பிறர் மனத்தைப் புண்படுத்துவது மார்க்கத்திற்கு முரண்பட்ட செயலாகும்-அதாவது, அதற்கு இஸ்லாம் 'ஹராம்' என்று பெயரிடுகிறது. இது சந்தேகத்திற்கிடமில்லாத ஒன்று.

நீங்கள் உண்மையிலேயே சிறந்த மனிதராக இருக்கலாம். ஒழுக்கத்திற்கு மாறுபட்ட எதையும் நீங்கள் செய்வதில்லை. நல்ல உணவையும் கெட்ட உணவையும் பிரித்துப் பார்த்துச் சாப்பிடுவது உங்கள் வழக்கம். உங்களுக்கு ஒருவர் விருந்து கொடுத்தால், உங்கள் நெஞ்சில் கைவைத்துத் தீர்ப்புக் கேளுங்கள். அது நல்ல உணவுதான் என்று தெரிந்தால் விருந்தில் கலந்து கொள்ளுங்கள். இல்லையேல் கலந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் விருந்து கொடுப்பவரின் மனத்தைப் புண்ணாக்காதீர்கள்.

கெட்ட உணவை அவர் விருந்தாகக் கொடுக்கிறாரா? அந்தக் குற்றத்திற்கு அவர்தான் பொறுப்பாளி. உங்கள் மீது இம்மையிலோ மறுமையிலோ யாரும் குற்றம் சாட்ட முடியாது. எனவேபெருந்தன்மையோடு நடந்து கொள்ளுங்கள். விருந்துக்குப் போகாதீர்கள்.

விருந்தில் நீங்கள் கலந்து கொள்ளப் போகிறீர்களா? அப்படியானால் விருந்தின் தரம்பற்றி எதுவும் பேசாமல் கலந்து



கொள்ளுங்கள். பழகும் முறை தெரிந்தவர்கள் நடக்கும் வழி இது. பழகக் கற்றுக் கொடுத்த பெருமானார் நடந்து காட்டிய வழி இது. பெருமானாரின் வாழ்வும் வாக்கும் உலக அறிஞர்கள் அனைவராலும் பாராட்டப்படுகின்றன; பின்பற்றப்படுகின்றன. அவர்களையே நீங்களும் பின்பற்றுங்கள். இதை விடச் சிறந்த மார்க்கத்தை உங்களால் எங்கும் கண்டுபிடிக்க முடியாது.

**இரண்டாம் கோணம்:** சந்தேகத்தைத் தூண்டிவிடக்கூடிய நிலையிலிருக்கும் பொருள்கள் அனைத்தும் இந்தப் பிரிவில் சேர்கின்றன. விருந்து கொடுப்பவரின் உருவத்திலோ, உடையிலோ, பேச்சிலோ , செயலிலோ, அறிகுறிகள் தெரியக்கூடும். அவற்றின் அடிப்படையில் உங்களுக்கு அவர் கொடுக்கும் விருந்து குறித்துச் சந்தேகம் தோன்றுகிறது.

துருக்கியரைப் போலவோ, காட்டுமிரண்டிகளைப் போலவோ அவர் தோற்றமளிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரது முகத்தில் கொடூரம் தாண்டவமாடுகிறது. முற்காலத்திய கலகக்காரர்களைப் போல நீண்ட மீசை வளர்த்திருக்கிறார்; தலைமுடியை இரண்டாகப் பிரித்து விட்டிருக்கிறார். அநியாயக்காரர்களைப் போலவே அவர் உடை அணிந்திருக்கிறார். அவருடைய சட்டையும் தொப்பியும் உங்களுக்குக் கலகக்காரர்களைப் பற்றிய எண்ணத்தை உண்டாக்குகின்றன. மார்க்கத்துக்கு முரண்பட்ட வேலைகளைச் செய்கிறார். மார்க்கம் அனுமதிக்காத வார்த்தைகளைப் பேசுகிறார்.

இது போன்ற கட்டங்களில் அவர் கொடுக்கும் விருந்து குறித்து உங்களுக்குச் சந்தேகம் ஏற்படத்தான் செய்யும்.

இந்த விருந்தில் கலந்து கொண்டால் தவறு கிடையாது. ஏனெனில், அவருடைய உருவம், உடை, பேச்சு முதலியவை சந்தேகத்திற்குத் தூபம் போட்டாலும், அவர் கெட்டவர் என்பதற்குத் உறுதியான ஆதாரம் கிடையாது. என்றாலும், அந்த

விருந்தைத் தவிர்த்துக்கொள்வது உயர்ந்த ஒழுக்கத்தின் அறிகுறியாகும்.

**மூன்றாம் கோணம்:** நல்லது என்றோ, கெட்டது என்றோ உங்களுக்கு நன்றாகத் தெரிந்த பொருள் இங்கே வருகிறது. இங்கு விரிவுரை செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. உங்களுக்கு விருந்து கொடுப்பவர் அல்லது, உங்களுக்கு அன்பளிப்பு கொண்டு வந்திருப்பவர் ஒழுக்க சீலர் என்று நன்றாகத் தெரியும். அவர் தீமை செய்ததாக நீங்கள் கேள்விப் பட்டதும் கிடையாது. வெளிப்படையாகப் பார்க்கும்போது அவர்மீது எந்தப் பழியையும் போட முடியாது.

வெளிப்படையாகப் பார்க்கும்போது நல்லவர்களாகத் தோன்றுகிறவர்களில் எத்தனையோ பேர், உண்மையில் கொடியவர்களாக இருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் இந்தக் கட்டத்தில் அவருடைய மனத்தை எந்தக் கோணத் திலிருந்தும் புண்படுத்தக் கூடாது. அவருடைய உண்மையான நிலைபற்றிச் சந்தேகப்படுவதும் நல்லதல்ல.

ஒழுக்கசீலர்கள் கொடுக்கும் விருந்துகளில் கலந்து கொள்வது இறைத் தூதர்களின் நடைமுறை.

''பக்தி கலந்த உணவைச் சாப்பிடுங்கள். உங்கள் உணவைப் பக்தியுள்ளவர்கள் சாப்பிடட்டும்'' என்று பெருமானார் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

ஆனால், அந்த மனிதர் கெட்டவர் என்று உங்களுக்கு நன்றாகத் தெரிகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவருடைய உருவம், உடை, பேச்சு முதலிய வெளிச் சூழல்களை நீங்கள் கவனிக்க வேண்டியதில்லை. இந்தக் கட்டத்தில் பொருளின் தரம்பற்றி அவரிடம் அவசியம் விசாரிக்க வேண்டும்.

# 11. குற்ற நிவர்த்தி

குற்றம் செய்யும் மனப்பான்மையுள்ளவன் மனிதன் என்று நான் பலதடவைகள் குறிப்பிட்டிருக்கிறேன். குற்றமே செய்திராத ஒருமனிதனைக் கண்டுபிடிப்பது என்றைக்கும் சிரமம்தான். எனவே குற்றம் செய்தவர்கள், குற்ற நிவர்த்திசெய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

குற்றம் எத்தனையோ வகை. பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் உருவாகும் குற்றங்களையே இங்கு நாம் ஆராயப்போகிறோம். நல்ல உணவைப்பற்றியும், கெட்ட உணவைப் பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால், நல்ல வருமானம் பற்றியும் கெட்ட வருமானம் பற்றியும் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் வருமானமே அனைத்துக்கும் அடிப்படை. எனவே பெரும்பாலான அநியாயங்கள் பொருளாதாரத்திலேயே உருப் பெறுகின்றன.

உங்களிடமிருக்கும் செல்வத்தில், அந்நியரின் பொருள் கலந்திருக்கிறது என்று அறிந்தால், நீங்கள் செய்யவேண்டிய முதல் வேலை, நல்லதையும் கெட்டதையும் பிரித்து வைப்பது. உங்கள் உழைப்புக்கு ஊதியமாகக் கிடைத்தது என்றைக்கும் உங்களுக்கு நல்லதுதான். அது எந்தக் கோணத்திலும் கெட்ட தாக மாறாது. தவறான வழியில் அந்நியரிடமிருந்து உங்களிடம் வந்திருப்பது என்றைக்கும் உங்களுக்குக் கெட்டது தான். அது எந்தக்கோணத்திலும் நல்லதாக மாறாது.

மோசடியிலோ, நம்பிக்கைத் துரோகத்திலோ கிடைத்த பொருள் சிலரிடம் இருக்கலாம். தம்முடைய சொந்தப் பணத் துடன் கலக்காமல், அதனை அவர்கள் தனியே வைத்திருந்தால் குற்ற நிவர்த்தி செய்வது மிக எளிது. உரியவரைக் கண்டு பிடித்து அதனை ஒப்படைத்துவிட்டால் போதுமானது. அவர் வெளியூர் சென்றிருக்கிறாரா? அவர் திரும்பிவரும்வரை பொறுத்திருக்கலாம். அல்லது அந்தப் பொருளை அவரிடம் சேர்ப்பதற்கு ஏதேனும் வழி இருந்தால் முயற்சி செய்து பார்க்கலாம்.

அந்தப் பொருளின் உரிமையாளர் இறந்து போய்விட்ட தாக வைத்துக் கொண்டால், அவருடைய உறவினர்கள் பலர் இருக்கக் கூடும். அவர்களிடம் ஒப்படைக்கலாம்.

ஏதோ ஒரு காலத்தில், ஒரு மனிதன் உங்களிடம் சில பொருள்களை விட்டுச் சென்றிருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். பிறகு, தூண்டித் துருவிப் பார்க்கும்போது, அவனை உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பலரிடம் விசாரித்தீர்கள்; தெளிவு கிடைக்கவில்லை. அவன் பிறந்து வளர்ந்த ஊருக்குச் சென்றும் தேடிப் பார்த்தீர்கள்; துப்புக் கிடைக் கவில்லை. அவனுக்கு வாரிசுகள் யாரேனும் இருக்கிறார்களா, இல்லையா என்றுகூட உங்களுக்குத் தெரியவில்லை.

இதுபோன்ற கட்டங்களில் உரியவனிடம் பொருளை ஒப்படைப்பது அசாத்தியமான ஒன்று. எனவே, இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், நிலைமையில் தெளிவு ஏற்படும்வரை பொறுத்திருக்க வேண்டும். இறுதியில் அந்தப் பொருளைத் தர்மம் செய்யலாம். இதுபோன்ற நிலையில் ஒரு மனிதனால் செய்ய முடிந்த காரியம் இதுதான். இறந்துபோன உரிமை யாளனையோ, இல்லாத உறவினர்களையோ உயிர் கொடுத்து எழுப்புவது அசாத்தியம்.

அந்நியனின் பொருள் எந்தக் கோணத்திலும் உங்களுக்குச் சொந்தமாக முடியாது. எப்படியாவது அதனை அவன் பக்கம் செலுத்திவிடத்தான் வேண்டும்.



உங்களிடம் வந்திருக்கும் பொருளைத் திருப்பிக் கொடுக்க முடியாதபடி நிலைமை ஏற்படும்போதெல்லாம் இப்படித் தர்மம் செய்யவேண்டியதாகத்தான் இருக்கும். அந்தப்பொருள் உங்களுக்குத் தகாததாக இருக்கலாம். உரியவன் கண்டுபிடிக்கப் படாத சூழ்நிலையில் அதனைத் தர்மம் செய்துவிடுவதே நல்லது. மொத்தத்தில் அந்தப் பொருளை நீங்கள் உபயோகிக்கக் கூடாது. ஏனெனில் அது உங்கள் உழைப்பினால் கிடைத்ததல்ல. ஒரு மனிதனின் உழைப்பை, மற்றொரு மனிதன் தவறான வகையில் பயன்படுத்திக்கொள்வது கூடாத செயலாகும்.

இங்கு நீங்கள் தப்பான கருத்துக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது. தப்பான வழியில் வந்திருக்கும் பொருளை உபயோ கிப்பது கூடாது என்றும், அதனைத் தர்மம் செய்ய வேண்டும் என்றும் நான் குறிப்பிட்டேனல்லவா? உபயோகிக்கத் தகாத பொருளைத் தர்மம் செய்வது ஆகும் என்பதற்கு ஆதாரம் என்ன என்று கேட்காதீர்கள். பெருமானாரின் வாழ்விலும் நபித் தோழர்களின் வாழ்விலும் நம் வாதத்திற்குப் போதிய ஆதாரம் இருக்கிறது.

தமக்குச் சாப்பிட அனுமதியில்லாத ஓர் ஆட்டைப் பெருமானார் தர்மம் செய்துவிடுமாறு நபித் தோழர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். ''அதனைக் கைதிகளுக்குக் கொடுத்துவிடுங்கள்'' என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

யுத்தப் பொருள்களிலிருந்து ஒரு மனிதர் நூறு தங்க நாணயங்களை எடுத்துக் கொண்டுவிட்டார். ஆசையின் தூண்டுதலால் ஏற்பட்டது இது. பிறகு சிந்தனை செய்து பார்த்த அவர், அந்த நாணயங்களைத் தம்முடைய தலைவரிடம் ஒப்படைத்துவிடுவது எனும் தீர்மானத்திற்கு வந்தார். ஆனால் தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை. முஆவியா (ரலி) வந்தார். அவரும் மறுத்துவிட்டார். அங்குள்ள அறிஞர்களில் ஒருவர் பொருத்தமான தீர்ப்பு ஒன்றை வெளியிட்டார்: ''அதில் இருபது காசுகளை முஆவியா (ரலி) யிடம் ஒப்படைத்துவிடு, மீதியைத் தர்மம் செய்துவிடு!''

நம்முடைய கருத்துக்கு இப்படி இன்னும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. அஹ்மது பின்ஹன்பல் (ரஹ்), ஹாரிஸ் முஹாஸிபி (ரஹ்) முதலியோர் நமக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்.

இதில் உங்களுக்குத் திருப்தி ஏற்பட்டால் பேச்சேயில்லை. திருப்தி ஏற்படவில்லை என்றால், நீங்கள் மீண்டும் வாதம் செய்யக் கூடும்.

''நீங்கள் கூறுவது எங்கள் சிந்தனைக்குப் புலப்படாதது. உங்கள் கருத்தை எதிர்ப்பதுபோல் அறிஞர் புஸைல் நடந்திருக்கிறார். ஒரு நாள் அவரிடம் இரண்டு வெள்ளிக் காசுகள் இருந்தனவாம். சிந்தனை செய்து பார்த்தார். அவை தம்மிடம் எப்படி வந்தன என்று அவருக்குத் தெரியவில்லை. தமக்குத் தெரியாமல் ஏற்பட்டுவிட்ட ஒரு தவறு எனும் முடிவுக்கு அவர் வந்தார். உடனே அவற்றை வீசி எறிந்துவிட்டார்! 'நல்லதைத்தான் நான் தர்மம் செய்யவேண்டும். எனக்கென்று நான் ஏற்றுக்கொள்ளாத எதையும், பிறருக்கென்று தர்மம் செய்யக் கூடாது' என்று விளக்கமும் கொடுத்திருக்கிறார்.....'' என்று நீங்கள் தர்க்கம் செய்யக் கூடும்.

புஸைல் நடந்திருக்கும் விதத்திலிருந்து நமக்கு அவருடைய ஆழ்ந்த ஒழுக்கம் நன்றாகத் தெரிகிறது. ஆனால் அது நமக்கு எதிரான ஆதாரமல்ல. ஏனெனில், பெருமானாரின் வாழ்க்கையை நம் கருத்துக்கு ஆதாரமாக ஏற்கனவே நாம் குறிப்பிட்டு விட்டோம். பெருமானார் மட்டுமன்றி, நபித் தோழர்களும் அதற்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்.

தவிர, 'நல்லதைத்தான் நான் தர்மம் செய்யவேண்டும்' எனும் கருத்தை அவர் வெளியிட்டிருக்கிறார் அல்லவா? இதுவும் அவருடைய மனப்பண்பைத்தான் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆனால், இது சட்டமல்ல. ஏனெனில், பெருமானாரின் செயலையும், கருத்தையும் நாம் ஆதாரங்களாகக் காண்பித்திருக்கிறோம்.



சட்ட ரீதியாகப் பார்க்கும்போது, உங்களுக்கு இவ்வளவு போதும் என்றே நான் நினைக்கிறேன். சட்டத்துக்கு அடுத்த படியாகப் பகுத்தறிவை வைத்துப் பாருங்கள். அப்போதும் நம் கருத்தே சிறந்து விளங்குகிறது.

உங்களிடம் இருக்கும் செல்வத்தில் ஒரு பகுதி, அந்நியன் ஒருவனுக்குச் சொந்தமானது என்று உங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. உரியவன் யார் என்று தெரியவில்லை; அவனுக்கு உறவினர் யாரும் இருப்பதாகவும் தெரியவில்லை. இந்தக் கட்டத்தில், அந்தப் பொருளைத் தர்மம் செய்துவிட வேண்டும் என்று நான் கூறுகிறேன். தர்மம் செய்வது சரியல்ல என்றும், புஸைல் செய்ததுபோல் அதனைத் தூர எறிந்து விடவேண்டும் என்றும் நீங்கள் கூறுகிறீர்கள்.

நீங்கள் சொல்வதுபோல், அதனைக் கடலிலோ, ஆற்றிலோ நாம் எறிந்துவிட்டதாகவே வைத்துக் கொள்வோம். இதனால் யாருக்கு என்ன பயன்? உரியவனுக்கு அது நிச்சயமாகக் கிடைக்கப் போவதில்லை. வேறுயாருக்கும் அதனால் பயன் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்க முடியாது. இப்படிப் பொருளை வீணாக்குவது அறிவுடைமையல்ல என்பதே நம் வாதம்.

எனவே, அதனைத் தர்மத்துக்குப் பயன்படுத்தினால், உரியவனுக்குப் பயன்படாவிட்டாலும், எத்தனையோ உயிருக்கு அது பயன்படலாம். ஆகவே பயனற்ற வழியை விடுத்துப் பயனுள்ள வழிக்குத் திரும்புவதே நல்லது என்று நாம் கூறுகிறோம்.

வறுமையின் பிடியில் நெளிந்து கொண்டிருக்கும் ஏழைகள் பலர். அந்தப் பொருளை அவர்களுக்குத் தர்மம் செய்தால் அவர்கள் பொருளின் உரிமையாளருக்குப் பிரார்த்தனை செய்வார்கள். மகிழ்வுடன் கூடிய அந்தப் பிரார்த்தனை இறைவனால் அங்கீகரிக்கப்படலாம். இதில் இரண்டு பயன்கள் இருக்கின்றன. ஒன்று, ஏழைகளின் பசிக்கு உணவு கிடைக்கிறது.

இரண்டு, பொருளின் உரிமையாளருக்குப் பசி தீர்த்த பெருமையும், பிரார்த்தனையும் கிடைக்கின்றன. பொருளின் உரிமையாளருக்கு இப்படிக்கூட உதவலாகாதா, என்ன?

பொருளின் உரிமையாளரின் மனத்தில் என்ன இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. அவன் கருத்தை உணராமல், அவனது பொருளைத் தர்மம் செய்வது கூடுமா என்று மீண்டும் நீங்கள் வினவலாம். ஆனால், அதற்காக அந்தத் தர்மம் செல்லாது என்றோ, அதில் பயனில்லை என்றோ உங்களால் வாதிக்க முடியாது. உரிமையாளனின் உரிமையில்லாமல் நடந்திருக்கும் இந்தத் தர்மத்தில் குற்றமுண்டு என்று வாதிப்பதற்கும் இடமில்லை.

இது போன்ற நிலையில் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். இதை விட்டால் வேறு வழியில்லை. பொருளைப் பயன்படாத விதத்தில் செலுத்துவது, பகுத்தறிவுக்கு மட்டு மன்றி, மார்க்கத்துக்கும் முரண்பட்டதுதான். உலகிலுள்ள பொருள்கள் அத்தனையும் பயன்பட வேண்டும் எனும் நோக் கத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டிருக்கின்றன. பயன்படாத எந்தப் பொருளையும், அவற்றிற்கு மத்தியில் உங்களால் பார்க்க முடியாது. எனவேதான், பயன்படுவதற்கு வழி இருக்கும்போது, எதையும் கடலிலோ குளத்திலோ எறியக் கூடாது என்று நாம் சொல்கிறோம்.

'நல்லதைத்தான் நாம் தர்மம் செய்யவேண்டும்' என்று புஸைல் கூறியதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அந்த உண்மை எல்லா இடத்துக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது. அந்தத் தர்மத்தின் பலனை, அதற்கு இறைவன் கொடுக்கும் அன்பளிப்பை, அவர் எதிர்பார்த்தால் அப்படித்தான் நடக்கவேண்டும்.

ஆனால், நாம் மேற்கொண்டிருக்கும் பிரச்சினை முற்றிலும் மாறுபட்டது. அந்நியன் ஒருவனின் பொருளைத் தர்மம் செய்யும் நாம், அவனுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்று



எதிர்பாக்கிறோமே தவிர, அந்தத் தர்மத்தின் பயன் நமக்குக் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. குற்ற நிவர்த்தி செய்யும் எண்ணத்துடன் தான் நாம் அப்படித் தர்மம் செய்கிறோம்.

'எனக்கென்று வைத்துக் கொள்ள விரும்பாத எதையும், நான் பிறருக்கென்று தர்மம் செய்யக்கூடாது' எனும் கருத்தை புஸைல் வெளியிட்டிருக்கிறாரல்லவா?

இந்தக் கட்டத்திலும் நம் வாதமே உயர்ந்து நிற்கிறது. அந்நியரின் உடைமை நமக்கு நல்ல பொருளல்ல. அதனை நாம் உபயோகிக்கக்கூடாது. ஆனால் அந்தப் பொருள், ஏழை களுக்கு நல்லது. இந்தச் சலுகையை மார்க்கம் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது.

நற் பயன் ஏற்படும் என்று தெரியும்போது, நாலு பேருடைய பசிக்கு உணவு கிடைக்கும் என்று தெரியும்போது, அந்தப் பொருளை ஏழைகளுக்குத் தர்மம் செய்து விடலாம் என்பது நம் கருத்து. ஏழைகள் என்றால், அவனுடைய குடும் பத்துக்கு அப்பாற்பட்டவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று எந்த நியாயமும் கிடையாது. அவன் ஏழையாக இருந்தால் அந்தப் பொருளைத் தனக்கும், தன் குடும்பத்துக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது நம் துணிவு. வறுமை என்பது மற்றவர்களைப்போல் அவனையும் பிடித்து உலுக்கக் கூடும். ஆனால் இது போன்ற கட்டங்களில் அவன் பேராசைக்கு இடம் கொடுக்கக்கூடாது. தன் தேவையின் அளவுக்கு மட்டுமே அவன் எடுத்துக் கொள்ளவேண்டும்.

என்றாலும், தன்னுடைய வறிய நிலையையும் பொருட் படுத்தாமல் அவன் அதனை வேறு யாரேனும் ஓர் ஏழைக்குத் தர்மம் செய்தால் அது சிறப்பிற்குரியது.

இப்படி ஆராய்ந்து பார்க்கும்போது, இன்னும் பல பிரச் சினைகள் நமக்கு முன்னால் விரிகின்றன. அவற்றை இப்போது விரிவாக ஆராய்வோம்.

அரசாங்கப் பணத்தில் ஒரு பகுதி ஒரு மனிதனின் கையில் கேட்பாரற்றுச் சிக்கிக் கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அது யாருக்குச் சேரவேண்டிய பொருள் என்று தெரியவில்லை. அதை அவன் அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்து விடவேண்டுமா? அல்லது, அதை ஏழைகளுக்குத் தர்மம் செய்துவிட வேண்டுமா?

இப்படி ஒரு பிரச்சினை தோன்றுகிறது. இதற்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் பலர் முன் வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலைக் கூறுகிறார்கள்.

சிலர் கூறுகிறார்கள்: பொருளை வைத்திருப்பவன், அதனை அரசனிடம் ஒப்படைத்துவிட வேண்டும். தர்மம் செய்வதை விட இது சிறந்தது. அந்தப் பொருள் யாருக்கு-எந்த வழியில் சேரவேண்டும் என்று அரசனுக்குத் தெரிந்திருக்கக் கூடும்.-அறிஞர் முஹாஸிபீ இதைத்தான் ஆதரிக்கிறார்.

வேறு சிலர் அதனைத் தரமம் செய்துவிட வேண்டும் என்று சொல்கிறார்கள். இது கூடும் என்றால், செல்வர்களிடமிருந்து கொள்ளையடித்து, அதனை ஏழைகளுக்குத் தர்மம் செய்வதும் கூடும் என்று சட்டம் வகுக்கவேண்டி ஏற்படும்.

அந்த அமானிதப் பொருளைப் பெற்றுக் கொள்ளும் அரசன், அதனை முறைப்படி உரியவனிடம் ஒப்படைக்க மாட்டான் என்று தெரிந்தால், அரசனுக்கு அதனை அனுப்பக்கூடாது. இந்தக் கட்டத்தில் அதைத் தர்மம் செய்யத்தான் வேண்டும். அது முஸ்லிம் பெருங்குடி மக்களின் சொத்தாக இருக்கலாம். அதனை அரசனிடம் ஒப்படைப்பது சரியல்ல. அதனைப் பாழடிப்பது போன்ற ஒரு செயல் இது.

இங்கு மற்றொரு பிரச்சினை. அந்நியனின் பொருளை வைத்திருப்பவன் ஏழையாக இருந்தால், தன் தேவையின் அளவுக்கு உபயோகித்துக் கொள்ளலாம் என்று நான் கூறினே னல்லவா? தேவையின் அளவை நிர்ணயிப்பதில் அறிஞர் களுக்கு மத்தியில் கருத்து வேற்றுமை நிலவுகிறது.



அந்த மனிதன் தனக்கும், தன் குடும்பத்துக்கும் ஓராண்டு காலத்திற்குப் போதுமானதை எடுத்துக் கொள்ளலாம் என்று சிலர் கூறுகிறார்கள். அந்தப் பணத்தை வைத்து வியாபாரம் செய்வதானாலும் செய்யலாம்.

இது முஹாஸிபீயின் கருத்து என்றாலும், மேற்கொண்டு அவர் இப்படிக் கூறுகிறார்: ''அதனை அவன் தனக்குப் பயன் படுத்திக் கொள்ளாமல் தர்மம் செய்துவிடுவது நல்லது. இறைவன்மீது ஆழமான நம்பிக்கை இருந்தால் அவன் இப்படிச் செய்யலாம்.''

ஒரு மனிதனிடம் செல்வம் இருக்கிறது. அதில் நல்லதும் கெட்டதும் இடைப்பட்டதும் கலந்திருக்கின்றன. அந்தப் பொருளை அவன் கட்டோடு ஒதுக்கித் தள்ள வேண்டிய தில்லை. தன்னைப் பொறுத்த மட்டில் அவன் நல்லதைச் சாப்பிடுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். குடும்பத்தாரைவிட அவன் தன்னை மிகுந்த கட்டுப்பாட்டுடன் பழக்கிக் கொள்ள வேண்டும்.

நல்லது என்றும் தெரியவில்லை, கெட்டது என்றும் தெரியவில்லை. இந்தக் கட்டத்தில் அவன் தன் தேவையின் அளவுக்கு உபயோகித்துக் கொள்ளலாம். கெட்டதைத்தான் சாப்பிடாக வேண்டும் எனும் நிலை ஏற்பட்டாலும் இப்படித்தான் அவன் நடந்து கொள்ள வேண்டும்.

எவ்வளவு சிரமம் இருந்தாலும், நல்ல உணவில் கிடைக்கும் திருப்தியே அலாதியானதுதான். முதலில் அவன் தன்னை அதற்குப் பழக்கப்படுத்த வேண்டும். அடுத்து அதற்குக் குடும்பத்தாரைப் பழக்கப்படுத்த வேண்டும்.

ஒரு மனிதனின் தேவைகள் எத்தனையோ. உண்பது, உடுத்துவது மட்டுமன்றி, இன்னும் எத்தனையோ விதமான செலவுகளை அவன் சமாளிக்க வேண்டி ஏற்படும். வீடு கட்டுவது, வீட்டுக்குச் சாமான்கள் வாங்குவது, அடுப்புக்கு

விறகு, விளக்குக்கு எண்ணெய் வாங்குவது போன்ற எண்ணற்ற செலவினங்கள் குறுக்கிடுகின்றன. அவற்றை எல்லாம் நல்ல பொருளிலிருந்து நிறைவேற்ற முடியாவிட்டால், குறைந்தது அவன் உணவையும் உடையையும் மட்டுமாவது நல்ல பொருளிலிருந்துபெறலாம். இதில் அவன் பெரிதும் அக்கறையுடன் நடந்துகொள்ளவேண்டும். ஏனெனில், மற்ற எதையும்விட அவன் உடலும் உள்ளமும் சுத்தமாக இருக்கவேண்டும். அதற்குச் சிறந்தது நல்ல உணவுதான். கெட்ட உணவிலிருந்து நல்ல உடலும் கிடைக்காது; நல்ல உள்ளமும் உருவாகாது. அனுபவசாலிகள் இதை மறுப்பதில்லை.

உணவையும் உடையையும் முக்கியமானவை என்று நான் குறிப்பிட்டேன். ஆனால், அந்த இரண்டில் ஒன்றைத்தான் அடையலாம் என்றால், அப்போது உணவு முதலிடம் பெறும். உண்ணும் உணவு சுத்தமாக இல்லையேல், உருவாகும் எண்ணங்கள் தூயவையாக இருக்க முடியாது. உணவுக்கும் உடலுக்கும் சம்பந்தமுண்டு என்று பெரும்பாலோருக்குத் தெரியும். உணவுக்கும் உள்ளத்துக்கும் சம்பந்தமுண்டு என்று பெரும் பாலோருக்குத் தெரியாது.

ஆனால், இதுபோன்ற கட்டங்களில் அறிஞர் முஹாஸிபீ நமக்கு எதிராகத் தீர்ப்பு வழங்குகிறார். அவர் இப்படி கூறுகிறார்: ''உணவை விட உடையே சிறந்தது. ஏனெனில், உணவு சிறிது நேரம்தான் நிற்கும். உடையோ பல நாட்கள்வரை நீடிக்கும்!''

நம் கருத்துக்கு ஆதாரமாக முஹாஸிபீ நபிக்கருத்து ஒன்றைக் குறிப்பிடுகிறார்: ''பத்துக் காசுக்கு வாங்கிய துணி ஒன்றை அணிந்துகொண்டு ஒருவன் இறைவணக்கம் புரிகிறான். அந்தப் பத்துக் காசுகளில் 'ஹராமான' ஒரே ஒரு காசு கலந்திருந்தால் அவனுடைய வணக்கம் செல்லாது. இறைவன் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டான்.''

இப்படிப் பெருமானார் கூறியிருப்பது மறுக்க முடியாத ஒன்றுதான். ஆனால் துணியைப் பற்றிய இந்த நபிக்கருத்தைப்



போல், கெட்ட உணவு பற்றிய கருத்துக்களும் ஏராளமாக இருக்கின்றன. எனவே தான் உடையைவிட உணவை அதிகமாக அலசிப் பார்த்துச் சாப்பிட வேண்டும் என்று நான் கூறுகிறேன். அபூபக்ர் (ரலி) அவர்கள் தாம் குடித்த பாலை வாந்தி யெடுத்து வெளியேற்றிய சம்பவம் நமக்குப் பெரிதும் துணைசெய்கிறது.

தன் கையிலிருக்கும் அமானிதப் பொருளை ஒருவன், தனக்கோ, தன் குடும்பத்துக்கோ, மற்ற ஏழை மக்களுக்கோ செலவிடலாம் என்று நான் கூறினேனல்லவா? அதனை மீண்டும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏழை மக்களுக்கு அவன் தர்மமாக கொடுக்கும்போது, தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ளலாம். ஆனால் தனக்கும் தன் குடும்பத்துக்கும் செலவிடும்போது தாராளப் போக்குக் காட்டக் கூடாது. இதனைத்தான் நாம் 'தேவையின் அளவுக்கு மட்டும் உபயோகித்துக் கொள்ளலாம்' என்று சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

உங்களையே உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். உங்கள் கையிலிருக்கும் அமானிதத்தைச் செலவிட வேண்டிய நிலையில், தர்மம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறீர்கள். அப்போது மூன்று சூழல்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு சூழலிலும், ஒவ்வொரு விதமான தீர்ப்புப் பிறக்கிறது. ஏனெனில், தீர்ப்பு என்பது சூழ்நிலையின் சக்தியால் தோன்றும் தீய விளைவுகளைத் தடுப்பதற்கென்று கையாளப்படும் ஒரு வழி தான்.

முதற் சூழல்: உங்கள் உதவியை எதிர்பார்த்து வந்திருப்பவன் ஒரு வயோதிகன், பலவீனம் என்பது அவனுடைய உடல் முழுவதும் காணப்படும் முத்திரை. சிக்குப்பிடித்த தலை முடியும், குழி விழுந்த கன்னங்களும், அவனுடைய வறுமைக்கு விளக்கம் கொடுக்கின்றன.

இந்தக் கட்டத்தின் நீங்கள் அவனுக்குத் தாராள மனப் பான்மையுடன் தர்மம் செய்யலாம். இங்கு நீங்கள் கஞ்சத்தனம்

காட்ட வேண்டியதில்லை. மற்ற யாரையும் விட அதிகமாக அவனுக்கு உங்கள் தர்மம் பயன்படக்கூடும்; பசியின் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடும்.

**இரண்டாம் சூழல்:** இப்போது உங்களை எதிர்பார்ப்பவன் ஓர் ஏழையல்ல. அவன் முகத்தில் பசியின் முத்திரை தெரிய வில்லை. அவனை வறியவன் என்று உங்களால் தீர்மானிக்க முடியவில்லை. உண்மையிலேயே அவன் வசதியுள்ளவன் தான். அப்படியானால் உங்கள் உதவியை அவன் ஏன் எதிர் பார்க்க வேண்டும் என்று கேட்கிறீர்களா? அது சந்தர்ப்பம் விளைத்த நிலைமை. இரவு நேரத்தில் அவன் உங்களைத் தேடி வந்திருக்கிறான். அவனிடமுள்ள பணம் அந்த நடுநசியில் பயனற்றுப் போய்விட்டது.

இது போன்ற கட்டத்தில் அவனை உங்கள் விருந்தாளியாக நினைத்துக் கொள்ளவேண்டும். விருந்துக்கு வந்திருப் பவர்களை நீங்கள் எப்படிக் கவனிக்க வேண்டுமோ, அப்படி அவனைக் கவனிக்கவேண்டும். அவனுடைய கண்ணியத்துக் கும் அந்தஸ்துக்கும் தக்கவாறு அவனுக்கு உதவி செய்யுங்கள்.

**மூன்றாம் சூழல்:** உங்களிடம் இப்படி விருந்தாளியாக வந்திருப்பவன் உண்மையிலேயே ஓர் ஏழை என்று வைத்துக் கொள்ளுங்கள். அத்துடன், அவனுடைய சொல்லும் செயலும் ஆழ்ந்த ஒழுக்க உணர்வைக் காட்டுகின்றன என்றும் வைத்துக் கொள்ளுங்கள். இது போன்ற நிலையில், உங்களிடம் இருக்கும் பொருள் பற்றிய வரலாறு முழுவதையும் சொல்லிவிடுங்கள். அவன் விரும்பினால் சாப்பிடட்டும்; இல்லையேல் தவிர்த்துக் கொள்ளட்டும். நீங்கள் அடைய விரும்பாத ஒன்றை ஒழுக்க முள்ள ஒருவனுக்கு விருந்தாகக் கொடுப்பது சிறந்த செயலல்ல.

பொருளின் உண்மை நிலையைக் கூறாமல், அவனைச் சாப்பிட வைத்து விடாதீர்கள். ''அதைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. எனவே அதனால் அவனுக்குத் தீங்கு கிடையாது'' என்று வாதிக்காதீர்கள்.



இது உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட வாதம். கெட்ட பொருளின் குணம் எப்போதும் வெளிப்படத்தான் செய்யும். தெரிந்து சாப்பிட்டாலும், தெரியாமல் சாப்பிட்டாலும், அது சாப்பிடுகிறவனின் மனப்பரப்பில் சிறிதளவாவது கறையை ஏற்படுத்தத்தான் செய்யும். நஞ்சு என்று தெரியாமல் தின்று விட்ட எத்தனையோ பேர் அதன் சக்திக்குத் தம் உயிரை பலி கொடுத்திருக்கிறார்கள்.

உங்களைத் தேடி வந்திருக்கும் விருந்தாளிக்கு இப்படி எல்லாம் தொல்லைகளை ஏற்படுத்தக் கூடாது.

இங்கு இன்னொரு விஷயத்தையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. உங்கள் கையிலிருக்கும் அன்னியனின் பொருள், ஏழை களுக்கு நல்லது என்று நாம் குறிப்பிட்டோம். ஏழைகளுக்கு ஏற்பட்டிருக்கும் அவசியத்தை யொட்டியே இப்படிச் சொல்ல வேண்டியிருக்கிறது. அவசியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள லாமே தவிர, அது நல்ல பொருளாக மாறி விடுகிறது என்று பொருள் கொள்ள முடியாது. அன்னியனின் பொருள், அவனு டைய உழைப்பின் வியர்வைத் துளிகளால் உருவான பொருள், யாருக்கும் நல்ல பொருளாக முடியாது-பொருளுக்குரியவன் அனுமதி கொடுத்தாலன்றி.

இப்படிப் பார்க்கும்போது, அமானிதப் பொருள்களைப் பன்றிக் கறி, சாராயம் முதலியவற்றுடன் தாராளமாக ஒப்பிடலாம். அவை மார்க்கத்தின் பார்வையில் எவ்வளவு தூரம் இகழப்படு கின்றன என்று உங்களுக்குத் தெரியும். அவற்றிற்கு மார்க்கம் 'ஹராம்' என்று பெயர்கொடுத்து ஒதுக்கி வைத்திருக்கிறது. ஹராம் என்றால் என்ன என்றுதான் உங்களுக்குத் தெரியுமே!

ஆனால் தவிர்க்க முடியாத கட்டங்களில், உயிருக்கே ஆபத்து ஏற்படும் சூழல்களில், பன்றிக் கறியைச் சாப்பிடலாம்; சாராயத்தை குடிக்கலாம். மனிதனின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்றும் நோக்கத்துடனேயே விதி விலக்கல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உடல் நிலையிலோ மனப்

பண்பிலோ கோளாறு ஏற்படக்கூடும் என்பதால்தான் பெரும் பாலான பொருள்களை 'ஹராம்' என்று இஸ்லாம் குறிப் பிடுகிறது. பன்றிக் கறியைச் சாப்பிடக்கூடாது, சாராயத்தைப் பருகக் கூடாது என்பது இஸ்லாத்தின் தீர்ப்பு.

ஆனால் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும் நிலையில், அந்தச் சட்டத்தை மீறுவதில் தவறு கிடையாது. ஏனெனில், அப்படித் தவிர்க்க முடியாத சிக்கலில் அகப்பட்டுக் கொண்டி ருப்பவர்களுக்கு இஸ்லாமே சலுகை கொடுத்திருக்கிறது.

என்றாலும், மார்க்கத்தின் கண்ணோட்டத்தில் கெட்டவை என்று பெயர் வாங்கிய அந்தப் பொருள்கள், குறிப்பிட்ட நேரத்தில் நல்லவையாக மாறிவிடுகின்றன என்று சொல்ல முடியாது. அவை என்றைக்கும் கெட்டவைதான். எந்த விளைவு ஏற்படக்கூடும் என்று இஸ்லாம் அவற்றை ஒதுக்கி வைத்திருக்கிறதோ, அந்த விளைவு அவசியம் ஏற்படத்தான் செய்யும். அந்த விளைவையும் ஒரு மனிதன் உயிருக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, முன்னதைவிடப் பின்னதே பெரியது என்ற தீர்மானம் நமக்கு ஏற்படுகிறது. எனவேதான் உயிரைக் காத்துக் கொள்ளும் நோக்கத்துடன் அவற்றைச் சாப்பிடலாம் எனும் சலுகையை இஸ்லாம் அளித்திருக்கிறது.

அவசியம் ஏற்படும்போது பன்றிக்கறி தின்பதற்கு, சாராயம் குடிப்பதற்கு அனுமதி இருப்பதால், அவற்றை நல்ல பொருள் என்று நம்மால் சொல்ல முடியாததுபோல், அவசியம் ஏற்படும் போது, ஏழைகளுக்குத் தர்மம் செய்ய அனுமதி இருப்பதால் அன்னியனின் பொருளை நல்ல பொருள் என்று சொல்ல முடியாது. உரிமையாளனின் ஒப்புதலைப் பெறாத எல்லா ருக்கும் அது கெட்ட பொருள்தான். எனினும் தேவையின் அடிப்படையில் அதனை உட்கொள்வது ஆகும் என்பது இஸ்லாத்தில் காணப்படும் சலுகை.



உங்களிடமிருக்கும் பொருள் கேட்பாரற்றுக் கிடந்தால், அதன் உரிமையாளனையோ, அவனுடைய வாரிசுகளையோ உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், ஒன்று அதனைத் தர்மம் செய்யவேண்டும்-அல்லது கடலில் எறிய வேண்டும் எனும் இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருந்தால், அந்தச் சலுகையை, நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அமானிதப் பொருள்கள் அனைத்தையும் இப்படிப் பயன்படுத்திக் கொள்வதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை. பொருளின் உரிமையாளன் உயிருடன் இருக்கும்போது, அவனுடைய பொருளை உங்களால் எதுவும் செய்ய முடியாது. தர்மமும் செய்யக்கூடாது. தண்ணீரிலும் போடக்கூடாது. இதனை நீங்கள் மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டும்.

நல்லதையும் கெட்டதையும் பிரித்துப் பார்த்துச் செயலாற்ற வேண்டும் என்பது இறைவன் மனிதனுக்கு அளித்திருக்கும் கட்டளை. இந்தக் கட்டளை எவ்வளவு தூரம் செயலாற்றப் படுகிறது என்பதை ஆய்ந்து பார்க்கும் மனம் படைத்த அனை வரும் அறிகிறார்கள். ஆனால் அந்தக் கட்டளையை மீறுகிற வர்கள் அனைவரும் ஒவ்வொரு காரணத்தைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

சிலர் சூழ்நிலையின் சக்திக்கு இரையாகித் தவற்றைச் செய்கிறார்கள்; உண்ணத் தகாததை உண்கிறார்கள்; குடிக்கத் தகாததைக் குடிக்கிறார்கள். வேறு சிலர் நியாயமான வர்த்தகம் பற்றித் தெரியாததால் குற்றம் புரிகிறார்கள். மற்றும் சிலர் பெற்றோரின் தூண்டுதலால் கெட்டுப் போகிறார்கள். மற்றப் பிரிவுகளை விட இந்தப் பிரிவில் சேருகிறவர்கள் அதிகம். எதையும் கிரகித்துக் கொள்ளத் தகுந்தது குழந்தை மனம். அந்தப் பிஞ்சு மனத்தில் தெய்வீக வித்தை விதைப்பதற்குப் பதிலாக விஷவித்தைப் பதிக்கிறவர்கள் பெற்றோர் தான். ஏனெனில் தாம் பெற்றெடுத்த செல்வத்தைப் பார் புகழும் பண்பினனாக்கும் உரிமையும் திறமையும் தமக்கு மட்டுமே இருக்கின்றது என்று எண்ணுகிறவர்கள் அவர்கள்தான்.

தாம் எண்ணியதுபோல், தம் குமாரர்களை-குமாரிகளைப் பண்பும் பணிவும் நிறைந்தவர்களாக, ஒழுக்கமும் – ஞானமும் நிறைந்தவர்களாக அவர்கள் வளர்த்துவிட்டால், பேச்சே யில்லை. பெற்றோர் எனும் இனத்திலேயே அவர்கள் சிறந் தவர்கள். குழந்தை பெறுவது எப்படி என்பதற்கு மட்டுமின்றி, பெற்றெடுத்த செல்வத்தை வளர்ப்பது எப்படி என்பதற்கும் அவர்கள் இலக்கணம் வகுத்தவர்களாவார்கள். அத்தனைக்கும், மேலாக, உலகத்திற்கு ஒளி கொடுத்த நமது முன்னோரின் செயல் முறைகளுக்குப் புத்துயிர் கொடுத்த பெருமை அவர்களுக்குக் கிடைக்கும்.

ஆனால் உண்மையில் இத்தகைய பெற்றோர்களை இன்றைக்குக் கண்டுபிடிப்பதே கஷ்டம். அப்படியே கண்டு பிடித்துவிட்டாலும் அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பது அதை விடக் கஷ்டம்.

இளமையிலேயே அவர்கள் தம் குமாரர்களின் மனத்தில்... குமாரிகளின் மனத்தில் நச்சு விதையைத் தெளித்து விடுகி றார்கள். இதை அவர்கள் தெரிந்துதான் செய்கிறார்கள் என்று நம்மால் சொல்ல முடியாது. தாம் செய்யும் தவறு, எதிர் காலத்தில், எத்தனை பெரிய விபரீதத்திற்கு வழி வகுக்கும் என்று அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியாது.

பகல் முழுவதும் அவர்களுக்கு வர்த்தக நடவடிக் கைகளில் கழிகிறது. இரவு முழுவதும் அவர்கள் களைப்புத் தீரத் தூங்குகிறார்கள். வர்த்தகத்திற்கென்று இஸ்லாம் வகுத்து வைத்திருக்கும் சட்டங்கள் அவர்களுக்குத் தெரியாது. அந்தச் சட்டங்கள் தெரிந்தோ, தெரியாமலோ புறக்கணிக்கப்படும் போது, கிடைக்கும் வருமானம் கெட்டதாக மாறுகிறது என்றும் அவர்களுக்குத் தெரியாது. அந்த வருமானத்திலிருந்து அவர்கள் சாப்பிடுகிறார்கள்; தம்முடைய குமாரர் குமாரிகளுக்குச் சாப்பிடக் கொடுக்கிறார்கள். இதனால் பெற்றோரின் மனத்தில் மட்டுமன்றி, அவர்களின் சந்ததியினரின் மனத்திலும் தீமையின் ரேகைகள் படர்கின்றன.



எனவே, வயது வந்தவர்கள் தமது பெற்றோரைப் பற்றியும், அவர்களிடம் குவிந்திருக்கும் செல்வத்தைப் பற்றியும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். நீதிக்கும் நேர்மைக்கும் அவர்கள் மதிப்புக் கொடுக்கட்டும். மார்க்கத்துக்கு முரண் பட்டது நடக்கும்போது எதிர்த்து நிற்கட்டும். தீமைக்குத் துணை செய்யும் உரிமை மனிதரில் எவருக்கும் கிடையாது.

இன்று இளைஞர்களாக இருப்பவர்கள் ஒரு காலத்தில் பெற்றோராக மாறுவார்கள். அப்போது அவர்களின் மனப்பண்பு குழந்தைகளுக்குத் தெளிவு கொடுக்கும்; அவர்களது எதிர்கால வாழ்வைப் பண்புள்ளதாக மாற்றும்.

ஒரு குடும்பத்தில் அன்னையும் தந்தையும் சேர்ந்து தவறு செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களிடம் செல்வம் இருக்கிறது. குடும்பத்தை அது காப்பாற்றுகிறது. அந்தச் செல்வம் நல்ல வழியில் கிடைத்ததுதானா என்று அவர்களின் குமாரன் சிந்தனை செய்கிறான். இறுதியில் தம், பெற்றோரிடமிருக்கும் செல்வம் நல்ல வழியில் கிடைத்தது தான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது எனும் தீர்மானத் திற்கு அவன் வருகிறான். அவர்கள் செய்யும் வர்த்தகத்திலும், அவர்களுக்கு வந்து சேரும் வருமானத்திலும் தீமை கலப்பதை அவன் உணர்கிறான். இது போன்ற கட்டத்தில் அவன் என்ன செய்யவேண்டும்?

அப்போது அவன் பெற்றோர் செய்யும் தவறுகளுக்குத் துணை நிற்கக்கூடாது. இறைவனுக்கெதிராகச் செய்யப்படும் எந்தக் காரியத்திற்கும் யாருக்காகவும் அவன் துணை செய்யக் கூடாது. அவர்களிடம் இருப்பது தீயதுதான் என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்தால், தானும் அதனை உபயோகிக்கக் கூடாது: பிறரையும் உபயோகிக்கத் தூண்டக் கூடாது. முடிந்தால் பெற்றோரை அவன் தடுக்கவேண்டும்.

அதற்காகப் பெற்றோரின் அன்பை அறுத்தெறிய வேண்டும் என்றோ, அவர்களைப் பகைத்துக்கொள்ள வேண்டும் என்றோ

பொருள் கொடுத்துவிடக் கூடாது. அவர்களைப் பகைத்துக் கொள்ளாமல் தன் காரியத்தை அவன் செய்ய வேண்டும், அவர்களின் திருப்தியை அலட்சியம் செய்துவிட முடியாது.

உங்கள் பெற்றோர் கொடுக்கும் உணவில் உங்களுக்குச் சந்தேகம் தோன்றுகிறதா? அது நல்லது என்றோ, கெட்டது என்றோ நிச்சயமாகத் தெரியவில்லையா? அதனை நீங்கள் சாப்பிடவில்லை என்றால், பெற்றோரின் வெறுப்புக்கு இலக்காகவேண்டி ஏற்படும் என்று அஞ்சுகிறீர்களா?

அப்படியானால் பல்லைக் கடித்துக்கொண்டு அவர்களின் கட்டளைக்கு இணங்குங்கள். மெதுவாக மென்று சாப்பிடுங்கள். குறைவாக எடுத்துச் சாப்பிடுங்கள். எல்லையை மீறி விடாதீர்கள்.

சகோதரர்களின் நிலையும், சகோதரிகளின் நிலையும் இத்தகையவைதான். அவர்களுக்கும் நீங்கள் தரமான கண்ணியம் கொடுக்கவேண்டியிருக்கிறது. உங்கள் முன்னேற்றத்தைப் பார்த்து மகிழ்கிறவர்கள் அவர்கள்தான். உங்கள் துன்பத்தைக் கண்டு இரண்டு சொட்டுக் கண்ணீர் உதிர்க்கிறவர்களும் அவர்கள்தான். எந்த அளவுக்கு அவர்களுக்குக் கண்ணியம் கொடுக்க வேண்டுமோ, அந்த அளவுக்குக் கொடுங்கள். அவர்கள் செய்யும் தவற்றை எப்படித் திருத்த வேண்டுமோ, அப்படித் திருத்துங்கள். அதற்காக அவர்களைப் பகைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

உங்களைப் பார்த்துவிட்டுப் போகவந்த உங்கள் அன்னையார், உங்களுக்கு ஓர் ஆடையை அன்பளிப்பாகக் கொடுக்கிறார். அந்த ஆடையின் தரம் உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அது சந்தேகத்திற்கிடமுள்ள ஒன்று என்று மட்டும் உங்களுக்குத் தெரிகிறது. எனவே எப்படியாவது அதனைத் தட்டிக் கழிக்கத் தீர்மானிக்கிறீர்கள்.

ஆனால் உங்கள் தீர்மானத்தை அன்னையார் உணர்ந்து கொண்டு விடுகிறார். உங்களைப் பெற்று வளர்த்தவரல்லவா அவர்? எனவே, ''இதை நீ அணியத்தான் வேண்டும். உனக்காகவே சிரமப்பட்டுக் கொண்டுவந்திருக்கிறேன். ஒரு தாயின் கண் 'ஹாஜத்தை' நிறைவேற்று'' என்று பிடிவாதம் செய்கிறார்.



'கண் ஹாஜத்து' எனப்படும் அவருடைய கண்ணாசையை உங்களால் எப்படி நிறைவேற்ற முடியும்? அன்னையின் கண்ணைப் பார்த்தால், மார்க்கத்தின் கண்ணுக்குப் பாதகம் ஏற்படுகிறது. மார்க்கத்தின் கருத்தைப் பார்த்தால் அன்னையின் கருத்துக்கு ஏமாற்றம் ஏற்படுகிறது.

இதுபோன்ற சூழ்நிலைகளில், சிலர் கூறுவதுபோல், ''போ வெளியே! மார்க்கத்துக்குச் சிறிதளவு மாறுபட்டதையும் நான் தொடுவதில்லை. கெட்டதையும் சந்தேகத்திற்குரியதையும் என் தலையில் கட்டுவதற்காக ஓடி வந்திருக்கிறாயே, நீயும் ஒரு தாயா?'' என்று கூறாதீர்கள். அது புத்திசாலித்தனமல்ல, அதற்கு மார்க்கப் பற்றுதலும் காரணமல்ல. அன்னையின் மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்பதும், மார்க்கத்தின் சட்டங்களில் ஒன்று தானே!

அப்படியானால் என்ன செய்யவேண்டும் என்று கேட்கிறீர்களா? இப்படிச் செய்யுங்கள். சிறிது நேரத்திற்கு நாடகமாடுங்கள். அவர் கொடுக்கும் உடையை வாங்கி, அவர் எதிரிலேயே அணிந்து கொள்ளுங்கள். உங்களைப் பெற்றெடுத்த அந்தப் பெண் மனம் சிறிது நேரம் மகிழ்ச்சியில் மிதக்கட்டும். அந்தப் பூரிப்பை அவரது முகத்தில் நீங்கள் தாராளமாகப் பார்க்கலாம். அப்புறம், அவர் திரும்பிப் போய்விடுவார். இந்தக் கட்டத்தில் உங்கள் நாடகம் முடிவடைகிறது. அந்த உடையை உடனே கழற்றி எறிந்து விடுங்கள். அப்புறம் அதனைத் தொடாதீர்கள். தாயுள்ளத்தை மகிழ்விப்பதற்காக இப்படி நாடகம் ஆடுவதில் அப்படியொன்றும் தவறு கிடையாது.

இயன்றவரை, அந்த உடையுடன் இறைவணக்கம் புரியாதீர்கள். அன்னையார் எதிரில் நின்று கொண்டிருக்கும் போது, தொழுகைக்குரிய நேரம் வந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் போகிறவரை பொறுத்திருப்பதனால்

தொழுகைக்குரிய நேரம் கழிந்து போய்விடும் என்று உங்களுக்குத் தெரிகிறது. மத்தியானத் தொழுகைக்குச் சிறிது முன்னால் வந்த அவர், மாலைத் தொழுகைக்குப் பிறகே திரும்பிச் செல்லப் போவதாகச் சொல்கிறார்.

இதுபோன்ற நிலையில் அவர் கொடுத்த அந்த உடை யுடனேயே தொழுது கொள்ளலாம்.

சட்டம் என்பது கடல்போன்றது. சட்டங்களை நன்கு தெரிந்துகொள்ள நினைக்கிறவர்கள், அவற்றின் நுணுக்கங்களை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல் எதிர்ப்பட்டிருக்கும் பிரச்சினையில் குழப்பம் ஏற்படத்தான் செய்யும். நம்முடைய கருத்துக்கு விளக்கம் கொடுப்பதுபோல் அறிஞர் பிஷ்ர் நடந்திருக்கிறார்.

ஒரு சமயம் அவருடைய அன்னையார் ஒரு பொருளை அவரிடம் கொடுத்தார். ''உன்மீது கடமை இது. இதனை நீ சாப்பிடத்தான் வேண்டும்'' என்றார்.

ஆனால் பிஷ்ருக்கு அந்தப் பொருள் பிடிக்கவில்லை. என்றாலும், வெறுப்பை வெளியில் காட்டிக் கொள்ளாமல், அதனை அவர் சாப்பிட்டு விட்டார். பின்னர் வாந்தி எடுத்து அதனை வெளியேற்றினார். மார்க்கத்தின் திருப்தியையும், அன்னை யாரின் திருப்தியையும் அவர் அடைய விரும்பினார். அதனால் தான் அவர் அப்படிச் செய்தார். இதைவிட்டால் வேறு வழிதான் என்ன?

இப்போது மற்றொரு பிரச்சினை நம் கவனத்திற்கு வருகிறது.

ஒரு மனிதரிடம் திரண்ட செல்வம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதில் கொஞ்சமும் நியாயக் கலப்பு கிடையாது. முழுக்க முழுக்க அந்தச் செல்வம் தப்பான வழியில் வந்திருக்கிறது. உண்மையைப் பார்க்கும்போது, அவனுக்கும் அந்த செல்வத்துக்குமிடையில் எவ்விதச் சம்பந்தமும் கிடையாது.



அவன் மக்கா யாத்திரைக்கென்று செலவு செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. ஏனெனில், அவன் இன்னும் வறியவனாகத்தான் இருக்கிறான்; அவனிடமிருக்கும் செல்வத்தைச் செலவிடும் உரிமை அவனுக்குக் கிடையாது.

இதுபோலவே 'ஸகாத்' கொடுக்கவேண்டிய தேவையும் அவனுக்குக் கிடையாது. ஏனெனில், வசதியுள்ளவர்களுக்கே 'ஸகாத்' கடமையாக்கப்படுகிறது. அன்னியனின் அமானிதப் பொருளைக் கட்டிக் காத்துக்கொண்டிருக்கும் ஏழைக்கு, அது கடமையல்ல. அவன் செய்யவேண்டியதெல்லாம் இதுதான்: ஒன்று, பொருளின் உரிமையாளனிடமோ, அவனுடைய வாரிசு களிடமோ அதனை ஒப்படைத்துவிட வேண்டும்; அல்லது, அதை அதன் உரிமையாளனுக்காகத் தர்மம் செய்துவிட வேண்டும். இந்த இரண்டையும் தவிர்த்து வேறு எதுவும் செய்வதற்கில்லை.

இந்தப் பிரச்சினையை இப்போது வேறொரு கோணத்தி லிருந்து ஆராய்வோம். முழுக்க முழுக்கத் தப்பான வழியில் செல்வம் கிடைத்திருந்தால் என்ன செய்வது, எப்படி நடந்து கொள்வது என்று நாம் பார்த்துவிட்டோம். அவனுக்குக் கிடைத்திருக்கும் பொருள் முழுக்க முழுக்கத் தப்பான வழியில் வந்ததல்ல என்று வைத்துக்கொள்வோம். அது நல்லதா, கெட்டதா என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அது நல்லதாகவும் இருக்கலாம்; கெட்டதாகவும் இருக்கலாம்.

அப்போது அவனுக்கு மக்கா செல்லவேண்டிய கடமை ஏற்படும். ஏனெனில், மக்கா செல்லவேண்டிய கடமை யற்றவர்கள் ஏழைகள். அவர்களுக்கு மட்டுமே அப்படியொரு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் கட்டத்தில் அவனுடைய வறியநிலை நிரூபிக்கப்படவில்லை. அவன் கையிலிருக்கும் பொருள் கெட்டது என்றால் பேச்சேயில்லை. அது நல்லதாகவும் இருக்கக் கூடுமல்லவா? அப்போது அவன் வசதியுள்ளவனாக மாறிவிடுகிறான். எனவே 'ஹஜ்' செய்ய

வேண்டிய பொறுப்பு அவன் தலையில் விழுகிறது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது அவனுக்குச் சாத்தியம் தான்.

''சென்றுவரும் வசதியுள்ளவர்கள் இறைவனுக்காகத் தேவாலயம் சென்று வரவேண்டும். இது அவர்களுக்குக் கடமை'' என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

நல்லதை எடுத்து நடப்பது, கெட்டதைத் தவிர்த்து ஒழுகுவது மிக உயர்ந்த குணம். இந்த மனப்பண்பு ஏற்பட்டு விட்டால், அப்புறம் இறை வழியில் கிடைக்கும் இன்பம் எல்லை கட்டமுடியாததாகத்தான் இருக்கும்.

அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) ஒரு சமயம் இப்படி வினவப் பட்டார்கள்: ''என் தந்தை இறந்துவிட்டார். அவர் விட்டுச் சென்ற சொத்து எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் அவர் உயிருடன் இருந்தபோது வியாபார நடவடிக்கைகளில் நேர்மைக்கு மாற்றமாக நடந்ததை நான் பார்த்திருக்கிறேன். அவரிடமிருந்து இந்தச் சொத்தை நான் அடையலாமா?''

விடை இப்படி வெளிவந்தது: ''தவறான நடவடிக் கைகளால் அவர் எந்த அளவுக்கு லாபம் அடைந்திருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அந்த அளவை மட்டும் விட்டு விடுங்கள்...''

வினவியவர் இரண்டாம் வினாவை எழுப்பினார்: ''அவருக்கு வரவேண்டிய கடன்கள் சில இருக்கின்றன? கொடுக்கவேண்டிய கடன்கள் சில இருக்கின்றன....''

''கொடுக்க வேண்டிய கடன்களைக் கொடுத்துவிடுங்கள். வரவேண்டிய நிலுவைகளை வசூல் செய்யுங்கள்....''

இமாம் அஹ்மது (ரஹ்) அவர்களின் தீர்ப்பிலுள்ள உண்மை, உங்களுக்கு நன்றாகத் தெரியக்கூடும் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் அதைத்தானே சற்று முன்னர் நாம் ஆராய்ந்தோம். இதற் கிடையில் அது உங்களுக்கு மறந்து போயிருக்க முடியாது.

# 12. அதிகாரிகள் குறித்து......

பொதுமக்கள் அனைவரையும்விட, வர்த்தகர்கள் அனைவரையும் அதிகமாகப் பணத்துடன் தொடர்பு கொண்டி ருப்பவர்கள் அரசாங்க அதிகாரிகள். அரசாங்க அதிகாரிகள் என்றால், மாதச் சம்பளத்திற்காக இயந்திரம்போல் உழைக்கும் அதிகாரிகள் என்று அர்த்தமல்ல. அவர்கள் இங்கு நம்முடைய கவனத்திற்கு நிச்சயமாக வரமாட்டார்கள். ஏனெனில், பணத் துக்கும் அவர்களுக்கும் அதிகத் தொடர்பு கிடையாது. நாட்டின் நன்மை கருதிச் செலவினத்தை நிர்ணயிக்கும் அதிகாரிகள் மக்களிடமிருந்து வரி வசூல் செய்யும் அதிகாரிகள் முதலி யோரையே நான் அரசாங்க அதிகாரிகள் என்று குறிப் பிடுகிறேன். இந்தப் பிரிவில் அரசர்களையும் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளலாம். ஏனெனில் அக்காலத்திய அரசர் களுக்குப் பணத்துடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. அதனை அவர்கள் தம் விருப்பத்திற்குரிய வழிகளில் வாரி வாரிச் செல விட்டார்கள். கவிஞர்களுக்கும், அறிஞர்களுக்கும் அவர்கள் கொடுத்த அன்பளிப்புகள் இன்றைக்கும் வரலாற்று ஏடுகளில் நின்று ஒளி விடுகின்றன.

உங்களுடைய திறமைக்காக அரசர் ஒருவர், அல்லது அதிகாரி ஒருவர் பணமுடிப்பு ஒன்றை உங்களுக்கு அன் பளிப்பாகக் கொடுக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அதை நீங்கள் பெற்றுக் கொள்ளலாமா? பெற்றுக் கொள்ளக் கூடாதா? இது இப்போது நாம் ஆராயவேண்டிய பிரச்சினை. மேலிடத்திலிருந்து உங்கள் கைக்கு வரும் பொருள்கள் எல்லாம் இந்தப் பிரச்சினையில் வந்து விழுகின்றன. அதிகாரிகளிடமிருந்து உங்களுக்கு வரும் பொருள் சில வேளை, உரிய மதிப்பைப் பெறுகிறது; வேறு சில வேளை தொடுவதற்கும் தகுதியில்லாத நிலைமை ஏற்படுகிறது.

அரசனிடமிருந்தோ, அரசாங்க மேலதிகாரியிடமிருந்தோ, நீங்கள் ஏதேனும் பெறும்போது, மூன்று கேள்விகள் உருவாகின்றன. அவருக்கு அந்தப் பொருள் எந்த வழியில் வந்திருக்கிறது? எதன் காரணமாக அவரிடமிருந்து அதனை நீங்கள் பெறுகிறீர்கள்? எந்த அளவுக்குப் பெறுகிறீர்கள்?

இந்த மூன்று வினாக்களுக்கும் முறையான தெளிவு கிடைத்த பிறகுதான், நீங்கள் பெறும் பொருள் நல்லதா கெட்டதா என்று தீர்மானிக்க முடியும்; பெற்றுக் கொள்ளலாமா, பெற்றுக்கொள்ளக் கூடாதா என்பதை நிர்ணயிக்க முடியும்.

எனவே இப்போது நம் கவனத்திற்கு மற்றொரு பிரச்சினை வருகின்றது. அரசர்களின் கைக்கு வரக்கூடிய பொருள்களில் எது நல்லது, எது கெட்டது? எதை அவர்கள் அடையலாம், எதை அடையக்கூடாது?

அரசர்களிடம் எவ்வளவு பெரிய செல்வம் இருந்தாலும், அதற்கு அவர்கள் ஏகபோக உரிமையாளர்கள் அல்லர். அந்தச் செல்வம் முழுவதையும் அவர்கள் தம் தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியாது.

அரசர்கள் உரிமை கொண்டாடும் பொருள்கள் இரண்டு: முஸ்லிமல்லாதாரிடமிருந்து கிடைக்கும் பொருள்; முஸ்லிம்களிடமிருந்து கிடைக்கும் பொருள். முஸ்லிம்களிடமிருந்து கிடைக்கும் பொருள என்றால், உரிமை கொண்டாடுவதற்கு யாருமில்லாமல் கேட்பாரற்ற நிலையில் அரசாங்கத்துக்கு வந்து



சேரும் பொருள் என்றே அர்த்தம். இவற்றைத் தவிர்த்து, வரிப்பணம், கஜானாவிலிருக்கும் மக்களின் பணம் முதலிய எதையும் அரசர்கள் தொடக்கூடாது; அந்த உரிமை அவர்களுக்குக் கிடையாது.

தொடக்கூடாத பொருளிலிருந்து அவர்கள் எதைக் கொடுத்தாலும், நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடாது. உரிமையுள்ள பொருளிலிருந்து அவர்கள் யாருக்கும் எதையும் எப்போதும் கொடுக்கலாம்; எந்த அளவுக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

மக்களின் நன்மைக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பொருளிலிருந்து அவர்கள் கொடுப்பதனால், யார் மூலம் மக்களுக்கு நன்மை ஏற்படும் என்று தெரிகிறதோ, அவர்களுக்கு மட்டுதான் கொடுக்கவேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக் கவும் கூடாது; சம்பந்தமில்லாதவர்கள் பெற்றுக் கொள்ளவும் கூடாது.

இஸ்லாமிய ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில் வசிக்கும் பிற மதத்தினர், ஒரு தொகையை வரியாக அரசாங்கத்துக்குச் செலுத்தி வந்தார்கள். அவர்களின் உரிமைகளுக்கு உத்திரவாதம் கொடுப்பதற்காக அவர்களிடமிருந்து அப்படி வரிவசூல் செய்யப்பட்டது. இதற்குப் பல நிபந்தனைகள் இருக்கின்றன. மார்க்கத்தின் அடிப்படையில், நேர்மைக்கு மாற்றமில்லாமல் வசூல் செய்யப்பட்டால், அந்த வரிப் பணத்தில் ஐந்தில் ஒரு பகுதி அரசனைச் சேரும். மீதிப் பணம் நாட்டின் முன்னேற்றத்திற்கும், மக்களின் முன்னேற்றத்திற்கும் ஒதுக்கப்பட வேண்டும்.

ஓர் அரசன் தனக்குக் கிடைத்திருக்கும் பொருளிலிருந்து தர்மம் செய்தால், அதில் குற்றம் கிடையாது. மக்களின் நன்மைக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பணத்தை அவன் செலவிடுகிறான் என்றால், அவன் செலவிடும் வழியில் மக்களுக்கு நன்மை ஏற்படவேண்டும். ஒரு மனிதனால் மக்களுக்கு நிச்சயமாக நன்மை கிடைக்கும் என்று தெரிந்தால், அவனுக்கு அந்தப் பணத்தைச் செலவிடலாம். அதனை அவன் தாராளமாக உபயோகித்துக் கொள்ளலாம்.

ஆனால் இங்கு நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. பிற மதத்தினரிடமிருந்து இஸ்லாமிய அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வரிப் பணத்திற்கு, மேலே நான் குறிப்பிட்டதுபோல், பல நிபந்தனைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் கவனிக்காமல் வரி வசூல் செய்ய முடியாது. இவ்வாறு சீர்திருத்தத்திற்கென்று செலவிடப்படும் வரிப் பணம், நியாயமான வழியில் சம்பாதிக்கிறவனிடமிருந்துதான் வந்திருக்கவேண்டும். சாராயக் கடைக்காரன் கொடுத்த பணத்திலிருந்தோ, பன்றிக்கறி விற்கிறவன் கொடுத்த வரியிலிருந்தோ இப்படித் தர்மம் செய்யக்கூடாது.

எதிர் மதத்தினர் என்ற காரணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு, ஒன்றுக்கு இரண்டாக வரி விதிப்பது கூடாது. அவர்கள் ஒவ்வொருவர் மீதும் வரி வதிக்க வேண்டிய அவசியமும் கிடையாது. பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இந்த வரி கிடையாது.

உரிமை கொண்டாட யாருமில்லாமல், கேட்பாரற்றுக் கிடக்கும் பொருள் அரசாங்கத்துக்கு வந்து சேருகிறது என்று நான் குறிப்பிட்டேனல்லவா? இதுபோன்ற சொத்துக்களை ஏராளமாகப் பார்க்க முடியாது. என்றாலும், சில வேளைகளில் உரிமை கொண்டாடுகிறவன் அல்லது உரிமை கொண்டாடுகிறவர்கள் இல்லாத நிலையில் சில சொத்துக்கள் அரசாங்கத்துக்கு வரத்தான் செய்கின்றன.

இப்படி வந்து சேரும் சொத்துக்கள் நல்ல வருமானத்திலிருந்து வாங்கப்பட்டவைதான் என்று சொல்ல முடியாது. சொத்துக்களை விட்டுச் செல்கிறவர்கள் பலவிதம். அதில் நல்லவர்கள் ஒரு சாரார். அவர்களின் சம்பாத்தியத்தில் நேர்மைக்கு முரண்பட்ட ஒரே ஒரு செப்புக் காசைக்கூடப் பார்க்க முடியாது, அவர்களின் சொத்துக்கள் எப்போதும் புனிதம் நிறைந்தவைதான்.

வேறு சிலர் நீதியையும் நேர்மையையும் மறந்து விட்டுப் பணத்துக்காகப் பாடுபட்டவர்கள். நீதியையும் லாபத்தையும் வைத்துப் பார்த்தால், அவர்கள் லாபத்துக்கு மனத்தைப் பறிகொடுக்கிறவர்கள். இத்தகையவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்களில் நல்லதும் கெட்டதும் கலந்துதான் இருக்கும். சில வேளைகளில் நல்லதைவிடக் கெட்டது அதிகமாகவும் இருக்கக் கூடும்.



ஒரு மனிதன் விட்டுச் சென்ற சொத்துக் குறித்து இப்படியெல்லாம் ஆராய வேண்டியிருக்கிறது. அதுபற்றிய விவரத்தை நாம் ஏற்கனவே விவரித்து விட்டோம். எனவே பிரச்சினையை உங்கள் சிந்தனைக்கு விட்டுவிடுகிறோம்.

என்றாலும், உங்கள் நன்மைக்காக இரண்டு வரி எழுதி விடுவது நல்லது. வாரிசு இல்லாத நிலையில் அரசாங்கத்தின் பிடிப்புக்கு வந்திருக்கும் ஒரு சொத்து, எத்தகையது என்று ஆராய்ந்து முடிவு கட்டுவது சிரமம்தான். எனினும் அது கெட்ட நல்ல என்று தெரிந்தால், அதனை முன்னேற்றப் பாதைக்குச் செலவிடலாம். ஆனால் எல்லாருக்கும் அதைத் தர்மம் செய்து விட முடியாது. யாரால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் முன்னேற்றம் ஏற்படுமோ, அவர்களுக்குத்தான் செலவிடவேண்டும். அதாவது, நாட்டின் முன்னேற்றத்திற்கும், நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கும் யார் பாடுபடுகிறார்களோ அவர்கள் மட்டுமே அதனை அடையலாம். வேறு யாருக்கும் அதில் உரிமையில்லை.

தவிர, மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறவன் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, அந்தச் சொத்து முழுவதையும் ஒரு மனிதனுக்குக் கொடுத்துவிட முடியாது. எந்த அளவுக்குக் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் கொடுக்கவேண்டும்.

எனவே வாரிசு இல்லாமல் கிடைக்கும் சொத்து குறித்து மூன்று கோணங்களில் சிந்தனை செய்யவேண்டியிருக்கிறது. அந்தச் சொத்து நல்லதா, கெட்டதா என்பது முதற்கோணம். அதைப் பெறுகிறவர் யார் என்பது இரண்டாம் கோணம் . அவர் எந்த அளவுக்குப் பெறுகிறார் என்பது மூன்றாம் கோணம் . இந்த

முக்கோணப் பிரச்சினையை ஆரம்பத்திலேயே நான் சுட்டிக் காட்டி விட்டேன்.

வாரிசு இல்லாத சொத்துக்கள் எந்த நிலையில் இருக்கின்றனவோ, அந்த நிலையில்தான் வக்புக் சொத்துக்களும் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் முன்னதைவிடப் பின்னது சிரமம் நிறைந்தது. வக்புகளுக்கென்று பிரத்தியேக நிபந்தனைகள் பல இருக்கின்றன. வக்பு செய்தவர் ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனையையும் அலட்சியம் செய்துவிட முடியாது. எந்த நோக்கத்திற்காக அவர் வக்பு செய்தாரோ, அந்த நோக்கத் திற்காக மட்டுமே அதனைச் செலவிடவேண்டும். வேறு எந்த வழியிலும் அதனைப் பயன்படுத்த முடியாது. ஒரு பள்ளியின் நிர்வாகச் செலவுக்கென்று வக்பு செய்யப்பட்டிருக்கும் ஒரு சொத்திலிருந்து, அந்தப் பள்ளிக்கு வரும் ஏழைகளுக்குத் தர்மம் செய்ய முடியாது. ஏனெனில் வக்பு செய்தவரின் நோக்கம் இங்கு தகர்த்தெரியப்படுகிறது.

பொது நன்மைக்காக அரசர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட எல்லையில் எத்தனையோ முன்னேற்றங்களை உருவாக்குகிறார்கள்; கிணறுகள் தோண்டுகிறார்கள்; வாய்க்கால்கள் வெட்டுகிறார்கள்; கரடுமுரடான நிலப்பரப்பைச் செவ்வையாக்கிப் பாதைகள் அமைக்கிறார்கள். இவை பொதுச் சொத்துக்கள்; யாரும் உபயோகித்துக் கொள்ளலாம். என்றாலும் இத்தகைய நிர்மாண வேலைகளைச் செய்தபோது, நாட்டின் அரசர் ஊழியர்களிடம் எப்படி நடந்துகொண்டார் என்பது சிந்தனைக்குரிய ஒன்று. ஊழியர்களுக்கு வியர்வை மறையுமுன் அவர் கூலி கொடுத்தாரா அல்லது, நிர்ப்பந்தம் செய்து அவர்களை வேலை செய்ய வைத்தாரா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். யாரையும் நிர்ப்பந்தப்படுத்தி வேலை செய்தவர்களுக்கு, உடனுக்குடன் கூலி கொடுக்கவேண்டும் என்பது இஸ்லாத்தின் தீர்ப்பு. வேலை செய்தவர்களைக் காக்க வைத்துக் கூலி கொடுக்கும் உரிமை எந்த அரசருக்கும் கிடையாது.



அரசர்களுடைய தனிப்பட்ட உடைமைகள் பல இருக்கக்கூடும். தம்முடைய சொந்தப் பணத்தைக் கொடுத்து அவர்கள் அவற்றைப் பெற்றிருப்பார்க்ள. அந்தப் பொருள்களை அவர்கள் யாருக்கு வேண்டுமானாலும் தர்மம் செய்யலாம்; எப்போது வேண்டுமானாலும் தர்மம் செய்யலாம்; எந்த அளவுக்கு வேண்டுமானாலும் தர்மம் செய்யலாம்.

இப்படி அரசர்களின் கைக்கு வரும் பொருள்கள், அவர்களின் கையிலிருந்து தர்மமாக வெளிப்படும் பொருள்கள் பலவிதம். அவற்றை எல்லாம் அணுவணுவாக ஆராய்ந்து முடிப்பதற்கு இடமும் போதாது; நேரமும் போதாது. எனவே அந்த ஆராய்ச்சியை உங்களிடமே விட்டு விட்டேன். கால ஓட்டத்தையும் சூழ்நிலைமையும் அனுசரித்து, ஆராய்ந்து பார்க்கிறவர்களுக்கு நிச்சயமாகத் தெளிவு கிடைக்கும். அதிகாரிகளிடமிருந்து வரும் பொருள்கள் குறித்து ஒரு முடிவுக்கு வருவது, அவர்களுக்கு அப்படி யொன்றும் சிரமமான வேலையல்ல.

ஆகவே இறுதியாக இரண்டு வார்த்தைகள்: உங்களுக்கு யாரிடமிருந்து பொருள் கிடைத்தாலும், அதில் பெரும் பகுதி நல்லது என்றால் பெற்றுக் கொள்ளுங்கள்; பெரும் பகுதி கெட்டது என்றால் மறுத்து விடுங்கள். முழுக்க முழுக்க நல்லது என்றால் மகிழ்வுடன் பெற்றுக் கொள்ளுங்கள். முழுக்க முழுக்கக் கெட்டது என்றால் வெறுப்புடன் ஒதுக்கித் தள்ளுங்கள்.

இங்கு உங்கள் சிந்தனை துரித கதியில் வேலை செய்யக்கூடும். என் கருத்தை எதிர்த்து நீங்கள் வாதாடக்கூடும்.

''நீங்கள் கூறுவதைப் பார்த்தால், அரசர்களிடமிருந்து, குறிப்பாக அநியாயக்கார அரசர்களிடமிருந்து யாரும் எதையும் பெறக்கூடாது என்றே பொருள் கொள்ளவேண்டி ஏற்படுகிறது. ஆனால் நபித் தோழர்களும், அவர்களுக்குப் பின்னர் தோன்றிய அறிஞர்களும், அரசாங்கத்திலிருந்து பொருளுதவி பெற்றிருக்கிறார்கள் எனும் உண்மையை நாங்கள் வரலாற்றிலிருந்து அறிகிறோம். எனவே உங்கள் வாதத்தை எங்களால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?'' என்று நீங்கள் கேட்கிறீர்கள்.

இதோ உங்கள் மறுப்புத் தொடர்கிறது. அடியில் பேசுவது உங்கள் சிந்தனைதான்:

.....இப்படி அநியாயக்கார அரசர்களிடம் அன்பளிப்புப் பெற்றவர்கள் முக்கியமான நபித்தோழர்கள். அந்த அரசர்களின் பொருள்களில் நல்லதும் கெட்டதும் கலந்துதான் இருக்கும். அப்படியிருந்தும் அந்த நபித்தோழர்கள் வெறுப்புத் தெரிவிக்க வில்லை.

அநியாயக்காரர்களின் ஆட்சி நடந்தபோது, நபித் தோழர்களில் ஒரு சாரார் அரசாங்கப் பணத்திலிருந்து உதவி பெற்றிருக்கிறார்கள். அவர்களில் அபூ ஹுரைரா (ரலி), அபூ சயீத் குத்ரீ (ரலி), சைது பின் ஸாபித் (ரலி), அபூ அய்யூப் அன்ஸாரீ (ரலி), அனஸ் பின் மாலிக் (ரலி), ஜாபிர் (ரலி) முதலியோர் அடங்கியிருந்தார்கள்.

அபூ ஹுரைரா(ரலி)யும், அபூ சயீ (ரலி)யும் மர்வானிட மிருந்தும், யஸீத் பின் அப்துல்மலிக் எனும் அரசனிடமிருந்தும், பொருளுதவி பெற்றார்கள். இந்த அரசர்கள் இஸ்லாமிய வரலாற்றில் பாராட்டப்படவில்லை. ஹுஸைன் (ரலி) அவர்கள் கொல்லப்பட்டபோது, கூபாவிலிருந்து ஆட்சி புரிந்த யஸீத் அல்ல இவர். அவர் பெயர் யஸீத் பின் முஆவியா.

ஹஜ்ஜாஜ் எனும் அரசரிடமிருந்து இப்னு உமரும் இப்னு அப்பாஸும் பொருள் பெற்றார்கள்.

நபித்தோழர்களுக்குப் பின்னால் தோன்றியவர்களில் ஷாபி, இப்ராஹீம், ஹஸன் போன்றோர் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றார்கள்.

ஒரு சமயம் இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள், ஹாரூன் ரஷீதிட மிருந்து ஆயிரம் பொற்காசுகள் பெற்றிருக்கிறார்கள். அதாவது, ஏறத்தாழ 2500 ரூபாய்.

'கலீபா'க்களிடமிருந்து மாலிக் பெற்ற தொகைக்கு வரலாறு விளக்கம் கொடுக்கிறது.



அறிஞர் அலி கூறிய கருத்து ஒன்று இதற்கெல்லாம் ஆதாரம் கொடுப்பதுபோல் அமைந்திருக்கிறது. ''அரசன் உனக்குக் கொடுப்பதைப் பெற்றுக்கொள். நல்ல பொருளி லிருந்துதான் அரசர்கள் உனக்குக் கொடுப்பார்கள். அவர் களுக்குக் கெட்ட பொருளும் – நல்ல பொருளும் வந்தாலும், கெட்ட பொருளைவிட நல்ல பொருள் அதிகமாகத்தான் இருக்கும்.''

அபூதர் என்ற நபித்தோழர் அஹ்னப் பின் கைஸுக்கு இப்படிக் கூறினார்: ''நல்ல அன்பளிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் மார்க்கத்துக்குக் கிரயம் கணிப்பது போலிருந்தால் விட்டு விடுங்கள்.''

நபித்தோழர் அபூஹுரைரா (ரலி) தம் கருத்தை அடியில் கூறுகிறார்: ''அவர்கள் கொடுத்தால் பெற்றுக் கொள்வோம்; மறுத்தால் கேட்கமாட்டோம்!'' நபித்தோழர் அபூ ஹுரைரர் (ரலி) தம் கருத்துப்படியே நடந்து கொண்டார் என்று சயீது கூறுகிறார்.

இப்னு உமர் கூறுகிறார்: ''தகுதியான பொருள் என்றால், அது வீடு தேடி வரவேண்டும். ஒரு மனிதனுக்கு இப்படி ஏதோ ஒரு பொருள் வீடு தேடி வந்துவிட்டால், அதனை அவன் பெற்றுக் கொள்ளவேண்டும். 'யாரிடமும் நான் கேட்க மாட்டேன். வீடு தேடி வரும் பொருளைப் புறக்கணிக்க மாட்டேன்' என்று அவன் சொல்ல வேண்டும்.''

இதன்படியே இப்னு உமருக்கு ஒட்டகம் ஒன்று அன்பளிப் பாக அனுப்பப்பட்டது. அதனை அவர் பெற்றுக் கொண்டார்.

ஆனால், வீடு தேடி வராத பொருள்களை எல்லாம் அவர் புரக்கணித்து விட்டார் என்றும் சொல்லிவிட முடியாது.

ஒரு சமயம் இப்னு உமருக்கு 60,000 காசுகள் அனுப்பப் பட்டன. பெற்றுக்கொண்ட இப்னு உமர், அதனை அங்கேயே ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார்.

சிறிது நேரத்தில் அங்கு ஒருவர் வந்தார். அவரும் வறியவர் தான். ஆனால் அவருக்குக் கொடுக்க ஒன்றும் மிஞ்சி நிற்கவில்லை. எனவே இப்னு உமர் சற்றுமுன் தம்மிடம் பொருள் பெற்ற ஒருவரிடமிருந்து சிறிது கடன் பெற்று அந்த ஏழைக்குக் கொடுத்தார்.

ஒரு சமயம் ஹஸன் (ரலி) அவர்கள் முஆவியாவை அணுகியபோது, அவர் கூறினார்: ''உங்களுக்கு ஓர் அன்பளிப்புக் கொடுக்கப் போகிறேன். அது போன்ற ஓர் அன்பளிப்பை அரபியரில் எவருக்கும் நான் கொடுத்ததுமில்லை; கொடுக்கப் போவதுமில்லை.''

பின்னர் முஆவியா (ரலி) நான்கு லட்சம் வெள்ளி நாணயங்களை அன்பளிப்பாகக் கொடுத்தார். ஏறத்தாழ ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ளது. அதனை ஹஸன் (ரலி) அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இதே போன்று ஹுஸைன் (ரலி) அவர்களும் முஆவியா (ரலி) யிடமிருந்து அன்பளிப்புப் பெற்றிருக்கிறார்கள்.

இப்படி வரலாற்று ஏடுகளில் எத்தனையோ சம்பவங்கள் நம்மால் பொறுக்கி எடுத்துக் காண்பிக்க முடியும். இப்படி அன்பளிப்புக் கொடுத்த அரசர்கள் பெரிதும் இகழப்பட்டார்கள்; அவர்களை நியாயத்தை மதிக்காதவர்கள் என்று குறிப்பிட்ட நபித் தோழர்களும் பலர் இருந்தார்கள். இருந்தும், அந்த நபித் தோழர்கள் அந்த அரசர்களிடமிருந்து அன்பளிப்புப் பெற்றிருக்கிறார்கள்....

--இப்படி நீங்கள் என்னுடைய வாதத்தை எதிர்த்துப் பேசக் கூடும். நீங்கள் குறிப்பிடும் சம்பவங்களை நான் மறுக்கவில்லை. ஏனெனில், நீங்கள் குறிப்பிடுவதுபோல், அவை வரலாற்று நூல்களில் நிறைந்து கிடக்கின்றன.

அநியாயக்காரர்கள் என்று கருதப்பட்ட அரசர்களிடமிருந்து அன்பளிப்புப் பெற்ற நபித் தோழர்கள் சிலர், அந்தக் காலத்தில் இருந்தார்கள் என்பதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் நபித் தோழர்கள் அனைவரும் அப்படி நடந்து கொள்ளவில்லை. அன்பளிப்புப் பெற்றவர்களைப்போலவே, அதனை வெறுத்தவர்களும் அப்போது இருக்கத்தான் செய்தார்கள். இதற்கும் வரலாற்று நூல்களில் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. தவிர, அன்பளிப்புப் பெற்றவர்களையும் அதனை வெறுத்து ஒதுக்கியவர்களையும், சேர்த்து வைத்துப் பார்க்கும் போது, முன்னவரைவிடப் பின்னவரே அதிகமாகக் காணப்படுகிறார்கள்.



அநியாயக்கார அரசர்களின் அன்பளிப்பை வெறுத்தவர்கள் பலர். அதனை ஏற்றுக்கொண்டவர்கள் சிலர் – ஒரு சிலர். நபித் தோழர்கள் இப்படி இரண்டு சாரார் இருந்தார்கள். அவர்களில் ஒரு சாரார், ஆழ்ந்த ஒழுக்கத்தின் அடிப்படையில் அரசாங்க அன்பளிப்பை மறுத்தார்கள். இவர்கள் என்னுடைய வாதத்திற்குத் துணை நிற்கிறார்கள். நீங்கள் குறிப்பிட்ட நபித் தோழர்கள் எல்லாரும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களே.

ஆனால் அரசாங்க அன்பளிப்பை ஏற்றுக்கொண்ட நபித் தோழர்கள் அனைவரையும் நான் குற்றவாளிகளாக்குவதாக நீங்கள் எண்ணிவிடக் கூடாது. அவர்கள் உயர்ந்தவர்கள். அவர்கள் மார்க்கத்துக்கு முரண்பட்டதை முழு மனத்துடன் செய்தார்கள் என்று நம்மால் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. வெளிப் பார்வைக்கு வேறுபாடு தெரிந்தாலும், உண்மையளவில் அவர்கள் ஆழ்ந்த ஒழுக்கத்துடனேயே நடந்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

இப்போது உங்கள் சிந்தனைக்கு இன்னும் கொஞ்சம் வேலை கொடுக்க வேண்டியிருக்கிறது. நபித் தோழர்களில் சிலர் செய்த வேலையை வேறு சிலர் ஏன் வெறுத்தார்கள்? இந்த இரண்டு சாராரும் ஒழுக்கத்திற்கு இலக்கணம் வகுத்தவர்கள் தான். இருந்தும், ஒரு சாரார் ஒழுக்கம் என்று கருதிய ஒரு செயலை, மற்றொரு சாரார் ஏன் புறக்கணிக்க வேண்டும்?- இப்படிப் பல வினாக்கள் நமக்கு முன்னால் தோன்றுகின்றன.

இவற்றிற்குத் தெளிவு கிடைக்கவேண்டும் என்றால், அரசாங்கத்திலிருந்து மக்களுக்கு அன்பளிப்பாக வரும் பொருள்களில், எத்தனை கோணங்கள் உருவாகின்றன என்பதை முதலில் தெரிந்துக்கொள்ள வேண்டும். அரசர்களிடமிருந்து அன்பளிப்புப் பெற்ற நபித்தோழர்கள் அனைவரையும் ஒரே நிலையில் வைத்துக் கணித்துவிட முடியாது. ஒழுக்க உணர்வில் அவர்களுக்கு மத்தியில் வேற்றுமை இருக்கத்தான் செய்தது. அவர்கள் அனைவரும் விண்மீன்களைப் போன்றவர்கள்தான் என்றாலும் அவற்றிற் சில, வேறு சிலவற்றைவிட ஒளிமிக்கவையாக இருக்கின்றன.

அவர்களின் ஒழுக்க உணர்வை நான்கு படித்தரங்களாகப் பிரிக்கலாம்.

**முதற் படித்தரம்:** இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அரசாங்கப் பணத்திலிருந்து எதையும் தமக்குப் பயன்படுத்திக் கொள்வதில்லை. அதை அவர்கள் மற்றவர்களுக்குத் தர்மம் செய்வதும், அன்பளிப்பாகக் கொடுப்பதும் இருக்கட்டும், முதலில் அவர்கள் அதனைத் தமக்கே பயன்படுத்திக் கொள்வதில்லை.

இப்படித்தான் பெருமானாருக்குப் பின்னர் இஸ்லாமிய உலகத்தை ஆட்சி செய்த 'கலீபா'க்கள் நால்வரும் நடந்து கொண்டார்கள். அபூபக்ர் (ரலி), உமர், உஸ்மான் (ரலி), அலீ (ரலி) ஆகிய அந்த நால்வரும் அரசாங்கப் பொருளைப் பெரிதும் வெறுத் தார்கள். ஏனெனில் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் அரசாங்கத்தின் 'பைதுல் மாலி'ல் இருக்கும் பொருள்களுக் கெல்லாம் உரிமையாளரல்ல. 'பைதுல் மால்' என்றால் பொருளகம் என்று அர்த்தம். மக்களின் நன்மைக்காக, மக்களிட மிருந்து வந்திருக்கும், மக்கள் சொத்து அது. அதனைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் அதிகாரிகளில் எவருக்கும் அதில் முழு உரிமை கிடையாது. இருப்பதெல்லாம் ஒரு சிறு உரிமைதான். அதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள்.



முதல் கலீபா அபூபக்ர் (ரலி) அவர்கள், தமது ஆட்சிக் காலத்தில், பைதுல் மாலிலிருந்து தாம் எடுத்துக் கொண்ட தொகையைக் கணித்தார்கள். 6000 வெள்ளி நாணயம் விடையாக வந்தது. அதாவது, ஏறக்குறைய 1500 ரூபாய். அதனைத் திருப்பித் கொடுப்பதற்கு அவர்கள் ஏற்பாடு செய்து விட்டார்கள்.

ஒரு நாள் உமர் (ரலி) அவர்கள் பைதுல் மாலிலிருந்த பொருள்களை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களின் பெண் குழந்தை அங்கு வந்தது. வெள்ளிக் காசு ஒன்றை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடி விட்டது. உமர் அவர்கள் தொடர்ந்தார்கள். இதற்குள் அந்தக் குழந்தை, அந்தக் காசை வாயில் போட்டுக் கொண்டது. அந்தக் குழந்தையின் வாயில் தம்முடைய விரலை விட்டு அந்தக் காசை வெளியில் எடுத்த உமர் (ரலி) அவர்கள் அதனைப் பொருளகத்தில் சேர்த்தார்கள்.

இதைப் பார்க்கும்போது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? அந்தக் காலத்திலேயே சிலருக்கு அது ஆச்சரியமாகத்தான் இருந்தது. எனவே உமர் (ரலி) அவர்கள் உடனுக்குடன் விளக்கம் கொடுத்தார்கள்.

''பெருங்குடி மக்களே! சாதாரணமாக எல்லா முஸ்லிம்களுக்கும் இல்லாத ஓர் உரிமை உமருக்கோ, உமருடைய குடும்பத்தாருக்கோ கிடையாது.''

ஒரு சமயம் அபூ மூஸா (ரலி) என்ற நபித்தோழர் பொருளகத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். ஒரே ஒரு வெள்ளிக் காசு ஒரு மூலையில் கிடந்தது. அதை எடுத்து அபூ மூஸா (ரலி) அவர்கள் அங்கு வந்த உமர் (ரலி) அவர்களின் ஆண் குழந்தையின் கையில் கொடுத்து விட்டார். அவர் செய்த தவறு இதுதான்.

உமர் (ரலி) அவர்கள் தம் குழந்தையை உற்றுப் பார்த்தார்கள். அந்த ஆண் குழந்தை தனக்குக் கிடைத்த வெள்ளி நாணயத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தது.

''இது எங்கிருந்து கிடைத்தது?'' என்று உமர் (ரலி) கேட்டார்கள்.

''அபூ மூஸா கொடுத்தார்கள்.''

குழந்தைச் செல்வத்தையும் நாட்டுப் பொறுப்பையும் முறைப்படி கணித்து வைத்திருந்த உமர் (ரலி) அவர்கள் விருட்டென்று எழுந்தார்கள். பாசத்துக்கும் பொறுப்புக்குமுள்ள போராட்டத்தில், பொறுப்புக்கே வெற்றி கிடைத்தது. அபூ மூஸாவைப் பார்த்த உமர் (ரலி) அவர்களின் கண்கள் அனலைக் கக்கின.

''அபூ மூஸா! மதீனமா நகரில் உமருடைய வீட்டைவிடக் கேவலமானது எதுவுமில்லை என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டீரா? நாயகத்தின் வழியைப் பின்பற்றுகிறவர்களில் நல்லவர்களே இல்லாமற் போகவேண்டும் என்பதற்கு வழி வகுக்கிறீரா?''

குழந்தையின் பிடிப்பிலிருந்த அந்த வெள்ளிக் காசு திருப்பிக் கொடுக்கப்பட்டது; அதனைப் பொருளகத்தில் சேர்த்து விடுமாறு கட்டளை பிறந்தது.

இவ்வளவுக்கும் பைதுல் மாலிலிருந்து தம் தேவைக்கு அடைவது கலீபாவுக்குத் தவறல்ல. அந்தச் சலுகை அவர் களுக்கு நிச்சயமாக உண்டு. வருமானத்திற்கென்று எவ்வித முயற்சியிலும் ஈடுபடாமல், தமது நேரம் முழுவதையும் ஆட்சிக் கவலைகளுக்குச் செலவிடும் கலீபாக்களுக்காக, இஸ்லாம் அப்படியொரு சலுகையைக் கொடுத்திருக்கிறது. இருந்தும் உமர் (ரலி) அவர்கள் மறுத்து விட்டார்கள். அவர்கள் அப்படி நடந்து கொண்டதற்குப் பெருமானாரின் அறிவுரைகளே காரணம் என்றும் சொல்லலாம். அரசாங்கப் பொருள் குறித்துப் பெருமானார் கொடுத்திருக்கும் செய்திகளையும், எச்சரிக்கை களையும் பொறுப்பு வாய்ந்தவர்களில் யார்தான் மறக்க முடியும்?



''நான் மறைந்த பின்னர் நீங்கள் பல தெய்வ வழிபாட்டுக்கு ஆதரவு கொடுத்து விடுவீர்கள் என்று பயப்படவில்லை. பொருளாதாரப் போட்டியில் இறங்கி விடுவார்கள் என்றே நான் பயப்படுகிறேன்'' என்று பெருமானார் கூறியிருக்கும் கருத்து ஒன்று இங்கு நம் கவனத்தைக் கவர்கிறது.

உமர் (ரலி) அவர்களின் நீண்ட பேச்சு ஒன்றிலிருந்து எடுக்கப் பட்டிருக்கின்றன அடுத்து வரும் வரிகள்:

''தாய் தந்தையற்ற அநாதைக் குழந்தைகளுக்குச் சேர வேண்டிய பொருளைக் கட்டிக் காக்கும் ஒரு மனிதன், எப்படி எண்ணுகிறானோ அப்படியே நானும் எண்ணுகிறேன்''-இங்கு உமர் (ரலி) அவர்கள் அரசாங்கப் பொருளின் நிலையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

மொத்தத்தில், இந்தப் படித்தரத்திலிருப்பவர்கள், அரசாங்கப் பணத்தைத் தொடுவதில்லை. இந்த ஒழுக்க உணர்வு மிகச் சிறந்தது என்று நான் சொல்லித்தானா நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்?

சற்று முன்னால், எனக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட விவாதத்தில் இந்தப் படித்தரத்தவர்களையே நான் மனத்தில் கொண்டிருந்தேன். அவர்களின் வாழ்வும் வாக்கும் என்னுடைய வாதத்திற்குப் பெரிதும் துணை செய்தன.

**இரண்டாம் படித்தரம்:** முதற் பிரிவினரைப்போல, இவர்கள் அரசாங்கப் பணத்தைக் கட்டோடு வெறுப்பதில்லை. அரசாங்கத்திலிருந்து தமக்குக் கிடைக்கும் பொருள் நல்லதுதான் என்று தெரியும்போது, அவர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள்; தம் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நீங்கள் சற்றுமுன் குறிப்பிட்ட நபித்தோழர்கள் அனைவரும், இந்தப் படித்தரத்திற்கு வருகிறார்கள். நல்ல பொருள் என்று தெரியும்போது மட்டும் அவர்கள் அரசனிடமிருந்து பொருளுதவி பெற்றார்கள். அப்படிப் பொருளுதவி செய்யும் அரசன், வேறு வழிகளில் தீயவனாக இருந்தாலும் பரவா

யில்லை என்பது அவர்கள் கருத்து. எந்த மனிதனும் முழுக்க முழுக்க நல்லவனாக இருக்க முடியாது. இதனால்தான் கெட்டவன் என்று கருதப்பட்ட ஓர் அரசனிடமிருந்து, இப்னு உமர் போன்றவர்கள் பொருளுதவி பெற்றார்கள். கொடுக்கும் அரசன் வேறு வழிகளில் கெட்டவனாயிருந்தாலும், கொடுக்கப்படும் பொருள் நல்ல வழியில் வந்ததுதான் என்று உணர்ந்தே அவர்கள் பொருளுதவி பெற்றார்கள்.

இப்படித்தான் சொல்ல முடியுமே தவிர, அநியாயக்கார அரசர்கள் அள்ளிக் கொடுத்த அனைத்தையும் இப்னு உமர் போன்றவர்கள், நல்லது கெட்டது என்று பார்க்காமல் வாரிக் கட்டிக் கொண்டார்கள் என்று சொல்லவும் கூடாது; சொல்லவும் முடியாது. ஏனெனில் கெட்ட அரசர்களைக் கண்டிப்பதில் இப்னு உமர் முதல் மனிதர். அவர்களின் வாழ்க்கையையும் குணத்தையும் அவர் பெரிதும் வெறுத்தார்.

ஆதாரத்திற்கு அடுத்து ஒரு சம்பவம் இடம் பெறுகிறது.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த இப்னு ஆமிர் மரணப் படுக்கையில் கிடந்தார். அரசாங்க அதிகாரிகள், குடும்ப உறுப்பினர், நண்பர்கள் முதலியோர் சூழ்ந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் இப்னு உமரும் இருந்தார்.

அதிகாரத்துக்குத் தலையாட்டுகிறவர்கள் ஆறுதல் கூறினார்கள்: ''உங்களுக்கு எல்லாம் நன்மையாகத்தான் முடியும். உங்களுக்கு நல்லது கிடைக்கவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். நாட்டில் கிணறுகளை வெட்டினீர்கள்; பிரயாணிகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுத்தீர்கள்; இப்படி இன்னும் எத்தனையோ செய்திருக்கிறீர்கள்....''

மரணத்துடன் போராடும் நிலையிருந்த இப்னு ஆமிர் ஏறிட்டுப் பார்த்தார். அந்தப் பார்வை குறிப்பாக இப்னு உமரைத் தொட்டது. ''இப்னு உமர்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.....?''

இப்னு உமர் தயங்கவில்லை. அவருடைய விடை கணீரென்று வெளிப்பட்டது. ''அவர்கள் சொன்னதைத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன். என்றாலும் நீங்கள் செய்த நற்காரியங்களுக்காகச் செலவிடப்பட்ட பணம் நல்ல வழியில் கிடைத்ததாக இருக்கவேண்டும்.....''



''என்ன சொல்கிறீர்கள்? அப்படியானால் எனக்காக நீங்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்யமாட்டீர்களா?'' என்று கேட்டார் படுத்த படுக்கையாகக் கிடந்தவர்.

இப்னு உமர் தொடர்ந்து பேசினார். அவருடைய பேச்சில் இப்போது சூடு ஏறிற்று. ''நீங்கள் அப்படி என்ன செய்து விட்டீர்கள்? பஸ்ராவுக்கு நீங்கள் மேலதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, கெடுதியைத்தான் வாரிக் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்....''

எனவே, இப்னு உமர் போன்றவர்கள் அரசர்களிடமிருந்து கண்ணை மூடிக்கொண்டு பொருளுதவி பெற்றார்கள் என்று சொல்வது அறியாமை மட்டுமல்ல – அநியாயமும்கூட. அபூசயீத் (ரலி) என்ற நபித்தோழர் கொடுத்திருக்கும் வர்ணனை இப்னு உமருக்கு மிகப் பொருத்தமானது: ''எங்களில் யாருக்கேனும் உலகம் குனிகிறது என்றால் அதற்குத் தகுதியுள்ளவர் இப்னு உமர் (ரலி)தான்.''

ஆகவே, இப்னு உமர் (ரலி) போன்ற நபித் தோழர்கள் மீது நம்மால் குற்றம் சொல்ல முடியாது. அவர்களை முதற்படித் தரத்தில் சேர்க்க முடியாவிட்டாலும், அவர்கள் இரண்டாம் படித்தரத்தில் நின்று ஒளிவிடுகிறார்கள்.

**மூன்றாம் படித்தரம்:** இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள், அரசர்களின் அன்பளிப்பை வெறுப்பதுமில்லை; அதனைப் பெற்றுத் தம் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதுமில்லை. ஏழைகளுக்குத் தர்மம் செய்யும் எண்ணத்துடன், அவர்கள் அரசாங்கத்து அன்பளிப்பைப் பெறுகிறார்கள். அதில் ஒரு செப்புக் காசைக்கூட அவர்கள் தமக்குப் பயன்படுத்திக் கொள்வதில்லை. உண்மையில் இது இஸ்லாத்தின் சட்டங்

களில் ஒன்றுதான். வாரிசு இல்லாத சொத்துக்களைத் தர்மம் செய்து விடலாம் என்பது சட்டம். இதை நாம் ஏற்கனவே ஆராய்ந்துவிட்டோம்.

வாரிசு இல்லாத சொத்துக்கள் அரசாங்கத்திற்குச் செல்கின்றன. அவற்றை முறைப்படி, தர்மம் செய்ய வேண்டியது அரசர்களின் பொறுப்பு.

குறிப்பிட்ட ஓர் அரசன், அல்லது ஒரு மேலதிகாரி, இப்படித் தர்மம் செய்யத் தவறிவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். வாரிசு இல்லாததால் தனக்குக் கிடைத்திருக்கும் செல்வத்தை அவன் தீய வழியில் செலவிடுகிறான் என்றும் கற்பனை செய்துகொள்வோம்.

இதுபோன்ற கட்டத்தில், அந்தச் செல்வத்தை அவனிடம் விட்டு வைப்பதைவிட, அதனை எப்படியாவது வாங்கி ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிடுவது நல்லது. அறிஞர் களில் ஒரு சாரார் இதற்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். ''காரணம் என்ன?'' என்று கேட்கிறீர்களா? உரிய இடத்தில் விரிவுரை கொடுக்கப்படும். படித்தரங்களை விளக்கிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், அந்தப் பிரச்சினைக்கு நம் கவனம் திரும்பக் கூடாது.

உண்மையில் இதற்கு விரிவுரையோ, விளக்கவுரையோ தேவையில்லை. தீய வழியில் செல்லும் ஒரு மனிதனுக்கு, அவனிடமுள்ள அமானிதப் பொருள்தான் காரணம் என்றால், அதனை அவனிடமே விட்டுவைப்பது எந்த விதத்திலும் அறிவுடைமையாகாது. முறைப்படி தர்மம் செய்கிறவர்கள், அதனை அவனிடமிருந்து வாங்கிவிட வேண்டும்.

அப்படித்தான் ஒரு சமயம் இப்னு உமர் (ரலி) நடந்திருக் கிறார். 60,000 வெள்ளிக் காசுகளைத் தர்மம் செய்த அவர், வேறொரு மனிதனுக்குத் தர்மம் செய்வதற்காகக் கடன்பட வேண்டி ஏற்பட்டது. இதனை ஏற்கனவே நீங்கள் படித்து



விட்டீர்கள் அல்லவா? இப்னு உமரின் ஆழ்ந்த ஒழுக்க உணர்வுக்கு இது நல்ல ஆதாரம்.

இதே போன்று, ஒரு சமயம் அன்னை ஆயிஷா (ரலி)யும், மற்றொரு சமயம் ஜாபிர் பின் ஸைதும் அரசாங்கத்திலிருந்து தமக்குக் கிடைத்த பொருளைத் தர்மம் செய்திருக்கிறார்கள். அப்போது ஜாபிர் கொடுத்த விளக்கம் தெளிவானது: ''இந்தப் பொருளை அவர்களிடம் விட்டு வைப்பதைவிட, அதனை வாங்கித் தர்மம் செய்து விடுவது நல்லது. இதையே நான் பெரிதும் விரும்புகிறேன்.''

ஒரு சமயம் ஹாரூன் ரஷீதிடமிருந்து, இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களுக்கு உணவுப் பொருள்கள் அன்பளிப்பாகக் கிடைத்தன. அவற்றை அங்கேயே அவர்கள் ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார்கள். ஒரே ஒரு தானிய மணி யைக்கூட அவர்கள் தமக்கென்று எடுத்துக் கொள்ளவில்லை.

இப்படி அரசாங்கத்திலிருந்து கிடைத்த பொருள்களைத் தர்மம் செய்தவர்களும், தர்மம் செய்வதற்காகவே அரசாங் கத்திலிருந்து பொருளுதவி பெற்றவர்களும் ஏராளமாக இருந்தார்கள். இன்றைக்கும் இத்தகையவர்கள் இருக்கலாம்.

**நான்காம் படித்தரம்:** குறிப்பிட்ட ஓர் அரசனிடம் இருக்கும் பொருள் நல்லதா கெட்டதா என்று தெரியாதபோது, இந்தப் படித்தரம் தோன்றுகிறது. அதனைப் பெறவும் கூடாது; அதற்கு முனையவும் கூடாது. எனினும், ஓர் அரசனிடம் இருக்கும் செல்வத்தில்-அதாவது அவனுக்கு உடைமையாயிருக்கும் செல்வத்தில் கெட்டதைவிட நல்லது அதிகம் என்று தெரிந்தால், அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நபித்தோழர்களின் காலத்தில் கலீபாக்கள் இப்படித்தான் இருந்தார்கள். நபித் தோழர்களை அடுத்து வந்த அறிஞர்களையும், இந்தப் பிரிவில் தான் சேர்க்கவேண்டும். அவர்களின் செல்வத்தில் பெரும் பகுதி கெட்டதல்ல என்று நிச்சயமாகச் சொல்லலாம். இதனால்தான், சற்று முன்னர் நீங்கள் பார்த்ததுபோல், அலி (ரலி),

''அவர்களிடம் வந்து சேருவதில் பெரும்பகுதி நல்லதாகத் தான் இருக்கும்'' என்று பொருள்படக் கூறியிருக்கிறார்கள்.

ஓர் அரசனின் உடைமையில், கெட்டதைவிட நல்லது அதிகமாக இருந்தால் அவன் கொடுக்கும் அன்பளிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நான் கூறினேனல்லவா! அதற்கு நபித்தோழர்களில் ஒரு குழுவே ஆதரவு கொடுத்திருக்கிறது.

அரசனிடம் இருக்கும் உடைமைகளில் நல்லது அதிகமாக இருக்கிறதா, இல்லையா என்று கண்டுபிடிப்பது அப்படி யொன்றும் சாதாரண காரியமல்ல. மற்றவர்களைவிட அரசர் களுக்கு வருமானம் அதிகம். எனவே மற்றவர்களின் உடைமை குறித்துத் தீர்மானத்திற்கு வருவதைவிட அரசர்களின் உடைமை குறித்துத் தீர்மானத்திற்கு வருவது சிரமம்.

எப்படியானாலும், குறிப்பிட்ட ஓர் அரசனின் உடைமை களில், நல்லதைவிடக் கெட்டது அதிகமாக இல்லை என்று தெரிந்தால், அவனிடமிருந்து அன்பளிப்புப் பெறலாம். நல்லதை விடக் கெட்டது அதிகமாக இருக்கிறது என்று தெரிந்தால் அன்பளிப்புப் பெறக்கூடாது. இதுவே என் கருத்து.

இந்த நான்கு படித்தரங்களையும் நீங்கள் சரியாகத் தெரிந்து கொண்டு விட்டால், தற்போதைய அரசர்களிடமிருந்து - அல்லது மேலதிகாரிகளிடமிருந்து உதவி பெறலாமா, பெறக் கூடாதா என்ற பிரச்சினைக்கு எளிதாகத் தீர்வு காண முடியும்.

என்னைக் கேட்டால், தற்போதைய அரசர்களின் உடை மையில் கெட்டதைவிட நல்லது அதிகமாகத்தான் இருக்கும் என்று நிச்சயமாக நம்புவதற்கில்லை என்பேன். உண்மை நேர் எதிரானது. அவர்களின் உடைமையில் பெரும்பகுதி கெட்டது என்று நான் நினைக்கிறேன். தற்கால அரசர்களை, முற்கால அரசர்களுடன் நிச்சயமாக ஒப்பிட முடியாது. தற்போதைய மேலதிகாரிகளை - அப்போதைய மேலதிகாரிகளுடன் கண்டிப் பாய்ச் சேர்க்க முடியாது. எனவே அவர்களுக்குப் பொருத் தமான ஒரு சட்டம் - இவர்களுக்குப் பொருந்தாது.



இப்படி நான் ஏன் நினைக்கவேண்டும் என்று கேட்கிறீர் களா? அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

**முதற் காரணம்:** தற்போதைய அரசர்களின் உடைமைகள் முழுவதும் அல்லது அவற்றில் பெரும்பகுதி, கெட்ட நிலையில்தான் இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். ஏனெனில் தர்மமாக வரும் பொருள்களும், யுத்தப் பொருளில் ஒரு பகுதியும் அரசர்களைச் சேருகின்றன என்று நான் ஆரம்பத் தில் குறிப்பிட்டேன். இவற்றை இன்றைக்கு நிச்சயமாகப் பார்க்க முடியாது. பிற மதத்தினர் செலுத்தும் வரிப் பணத்தில் அரசர் களுக்கு உரிமை உண்டு என்று நான் சொன்னேன். அதற்குரிய நிபந்தனைகள் அனுசரிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டேன்.

ஆனால் இன்றைய அரசர்களும், மேலதிகாரிகளும் நேர் எதிராக நடக்கிறார்கள். பிற மதத்தினரிடமிருந்து அவர்கள் தப்பான வழிகளில் வரி வசூல் செய்கிறார்கள். வரி செலுத்து கிறவர்களுக்கு எந்த அளவு கண்ணியம் கொடுக்கவேண்டுமோ, அந்த அளவு அவர்கள் கண்ணியம் கொடுப்பதில்லை. பிற மதத்தவர் கொடுக்கும் வரிப்பணம் குறித்து மார்க்கம் வகுத்து வைத்திருக்கும் சட்டங்களை எல்லாம் அவர்கள் புறக்கணிக் கிறார்கள். எனவே இந்த வரிப்பணமும் அவர்களைப் பொறுத்த மட்டில் கெட்டதாக மாறி விடுகிறது.

தவிர, அநியாயத்திலும், அடக்கு முறையிலும் லஞ்சத் திலும் கிடைக்கும் வருமானம், மற்ற அனைத்தையும்விட பன்மடங்கு பெரியது. இந்த வருமானம் கெட்டது என்பதற்கு ஆதாரமும் தேவையா என்ன?

எனவேதான், தற்கால அரசர்களின் உடைமையில் பெரும் பகுதி கெட்டது என்று நான் நினைக்கிறேன். இது என்னுடைய நினைப்புக்கு முதற் காரணம்.

**இரண்டாம் காரணம்:** பெருமானார் மறைந்த பின்னர் செயல்படத் தொடுத்து, ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் நீடித்த

நான்கு கலீபாக்களின் ஆட்சி முறையைப்பற்றி நான் ஒன்றும் எழுத வேண்டியதில்லை. அந்த ஆட்சியை உலகமே பாராட்டுகிறது. அந்த கலீபாக்களை, ஊடுருவிப் பார்க்கும் அறிஞர்களின் உள்ளம் போற்றுகிறது.

இந்த ஆட்சி மறைந்ததும், அதிகாரத்திற்கு வந்தவர்கள் சுயநலத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தார்கள். சுயநலத்தின் தூண்டுதலால் இஸ்லாமிய ஐக்கியத்தைக் குலைத்தார்கள். இதனால் அவர்களின் ஆட்சிக்கும், கலீபாக்களின் ஆட்சிக்குமிடையில் பாரதூரமான வேற்றுமை முளைத்தது.

ஆனால் ஒன்று. அவர்கள் தவறு செய்தார்கள் என்பது உண்மைதான். அதனை அவர்கள் உணராமலில்லை. நன்கு உணர்ந்தார்கள். தமக்கு முன்னால் ஆட்சி புரிந்த நான்கு கலீபாக்களைப் பற்றியும், தன்னலம் கருதாத அவர்களின் உழைப்பைப் பற்றியும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அவர்களுக்கு நபித்தோழர்கள் மீது ஆழமான அன்பு இருந்தது. அவர்களைக் கண்ணியப்படுத்தும் விதத்தில் அந்த அரசர்கள் அன்பளிப்பு அனுப்பினார்கள். அந்த அன்பளிப்பை நபித்தோழர்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று முழு மனத்துடன் விரும்பினார்கள். அனைத்துக்கும் மேலாக, அந்த அரசர்கள் நபித்தோழர்களின் பெருமையை மனத்தில் கொண்டிருந்தார்கள். எனவே, கேட்பதற்கு முன்பே கொடுத்தார்கள். அதிலும் அன்பையும் மரியாதையையும் கலந்து கொடுத்தார்கள், இப்படித், தாம் கொடுக்கும் அன்பளிப்பு குறித்து அவர்கள் உண்மையிலேயே பெருமையடைந்தார்கள்.

கொடுக்கும் அரசர்களின் நிலைமை இப்படியிருந்தால், வாங்கும் நபித்தோழர்களின் நிலைமை இன்னும் ஒருபடி உயர்ந்திருந்தது. அரசாங்கத்திலிருந்து பெறும் பணத்துக்காக, அவர்கள் அரசர்களுக்கு அடிமையாகவில்லை; தெரிந்தோ தெரியாமலோ, அரசர்கள் செய்த தவறுகளுக்குத் துணை நிற்கவில்லை. குறிப்பிட்ட ஓர் அரசரிடமிருந்து பணம் கிடைத்தால்



அவரது ஆட்சி நீடிக்கவேண்டும் என்று அவர்கள் ஆசைப்படவில்லை. நல்லது நடக்கும்போது ஆதரவு கொடுத்தார்கள்; கெட்டது நடக்கும் என்று தெரிந்தால், அதனைத் தடுக்கத் தம்மாலியன்ற அனைத்தையும் செய்தார்கள்.

ஆனால் இன்றைய அதிகாரிகளை இந்த அளவுக்கு நம்மால் உயர்த்தி வைக்க முடியாது. தமக்கு மற்றவர்கள் குனிய வேண்டும், தாம் செய்யும் தவறுகளுக்குத் துணை நிற்க வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே, தற்கால அதிகாரிகள் அன்பளிப்புக் கொடுக்கிறார்கள். பாராட்டுப் பெறும் எண்ணத்தோடு கை நீட்டுகிறவர்களை விலைக்கு வாங்கும் எண்ணத்தோடு செய்யப்படும் இந்த அன்பளிப்பு நம்முடைய கண்ணோட்டத்தில் எவ்விதத்திலும் சிறந்ததல்ல.

தவிர, உதவி பெறுகிறவர்களின் நிலைமை இன்னும் மோசமானது. ஓர் அற்பத் தொகையை அன்பளிப்பாகப் பெறுவதற்கு, அவர்கள், வீட்டுக்கும் - அதிகாரப் பீடத்துக்குமாகப் பல தடவைகள் அலையவேண்டியிருக்கிறது. பணம் பெற்றதும், அதனைக் கொடுத்தவன் எவ்வளவு மோசமானவனாக இருந்தாலும், அவனைப் பாராட்டி இரண்டு வார்த்தை பேசவேண்டியிருக்கிறது. இந்தக் கட்டடத்தில் அதிகாரிகள் செய்யும் தவறுகளுக்குத் தூண்டுதல் கொடுத்த குற்றத்தைப் பணம் பெற்றவர்கள் சுமக்கவேண்டி ஏற்படுகிறது.

உதவி செய்யும் அரசர்கள், மனத்துக்குள் மறைத்து வைத்திருக்கும் எண்ணங்கள் எண்ணற்றவை. அவை மார்க்கத்துக்கும், பெருமானாரின் நடைமுறைக்கும் ஏற்றவையாகத்தான் இருக்கும் என்று கண்டிப்பாய்ச் சொல்ல முடியாது. மார்க்கத்துக்கும் பகுத்தறிவுக்கும் மாறுபட்ட எத்தனையோ குறிக்கோள்களை, அவர்கள் யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் கையேந்துகிறவர்களுக்குத் தர்மம் செய்கிறார்கள். இல்லையேல். அவர்களிடமிருந்து ஒரே ஒரு வெள்ளிக் காசைக்கூட ஒரு மனிதன் எதிர்

பார்க்க முடியாது. கையேந்துகிறவர் இமாம் ஷாபியீ (ரஹ்) போன்ற அறிஞராயிருந்தாலும் அப்படித்தான்.

அரசாங்கத்திலிருந்து தனக்கு வரும் பொருள் நிச்சயமாக நல்லதுதான் என்று, ஒருவன் தெரிந்து கொள்ளும்வரை, எந்தத் தீர்மானத்துக்கும் வரமுடியாது. மேற்குறிப்பிட்ட கோளாறுகள் தோன்றுவதால்தான், தற்காலத்திய அரசர்களிடமிருந்து எதையும் அடையக்கூடாது என்று நான் கூறுகிறேன். இது என்னுடைய கருத்துக்கு இரண்டாம் காரணம்.

ஆனால் அரச சபைக்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லாமல் ஒரு மனிதனுக்கு, வீடு தேடிப் பொருள் வருகிறது என்று வைத்துக் கொண்டால், ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல், அதனைப் பெற்றுக் கொள்வதில் தவறு கிடையாது, ஏனெனில் இந்தக் கட்டத்தில் மேற்குறிப்பிட்ட எந்தக் கோளாறும் ஏற்படவழியில்லை. தனக்கு அவமானம் தேடிக் கொள்ள வேண்டிய சூழ்நிலையோ, அரசர்களின் தவறு களுக்குத் துணை நிற்க வேண்டிய அவசியமோ, அவர்களை உண்மைக்கு மாறாகப் பாராட்ட வேண்டிய நிர்ப்பந்தமோ உருவாகப் போவதில்லை.

இப்படி வீடு தேடி வரும் அன்பளிப்புகளில் தேவையின் அளவுக்கு எடுத்துக் கொள்ளலாம். எனினும் இப்படி வரும் பொருள்களில் கூடச் சிலவேளை குற்றம் தோன்றுகிறது. இந்தப் பிரச்சினையை நாம் அடுத்து வரும் அத்தியாயத்தில் ஆராய்வோம்.

# 13. பெறுகிறவர் குறித்து.....

கொடுக்கும் அரசர்களையும், கொடுக்கப்படும் பொரு ளையும் நாம் ஆராய்ந்ததுபோல், பெறும் தகுதியுள்ளவர் களையும் ஆராய்ந்துதான் ஆகவேண்டும். அப்போதுதான் பிரச்சினையில் தெளிவு பிறக்கும்.

தமக்குச் சொந்தமான பொருளிலிருந்து அரசர்கள் யாருக்கு வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று நான் கூறினேன் அல்லவா? சொந்தப் பொருளிலிருந்து கொடுக்கும் போது ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் நாம் போதிய அளவு ஆராய்ந்து விட்டோம். இந்தப் பிரச்சினையை மேற் கொண்டும் கிளரவேண்டிய அவசியமில்லை என்றே நான் நினைக்கிறேன்.

என்றாலும், மேலிடத்திலிருந்து வரும் அன்பளிப்புகளை யார் பெற்றுக் கொள்ளலாம், யார் பெற்றுக் கொள்ளக்கூடாது, எந்த அளவுக்குப் பெறலாம். எப்போது பெறலாம் என்பன போன்ற பிரச்சினைகளை இங்கு நாம் விரிவாக ஆராய்வோம்.

கேட்பாரற்றுக் கிடக்கும் சொத்துக்களையும், மக்களின் பொது நன்மைக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களையும், அரசர்கள் தம் விருப்பப்படி செலவு செய்ய முடியாது. மக்களில் ஒவ்வொருவரும் அதற்கு உரிமை கொண்டாட முடியாது.

இத்தகைய சொத்துக்கள் அத்தனையும் 'பைதுல் மால்' எனப்படும் பொருளகத்தில் வைத்துக் காக்கப்படுகின்றன. பைதுல் மாலில் இருக்கும் பொருளை எல்லாருக்கும் செலவு செய்துவிட முடியாது. அதை யாருக்குச் செலவு செய்ய வேண்டும், யாருக்குச் செலவு செய்யக்கூடாது எனும் பிரச்சி னையை அந்தக் காலத்திலேயே சட்ட நிபுணர்கள் வரையறுத்து வைத்து விட்டார்கள். அவர்கள் வகுத்துத் தந்த சட்டங்களுக்கு எதிராக, அந்தப் பொருளைச் செலவிடும் உரிமை எவருக்கும் கிடையாது.

அது மக்களின் நன்மைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பொருள் என்று நான் குறிப்பிட்டேன். 'பைதுல் மால்' எனும் நிறுவனத்தை ஏற்படுத்தியதற்கே இதுதான் குறிக்கோள். அந்தக் குறிக்கோளுக்கு முரண்பாடு தோன்றுமாறு, அதிலுள்ள பணத்தைச் செலவிடக்கூடாது என்பதே நம் கருத்து. எனவே பைதுல் மாலின் பொருளினால் யாருக்கு நன்மை ஏற்படுமோ அவர்களுக்குத்தான் அதைச் செலவு செய்ய வேண்டும்.

பசித்த வயிற்றுடன் வந்திருக்கும் ஏழைகளுக்கு அதனைச் செலவிடலாம். அது அவர்களின் வயிற்றுக்கு நன்மை செய்யும். சம்பாதிக்கும் ஆற்றல் இல்லாத குருடர்கள், முடவர்கள், நோயாளிகள் கூட்டமாக வந்து நிற்கிறார்களா? அவர்களுக்கு உதவி செய்யுங்கள். உங்கள் உதவி அவர்களின் துன்பத்தை ஓரளவாவது துடைக்கும்.

பொருள்வளம் படைத்தவர்களுக்கு அரசாங்கப் பொருளி லிருந்து அன்பளிப்புக் கொடுக்கக்கூடாது. ஏனெனில் இந்த அன்பளிப்பு அவர்களின் பசிக்குப் பயன்படாது. இந்தச் சட்டத்தில் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை நிலவினாலும், உண்மை இதுதான்.

இதில் கருத்து வேற்றுமை தோன்றுவதற்கும் காரணம் உண்டு. பைதுல் மால் என்பது பொது நன்மைக்காக நிறுவப் பட்டிருக்கும் ஒன்று என்று நான் குறிப்பிட்டேனல்லவா? இதனை அந்த அறிஞர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். பொது நன்மைக்காக நிறுவப்பட்டிருக்கும் பைதுல் மாலில் முஸ்லிம் கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்பது அவர்களின் கருத்து. இந்த உரிமைக்கு ஆதாரம் கொடுப்பதுபோல் உமர் (ரலி) அவர்கள் கூறியிருக்கும் வார்த்தைகளைச் சற்றுமுன் நீங்கள் படித்து விட்டீர்கள்.



ஆனால் முஸ்லிம்களுக்கு உரிமை உண்டு என்றால், பைதுல் மாலில் உள்ள பொருளை எல்லாம் முஸ்லிம்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்று அர்த்தமல்ல. முஸ்லிம்களில் யாருக்குத் தேவை ஏற்பட்டாலும் உதவி பெறலாம் என்பதே அர்த்தம். முஸ்லிம்களுக்கு ஏற்படும் தேவை எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதற்கும் வரையறை உண்டு. பொதுவாகச் சொல்வதானால், யார் மூலம் பொது நன்மை ஏற்படுகிறதோ அவர்களுக்கு உதவி செய்யலாம் என்றே சொல்லவேண்டும். பசித்தவனுக்குக் கொடுக்கப்படும் உணவு, முடவனுக்குக் கொடுக்கப்படும் உதவி முதலியவை இந்த இனத்தைச் சேருகின்றன.

நாட்டின் முன்னேற்றத்திற்கு, நாட்டு மக்களின் முன்னேற் றத்திற்குப் பாடுபடுகிறவர்கள் பலர். அவர்கள் வர்த்தகத்தில் இறங்கிப் பொருளீட்ட ஆரம்பித்துவிட்டால், அது நிச்சயமாக மக்களின் நன்மையைப் பாதிக்கும். எனவே அவர்கள் தம் தேவையின் அளவுக்கு பைதுல் மாலிலிருந்து பொருளுதவி பெறலாம்.

இந்தப் பிரிவில் சேரக்கூடிய முதல் சாரார் அறிஞர்கள்; திருமறையையும், நபிமணியின் கருத்துரைகளையும், இஸ்லாத் தின் சட்டங்களையும் நன்கு உணர்ந்தவர்கள். இவர்களின் அறிவு நாட்டு மக்களின் நன்மைக்கு இன்றியமையாதது.

திருக்குர்ஆன் ஓதிக் கொடுக்கிறவர்களும், தொழுகைக்கு அழைப்புக் கொடுக்கிறவர்களும் இந்தப் பிரிவில் தான்

சேருகிறார்கள். இந்த இரண்டு சாராரும் இரண்டு கோணங்களில் நாட்டின் நன்மைக்குப் பாடுபடுகிறார்கள். அறிவைத் தேடும் மாணவர்கள்கூட இந்தப் பிரிவில் இடம் பிடிக்க முடியும். இன்றைக்கு மாணவர்களாக இருப்பவர்கள், நாளைக்கு அறிஞர் களாகலாம்; குழம்பிக் தவிக்கும் மக்களுக்கு அவர்கள் ஒரு காலத்தில் நல்வழியைக் காட்டலாம்.

நாட்டின் அரசியல் நிர்வாகத்தைத் தாங்கும் அதிகாரிகள் அடுத்து நம் கவனத்துக்கு வருகிறார்கள். அவர்கள் நாட்டு மக்களின் மனத்தில் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கிறார்கள்; நாட்டில் அமைதியை உருவாக்குகிறார்கள்; எதிரிகளின் பிடியிலிருந்து நாட்டுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள்.

அறிஞர்கள் மக்களின் ஆத்மீகத்துக்குத் துணை செய்தால், அரசாங்க அதிகாரிகள் மக்களின் உலகியல் முன்னேற்றத்துக்குத் துணை செய்கிறார்கள். உலக வாழ்வும், ஆத்மீக வாழ்வும் இரட்டைக் குழந்தைகளைப் போன்றவை. ஒன்றைவிட்டு மற் றொன்றைப் பிரிக்க முடியாது. மார்க்கம் தேவைப்படுவது போல், உலக வாழ்வும் தேவைப்படுகிறது. எனவே மார்க்க அறிஞர்களுக்கு அரசாங்க நிதியில் சலுகை இருப்பதுபோல் அதிகாரிகளுக்கும் அதில் சலுகை இருக்கிறது.

சுருங்கச் சொன்னால், ஒரு மனிதனின் உழைப்பு, நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தேவைப்பட்டால், அவன் பைதுல் மாலிலிருந்து பொருளுதவி பெறுவது ஆகும் என்று கூறலாம். இப்படி நாட்டுக்குப் பாடுபடுகிறவர்கள் வறிய நிலையில் இருந்தால்தான் பொருளுதவி பெறலாம் என்றும் கூற முடியாது. அவர்கள் செல்வ நிலையில் இருந்தாலும் உதவி பெறலாம். நாட்டின் நன்மைக்காகத் தம்மையே அர்ப் பணித்துக்கொள்ளும் தியாகிகளுக்கு, செயல் வீரர்களுக்கு அரசாங்கம் செலுத்த வேண்டிய நன்றிக்கடன் இது. அவர்கள் வறுமையின் பிடியில் சிக்கிக் தடுமாறி வந்து உதவி கேட்கும்



அளவுக்கு அதிகாரிகள் பொறுமையாக இருக்கக்கூடாது. ஏனெனில் இது நாட்டின் முன்னேற்றத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடும்.

இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து பார்க்கும்போது வைத்தி யர்கள், வழக்கறிஞர்கள், வரி வசூல் செய்யும் அதிகாரிகள் முதலிய அனைவரும் இந்தப் பிரிவுக்கு வந்து சேருகிறார்கள். வைத்தியர் நேரடியாக மார்க்கத்துடன் சம்பந்தப்படவில்லை என்பது உண்மைதான். வைத்திய அறிவை மார்க்க அறிவு என்று சொல்ல முடியாது என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். என்றாலும், அவர்கள் நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்குத் துணை நிற்கிறார்கள். அந்த ஆரோக்கியம் மதவியலுக்குத் துணை நிற்கிறது. எனவே வைத்தியர்களும் தம்முடைய பணியை நாட்டுக்கு அளிக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின் பணியினால் நாட்டு மக்கள் நன்மை அடையத்தான் செய்கி றார்கள். இலவசமாக வைத்திய உதவி அளிப்பவர்களையே இங்கு நான் குறிப்பிடுகிறேன்.

வழக்கறிஞர்கள் எந்த விதத்தில் நாட்டின் முன்னேற் றத்திற்கு பாடுபடுகிறார்கள் என்று நீங்கள் கேட்கமாட்டீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் செய்யும் தொண்டு எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. குற்றவாளியையும் நிரபாராதி களையும், பிரித்துப் பார்த்து, முன்னவருக்குத் தண்டனையும் பின்னவருக்கு விடுதலையும் அளிக்கும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வழக்கறிஞர்களால் தீர்ப்பு வழங்க முடியாது என்றாலும், நீதிபதிகள் கொடுக்கும் தீர்ப்பு வழக்கறிஞர்களின்வாதத்தை அடிப்படையாகக்கொண்டே உருப்பெறுகிறது.

வழக்கறிஞர்கள் என்றால், கட்சிக்காரர்களின் நன் மைக்காக- அவர்கள் கொடுக்கும் பணத்துக்காக வாதாடுகிறவர் என்று அர்த்தமல்ல. அவர்களை இங்குக் குறிப்பிட முடியாது.

தம் உழைப்புக்குரிய ஊதியத்தை அவர்கள் கட்சிக்காரர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். எனவே அரசாங்கப் பணத்திலிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

உண்மைக்கும் நாட்டு நன்மைக்கும் வாதாடக்கூடிய வழக்கறிஞர்களையே இங்கு நான் குறிப்பிடுகிறேன். அவர்களின் ஒத்துழைப்பு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவையான ஒன்று; தவிர்க்க முடியாத ஒன்று.

வரி வசூல் செய்யும் அதிகாரிகளும், நாட்டின் முன்னேற்றத்தில் பங்கு பெறத்தான் செய்கிறார்கள். தம் கைக்கு வரும் வரிப் பணத்தை அவர்கள் ஆழ்ந்த நியாய உணர்வுடன் பாதுகாக்க வேண்டியிருக்கிறது.

இப்படி நாட்டுக்குப் பாடுபடும் திறமைசாலிகளுக்கு நாட்டின் அரசர், அரசாங்கப் பணத்திலிருந்து பொருளுதவி செய்யலாம். இத்தகையவர்களில் ஒருவருக்கு வழக்கத்துக்கு மாற்றமாக அதிகப் பொருளுதவி செய்தாலும் குற்றமில்லை. உழைக்கிறவர்கள் ஊதியம் பெறுவதில் குற்றம் கிடையாது. உழைக்காதவர்கள் ஊதியம் பெறுகிறார்களா? ஊதியம் அளிப்பவர்களின் தவறு அது. ஆனால் உழைக்கிறவர்களுக்கு எப்படியாவது ஊதியத்தை கொடுத்துவிட வேண்டும்.

இப்படிப் பொருளுதவி பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் யார் என்று கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்பு, நாடாளும் மன்னர்களுக்கு உண்டு. இந்தப் பொறுப்பை அவர்கள் அலட்சியம் செய்துவிட முடியாது. இப்படிக் கண்டுபிடிப்பது அப்படி யொன்றும் சாதாரண காரியமல்ல என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். மக்களின் நன்மைக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசர்கள் சிரமப்பட்டுத்தான் செயலாற்ற வேண்டியிருக்கிறது. அவர்கள் பொறுப்புள்ளவர்கள். எனவே அவர்களால் மனம்போன போக்கில் வாழ முடியாது; வாழவும்



கூடாது. மக்களின் நல்வாழ்வில்தான் அவர்கள் வாழ வேண்டும். மக்களின் இன்பத்தில்தான் அவர்கள் இன்பம் காணவேண்டும்.

நாட்டின் முன்னேற்றத்தையும், நாட்டு மக்களின் அமைதியையும் மனத்தில் கொண்டு அதிகாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மன்னர்களை நாம் வரலாற்றில் பார்க்கிறோம். மண்ணும் விண்ணும் உள்ளளவும் அவர்கள் போற்றிப் புகழப்படுவார்கள். அரசர்கள் என்ற வார்த்தைக்குப் பெரிதும் தகுதியுள்ளவர்கள் அவர்களே. அவர்களின் காலத்தில் உருப் பெற்ற சாதனைகள் எண்ணற்றவை. அவர்கள் மக்களின் நன்மைக்காகச் செய்த தியாகங்கள் வரம்பற்றவை. அவர்களின் வாழ்வையும், செயல் திறனையும் வரலாறு நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

ஆனால் அதே சமயத்தில், அதிகாரத்துக்கு வந்த அரக்கர்களையும் வரலாறு வருணிக்கத்தான் செய்கிறது. தற்போதைய அரசர்களை இந்த இனத்தில் சேர்த்தால், அவர்களிடமிருந்து பொருளுதவி பெறலாமா என்பது இங்கு தோன்றும் ஒரு வினா. அவர்களிடமிருந்து உதவி பெறுவது கூடும் என்றே நான் எண்ணுகிறேன். அவர்கள் என்னதான் தாழ்ந்து நின்றாலும், கொடுப்பதற்கும், தடுப்பதற்குமுள்ள உரிமைகளை நிச்சயம் பெற்றிருக்கிறார்கள்.

# 14. ஆதாரங்கள் சில

அரசாங்க அதிகாரிகளிடமிருந்து மக்களுக்கு அன்பளிப் பாக வரும் பொருள் சில வேளை பாராட்டப்படுகிறது என்றும் வேறு சில வேளை இகழப்படுகிறது என்றும் நீங்கள் தெரிந்து கொண்ட விட்டீர்கள். அப்படி வரும் பொருள்களில் எது நல்லது, எது கெட்டது எனும் பிரச்சினை இதுவரை உங்களுக்கு தெளிவுபட்டிருக்க வேண்டும்.

அநியாயக்கார அதிகாரிகளிடமிருந்து மூன்று கோணங் களில் மக்களுக்குப் பொருளுதவி கிடைக்கிறது.

*முதற் கோணம்:* அரசரின் அரண்மனைக்கு, அதிகாரிகளின் மாளிகைக்குச் சென்று பொருளுதவி தேடுவது முதற் கோணம். அந்தக் காலத்தில் மட்டுமன்றி, இந்தக் காலத்திலும் இப்படிப் பலர் இருக்கிறார்கள்.

இது மார்க்கத்தில் பெரிதும் இகழப்படுகிறது. இப்படி வீடு தேடிச் சென்று உதவி பெறுவது கூடாது என்பதற்குப் பெருமானாரிடமிருந்தும், நபித் தோழர்களிடமிருந்தும் போதிய ஆதாரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

பெருமானார் கூறுகிறார்கள்: '' எனக்குப் பின்னால் ஒரு காலம் வரும். அப்போதைய அரசர்கள் பொய்யுரைப்பார்கள்; அநீதி இழைப்பார்கள். அவர்களின் புரட்டுக்கு ஒருவன் நற்பெயர் கொடுத்தால், அவர்கள் செய்யும் அட்டூழியங்



களுக்குத் துணை செய்தால், அவன் என்னைச் சேர்ந்தவனு மல்ல; நான் அவனைச் சேர்ந்தவனுமல்ல.''

''அரசர்களைச் சந்திக்கிறவர்களே அறிஞர்களில் கெட்டவர்கள்'' என்று மற்றொரு சமயம் பெருமானார் கூறி யிருக்கிறார்கள். ''அறிஞர்களைத் தேடி வந்து சந்திக்கிறவர்களே சிறந்த அரசர்கள்.''

''மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் திருத் தூதர்களால் நியமிக்கப்பட்டவர்கள் அறிஞர்கள். அவர்கள் அரசர்களுடன் கலந்துறவாடக் கூடாது. இல்லையேல் தம் முடைய பொறுப்புக்கு அவர்கள் களங்கம் கற்பித்து விட்டார்கள் என்பதே பொருள்.... அவர்களை விட்டு விலகி நில்லுங்கள்!'' என்பதும் நபிக் கருத்துத்தான்.

பெருமானாரைப் போலவே நபித்தோழர்களும், அவர்களுக்குப் பின்னால் தோன்றிய அறிஞர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

''கெடுதி ஏற்படும் இடங்களுக்குச் செல்லவேண்டாம்'' என்று நபித்தோழர் ஹூதைபா கூறினார்.

நண்பர்கள் வினவினார்கள்: ''கெடுதி ஏற்படும் இடமா? அப்படி என்றால்?''

ஹூதைபாவின் விடை இதுதான்: ''கெடுதி ஏற்படும் இடம் என்றால், அதிகாரிகளின் வீட்டு வாசல் என்று அர்த்தம். ஒரு மனிதன் அதில் நுழைந்துவிட்டால், அவனால் கெடுதி செய்யாமல் இருக்க முடியாது. அவர்கள் கூறும் பொய்யை எல்லாம் அவன் உண்மை என்று சொல்லவேண்டி ஏற்படும்...''

அபூதரின் கருத்து: ''உங்கள் மார்க்கத்தில் பெரும் பகுதியைப் பிடுங்கிக் கொண்ட பிறகுதான், அரசர்கள் தம்முடைய செல்வத்தில் சிறு பகுதியை உங்களுக்குத் தருகிறார்கள்.''- கிடைப்பதைவிட இழப்பது அதிகம் என்னும் பொருள் இங்குக் காட்டப்படுகிறது.

அறிஞர் சுப்யான் எவ்வளவு நாசூக்காகக் கூறுகிறார்! நீங்களே பாருங்கள்: ''நரகத்தில் ஓர் இடம் இருக்கிறது. அதிகாரிகளைப் போய்ப் பார்க்கும் அறிஞர்களுக்கென்று அது ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்தாம் அங்கு இருப்பார்கள்.''

''அறிஞர் ஒருவருக்கு உலகத்துச் செல்வங்களில் ஆசை இருப்பதாகத் தெரிந்தால், அவருடைய மார்க்கப் பற்றுதல் சந்தேகத்திற்குரிய ஒன்று!'' என்பது ஒரு முதுமொழி;

''அறிஞர்கள் செல்வர்களையும் விரும்பக்கூடாது; அரசர் களையும் விரும்பக்கூடாது. முன்னது முகஸ்துதி, பின்னது நயவஞ்சகம்'' என்று உபாதா பின் சாமித் கூறுகிறார்.

''மார்க்கத்துடன் அரசர்களைக் காணச் செல்லும் ஒருவன் வெளியே வரும்போது வெற்று மனிதனாகக் காணப் படுகிறான்'' என்று இப்னு மஸ்ஊத் ஒரு சமயம் கூறினார்.

''காரணம் என்ன?'' என்று கேட்டார்கள் அருகிலிருந் தவர்கள்.

''இறைவன் விரும்பாததை அவன் செய்ய வேண்டி யிருக்கிறது.''

புஸைல் கூறுகிறார்: ''ஒரு மனிதன் எவ்வளவு தூரம் அரசர்களை நெருங்குகிறானோ அவ்வளவு தூரம் அவன் இறைவனை விட்டு விலகுகிறான்.''

''நான் இப்படிச் சம்பாதிக்கிறேன். அரசர்களின் உதவி எனக்குத் தேவையில்லை'' என்றார் சயீத் பின் முசய்யப். அவர் எண்ணெய் வியாபாரம் செய்து கொண்டிருந்தார்.

''அசுத்தப் பொருளில் உட்காரும் ஈயைவிடக் கெட்டவன், அரசர்களைச் சந்திக்கும் அறிஞன்'' என்கிறார் முஹம்மது பின் சல்மா, அந்த அறிஞன், ஈயைப்போல், தீமையைப் பரப்பக் கூடும் என்பது கருத்து. இன்னும் சொல்லப்போனால், அந்த அறிஞன், ஈயைவிட மோசமானவன் என்று முஹம்மது பின்



சல்மா கருதுகிறார். ஈ என்ன செய்கிறது? அசுத்தத்தில் உட்காரும் ஈக்கள் நோயைப் பரப்புகின்றன. அது மனிதனின் உடலைப் பாதிக்கும். ஆனால் இத்தகைய அறிஞர்கள் பரப்பும் தீமைகள் இன்னும் கொடியவை. அவை மனிதனின் உடலை மட்டு மின்றி, உள்ளத்தையும் பாதிக்கும்; தனி மனிதனை மட்டுமன்றி, சமுதாயத்தையும் பாதிக்கும்.

அறிஞர் சுஹ்ரீ அரசாங்கப் பணிகளில் பங்கு பெற்றபோது, அவருடைய சகோதரர் எழுதிய கடிதத்தில் ஒருபகுதி அடியில் இடம் பெறுகிறது:

''உங்களையும் என்னையும் இறைவன் கெடுதிகளிலிருந்து காத்தருள்வானாக! உங்களைத் தெரிந்தவர்கள், உங்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்யவேண்டிய நிலையில் இப்போது நீங்கள் இருக்கிறீர்கள். உங்களுக்காக இறைவனிடம் அன்பு கேட்கவேண்டிய நிலையை அவர்களுக்கு நீங்கள் ஏற்படுத்திவிட்டீர்கள். மக்களின் கண்ணியத்திற்குரியவர் நீங்கள். இறைவன் உங்களுக்குக் கொடுத்திருக்கும் பொறுப்பு மகத்தானது. திருக்குர்ஆனையும், பெருமானாரின் கருத்துக் களையும் நீங்கள் நன்கு உணர்ந்துகொண்டிருக்கிறீர்கள். எனவே உங்களால் இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. பெற்ற அறிவை நீங்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்; அதனை மறைக்கக் கூடாது.''

''நீங்கள் சாதாரணமானது என்று நினைத்துக் செய்திருக்கும் தவறு இதுதான்: அநியாயக்காரனின் கொடுமைக்குத் துணை நிற்கிறீர்கள்; நேர்மையைப் பொருட்படுத்தாத மோசக் காரனுடைய வழியில் இறங்கியிருக்கிறீர்கள். அவன் நல்லது செய்கிறானா என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒரே ஒரு தீமையைக்கூட அவன் விடுவதில்லை.

''அந்த அநியாயக்காரர்கள் உங்களை மையமாக வைத்துக் கொண்டு தம்முடைய வேலைகளைச் செய்கிறார்கள். உங்களை ஓர் ஏணியின் நிலையில் அவர்கள் வைத்திருக்கிறார்கள்; அதன்

துணை கொண்டு தம் குற்றத்தை உச்சிக்கு உயர்த்துகிறார்கள். அறிஞர்கள்மீது உங்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துகிறார்கள்; மூடர்கள்மீது உங்களுக்கு அன்பைத் தோற்றுவிக்கிறார்கள். ஒரு பக்கம் உங்களுக்கு நன்மை செய்வதுபோல் காட்டி, மறுபக்கம் உங்களுக்குக் குழி பறிக்கிறார்கள். ''அவர்கள் இறை வணக்கத்தைக் கெடுத்தார்கள்'' என்று இறைவன் கூறுகிறான். இந்த இறைகருத்துக்களுக்கு நீங்கள் இலக்காகவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

''உங்கள் மார்க்கப் பற்றுதலுக்கு வைத்தியம் செய்து கொள்ளுங்கள். அதனை இப்போது நோய் பற்றிக் கொண்டிருக்கிறது. மறுமைக்குத் தேவையானதையெல்லாம் இப்போதே சேர்த்து மூட்டை கட்டிக் கொண்டு தயாராக இருங்கள். உங்களது நீண்ட பிரயாணம் விரைவில் முடிந்து விடக் கூடும். விண்ணிலும் மண்ணிலும் உள்ளவை அனைத்தையும் இறைவன் அறிகிறான். அவன் பார்வைக்கு எதுவும் தப்ப முடியாது.''

இப்படிப் பெரும்பாலான அறிஞர்கள் அரசாங்கத்தைத் தாக்குவதற்குத் தகுந்த காரணம் உண்டு. அறிஞன் ஒருவன் அதிகாரத்திலிருக்கும் அரசனை அணுகும்போது, எத்தனை விபரீதங்கள் ஏற்படுகின்றன என்பதை அனுபவத்தில்தான் பார்க்க வேண்டும் என்பதில்லை; அதனைக் கற்பனையிலேயே தெளிவாகப் பார்க்கலாம்.

அரசர்களைக் காணச் செல்கிறவர்கள் எல்லாவற்றுக்கும் முதலில் செய்யும் தவறு இதுதான்: அவர்கள் அனுமதியின்றியே உள்ளே பிரவேசிக்கிறார்கள். அரசனுக்கு எதிரில் நின்று கொண்டு குனிகிறவர்களும், நெளிகிறவர்களும் பலர். இப்படி எல்லாம் செய்யவேண்டிய அவசியம் சிறிதும் கிடையாது. அநியாயக்காரனுக்கு அடிபணிவது குற்றம் என்பது இஸ்லாத்தின் தீர்ப்பு. அநியாயம் செய்யாத பணக்காரனுக்கு, அவனுடைய பணத்துக்காக, அடிபணிவதையே இஸ்லாம் குற்றம் என்று குறிப்பிட்டால், அநியாயக்கார அரசனுக்கு அடிபணிவதை அது எப்படிப் பாராட்ட முடியும்!



அநியாயக்காரனுக்கு, 'சலாம்' சொல்வதே கூடாது. அவனுடைய கையை முத்தமிடுவது, அவனுக்கு முன்னால் நின்று கொண்டு குனிவது, அவன் வார்த்தைக்கு, அது நல்லதா கெட்டதா என்று தெரிந்து கொள்ளாமல்-உட்படுவது, முதலிய அனைத்தும் குற்றங்களே. அநியாயக்கார அரசனின் கையைத் தான் முத்தமிடக் கூடாதே தவிர, மார்க்க அறிஞர்கள், நேர்மையுள்ள தலைவர்கள் முதலியோரின் கையை முத்தமிடுவதில் தவறு கிடையாது.

அறிஞர் அலீ (ரலி) அவர்களின் கையை அபூ உபைதா ஒரு சமயம் சிரியாவில் முத்தமிட்டிருக்கிறார். அலீ (ரலி) அதனை மறுக்கவில்லை. எனவே இதில் தவறு கிடையாது.

அநியாயக்காரனுக்கு சலாம் சொல்லக்கூடாது என்று நான் குறிப்பிட்டேன். சில அறிஞர்கள் இன்னும் ஒருபடி மேலே போய்விட்டார்கள். அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்: ''அநியாயக்காரனுக்கு சலாம் சொல்லக்கூடாது என்பது மட்டுமல்ல, அவன் சலாம் சொன்னால் அதற்குப் பதிலும் சொல்லக்கூடாது. அவனை இழிவுபடுத்துவது போல் முகத்தைத் திருப்பிக்கொள்ள வேண்டும்'' இப்படியே அவர்கள் நடந்து கொண்டார்கள். இதனை அவர்கள் உயர்ந்த நடத்தை என்று கருதுகிறார்கள்.

அநியாயக்கார அரசனின் கையை முத்தமிடுவது கூடாது என்பதில் நமக்குக் கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால், அவன் வலிய வந்து சலாம் சொல்லும்போது பதிலளிக்கக் கூடாது என்று அவர்கள் கூறுகிறார்கள் அல்லவா? அது சிந்தனைக்குரிய பிரச்சினை. இதில் நிச்சயம் நமக்குக் கருத்து வேற்றுமையுண்டு. சலாம் சொல்லப்படும்போது அதற்குப் பதில் கொடுப்பது கடமை. சலாம் சொன்னவன் அநியாயக்காரன் என்ற காரணத்தை வைத்து, இந்தக் கடமையைத் தட்டிக் கழித்துவிட முடியும் என்று நம்மால் ஒப்புக்கொள்ள முடியாது.

செயல் முறையில் பார்க்கும்போது, அரசர்களை நெருங்கும் வேளையில் இப்படி யெல்லாம் தவறு ஏற்படுகிறது. அரச பீடத்துக்கு முன்னால் ஏற்படும் கெடுதிகளுக்கு, இது முதற்கோணம். இன்னும் சில வேளைகளில் வாயை மூடிக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருப்பதில் தவறு தோன்று கிறது. வாய் திறந்து மறுப்புத் தெரிவிக்க முடியாத சூழ் நிலை அங்கு நிலவும்.

அரச மாளிகைக்குள் பிரவேசிக்கிறவர்கள் பகுத்தறி வுக்கும், மார்க்கத்துக்கும் முரண்பட்ட ஆடம்பரப் பொருள் களைப் பார்க்கக்கூடும். பட்டு விரிப்பையும், வெள்ளி-தங்கத்தினாலான பாத்திரங்களையும் அவர்கள் காணக்கூடும். அரச குடும்பத்துக் குழந்தைகள் மார்க்கத்துக்கு முரண்பட்டதை அணிந்து கொண்டு விளையாடுவதை அவர்கள் உணர்ந்து கொள்ளக் கூடும்.

இது போன்ற கட்டத்தில், அதிகாரியின் அன்பை எதிர் பார்த்துச் சென்றிருப்பவர்களால் என்ன செய்ய முடியும்?

"நீங்கள் மார்க்கத்தைப் புறக்கணிக்கிறீர்கள். பட்டாடை களை மார்க்கம் தடை செய்திருக்கிறது. அவற்றை நீங்கள் பகட்டுக்காக உபயோகிக்கிறீர்கள்...." என்று அவர்களால் கூற முடியுமா? அல்லது, "தங்கத்தினால் பாத்திரம் செய்யக்கூடாது. எனவே உங்களை நான் வெறுக்கிறேன்" என்றுதான் சொல்ல முடியுமா?

எப்படிச் சொல்ல முடியும்? உதவி பெறும் எண்ணத்தோடு எப்போது அவர்கள் அரண்மனைக்குள் நுழைந்தார்களோ, அப்போதே அவர்களுடைய வாய்க்குப் பூட்டுப் போடப்பட்டு விட்டது. எனவே அவர்கள், விரும்பியோ விரும்பாமலோ, மௌனம் சாதிக்க வேண்டியிருக்கிறது.

தவறு நடக்கும் இடத்தில் இப்படி மௌனம் சாதிப்பது குற்றம் என்பது நம் கருத்து. நடக்கும் தீமையைப் பார்த்துக் கொண்டு பேசாமலிருப்பவர்கள் அந்தத் தீமைக்குத் துணை செய்தவர்கள் என்பது மார்க்கத்தின் கருத்து.



தவிர, ஒழுக்கக் குறையுள்ள அரசர்கள் பேசும்போது பல தவறுகள் செய்கிறார்கள். மற்றவர்களையோ, மற்ற அரசர் களையோ அவர்கள் கண்டபடி திட்டக்கூடும். உரையாடிக் கொண்டிருக்கும்போது வரம்பில்லாமல் பொய் பேசக்கூடும். உதவி தேடுகிறவர்கள் இவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டி ஏற்படுகிறது. இது தவறு. அரசர்கள் செய்யும் தீமை களைத் தடுக்க முடியாவிட்டாலும், அவற்றிற்கு வாயள விலேனும் மறுப்புத் தெரிவிக்கத்தான் வேண்டும்.

"அரச சபையில் நடக்கும் தீமைகளுக்கு மறுப்புத் தெரிவித்தால், அது அரசனின் சினத்துக்கு வழி செய்யக்கூடும். எனவே அங்கு செல்கிறவர்கள் மௌனம் சாதித்தே ஆக வேண்டியிருக்கிறது. விபரீதம் ஏற்படும் என்ற காரணத்தினால் மௌனம் சாதிப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? என்று நீங்கள் கேட்கலாம்.

உண்மையிலேயே உங்கள் வினாவில் பொருள் இருக் கிறது; நான் மறுக்கவில்லை. என்றாலும், விபரீதம் ஏற்படக் கூடும் என்று தெரிந்து கொண்டிருப்பவர்கள், எதற்காக அதிகாரியின் வீட்டைத் தேடிப் போகவேண்டும்? இதற்குத் தேவையில்லையே! அவர்கள் அரசனைத் தேடிச் செல்லாமல் வீட்டிலிருக்கும்போது இப்படி விபரீதம் ஏற்பட்டால் மௌனம் சாதித்துக் கொள்ளலாம். அப்போதுதான் நீங்கள் காட்டும் காரணம் பொருத்தமாக இருக்கும்.

எனவே நம் கருத்து இதுதான்: குறிப்பிட்ட ஓர் இடத்தில், அது அரண்மனையாயிருந்தாலும் சரி, கடைத் தெருவா யிருந்தாலும் சரி, விபரீதம் ஏற்படும் என்று தெரிந்தால், அதனைத் தடுக்கும் துணிவு தம்மிடம் கிடையாது என்று தெரிந்தால், அந்த இடத்திற்குச் செல்லக்கூடாது. இதற்கு மார்க்கத்தில் அனுமதி கிடையாது. இதுபற்றிய முழுவிவரம்

'திருந்துங்கள்; திருத்துங்கள்' எனும் நூலில் இடம் பெற்றிருக்கிறது.

அடுத்து, அநியாயக்கார அதிகாரியிடமிருந்து பொருளுதவி பெற்றவர்கள், அவனுக்காகப் பலர் முன்னிலையில் பிரார்த்தனை செய்யவேண்டி ஏற்படுகிறது. அல்லது, அவனைப் பாராட்டிப் பேசவேண்டி ஏற்படுகிறது. அப்படியும் இல்லையென்றால், அவன் சொல்லும் கருத்துக்களுக்கெல்லாம் தலையாட்டவேண்டி ஏற்படுகிறது. மார்க்கத்துக்கும், மக்களின் நன்மைக்கும் மாறுபட்ட ஒன்றை அவன் கூறும்போது எவ்வளவு வேதனை ஏற்பட்டாலும், அதனை வெளியில் காட்டிக் கொள்ள முடியாது. ''அரசர் பிரான் சொல்வது மார்க்கத்துக்கும் மக்களின் நன்மைக்கும் உகந்ததுதான்'' என்றாவது சொல்லித் தொலைக்கவேண்டி ஏற்படுகிறது.

அவனுடைய சந்திப்பைப் பெரிதும் விரும்புவது போலவும், அவனுடைய ஆயுள் நீண்டு கிடப்பதற்குப் பெரிதும் பிரார்த்தனை செய்வது போலவும் நடிக்கவேண்டி ஏற்படுகிறது. இப்படி இன்னும் எத்தனையோ விபரீதங்கள் தோன்றுகின்றன.

இத்தகைய அநியாயக்காரர்களுக்குப் பிரார்த்தனையே செய்யக்கூடாது என்று நான் சொல்லவில்லை. மார்க்கத்தில் அதற்கென்று ஒரு வழி வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த வழியில் நின்று பிரார்த்தனை செய்யலாம்.

''இறைவன் உங்களைத் திருத்தி நல்வழி நடக்க வைப்பானாக!'' என்றோ ''ஒழுக்க உணர்வுடன் கூடிய நீண்ட ஆயுளை இறைவன் உங்களுக்குக் கொடுத்தருள்வானாக!'' என்றோ பிரார்த்தனை செய்தால் குற்றமில்லை. அவர்கள் செய்யும் அட்டூழியங்களுக்குத் தூண்டுதல் கொடுப்பதுபோல், அவர்கள் கொடுக்கும் அன்பளிப்பை இரட்டிப்பாக்குவது போல், செய்யாத தவறுகளைச் செய்யச் சொல்வதுபோல் பிரார்த்தனை செய்யக் கூடாது.



''அநியாயக்காரன் ஒருவனைப் பார்த்து, ''அரசர் நீடூழி வாழ வேண்டும்!'' என்று ஒரு மனிதன் பிரார்த்தனை செய்தால், இறைவனுக்குரிய மாநிலத்தில் அட்டூழியம் நடக்கவேண்டும் என்று அவன் ஆசைப்படுகிறான் என்பதே பொருள்'' என்று பெருமானார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எனவே அரசர்களுக்கு, குறிப்பாக அநியாயக்கார அரசர்களுக்கு, எப்படிப் பிரார்த்தனை செய்யவேண்டுமோ, அப்படித்தான் செய்யவேண்டும். அதற்குரிய எல்லையைக் கடந்துவிடக் கூடாது. பிரார்த்தனைக்குரிய இந்த எல்லையைக் கடந்து ஒருவன் அரசனைப் பாராட்ட ஆரம்பித்துவிட்டால், அதிலிருந்து எத்தனையோ தவறுகள் தோன்றக் கூடும். இப்படி ஒருவன் பாராட்டுத் தொடுக்கும்போது, குறிப்பிட்ட ஓர் அரசனிடம் இல்லாத நற்குணங்களை எல்லாம் இருப்பதாகக் கூறவேண்டி ஏற்படும். இதில் மூன்று குற்றங்கள் தோன்றுகின்றன: முதலாவதாக, அவன் பொய் சொல்கிறான். இரண்டாவதாக, அரசன்மீது வெறுப்புக் கொண்டுள்ள அவன் பாராட்டிப் பேசுகிறான்; இது நயவஞ்சகம். மூன்றாவதாக, அநியாயக்காரன் என்று தெரிந்துகொண்டே, அவன் அந்த அரசனுக்கு மரியாதை கொடுக்கிறான். அநியாயக்காரனுக்கு மரியாதை காட்டவேண்டிய அவசியம் கிடையாது.

''தீயவன் பாராட்டப்படும்போது, இறைவன் நிச்சயமாகச் சினமுறுகிறான்'' எனும் நபிக் கருத்து இதைத்தான் காட்டுகிறது.

மற்றோரிடத்தில்: ''தீமை செய்கிறவனுக்கு ஒரு மனிதன் கண்ணியம் கொடுத்தால், அவன் இஸ்லாத்தை இடித்து நொறுக்குவதற்குத் துணை செய்கிறான்.''

இதுபோன்ற பல காரணங்களால்தான், அநியாயக்கார அதிகாரிகள் பெரிதும் இகழப்படுகிறார்கள். நேர்மை உணர்வுள்ளவர் யார்தான் அவர்களை விரும்பப் போகிறார்கள்?

சுப்யான் போன்ற அறிஞர்கள், இன்னும் கொஞ்சம் வேகமாகப் போய்விட்டார்கள். ஒரு சமயம் சுப்யான் இப்படி

வினவப்பட்டார்: ''அநியாயக்காரன் ஒருவன் ஆபத்தான நிலையில் இருக்கிறான். தண்ணீராவது அவன் குடித்தாக வேண்டும். இல்லையேல் அவன் இறந்துவிடுவான்போல் தோன்றுகிறது. இந்தக் கட்டத்தில் அவனுக்குத் தண்ணீர் கொடுக்கலாமா?''

சுப்யானின் விடையில் தயக்கமுமில்லை; கலக்கமுமில்லை; ''வேண்டாம், அவனை அப்படியே விட்டுவிடுங்கள்; செத்துத் தொலையட்டும்!''

அநியாயக்காரர்களை வெறுக்கவேண்டும் எனும் சமூக நீதி இங்கு தெளிவாகத் தெரிகிறது. அநீதிக்கு எந்தக் கோணத்திலிருந்தும் ஆதரவு கொடுப்பதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை.

ஒரு மனிதன் ஒரு வகையில் நல்லவனாகவும், வேறொரு வகையில் கெட்டவனாகவும் இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். முதல் விதத்தின் அடிப்படையில் அவனை விரும்பவேண்டும்; இரண்டாம் விதத்தின் அடிப்படையில் வெறுக்கவேண்டும். இதைப் பற்றிய முழு விவரம் உரிய இடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு மனிதனின் மனப்பக்குவத்துக்குக் கேடு ஏற்படுகிறது என்ற காரணத்தினால்தான், அதிகாரப் பீடத்தை அணுகக் கூடாது என்று நான் கூறுகிறேன். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் அதிகாரிகளை அணுகக் கூடாது என்று நான் சொல்லவில்லை.

நாடாளும் அதிகாரியிடமிருந்து உங்களுக்கு அழைப்பு வந்திருப்பதாக வைத்துக் கொள்வோம். உங்களைப் பலவந்தமாக அழைத்து வரும்படி மேலிடத்திலிருந்து கட்டளை பிறந்திருக்கிறது. நீங்கள் அந்த அழைப்பைப் புறக்கணித்தால், உங்களுக்கு நிச்சயமாகத் தண்டனை கிடைக்கும் என்று தோன்றுகிறது. அல்லது, மக்களின் நல்வாழ்வும், முன்னேற்றமும் நிங்கள் அரச சபைக்குச் செல்வதில்தான் இருக்கின்றன என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரிகிறது.



இந்தக் கட்டத்தில் அரச சபையில் நீங்கள் ஆஜராகலாம் . அரசனைக் கண்ணியப்படுத்தும் எண்ணத்துடனல்ல, மக்களுக்கு நன்மை செய்யும் எண்ணத்துடன்! உங்களால் அரசாங்க நிர்வாகத்திற்கோ, நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கோ, களங்கம் ஏற்பட்டுவிடக் கூடாது. இப்படி ஏற்படவிருக்கும் களங்கத்தைத் தவிர்ப்பதற்காக நீங்கள் தாராளமாக மேலிடத்திற்குச் செல்லாம்.

அரச சபைக்குச் செவ்வதற்குரிய சூழ்நிலைகளில் இது முந்தியது.

அடுத்து வருவது இரண்டாம் சூழல்: குறிப்பிட்ட ஓர் அரசன் ஒரு மனிதனை அநியாயமாகத் துன்புறுத்துகிறான் என்று வைத்துக் கொள்வோம். இது போன்ற கட்டங்களில் நீங்கள் அரசனை அணுகி உங்களால் இயன்றதைச் செய்யலாம்.

ஆனால் இதற்கு ஒரு நிபந்தனையுண்டு: இப்படி நீங்கள் அரசனை அணுகும்போது, அவனைப் பாராட்டவும் கூடாது; அவனுடைய அதிகாரத்துக்குப் பயந்து அறிவுரையை மறைக்கவும் கூடாது. இப்படி நடந்து கொள்வதில் நிச்சயமாக நன்மையுண்டு. இதற்கு மார்க்கத்தில் சலுகையும் உண்டு.

ஒரு மனிதன் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளும் போது மூன்று சூழல்கள் ஏற்படுகின்றன என்று இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டேன். அந்த மூன்றில் முதற்கோணத்தை நாம் ஓரளவு ஆராய்ந்து விட்டோம், இப்போது இரண்டாம் கோணத்திற்கு வருவோம்.

**இரண்டாம் கோணம்:** நீங்கள் உங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறீர்கள். நாடாளும் அரசன் உங்களைப் பார்க்க உங்கள் வீட்டிற்கே வருகிறான். அவன் நல்ல அரசனல்ல என்று உங்களுக்குத் தெரியும். அவன் கெட்டவன், அநியாயக்காரன் என்று எல்லோருக்கும் தெரியும். அந்த அநியாயக்காரன் இப்போது உங்கள் வீட்டு வாசற்படியில் நிற்கிறான். உங்களைப்

பார்த்து அவன் 'சலாம்' சொன்னால் அதற்கு நீங்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இது போன்ற கட்டத்தில் அவனுக்கு எழுந்து நின்று மரியாதை செய்வது கூடத் தவறாகாது. ஏனெனில், அவனுக்கு நீங்கள் மரியாதை காட்டுவதற்கு முன்பே அவன் உங்களுக்கு மரியாதை கொடுத்து விட்டான் – அதாவது வீடு தேடி வந்து விட்டான். எனவே கிடைத்த கண்ணியத்தைத் திருப்பிக் கொடுங்கள்.

ஆனால், உங்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் அரசனுக்கு நீங்கள் மார்க்கத்தின் பெருமையை எடுத்துரைக்க விரும்பினால், முரண்வழியில் நடப்பவர்களை நீங்கள் சிறிதும் விரும்புவதில்லை என்று காட்டிக்கொள்ள விரும்பினால் எழுந்து நிற்கவேண்டிய அவசியமில்லை. அநியாயக்காரன் என்று பெயரெடுத்த அரசன் தனிமையில் வரும்போது இப்படி நீங்கள் நடந்து கொள்ளலாம்.

ஆனால், அந்த அரசன் தன்னுடைய அதிகாரிகளுடன் உங்கள் வீட்டுக்கு வந்தால், அவன் வகிக்கும் பதவிக்கு எந்த அளவுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு மரியாதை கொடுக்கத்தான் வேண்டும். நாட்டின் பொறுப்பைத் தன் தலைமேல் போட்டுக் கொண்டிருக்கும் அவன் ஒரு விதத்தில் கண்ணியத்திற்குரியவனே. அவனுடைய கண்ணியத்துக்குக் களங்கம் கற்பிப்பதையே குறிக்கோளாக வைத்துக் கொள்ளாதீர்கள். இத்தகைய எண்ணத்துடன் எழுந்து மரியாதை செலுத்துவது குற்றமல்ல. எனினும் மரியாதை செலுத்தாவிட்டால் பாதகம் ஒன்றுமில்லை என்றும், இதனால் அரசனின் தண்டனையோ மக்கள் மத்தியில் புரட்சியோ, தோன்றப் போவதில்லை என்றும், நீங்கள் நிச்சயமாக நம்புகிறீர்களா? அப்போது எழுந்து நின்று மரியாதை செலுத்துவதை விட்டு விடுவது நல்லது என்பது என் கருத்து.

இத்துடன் உங்கள் பொறுப்பு தீர்ந்து விடவில்லை. உங்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது, அவன்



தப்பான ஒரு வேலையைச் செய்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அது தப்பானது என்று அவனுக்குத் தெரியாது. உண்மை தெரிந்தால், அவன் நிச்சயம் தவிர்த்துக் கொள்வான் என்று நீங்கள் நம்புகிறீர்கள்.

இந்தக் கட்டத்தில் அரசர் செய்த தவற்றுக்குக் கண்டிப்பாய் விளக்கம் கொடுத்துவிட வேண்டும். உரையாடலுக்கிடையில் இப்படியெல்லாம் அறிவுரை கூறத்தான் வேண்டும்.

வந்திருக்கும் அரசர் தெரிந்துகொண்டே தவறு செய்கிறாரா? அவருக்கு விளக்கம் கொடுத்து, அறிவுரை கூறுவதில் அர்த்தமில்லை. அவர் செய்வது எத்தனை பெரிய தவறு என்பதைச் சுட்டிக்காட்டிப் பயமுறுத்தலாம் என்றாலும், உங்கள் பயமுறுத்தல் பயன் தரும் என்று தெரிந்தால்தான். பயனில்லாமல் பயமுறுத்துவது நேரத்தைப் பாழாக்குவதாகும். இயன்றவரை, அவரை நல்வழிக்கு இழுக்க முயற்சி செய்யுங்கள். அவர் அறியாதவராக இருந்தால் அறிவுறுத்துங்கள்; மார்க்கத்தின் எல்லைகளை மதிக்காதவராக இருந்தால் அச்சமுறுத்துங்கள்.

இவற்றை யெல்லாம் நீங்கள் நன்கு கவனிக்க வேண்டும். மேலிடத்து அதிகாரியொருவர் உங்கள் வீட்டுக்கு வரும் போதுதான், இப்படி என்று எண்ணாதீர்கள். அவசியத்தை யொட்டி மேலதிகாரியின் வீட்டுக்கு நீங்கள் செல்லும்போதும் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும்.

முற்கால அறிஞர்களில், சற்றுமுன் நாம் ஆராய்ந்தது போல், அதிகாரப் பீடத்துக்குச் சென்றவர்களும் இருந்தார்கள்; அதிகார வர்க்கத்தையே வெறுத்தவர்களும் இருந்தார்கள். ஆனால், அவர்கள் எங்கு சென்றாலும், அங்கு விரிவுரைக்கு அப்பாற்பட்ட பக்தியுணர்வு காணப்பட்டது.

ஒரு நாள் அறிஞர் ஹம்மாத் பின் சல்மா தம் நண்பருடன் அமர்ந்திருந்தார். அவர் வீட்டில் ஒரே ஒரு பழைய பாய் கிடந்தது. அதில் உட்கார்ந்து அவர் திருக்குர்ஆன் ஓதுவது வழக்கம். ஒரு கூசாவில் சுத்தமான தண்ணீர் இருந்தது.

வாசற்கதவை யாரோ தட்டினார்கள். சிறிது நேரத்தில் முஹம்மது பின் சுலைமான் உள்ளே வந்தார். ஹம்மாதுக் கருகில் உட்கார்ந்தார். அவர் கேட்ட முதற்கேள்வி இதுதான்:

''எனக்கு என்ன ஏற்பட்டிருக்கிறது என்றே தெரியவில்லை. உங்களைச் சந்திக்கும்போதெல்லாம் என் உள்ளத்தில் அச்சம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் என்ன?''

ஹம்மாத் விடையளித்தார்: பெருமானார், 'அறிஞன் ஒருவன் தன் அறிவை முழுக்க முழுக்க இறை வழிக்குப் பயன் படுத்தும்போது, அனைத்தும் அவனுக்குப் பயப்படுகின்றன. அறிவை வைத்து அவன் பொருள் திரட்ட நினைக்கும்போது, அனைத்துக்கும் பயப்படவேண்டி ஏற்படுகிறது' என்று கூறியிருக்கிறார்கள்!''

வந்தவர் ரூ.10,000 மதிப்புள்ள பணமுடிப்பு ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்தார். ''இதனைப் பெற்றுக் கொள் ளுங்கள். உங்களுக்கு உதவியாக இருக்கும்.''

ஹம்மாத் ஏற்க மறுத்தார். ''வேண்டாம். இந்தப் பணம் யாரிடமிருந்து பிடுங்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்குக் கொடுங்கள்.''

முஹம்மது பின் சுலைமான் துடித்தார். ''இறைவன் மீது ஆணையாகச் சொல்கிறேன். இது யாரிடமிருந்தும் பறிக்கப் பட்டதல்ல. எனக்குக் கிடைத்த வருமானத்திலிருந்தே இதை எடுத்து வந்திருக்கிறேன்.''

''அப்படியானால் உங்கள் வருமானம் எனக்குத் தேவை யில்லை.''

அதிகாரி வாதாடினார். ''உங்களுக்குத் தேவைப்படா விட் டாலும் இதனை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கலா மல்லவா?''

ஹம்மாத் உரையாடலுக்கு முத்திரை வைத்தார். ''அப்படியும் தொல்லை இருக்கத்தான் செய்கிறது. நான் எவ்வளவு நேர்மையாகப் பங்கிட்டுக் கொடுத்தாலும், பங்கீடு பெறாதவர்கள் என்மீது குறை சொல்லக்கூடும்; நான் நேர்மை யுடன் நடந்து கொள்ளவில்லை என்று என்மீது பழி சுமத்தக் கூடும். அதனால் அவர்கள் குற்றவாளிகளாகிறார்கள். இவர்கள் இப்படிக் குற்றவாளிகளாவதற்கு நான் ஏன் துணை செய்ய வேண்டும்?''



வீடு தேடி வரும் அன்பளிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நான் குறிப்பிட்டேன். அதையும் கூட நமது முன்னோர் மறுத்திருக்கிறார்கள் என்பதற்கு இந்த வரலாற்றுத்துணுக்கு ஒன்றே போதுமானது.

**மூன்றாம் கோணம்:** இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும் போது, மற்றொரு சாரார் நம் கவனத்திற்கு வருகிறார்கள். இவர்கள் அதிகாரிகளைத் தேடிச் செல்வதுமில்லை; இவர்களை அதிகாரிகள் தேடி வருவதுமில்லை. மொத்தத்தில் இவர்கள் அதிகாரிகள் தொடர்பிலிருந்து தனித்து நின்று வாழ்கிறார்கள். மற்ற எதையும்விட இதுவே நல்லது என்பது என் கருத்து.

இத்தயைவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் தெரியுமா? அதிகாரிகள் செய்யும் அட்டூழியங்களை முழுமனத் துடன் வெறுக்கவேண்டும். அவர்களின் அதிகாரம் நீடிக்க வேண்டும் என்று விரும்பக்கூடாது. எந்த வகையிலும் அவர் களைப் பாராட்டக் கூடாது. இப்படித் தொடர்பு இல்லாம லிருப்பதால், தமக்குக் கிடைக்கத் தவறிய பேறுகளைப் பொருட் படுத்தக் கூடாது; வருந்தக் கூடாது. அதிகாரிகளைப் பற்றிய எண்ணம் தோன்றும் போதெல்லாம், அவர்கள் மனத்தைக் கல்லாக்கிக் கொள்ளவேண்டும்.

வெளிப்படையாகப் பார்க்கும்போது உங்களுக்கு இது சாதாரணமாகத் தோன்றலாம். எனினும் செயல் ரீதியாகப் பார்க்கும்போது, இதிலுள்ள சிரமம் உங்களுக்கு நன்றாகத் தெரியக்கூடும்.

அதிகாரிகளைப் பற்றிய எண்ணம், அவர்கள் உங்களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கும் பொருளைப் பற்றிய எண்ணம் தோன்றும் போதெல்லாம், நபித்தோழர் அபுத்தர்தாவின் கருத்தை நினைத்துப் பாருங்கள்.

''பொருள் படைத்தவர்கள் சாப்பிடுவதுபோல் நாங்களும் சாப்பிடுகிறோம். அவர்கள் ஆடை அணிவதுபோல் நாங்களும் ஆடை அணிகிறோம். என்றாலும், அவர்களிடம் தேவைக்கு மிஞ்சிய பொருள் இருக்கிறது; அது எங்களிடம் கிடையாது. அதை அவர்கள் பெருமையோடு பார்த்துக் கொள்கிறார்கள். நாங்களோ அவர்களையும் அந்தப் பொருளையும் சேர்த்து வைத்துப் பார்க்கிறோம். மறுமையில் அவர்கள் கணக்குக் கொடுக்க வேண்டி ஏற்படும். ஆனால் நமக்கு அந்தத் துன்பம் கிடையாது!''

அநியாயக்கார அதிகாரிகளை வெறுக்கவேண்டும் என்றால், அப்படி அநியாயம் செய்கிறவர்கள் அதிகாரிகளாகத் தான் இருக்கவேண்டும் என்றோ, உங்கள் வெறுப்புக்கு இலக்காகிறவர்கள் அதிகாரிகளாகத்தான் இருக்கவேண்டும் என்றோ அர்த்தமல்ல. அதிகாரிகளுக்கு இருக்கும் மனப் பான்மை சில வேளை அதிகாரமில்லாதவர்களுக்கும் வந்து விடுகிறது. இதனால்தான் அதிகாரிகளுக்கு மத்தியில் மட்டு மின்றி, அதிகாரமில்லாதவர்களுக்கு மத்தியிலும் அநியாயக் காரர்களை நம்மால் பார்க்க முடிகிறது.

எனவே அநியாயம் செய்கிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை நீங்கள் வெறுக்கவேண்டும் . இறைவன் படைத்த மண்ணகத்தில் அவனுக்கு எதிராக நடக்கும் உரிமை எவருக்கும் கிடையாது. அநியாயம் செய்கிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு உங்கள் உள்ளத்தில் உயர்ந்த இடத்தைக் கொடுக் காதீர்கள். உண்மையில், நேர்மையுடன் நடந்து கொள்கிற வர்கள், தீமையையும் தீங்கு செய்கிறவர்களையும் வெறுக்கத் தான் செய்வார்கள். ஏனெனில் தீமை என்பது என்றைக்கும் வெறுக்கப்படகூடிய ஒன்றுதான்.



சிலர் நடக்கும் தீமையை வெறுக்கிறார்கள்; வேறு சிலர் திருப்தியோடு ரசிக்கிறார்கள்; இன்னும் சிலர் கண்டும் காணாதவர்போல நடிக்கிறார்கள்.

நடக்கும் தீமையைப் பார்த்துத் திருப்தியோடு ரசிப்பது எவ்வளவு பெரிய தவறு என்று உங்களுக்குத் தெரியும். தீயவர்களுக்கு இது நிச்சயம் புத்துணர்வூட்டும். தீமை நடக்கும் போது கண்டும் காணாதவர்போல் நடந்து கொள்வது இன்னும் மோசமானது. எனவே தீமை நடக்கும்போது வெறுக்கத்தான் வேண்டும். இது தவிர்க்க முடியாத ஒன்று.

நீங்கள் வினவக்கூடும்: ''விரும்புவதும் வெறுப்பதும், மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டவை. சிலவற்றை அவன் இயற்கையின் அடிப்படையில் விரும்புகிறான். வேறு சில வற்றை இயற்கையின் அடிப்படையில் வெறுக்கிறான். நினைத்த நேரத்தில் நினைக்க பொருள்மீது அவனால் எப்படி வெறுப்புக் கொள்ள முடியும்? இப்படியிருக்க, நடக்கும் தீமையை வெறுப்பது அவசியம் என்று எவ்வாறு கூற முடியும்?''

நீங்கள் இந்த இடத்தில் சிறிது அவசரப்படுகிறீர்கள். ஒரு பொருளை ஒரு மனிதன் விரும்புகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அத்தப் பொருள் அவனுடைய மனைவிக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தினால், அதனை அவன் வெறுப்பதில்லையா? நண்பர்களுக்காகத் தம் இன்பங்களை எல்லாம் தியாகம் செய்தவர்களை நீங்கள் கண்டதில்லையா?

அவன் அதனை விரும்பத்தான் செய்தான். இயற்கையின் அடிப்படையில் அவன் இப்படிச் செய்ததாகவே வைத்துக் கொள்வோம். என்றாலும், அந்தப் பொருள் நண்பரின் வெறுப்புக்குரியதாக இருக்கிறது. எனவே அவனுடைய அன்பு இயற்கையின் அடிப்படையிலேயே வெறுப்பாக மாறுகிறது. இதனால் சற்றுமுன் விரும்பியவன் இப்போது வெறுக்கிறான்.

இறைவன் தீயவர்களை விரும்புவதில்லை என்று உங்களுக்குத் தெரியும். அவர்கள் இறைவனின் வெறுப்புக்குரி

யவர்கள். தீயவர்களை நீங்கள் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், இறைவனை நிச்சயமாக விரும்புகிறீர்கள். இறைவன்மீது நீங்கள் கொண்டிருக்கும் அன்பு அபாரமானது. எனவே, அந்த அன்பின் அடிப்படையிலேயே நீங்கள் தீமை யையும், தீயவைகளையும் வெறுக்கிறீர்கள். ஆகவே உங்கள் வாதம் நடை முறைக்கு மாறுபட்டது.

நீங்கள் மீண்டும் கேட்கலாம்: ''அரச சபைக்கும் செல்லக் கூடாது. அரசாங்க அதிகாரிகளிடமும் தொடர்பு வைக்கக் கூடாது என்று சற்றுமுன் நீங்கள் சொன்னீர்கள். என்றாலும் உங்கள் கருத்துக்கு எதிராக, முற்கால அறிஞர்களில் சிலர் நடந்திருக்கிறார்கள் என்று வரலாறு கூறுகிறது. விளக்கம் கொடுக்க முடியுமா?''

முதலில் அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்று தெரிந்து கொள்ளுங்கள். அப்புறம் நீங்களும் அப்படி நடந்து கொள்ளலாம்.

ஹிஷாம் பின் அப்துல் மலிக் பற்றிய சம்பவம் ஒன்று வரலாற்று நூல்களில் காணப்படுகிறது. அப்துல் மலிக்கை அடுத்து ஆட்சிக்கு வந்தவர் அவர்.

ஒரு சமயம் அவர் மக்காவுக்குப் புறப்பட்டார். மக்காவை அடைந்ததும். ''நபித் தோழர்களில் யாரேனும் ஒருவரை அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டார்.

''பெருமானாருடன் பழகிய நபித் தோழர்களில் இப்போது யாருமில்லை. அவர்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள்.

''அப்படியானால் நபித் தோழர்களை அடுத்து வந்த மேதைகளில் யாரையாவது அழைத்து வாருங்கள்.''

இப்படிக் கட்டளையிட்ட ஹிஷாம் தரையில் விரிப்பை விரித்து உட்கார்ந்து கொண்டார்.

சிறிது நேரத்தில் அரசாங்க மேலதிகாரிகள் தாவூஸ் யமானி என்ற அறிஞரை அழைத்து வந்தார்கள்.



''அஸ்ஸலாமு அலைக்க, ஹிஷாம்!'' என்றார் தாவூஸ். அரசரின் விரிப்புக்கு அருகில் செருப்பைக் கழற்றி வைத்த தாவூஸ் அரசருக்கு பக்கத்தில் உட்கார்ந்தார்.

தாவூஸ் நடந்து கொண்டவிதம் ஹிஷாமுக்குப் பிடிக்க வில்லை. அவர் முகம் பயங்கரமாக மாறிற்று.

''ஹிஷாம்? எப்படியிருக்கிறீர்கள்? நலம்தானே?''

அரசரின் கோபம் கடைசி எல்லைக்குச் சென்றது. அரசர் என்ற முறையில் தமக்குக் கிடைக்கவேண்டிய மரியாதையை தாவூஸ் அழித்துவிட்டார் என்பது அவர் கருத்து. சினத்தின் தூண்டுதலால் தாவூஸைக் கொல்லவும் துணிந்து விட்டாராம்.

அருகிலிருந்தவர்களில் ஒருவர் நாசூக்காக நிலைமையை மாற்றினார். ''முஸ்லிம்களின் தலைவரே! தாங்கள் எண்ணுவது போல், இந்த இடத்தில் எதுவும் செய்ய முடியாது. நீங்கள் இப்போது மக்காவின் தேவாலயத்தில் இருக்கிறீர்கள்....''

அரசரின் கண்கள் தாவூஸை எரித்தன. ''தாவூஸ்! நீர் நடந்துகொண்டது சரியல்ல. ஏன் அப்படி நடந்துகொண்டீர்?''

தாவூஸ் ஆச்சரியப்பட்டார். ''நான் நடந்துகொண்டது சரியில்லையா? அப்படி நான் என்ன செய்தேன் என்று எனக்குத் தெரியவில்லையே!''

அரசரின் முகத்தில் மீண்டும் சினத்தின் முத்திரை பிரதிபலித்தது? ''நீர் செய்தது உமக்கே தெரியவில்லையா? ஆச்சரியத்திலும் ஆச்சரியம். முஸ்லிம்களின் தலைவன் என்ற முறையில் எனக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையை நீர் கொடுக்கத் தவறிவிட்டீர். என்னிடம் வந்த நீர், மற்றவர்கள் அழைப்பதுபோல், 'முஸ்லிம்களின் தலைவரே' என்று என்னை அழைக்கத் தவறிவிட்டீர் . இது நீர் செய்த முதற் குற்றம். என்னை அணுகி வந்த நீர் என் கைகளை முத்தமிடத் தவறி விட்டீர். இது நீர் செய்த இரண்டாம் குற்றம். அப்புறம், என்னை அவமானப் படுத்துவது போல் என் விரிப்புக்கு அருகில் உமது

செருப்புக்களை கழற்றி வைத்தீர். அத்தனைக்கும் மேலாக என் அனுமதியைப் பெறாமல் என் அருகில் அமர்ந்து கொண்டீர்....''

சிறிது நேரம் மௌனம் சாதித்த ஹிஷாம், திருப்தி ஏற்படாதவர்போல் மீண்டும் சில குற்றங்களைச் சாட்டினார்.

''என்னுடைய அந்தஸ்தையும் பெருமையையும் கூறாமல், தலையில் அடித்தாற்போல், 'ஹிஷாம்!' என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டீர். எனக்கு முன்னால் எப்படி நடக்கவேண்டுமோ அப்படித்தான் நீர் நடக்கவேண்டும். ஏனெனில் நான் முஸ்லிம் களின் தலைவன்....''

குற்றச்சாட்டுகளைக் கேட்டுக்கொண்டிருந்த தாவூஸ் நடுங்கவுமில்லை; கலங்கவுமில்லை. இளக்காரமாகச் சிரித்தார்.

''நீங்கள் என்மீது குற்றம் சாட்டுகிறீர்கள். இதோ நான் விளக்கம் தருகிறேன்'' என்றார் தாவூஸ்

''உங்களை 'முஸ்லிம்களின் தலைவரே' என்று நான் அழைக்காதது ஒரு குற்றம் என்கிறீர்கள். இந்த அடைமொழி இல்லாமல்தான், நான் உங்களை அழைத்தேன்; வேண்டு மென்று தான் அப்படி அழைத்தேன். உங்களை முஸ்லிம்களின் தலைவர் என்று என்னால் அழைக்க முடியாது. நீங்கள் அந்தப் பதவியில் அமர்ந்திருக்கிறீர்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், மக்களில் பெரும்பாலோர் உங்களைத் தலைவராக ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களில் நானும் ஒருவன். எனவே தான் நான் அப்படிக் கூப்பிட்டேன். மனத்திலுள்ளதை மறைத்து இனிமையாகப் பேசும் கலையில் எனக்குத் தேர்ச்சியில்லை.''

மீண்டும் ஒரு தடவை தாவூஸ் சிரித்தார். ''பெயர் சொல்லிக் கூப்பிட்டது குற்றம் என்கிறீர்களே. எல்லாம் வல்ல இறைவன், திருத் தூதர்களை எப்படி அழைக்கிறான் என்று நீங்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்கக் கூடாதா? 'ஈஸா!', 'மூஸா!' 'யஹ்யா!' என்றுதானே அவன் அழைக்கிறான். திருத் தூதர்கள் மட்டுமல்ல, தன்னுடைய விரோதிகளையும் அவன் பெயர் சொல்லியே அழைக்கிறான். 'அபூலஹப்' என்று அவன் பெயரிட்டு அழைத்திருக்கிறான்.''



சிறிது நேர இடைவெளிக்குப் பின்னர் தாவூஸின் குரல் மீண்டும் ஒலித்தது.

''உங்கள் கரத்தை நான் முத்தமிடாதது மற்றொரு குற்றம் என்று குறிப்பிட்டீர்கள். மக்கள் தலைவர் அலீ இப்னு அபீதாலிப் அவர்கள் கூறியிருக்கிறார்கள்: 'ஒரு மனிதனின் கரத்தை மற்றொரு மனிதன் முத்தமிடக்கூடாது. என்றாலும் காதல் நிறைந்த மனைவி ஒருத்தி தன் கணவனின் கரத்தை முத்தமிடலாம்; அன்பு நிறைந்த மைந்தன் ஒருவன் தன் தந்தையின் கரத்தை முத்தமிடலாம்.' நான் உங்களுக்கு மைந்தனுமல்ல, நீங்கள் எனக்குக் கணவனுமல்ல.

''உங்கள் அனுமதியைப் பெறாமல் உங்களுக்கு அருகில் உட்கார்ந்துவிட்டேன் என்று நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள். நான் அப்படி நடந்ததற்கு அலீ (ரலி) அவர்களின் கருத்தே ஆதாரம். 'இறைவனின் வெறுப்புக்கு இலக்கான மனிதனை நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா? அப்படியானால், சுற்றிலும் நாலு பேர் நின்றுகொண்டிருக்கும்போது, அவர்களுக்கு மத்தியில் உட்கார்ந்திருக்கும் ஒரு மனிதனைப் பாருங்கள்' என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதனால்தான் நான் உங்களுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டேன்.

''உங்கள் விரிப்புக்கு அருகில் நான் செருப்பைக் கழற்றி வைத்தது ஒரு குற்றமா? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தினம் ஐந்து வேளை இறைவணக்கத்திற்குச் செல்லும்போது பள்ளிவாசலுக்கு அருகில்தான் என் செருப்பைக் கழற்றி வைக்கிறேன். பள்ளிவாசலைவிட உங்கள் விரிப்பு சிறப்புள்ளது என்று உங்களால் வாதாட முடியுமா?''

ஹிஷாம் சிந்தனையில் ஆழ்ந்தார். சற்றுமுன் அவர் முகத்தில் தெரிந்த கோபக்குறி இப்போது மறைந்து விட்டது.

''எனக்கு ஏதேனும் அறிவுரை கூறுங்களேன்!''

''அலீ (ரலி) அவர்களின் கருத்தையே நான் அறிவுரையாகக் கூற விரும்புகிறேன். ''நீதியைப் பொருட்படுத்தாத அரசர்கள் இறுதியில் பெருந்துன்பத்துக்கு இலக்காகவேண்டி ஏற்படும் '' என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.''

இப்படிக் கூறிய தாவூஸ் விருட்டென்று எழுந்தார். அரைவினாடியில் அந்த இடத்தை விட்டே மறைந்துவிட்டார்.

முற்காலத்தில் அரசர்களுடன் தொடர்புகொண்ட அறிஞர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதற்கு இது போதுமானது. அவர்கள் மார்க்கத்தை மட்டுமே குறியாகக் கொண்டிருந்தார்கள். அரசாங்கத்தின் அடக்கு முறைக்கும், அதிகாரிகளின் அட்டூழியத்திற்கும் சிறிதும் ஆதரவு கொடுத்ததில்லை.

உங்கள் சிந்தனைக்கு மற்றொரு விருந்து அடுத்து வருகிறது.

அரசர் ஒருவரை அறிஞர் ஒருவர் காணச் சென்றார். அரசரின் பெயர்: அபூ ஜாபர் மன்சூர். அறிஞரின் பெயர்: சுப்யான் ஸௌரீ. இவ்விருவரும் வெவ்வேறான இரண்டு துறைகளில் புகழ் பெற்றவர்கள்.

அறிஞரைப் பார்த்த அரசர் புன்முறுவலுடன் வரவேற்றார். ''உங்களுக்கு ஏதேனும் தேவை இருக்கிறதா? சொல்லுங்கள். நிறைவேற்றித் தருகிறோம்.''

சுப்யான் கூறினார், முகத்தில் அடித்தாற்போல்: ''இறைவனுக்கு நீங்கள் அஞ்சவேண்டும். இறைவன் படைத்த மண்ணகத்தில் நீங்கள் அட்டூழியத்தையும் அநீதியையும் பரப்பிவிட்டீர்கள்!''

அபூ ஜாபர் தலையைத் தாழ்த்திக்கொண்டார். சிறிது நேரத்தில் ஏறிட்டுப் பார்த்த அவர், ''எங்களிடம் உங்களுக்கு ஏதேனும் தேவை யுண்டா?'' என்று மீண்டும் வினவினார்.



சுப்யானின் விடையில் இன்னும் கொஞ்சம் சூடு ஏறிற்று, ''நீங்கள் மக்களை ஆட்சி செய்யும் மகத்தான பொறுப்பை வகிக்கிறீர்கள். இந்தப் பொறுப்பும் பெருமையும் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன என்று நீங்கள் எப்போதாகிலும் எண்ணிப் பார்த்ததுண்டா? மக்காவாசிகளும், மதீனாவாசிகளும் அவர்களின் வீரக் குமாரர்களும் இந்தப் பதவியை உங்களுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

''அவர்களுக்கு நீங்கள் பெரிதும் கடன்பட்டிருக்கிறீர்கள். அவர்கள் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் தெரியுமா? பசியால் செத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சேரவேண்டியதை முறைப்படி நிறைவேற்றுங்கள். எல்லாம் வல்ல நாயனைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.''

அரசரின் தலை இரண்டாம் தடவையாகத் தாழ்ந்தது. சிந்தனைக் கோடுகள் நெற்றியில் விரிந்தன. ''மீண்டும் கேட்கிறேன். மூன்றாம் தடவையாகக் கேட்கிறேன். எங்கள் உதவி உங்களுக்குத் தேவையா?''

அறிஞரிடமிருந்து பொருள் செறிந்த புன்னகை ஒன்று உதிர்ந்தது.

''மக்காவின் தேவாலயத்திற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். உமர் (ரலி) அவர்கள் ஒரு சமயம் தேவாலயத்திற்கு வந்த போது, பொருளாளரைப் பார்த்து, 'எவ்வளவு செலவு செய்திருக்கிறீர்?' என்று கேட்டார்கள். 'பத்து வெள்ளி நாணயத்திலிருந்து இருபது வெள்ளி நாணயத்திற்குள் செலவாகியிருக்கிறது' என்று பதிலளித்தார் பொருளாளர்.''

வரலாற்றிலிருந்து மற்றொரு துண்டு இப்போது உங்கள் சிந்தனைக்கு வருகிறது.

ஒரு சமயம் சுலைமான் பின் அப்துல் மலிக் மதீனாநகருக்கு வந்தார். மதீனாவில் சிறிது நாள் தங்கிவிட்டு மக்காவுக்குச் செல்லத் தீர்மானித்திருந்தார். அறிஞர் அபூ ஹாஸிமை

அழைத்து வரும்படி ஓர் ஆளை அனுப்பினார். சுலைமானுக்கும் அபூஹாஸிமுக்கும் நடந்த உரையாடல் உயிரோட்டம் நிறைந்தது.

''அபூ ஹாஸிம்! மரணத்தை நினைக்கும்போதெல்லாம் எங்களுக்கு வேதனை ஏற்படுகிறதே. காரணம் என்ன?'' - அரசர் கேட்ட முதற்கேள்வி இது.

அறிஞரின் விடையில் தெளிவு இருந்தது. ''இம்மையில் வாழ்வை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறீர்கள். மறுமையைக் கட்டோடு அழித்துவிட்டீர்கள். உங்களைப் பொறுத்த மட்டில் இம்மை பூத்துக் குலுங்குகிறது; மறுமை வெறிச்சோடிக் கிடக்கிறது. எனவேதான் இம்மையை விட்டு மறுமைக்குச் செல்வதென்றால் உங்களுக்கு வேதனை ஏற்படுகிறது.''

அரசரின் சிந்தனை இப்போது வேறொரு கோணத் திலிருந்து வேலை செய்தது. ''இறைவனை மனிதன் அணுகும்போது நிலைமை எப்படி இருக்கும்?''

''நல்ல மனிதனுக்கும், கெட்ட மனிதனுக்கும் இதில் வேற்றுமையுண்டு. வெளியூரிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் ஒரு மனிதனுக்கு அவனுடைய மனைவி மக்களிடமிருந்து எத்தகைய வரவேற்பு கிடைக்குமோ, அத்தகைய வரவேற்பு நல்ல மனிதனுக்கு இறைவனிடம் கிடைக்கும். கெட்ட மனி தனுக்கு நிலைஇப்படி இருக்காது. எஜமானரின் பிடியிலிருந்து திருட்டுத்தனமாத் தப்பியோடிய அடிமையொருவன், தன் எஜமானரைப் பார்க்கும்போது எந்த நிலையில் இருப்பானோ அந்த நிலையில்தான் கெட்ட மனிதன் இருப்பான்.''

சுலைமானின் கண்களில் கண்ணீர் கசிந்தது. ''இறை வனிடம் எனக்கு எத்தகைய மரியாதை கிடைக்கும் என்று தெரிந்துகொள்ள முடியாதா?''

''உங்கள் நிலையைத் திருக்குர்ஆனில் வைத்து திறுத்துப் பாருங்கள். 'நல்லவர்களுக்கு நிரந்தர இன்பமும் கெட்டவர் களுக்கு நிரந்தரத் துன்பமும் இருக்கின்றன' என்று திருக்குர்ஆன் கூறுகிறது.''



''இறைவனின் அன்பு எங்கு இருக்கிறது?''

''நல்லவர்களுக்கு அருகில்!''

''மனிதர்களில் கண்ணியத்திற்குரியவர்கள் யார்?''

''நற்காரியம் செய்கிறவர்கள்-இறையச்சம் உள்ளவர்கள்.''

''செயல்களில் சிறந்தது எது?''

''தீமைகளைத் தவிர்த்துக் கடமைகளை நிறை வேற்றுவது.''

''பேச்சுக்களில் சிறந்தது எது?''

''யாருக்கு நீங்கள் பயப்படுகிறீர்களோ, யாருடைய அன்பை நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ, அவர்களுக்கு முன்னால் உண்மையைத் துணிந்து கூறுவது.''

''இறைநம்பிக்கையுள்ளவர்களில் உயர்ந்தவர்கள் யார்?''

''இறைவழியில் நடந்துகொண்டு, மக்களையும் அதன் பக்கம் அழைக்கிறவர்கள்!''

''இறை நம்பிக்கையுள்ளவர்களில் கெட்டவன் யார்?''

''அநியாயக்காரனுக்குத் துணை செய்யும் எண்ணத்துடன் தன்னுடைய மறுமை வாழ்வை விலை பேசி விற்று விட்டவன்.''

அரசரின் முகத்தில் வியர்வை துளிகள் படர்ந்து நின்றன. கண்களில் தெரிந்த ஒளி, மனத்தில் தோன்றியிருந்த ஆவலுக்கு விளக்கம் கொடுத்தது. ஆழ்ந்த பார்வை ஒன்றை அபூஹாஸிம் மீது வீசிய சுலைமான் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''உங்கள் விளக்கத்துக்கு நன்றி. நான் கேட்ட கேள்வி களுக்கெல்லாம் நாசூக்காகப் பதில் கொடுத்துவிட்டீர்கள். இப்போது சொல்லுங்கள்: எங்களைப்பற்றி என்ன நினைக்

கிறீர்கள்? நாங்கள் வகிக்கும் பதவி குறித்து என்ன கருது கிறீர்கள்?''

அபூ ஹாஸிம் சந்தேகத்துடன் ஏறிட்டுப் பார்த்தார். அவரது கண்களில் தயக்கம் தெரிந்தது.

''தயங்க வேண்டாம்!'' என்றார் அரசர். ''நீங்கள் கூறு வதையெல்லாம் அறிவுரையாகவே நாங்கள் கருதுகிறோம். உங்கள் கருத்தைத் தெளிவாகக் கூறுங்கள்.''

''முஸ்லிம்களின் தலைவரே!'' என்று ஆரம்பித்தார் அபூ ஹாஸிம். ''உங்கள் மூதாதையர் வாளைக்காட்டி மக்களைப் பயமுறுத்தினார்கள். முஸ்லிம் பெருங்குடி மக்களின் ஒப்புதலைப் பெறாமலே அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். மறுப்புத் தெரிவித்தவர்களை எல்லாம் வெட்டி வீழ்த்தினார்கள். அப்போது நாட்டில் ரத்த ஆறு உருவெடுத்து ஓடிற்று....''

அரசர் சுலைமான் அவசரப்படவில்லை; ஆத்திரப்பட வில்லை. என்றாலும் அவருடன் உட்கார்ந்திருந்த மேலதிகாரி ஒருவருக்கு ரத்தக்கொதிப்பு ஏற்பட்டது. அனல் கக்கும் விழி களால் அவர் அபூ ஹாஸிமைப் பார்த்தார். ''நீங்கள் இப்படி யெல்லாம் பேசக்கூடாது. நீங்கள் எல்லையை மீறுகிறீர்கள்!''

அபூ ஹாஸிம் சிரித்தார். ''அறிஞர்களுக்கு மகத்தான பொறுப்பு உண்டு. அவர்கள் உண்மையைத் துணிந்து கூற வேண்டுமே தவிர, உண்மைக்குத் திரை போடக்கூடாது. இல்லையேல் இறைவனுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டி ஏற்படும்.''

''உங்களுக்கு உரிமை இருக்கத்தான் செய்கிறது. அதை நானும் மறுக்கவில்லை; அரசர்பிரானும் மறுக்கவில்லை; இங்குள்ள யாரும் மறுக்கவில்லை. ஆனால் நீங்கள் நடந்து போனதைப் பற்றிப் பேசுகிறீர்களே, இதனால் லாபம் என்ன? அதை எப்படித்தான் சீர்திருத்த முடியும்?''



''ஏன் முடியாது?'' என்று திருப்பிக் கேட்டார் அபூ ஹாஸிம். ''எதை நீங்கள் அனுபவிக்கலாமோ, அதை மட்டும் அனுபவியுங்கள். உரிமையில்லாததை நீங்கள் அனுபவிக்கக் கூடாது. உரியவர்களிடம் அதை ஒப்படைத்துவிட வேண்டும்.''

அரசர் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''இப்படி யாரால்தான் நடக்க முடியும்?''

''மறுமையின் இன்பத்தைத் தேடுகிறவர்களால், மறுமை யின் துன்பத்துக்கு அஞ்சுகிறவர்களால், இப்படிக் கண்டிப்பாக நடக்க முடியும்.''

அரசர் சுலைமான் சிந்தனையில் ஆழ்ந்தார். தம் தவற்றுக்கு வருந்துவதுபோல் அவர் காணப்பட்டார். கனிவும் கம்பீரமும் கலந்த பார்வையுடன் அவர் அபூ ஹாஸிமைக் கேட்டார்: ''அபூ ஹாஸிம்! எனக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்.''

அபூ ஹாஸிம் கரங்கள் இரண்டையும் உயர்த்தினார். ''இறைவனே! பிரார்த்தனையைக் கேட்கும் பாராளும் நாயனே! சுலைமான் நீ தேர்ந்தெடுக்க அரசராய் இருந்தால், அவருடைய காரியங்கள் அத்தனைக்கும் துணை செய்வாயாக! அவர் உன்னுடைய விரோதியாயிருந்தால் அவருடைய குடுமியைப் பிடித்துக் குலுக்குவாயாக! அவரிடமிருக்கும் அதிகாரத்தைப் பிடுங்கித் தகுதியும் திறமையும் உள்ள உமது அன்பாளர்களில் ஒருவருக்குக் கொடுத்து விடுவாயாக!''

அரசர் ஒன்றும் பேசவில்லை. ''அபூ ஹாஸிம்! எனக்கு ஏதேனும் அறிவுரை கூறுங்களேன்!''

அபூ ஹாஸிம் கூறினார்: ''இறைவனின் வலிமையை நீங்கள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். அவன் கட்டளை யிட்டதைச் செய்யுங்கள்; அவன் மறுத்ததை வெறுத்து ஒதுக் குங்கள். நீங்கள் இப்போது என்னிடம் அறிவுரை கேட்கிறீர்கள். இப்படித்தான் ஒருசமயம் உமர் பின் அப்துல் அஸீஸ் என்னிடம் அறிவுரை வேண்டினார். நான் சொன்னேன், ''மரணம் எப்போதும் உங்களுக்கு அருகில் இருக்கிறது என்று நினைத்துக்

கொள்ளுங்கள். நீங்கள் விரும்பும் நற்காரியங்களை இப்போதே செய்து முடித்துவிடுங்கள். காலம் வரும்,நேரம் வரும் என்று ஒத்தி போடாதீர்கள்... '' என்று. மரணம் எந்த வினாடியும் உங்களுக்கு வரலாம். அந்த இக்கட்டான நேரத்தில் எது உங்களிடம் இருக்கவேண்டுமோ, அதை இப்போதே செய் யுங்கள்; எது உங்களிடம் இருக்கக்கூடாதோ, அதை இப்போதே விட்டு விடுங்கள். உங்களுக்கு மரணம் வரக்கூடிய நேரம் மிக அருகில் இருக்கக் கூடும். அது எப்போது, எப்படி, எங்கு வரும் என்று யாராலும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. முன்னெச்சரிக்கையோடு நடந்துகொள்ளுங்கள்.''

மற்றொரு சமயம் அபூபக்ர் (ரலி) அவர்கள் முஆவியா (ரலி) அவர்களைச் சந்தித்தார்கள்.

''முஆவியா! இறையச்சத்தை மனத்தில் வைத்து நடந்து கொள்ளுங்கள். கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் உங் களுக்கும் இம்மைக்குமுள்ள தூரம் அதிகப்பட்டுக் கொண்டி ருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக நீங்கள் மறுமையை நெருங்கிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் காலடியைப் பின்பற்றுவதற்குப் பலர் காத்திருக்கிறார்கள். இது உங்களுக்கு மட்டுமல்ல, எனக்கும்தான். நாம் வகிக்கும் பதவி நிச்சயம் அழியக் கூடியது. என்றைக்காகிலும் அதை விட்டு நாம் பிரிந்து தான் ஆகவேண்டும். இனிமேல் நாம் அடையப்போவது, அது நல்லதானாலும் கெட்டதானாலும், நிரந்தரமானது. நல்லது என்றைக்கும் நல்லதுதான். கெட்டது என்றைக்கும் கெட்டதுதான்.''

அரசர்களுடன் தொடர்பு கொண்ட முற்கால அறிஞர்கள் இப்படித்தான் நடந்துகொண்டார்கள். அவர்கள் மறுமையை மனத்தில்கொண்டு வாழ்ந்த உண்மை அறிஞர்கள். எனவே தான் அவர்களால் அப்படி நடக்க முடிந்தது.

ஆனால் இம்மையின் இன்பங்களை மனத்தில் வைத்துக் கொண்டிருக்கும் அறிஞர்களால் கண்டிப்பாய் இப்படி நடக்க



முடியாது. அரசர்கள் செய்யும் தவறுகளைக் கண்டிக்கும் துணிவு அவர்களுக்குக் கிடையாது. அதிகாரிகளைக் குற்றம் சாட்டும் தகுதி அவர்களின் நாவுக்குக் கிடையாது. எனவே அவர்கள் நமது முன்னோர் நடந்த வழியை வேண்டுமென்றே, விட்டுவிட்டுத் தமக்கென்று புதியதொரு வழியை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். முன்னோர் நடந்த வழியில், உலக இன்பத்தை அடைய முடியாது. உலக இன்பத்தை மட்டுமே மனத்தில் வைத்துக் கொண்டிருப்பவர்களால் அந்த வழியில் நடக்க முடியாது.

அவர்கள் எப்போதாகிலும் இப்படி நடந்துகொண்டால் அதற்குத் தன்னலத்தின் அடிப்படையில் ஏதேனும் இருக்க வேண்டும். சீர்திருத்தம் செய்யும் எண்ணம் அவர்களுக்கு இருக்க முடியாது. என்றாலும் தாம் சீர்திருத்தம் செய்யும் எண்ணத்துடனேயே அதிகாரிகளை அணுகுவதாகப் பகிரங்கப் படுத்திக் கொள்கிறார்கள். இதைப் பார்க்கும் பாமரர் அறியா யமாக ஏமாந்து போகிறார்கள்.

இப்படிச் சொல்கிறவர்களை நீங்கள் இலகுவாகப் பரிசோதனை செய்யலாம். அவர்களைவிடச் சிறந்தவர்கள், அதிகாரிகளை அணுகும்போது, அவர்கள் எப்படிக் கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்று கவனியுங்கள். உண்மையிலேயே அவர்கள் சீர்திருத்தத்திற்குப் பாடுபடுகிறவர்களாக இருந்தால் பொறாமை கொள்ளக்கூடாது. சீர்திருத்தம்தான் குறிக்கோள் என்றால், அந்தச் சீர்திருத்தம் யார் மூலமாகவேனும் உருவாக வேண்டியதுதானே?

ஆனால், அவர்கள் திருப்தியுடன் நடந்துகொள்ள மாட்டார்கள். தமக்குப்பதிலாக அரசர்களை அணுகும் அந்த அறிஞர்களை நிந்திப்பார்கள்: அவர்களின் செயல்முறைகளை வெறுப்புடன் பார்ப்பார்கள்.

எனவே, நமது முன்னோர் நடந்துகொண்டதுபோல், நீங்களும் உண்மைக்குப் பாடுபடத் துணிந்தால், அவர்கள்

அதிகாரிகளுக்கு அறிவுரை கூறியதுபோல் நீங்களும் அறிவுரை கூறவிரும்பினால், நீங்கள் தாராளமாக அதிகாரிகளை நெருங்கலாம். தீங்குகள் ஏற்படுகின்றன என்ற காரணத்தினால் தான் அதிகாரப் பீடத்துடன் தொடர்பு கொள்வது கூடாது என்று நான் குறிப்பிட்டேன். உங்களைப் பொறுத்த மட்டில் எந்தத் தீங்கும் ஏற்பட முடியாது என்றால், உங்களுக்குத் தடை விதிக்கும் உரிமை நிச்சயமாக எனக்குக் கிடையாது. உண்மையிலேயே நீங்கள் நாவன்மை பெற்றவராக இருக்கலாம். உங்கள் பேச்சு அநியாயக்கார அதிகாரிகளை அறவழியில் ஆர்வம் கொள்ள வைக்கலாம்.

அதிகாரிகளை எப்படி அணுகவேண்டும், அவர்களுடன் எப்படி உரையாடவேண்டும் என்று நாம் பார்த்துவிட்டோம். அதிகாரிகளையும் அவர்கள் அனுப்பும் அன்பளிப்புகளையும் சேர்த்து வைத்துப் பார்க்கும்போது, நமக்கு முன்னால் சில பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவற்றிற்கு இங்கேயே தீர்வு கண்டு விடுவது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

**முதற் பிரச்சினை:** ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப் பதற்காகப் பண முடிப்பு ஒன்றை நாட்டின் அரசர் உங்களுக்கு அனுப்புகிறார். அதனை நீங்கள் பெற்றக்கொள்ளலாமா, பெற்றுக் கொள்ளக் கூடாதா?

இந்த நூலின் ஆரம்பப் பகுதிகளை நீங்கள் ஊன்றிக் கவனித்துப் படித்திருந்தால், படித்தவை மனத்தில் நிலைத் திருந்தால், இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் எளிதாக தீர்வு கண்டுவிட முடியும். என்றாலும் அடிப்படைப் பிரச்சினை களில் உங்களுக்குத் தெளிவு ஏற்படவேண்டும் எனும் நோக்கத் துடனேயே இந்தப் பிரச்சினையை இப்போது உங்கள் சிந்தனைக்குக் கொண்டு வருகிறேன்.

அந்தப் பொருளுக்கு உரியவன் யாரேனும் இருந்தால் அதனை ஏற்றக்கொள்ளக்கூடாது. உரியவன் இல்லை என்றால் அதனை வாங்கி ஏழைகளுக்குத் தர்மம் செய்துவிட வேண்டும்.



இப்படி ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்வதில் தவறு கிடையாது. இது என்கருத்து; முன்னர் நான் தெளிவுபடுத்திய கருத்து.

இப்படிப் பெற்றுக்கொள்வதிலும், சிலவேளை தவறுகள் ஏற்படத்தான் செய்கின்றன. அரசன் அனுப்பிய தொகையை நீங்கள் பெற்றுக்கொண்டால், அந்தத் தொகை உண்மையிலேயே நல்லதுதான் என்று அவன் நினைக்கக்கூடும். மார்க்க அறிஞ ராகிய நீங்கள் மார்க்கத்துக்கு முரண்பட்டதைப் பெற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்பது அவனுடைய நம்பிக்கை. இப்படி அரசனின் மனத்தில் உண்மைக்கு முரணான நம்பிக்கை ஏற்படுவதை அனுமதிக்கக் கூடாது. இது முதற் கோளாறு.

அடுத்து, நீங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பண முடிப்புப் பெற்ற செய்தியை அறிந்த அறிஞர்களும், பாமரர்களும் தப்புக் கணக்குப் போடக் கூடும். உங்கள் செயலை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அவர்களும் உதவி பெறக்கூடும். ஏழைக் கென்று அனுப்பப்படும் பொருளை அவர்கள் தம்முடைய தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும்.

இப்படித்தான் இமாம் ஷாபியீ அவர்களைப் பார்த்துச் சிலர் தப்புக் கணக்குப் போட்டார்கள். ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் எண்ணத்துடன் மேலதிகாரியிடமிருந்து இமாம் ஷாபியீ பொருள் பெற்றதுண்டு; அதை ஏழைகளுக்குப் பங்கு போட்டுக் கொடுத்ததுண்டு.

ஆனால் இமாம் ஷாபியீயைப் பார்த்த சிலர் உண்மையில் தவறு செய்தார்கள். பங்கிடும் எண்ணத்துடன் அவர்கள் அரசாங்கப் பொருளைப் பெற்றார்கள்.

மக்களைத் தப்பான வழியில் தூண்டிவிடும் அளவுக்கு நீங்கள் எதையும் செய்யக்கூடாது என்பதே நம் கருத்து. இது இரண்டாம் கோளாறு.

அரசனின் அன்பளிப்பு ஒன்று உங்களைத் தேடி வரும் போது, உங்கள் உள்ளத்தில் விவரிக்க முடியாத இன்ப உணர்ச்சி

தோன்றுகிறது. எத்தனையோ அறிஞர்கள் நாட்டில் இருக்கும் போது, அரசர் உங்களைத் தேர்ந்தேடுத்தது குறித்து மகிழ்ச் சியடைவீர்கள். இந்த இன்ப நினைவில் நீங்கள் சிறிது நேரம் அனைத்தையும் மறந்திருப்பீர்கள்.

அன்பளிப்பு வரும் நேரத்தில் உங்களுக்கு இத்தகைய மனநிலை ஏற்பட்டால், அந்த அன்பளிப்பை நீங்கள் பெற்றுக் கொள்ளக்கூடாது. உண்மையில் அது அன்பளிப்பல்ல; உங்க ளையும், உங்கள் உள்ளத்தையும் கொல்வதற்காக வந்திருக்கும் விஷம். அது அநியாயக்காரன் மீது உங்கள் அன்புகொள்ள வைத்து விடுகிறது.

''உதவி செய்தவனுக்கு மனிதனின் உள்ளம் அன்பு செலுத்துகிறது'' என்று அன்னை ஆயிஷா கூறுகிறார்.

பெருமானார் இறைவனிடம் ஒரு சமயம் இப்படிப் பிரார்த்தனை செய்தார்கள்; ''இறைவனே! கெட்டவனின் உதவி எனக்குக் கிடைக்கும்படி செய்துவிடாதே. அதனை என் உள்ளம் விரும்பத் தொடங்கிவிடும்.''

''ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதன் உதவி பெறும்போது முன்னவன்மீது பின்னவனுக்கு இயற்கை யாகவே அன்பு ஏற்படுகிறது என்னும் தத்துவத்தை வைத்துப் பார்க்கும் போது இப்படிச் சில கோளாறுகள் ஏற்படத்தான் செய்யும். பெரும்பாலோருக்கு இது தவிர்க்க முடியாததுதான். இது மூன்றாம் கோளாறு.

அரசனிடமிருந்து பொருளுதவி பெறும்போது, இப்படி யெல்லாம் கோளாறுகள் ஏற்படுகின்றன எனும் காரணத்தை வைத்துச் சில அறிஞர்கள் அன்பளிப்புப் பெறுவதையே மறுத்திருக்கிறார்கள்.

உதவி செய்தவனுக்கு உதவி பெற்றவனின் உள்ளம் அன்பு செலுத்துகிறது என்பது பொது நியதி. என்றாலும் இந்த நியதிக்கு மாறுபட்டவர்களும், அந்தக் காலத்தில் இருக்கத்தான் செய்தார்கள்; இந்தக் காலத்திலும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்கள் சிறப்புள்ளவர்கள். அவர்களுக்கு மார்க்கத்தில் நிச்சயமாகச் சலுகையுண்டு.



இப்படி நடந்துகொண்ட ஒருவர் பற்றிய வரலாறு நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர் பஸராவாசிகளில் ஒருவர். அரசர் களிடமிருந்து பணம் பெற்று அதனை ஏழைகளுக்குப் பங்கிடுவது அவர் வழக்கம்.

''அநியாயக்கார அதிகாரிகளிடமிருந்து இப்படிப் பணம் பெறுகிறீர்களே, நாளடைவில் அவர்களை நீங்கள் விரும்பும்படி ஏற்பட்டுவிடாதா?'' என்று ஒருவர் கேட்டார்.

''எப்படி ஏற்பட முடியும்?'' என்று திருப்பிக் கேட்டார் அந்த மனிதர், ''ஒரு மனிதன் என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்ச் சுவர்க்கத்தில் சேர்த்துவிட்டதாகவே வைத்துக் கொள்வோம். இதைவிடப் பெரிய உதவியை ஒரு மனிதனால் எனக்குச் செய்ய முடியுமா? அப்படியிருந்தும் அந்த மனிதன் இறைவழிக்கு எதிராக நடந்தால் அவனை வெறுத்து விடுவேன்.''

இப்போது இரண்டாம் பிரச்சினை நம் கவனத்துக்கு வருகிறது; அரசாங்கத்திலிருந்து பொருளுதவி பெற்றுத் தர்மம் செய்யலாம் என்றால், அரசனிடமிருக்கும் பொருளைத் திருடலாமா? திருடிய பணத்தைத் தர்மம் செய்யலாமா?''

கூடாது. ஏனெனில் அரசனிடமிருக்கும் பொருளில் ஒரு பகுதி, வேறு யாருக்கேனும் சொந்தமானதாக இருக்கக்கூடும். அவன் அதனைத் தர்மம் செய்ய விரும்புவான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அரசனிடமிருந்து, அவனுடைய அனுமதி யில்லாமல் வரும் பொருள்களில் இப்படித் தொல்லைகள் ஏற்படுகின்றன.

ஆனால், ஒரு தொகையை ஏழைகளுக்குத் தர்மம் செய்யும் எண்ணத்துடன் அரசனே அனுப்பினால், இப்படித் தொல்லை

ஏற்பட முடியாது. அவன் அந்நியனுடைய பொருளைத் தர்மம் செய்வான் என்று எதிர்பார்க்க முடியாது. இது எந்த மனிதனும் கற்பனை செய்யாதது. அவன் வலிய வந்து உங்களிடம் ஒரு தொகையை ஒப்படைக்கிறானல்லவா? இது ஒன்றே போதிய ஆதாரமாகும்-அவன் அந்தப் பொருளுக்கு உரியவனைத் தெரிந்து கொள்ளவில்லை என்பதற்கு.

எனவே எந்த நோக்கத்தை வைத்தும் அரசனிடமிருந்தோ, அவனுடைய பொருளாளரிடமிருந்தோ திருடித் தர்மம் செய்ய முடியாது. ஆகவேதான் அரசாங்கப் பொருளில் கைவைப் பவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அந்த அரசாங்கம் நேர்மை யுடன் நடந்து கொள்கிறதா, இல்லையா என்று கவனிக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால், அரசனிடமிருந்து திருடிய ஒருவன் தான் குற்றவாளி அல்ல என்றும், தான் திருடிய பொருளுக்கு நாட்டின் அரசன் உரியவனல்ல என்றும் வாதாடினால், பிரச்சினையில் வித்தியாசம் ஏற்படும். அப்போது அவனை எடுத்த எடுப்பில் தண்டித்துவிட முடியாது.

மூன்றாம் பிரச்சினைக்கு இப்போது வாருங்கள். மேற்குறிப்பிட்ட அரசர்களிடம் இருக்கும் பொருள்கள் எல்லாம், அல்லது இருக்கும் பொருளில் பெரும்பகுதி தப்பான வழியில் வந்திருப்பதாக நாம் அறிகிறோம். இது போன்ற கட்டங்களில் அவர்களுடன் வர்த்தகத் தொடர்பு வைத்துக் கொள்வது கூடாது. நம்மிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒரு பொருளுக்கு அவர்கள் கொடுக்கும் கிரயத்தையும் சந்தேகிக்க வேண்டியதாகத்தான் இருக்கும்.

எதை வைத்து அவர்கள் தவறு செய்கிறார்களோ அதை அவர்களுக்கு விற்கக்கூடாது. உதாரணத்திற்குப் பட்டா டைகளை எடுத்துக் கொள்வோம். ஆண் மகன் பட்டாடை அணியக்கூடாது என்பது இஸ்லாத்தின் தீர்ப்பு. அது பெண் மணியின் பட்டு மேனிக்கு மட்டுமே சொந்தமானது.



ஆனால், அதிகாரத்திலிருப்பவர்கள் இதைக் கவனிப்ப தில்லை. வேண்டுமென்றே பட்டாடை அணிகிறார்கள். எனவே அவர்களுக்குப் பட்டாடைகளை விற்பனை செய்வது கூடாது. சாராயம் தயாரிக்கிறவனுக்குத் திராட்சைக் கனிகளை விற்பனை செய்வது தவறல்லவா? அத்தகையதுதான் இதுவும்.

இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து பார்த்தால், அந்த அதிகாரிகளுக்கு அன்பளிப்புக் கொடுக்கக்கூடாது என்றும் சொல்லலாம். கூலி பெறாமல் வேலை செய்வதும் கூடாது. என்றாலும், அவர்களுக்கோ, அவர்களின் குழந்தைகளுக்கோ திருக்குர்ஆனை இலவசமாகக் கற்றுக் கொடுப்பது அனுமதிக் கப்பட்ட ஒன்று. இலவசமாகத்தான் கற்றுக் கொடுக்க வேண்டுமே தவிர, ஊதியம் கேட்கவும் கூடாது; கொடுக்கப் பட்டால் பெற்றுக் கொள்ளவும் கூடாது. ஏனெனில் அவர் களிடமிருந்து கிடைக்கும் கூலி தப்பான பொருளிலிருந்துதான் இருக்கும். நல்ல பொருளுக்கும், கெட்ட பொருளுக்கும் அவர்கள் வேற்றுமை பார்ப்பதில்லையல்லவா?

என்றாலும், திருக்குர்ஆனை ஓதிக் கொடுத்ததற்காக, அவர்கள் கொடுக்கும் ஊதியம் நிச்சயமாக நல்ல பொருள்தான் என்று தெரிந்தால் பெற்றுக் கொள்ளலாம்.

அவர்கள் தமக்கென்று ஒரு பணியாளை வைத்திருக் கிறார்கள் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அவர் களுக்குத் தேவைப்படுவதை யெல்லாம் அவர்தான் கடைத் தெருவிலிருந்து வாங்கிச் செல்கிறார்.

அந்தப் பணியாளுக்கு நீங்கள் எந்தச் சலுகையும் கொடுக்க வேண்டியதில்லை. மற்ற வாடிக்கைக்காரர்களிடம் எப்படி நீங்கள் நடந்து கொள்கிறீர்களோ, அப்படியே அவரிடமும் நடந்து கொள்ளுங்கள். சலுகை செய்யும் எண்ணத்தோடு பணம் வாங்க மறுப்பதும், இலவசமாகப் பொருளைக் கொடுப்பதும் வரவேற்கத் தகாதவை.

அவர் மேலதிகாரிகளுக்காக வாங்க வந்திருக்கும் பொருள் உங்கள் மனத்தில் குழப்பத்தைத் தோற்றுவிக்கிறது. அதை வைத்து அவர்கள், தவறு செய்வார்கள் என்று உங்களுக்குத் தெரிகிறது. இந்தக் கட்டத்தில் அந்தப் பொருளை அந்தப் பணியாளுக்கு விற்பனை செய்யக்கூடாது. அரசர்கள் செய்யும் தவறுகளுக்கு வர்த்தகர்கள் துணை செய்யக்கூடாது.

**நான்காம் பிரச்சினை:** அநியாயக்கார அரசர்கள் நாட்டை நிர்மணிக்கும் வழியில் பல வேலைகளைச் செய்கிறார்கள். கடை வீதி ஒன்றை அவர்கள் நிர்மாணித்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். தப்பான பொருளை வைத்துத்தான் அவர்கள் இந்த வேலையைச் செய்திருப்பார்கள் என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது.

இத்தகைய கடைவீதியில் குடியும் குடித்தனமுமாகத் தங்கி விடுவதற்கு அனுமதியில்லை. ஆனால் இங்கு தங்கியிருக்கும் ஒருவன், நியாயப்படி வர்த்தகம் செய்து சம்பாதித்தால், அவன் சம்பாத்தியம் நல்லதுதான் . என்றாலும், அங்கு தங்கியிருப் பதற்குரிய குற்றம் அவனுக்கு நிச்சயம் ஏற்படும். அந்த கடை வீதிக்குச் சென்று தேவையான பொருள்களை வாங்கி வருவதும் குற்றமல்ல. என்றாலும் அதைத் தவிர்த்து, வேறொரு கடைத் தெரு இருந்தால் அங்கு செல்வதே நல்லது.

**ஐந்தாம் பிரச்சினை:** நீதியை மதிக்காத அரசர்களுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ளக்கூடாது என்று நான் குறிப் பிட்டேன். அரசர்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்தின் கண்காணிப்பிலிருக்கும் நீதிபதிகள், உயர்தர அதிகாரிகள் முதலியோருக்கும் இதே தீர்ப்புத்தான்.

நீதிபதிகள் போதிய அளவுக்கு மார்க்க அறிவு பெற் றவர்கள். அவர்கள் தெரிந்துகொண்டே தப்பான பொருளி லிருந்து, தம்முடைய தேவைகளை முடித்துக் கொள்கிறார்கள். தம் பதவியை வைத்து அவர்கள் மக்களைத் தாழ்த்துகிறார்கள்.



தாம் நடக்கும் வழியில் அவர்கள் மற்றவர்களையும் நடக்க வைத்து விடுகிறார்கள்.

சுருங்கச் சொன்னால், நாட்டு மக்கள் தவறான வழியில் நடப்பதற்கெல்லாம், அரசர்களும் அரசாங்க மேலதிகாரிகளும் தான் காரணம் என்று சொல்லலாம். அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கும் அறிஞர்கள் அரசர்களுக்குத் தைரியம் கொடுக் கிறார்கள். அவர்களின் தூண்டுதலால் அரசர்கள் தவறு செய்கிறார்கள். இப்படி பார்க்கும்போது அரசர்கள் செய்யும் தவறுகளுக்கெல்லாம் அறிஞர்களே காரணம் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கிறது.

மார்க்கத்தை மதிக்காத நீதிபதிகளும், தீமைக்குத் துணை செய்யும் மார்க்க அறிஞர்களும் இல்லை என்றால், அதிகார வர்க்கம் செய்யும் அட்டூழியம் கணிசமான அளவுக்குக் குறைந்து போய்விடும். அறிஞர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து 'பத்வா' கொடுத்துவிடக் கூடும் என்னும் அச்சம் அரசர்களுக்கும் இருக்கத்தான் செய்யும். மார்க்க அறிஞர்களுக்குச் சமுதாயத்தில் என்றைக்கும் மதிப்புண்டு. அவர்கள் விரும்பினால் ஆட்சிப் பீடத்திற்கு எதிராக மக்களைத் தூண்டிவிட முடியும்.

மார்க்க அறிஞர்கள், மகத்தான பொறுப்புள்ளவர்கள். ஏதேனும் ஒரு விதத்தில் அந்தப் பொறுப்பை அவர்கள் நிறை வேற்றித்தான் ஆகவேண்டும். எந்தக் கோணத்திலும் அவர்கள் அநீதிக்குத் துணை நிற்கக்கூடாது.

''மார்க்க அறிஞர்கள், அதிகாரிகளுக்குப் பணியாதவரை, இந்தச் சமுதாயம் இறைவனின் அன்புக்கடியில்தான் இருக்கும்'' என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள்.

''அரசனுடனும் கலக்காதே; அரசனிடம் தொடர்பு கொண்டிருப்பவனுடனும் கலக்காதே'' என்பது சுப்யானின் கருத்து.

**ஆறாம் பிரச்சினை:** மேற்குறிப்பிட்ட அரசர்கள் பள்ளிவாசல் ஒன்று எழுப்பியிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பள்ளியில் தொழலாமா?

இது, இன்னும் கொஞ்சம் ஆழமாக ஆராயவேண்டிய பிரச்சினை. அந்தப் பள்ளியை எழுப்புவதற்கு உபயோகிக்கப் பட்டிருக்கும் பொருள்கள், அந்தப் பள்ளி கட்டப்பட்டிருக்கும் நிலம் முதலியவை குறித்தெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

அந்நியன் ஒருவனின் நிலத்தில், அநியாயமாகக் கிடைத்த பொருளை வைத்துப் பள்ளிவாசல் கட்டப்பட்டிருந்தால் அதற்குள் நுழையவே கூடாது. வெள்ளிக்கிழமையின் அணி வகுப்புத் தொழுகைக்குகூட அங்கு செல்லக்கூடாது. போய்த் தான் தீரவேண்டும் என்றால், தொழுகையின் தலைவர் உள்ளே நிற்க, நீங்கள் பள்ளிக்கு வெளியே நின்று தொழுகையை நிறைவேற்றுங்கள்.

அந்தப் பள்ளிக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருளுக்கு உரியவன் யார் என்று தெரியவில்லை என்றால் அதனை விட்டுவிட்டு வேறொரு பள்ளிக்குச் சென்று விடுவதே நல்லது. வேறு பள்ளி இல்லை என்றால், அந்தப் பள்ளி யிலேயே வெள்ளிக்கிழமை அணிவகுப்புத் தொழுகையை நிறைவேற்றலாம்; ஐங்கால அணிவகுப்புத் தொழுகைளையும் அங்கேயே நிறைவேற்றலாம்.

அந்தப் பள்ளிக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருள் அரசனுக்குரியதாகவும் இருக்கலாம். வாரிசு யார் என்று தெரிந்துகொள்ள முடியாத நிலையில் கைக்கு வந்த பொருளா கவும் இருக்கலாம். இப்படி வரும் பொருள்களை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உங்களுக்குத் தெரியும். பள்ளிவாசல் எழுப்புவது இத்தகைய வேலைகளில் ஒன்றுதான்.



அரசன் தன்னுடைய பொருளிலிருந்து, அது மோசமான வழியில் கிடைத்ததாயினும், ஒரு பள்ளியைக் கட்டினால் அதனைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இங்கு பொது நன்மை உருவாகிறது. அரசன் குற்றவாளியாக யிருக்கலாம். ஆனால் மற்றவர்களை அது பாதிக்காது.

**ஏழாம் பிரச்சினை:** ஒரு மனிதனுக்குச் சொந்தமான நிலத்தை, அரசாங்கம் பொது வீதியாக்கி விட்டது என்று வைத்துக் கொள்வோம். இது கண்டிப்பாக அநியாயம்தான். அந்த வீதியில் யாரும் நடக்கக்கூடாது. ஆனால் அந்த நிலத்துக்கு உரியவன் யார் என்று தெரியவில்லை என்றால் அப்போது பிரச்சினையில் வித்தியாசம் ஏற்படும். இப்படிக் கேட்பாரற்றுக் கிடக்கும் நிலங்களைப் பொது நன்மைக்குப் பயன்படுத்துவதில் தவறு கிடையாது. எனவே அந்த வீதியைப் பொது வீதியாகப் பொது மக்கள் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# 15. இன்னும் சில வினாக்கள்

**மா**ர்க்க அறிஞர்களிடம் அடிக்கடி கேட்கப்படும் வினாக்களையும், அவற்றிற்கு அவர்கள் கொடுக்கும் விளக்கங்களையும் இந்த அத்தியாயத்தில் நாம் ஆராய்வோம். இந்தப் பிரச்சினைகள் தற்போதைய சூழலில் சர்வ சாதாரண மாகக் காணப்படுபவை. இவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நல்லது கெட்டது பற்றிய இந்த நூலில், இந்த விவரங்கள் அவசியம் இருக்கத்தான் வேண்டும். இல்லையேல் இந்த நூலை முழுமையானது என்று சொல்ல முடியாது.

***வினா:*** இறை வணக்கத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கிறவர்கள் சாதுக்கள். அவர்கள் 'சூபிகள்' என்று அழைக்கப்படுகிறார்கள். தமக்குத் தேவையானதை எல்லாம், அவர்களே வெளியில் சென்று வாங்கி வரமுடியாது. அப்படி சென்று வரும் நேரத்தை வேறு ஏதேனும் ஒரு வணக்கத்தில் செலவிடுவது நல்லது என்பது அவர்களின் கருத்து.

அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பிரத்தியோக வருமானம் எதுவும் கிடையாது. அவர்களுக்கு உதவி செய்வதுபோல் சிலர் வழக்கமாக உணவோ பணமோ அனுப்பி வருகிறார்கள். பொது மக்களின் அன்பிலிருந்து கிடைக்கும் பொருளை வைத்து அவர்கள் உயிர் வாழ்கிறார்கள்.



அந்த சாதுக்கள் அதனைச் சாப்பிடலாமா? சாப்பிடக் கூடாதா?

***விடை:*** 'சூபிகள்' எனப்படும் சாதுக்களைப் பொறுத்த மட்டில், பிரச்சினையில் எந்தக் குழப்பத்திற்கும் இடமில்லை. அந்தப் பொருளிலிருந்து அவர்கள் தாராளமாகச் சாப்பிடலாம்.

உணவு சேகரித்துக்கொண்டு வருகிறவரின் அனுமதி யிருந்தால், மற்றவர்களும் அதனைச் சாப்பிடலாம். என்றாலும் இது அவ்வளவு நல்லதல்ல. உணவு சேகரிக்கிறவர் சாதுக் களுக்குக் கொடுக்கிறார். குடும்பஸ்தன் ஒருவன் தன் குடும் பத்தைக் கவனித்துக் கொள்வதுபோல், அவர் சாதுக்களைக் கவனித்துக் கொள்கிறார். எனவே அவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் அதனைச் சாப்பிடுவது நல்லதல்ல.

***வினா:*** திரண்ட செல்வத்தை விட்டுச் சென்ற ஒருவர் அதில் ஒரு பகுதியை சாதுக்களுக்கென்று ஒதுக்கி வைத்திருக்கிறார். அதை யாருக்குச் செலவு செய்ய வேண்டும்?

***விடை:*** பொருளுக்குரியவரின் கருத்துப்படி, அந்தச் செல்வம் சாதுக்களுக்குத்தான் செலவிடப்பட வேண்டும்; ஆனால் உண்மையான சாது யார் என்று கண்டு பிடிப்பது, அப்படி ஒன்றும் இலகுவான காரியமல்ல. சாதுக்களின் சிறப்பு, அவர்களின் மனப்பண்பைப் பொறுத்தது. உடையையும் உருவத்தையும் வைத்துத் தீர்மானிக்கும் விஷயமல்ல இது. ஒரு மனிதன் உண்மையில் சாதுவா? இல்லையா ? என்று யாருக்கும் நிச்சயமாகத் தெரியாது. வெளிப்படையாக உலவும் வதந்திகளை முழுக்க முழுக்க நம்பிக்கொண்டு எதையும் செய்யமுடியாது.

எனவே அவர்கள் சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வருவது, உண்மையிலேயே சிரமமான காரியம்தான்.

ஆனால் உண்மையான மனப்பண்பை மனிதர்களில் எவரும் தெரிந்துகொள்ள முடியாது எனும் காரணத்தை

வைத்துக் கொண்டு, இந்தப் பிரச்சினையை அடியோடு ஒதுக்கித் தள்ளி விடவும் முடியாது. ஆகவே வெளித்தோற்றத்தில் தெரியும் விவரங்கள் சிலவற்றை அனுசரித்துத்தான் ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

ஒரு மனிதன் சாதுக்களுடன் கலந்து வாழ்ந்தால், அவர்களின் நடைமுறைகளை ஏற்று நடந்தால், அவர்களின் குணங்களைப் பிரதிபலித்துக் கொண்டால், அவனைச் சாது என்று சொல்லாம்.

இப்படி ஒரு மனிதனைத் தீர்மானிக்கும் முன்னர் அவனிடம் ஐந்து குணங்களைப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

1. அவன் சீர்திருத்த மனம் படைத்தவனாக இருக்க வேண்டும்.
2. வறுமையில் பெருமை காணும் மனப்பான்மை கொண்டவனாக இருக்க வேண்டும்.
3. சாதுக்கள் அணிவது போன்ற மட்டமான துணிகளை அவன் மகிழ்வுடன் அணிந்து கொள்ளவேண்டும்.
4. பணம் சேர்ப்பதற்கென்று அவன் எந்த வியாபாரத்தையும் மேற்கொள்ளக் கூடாது.
5. சாதுக்களின் வாழ்க்கையைப்போல் அவன் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு மனிதனிடம் இவற்றில் ஒன்று இல்லை என்றாலும் அவனை 'சூபி' என்று சொல்ல முடியாது. 'சூபி' என்ற அரபிப் பதத்துக்கும் - சாது என்ற தமிழ்ப் பதத்துக்குமிடையில் அப்படியொன்றும் பாரதூரமான வேற்றுமை கிடையாது.

ஒரு மனிதன் தவறு செய்து கொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் செய்யும் தவறு மக்களுக்கு நன்றாகத் தெரிகிறது. இது போன்ற கட்டத்தில், அவன் அணிந்திருக்கும் உடைக்கு எவ்வித மதிப்பும் கிடையாது, சாதுக்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் சொத்திலிருந்து ஒரு



செப்புக் காசுகூட அவனுக்குச் செல்லக்கூடாது. ஏனெனில், நல்ல எண்ணம் படைத்த, தூய குறிக்கோள் கொண்ட ஒரு மனிதனுக்கே சாது என்று பெயர். தவறு செய்வதையே வேலையாகக் கொண்டிருக்கும் யாருக்கும் சாது என்று பெயரிட முடியாது.

தவிர, சாதுக்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் பொருளை, வியாபாரிகளும் அடைய முடியாது; வருமானத்திற்கு வேறு வழியுள்ளவர்களும் அடைய முடியாது. இப்படி வியாபாரம் செய்கிறவர்கள் சாதுக்களுடன் கலந்து வாழ்வதாலோ, சாதுக்களைப்போல் உடை அணிவதாலோ, அந்தச் சொத்தில் எவ்வித உரிமையையும் பெற்றுவிட முடியாது.

என்றாலும், சாதுக்கள் தமக்கென்று குறிப்பிட்ட சில தொழில்களை மேற்கொண்டிருக்கிறார்கள். நூல் நூற்பது அந்தத் தொழில்களில் ஒன்று. இது போன்ற தொழில்களில் ஈடுபடுவதால் ஒன்றும் தவறு கிடையாது. அவர்கள் அந்தச் சொத்துக்கு நிச்சயமாக உரிமை கொண்டாடலாம். ஏனெனில் பணம் சேர்க்கும் எண்ணத்துடன் அந்தத் தொழிலில் அவர்கள் ஈடுபடுவதில்லை. இறை வணக்கத்தில் களைப்படைந்த மனத்துக்குப் புதுத்தெம்பு கொடுப்பதற்காக இப்படிப் பொழுது போக்குகிறார்கள்.

சாதுக்களில் ஒருவர் தம்முடைய வழியில் சென்று கொண்டிருக்கிறார். அவருக்கு வர்த்தக நிறுவனம் ஒன்று வேலை செய்து கொண்டிருக்கிறது. தாமே சென்று அதில் தலையிடாமல் அவர் அதனைக் கவனித்துக் கொள்கிறார். அதனால் அவருடைய இறை வணக்கத்துக்குப் பாதகம் ஏற்படுவதில்லை. இந்தக் கட்டத்தில் அவரை சாது என்று அழைப்பதில் தவறு கிடையாது.

மக்களுக்கு அறிவுரை கூறுவது, அறியாதவர்களுக் கல்வி போதிப்பது முதலியவை சாதுக்கள் மேற்கொள்ளும் தொழில்களில் உள்ளவைதான். இவற்றில் ஈடுபடுவதால் சாதுக்களுக்கு எவ்விதப் பங்கமும் கிடையாது.

**வினா:** அன்பளிப்பும் லஞ்சமும் மக்களிடையே சாதாரண மாகக் காணப்படுகின்றன. இந்த இரண்டும் திருப்தியின் அடிப்படையிலேயே உருவாகின்றன. ஏற்றுக் கொள்கிற வர்களும் திருப்தியுடன்தான் இருக்கிறார்கள். இப்படியிருக்க, அன்பளிப்புக்கு அனுமதி கொடுத்திருக்கும் இஸ்லாம் இலஞ்சத்துக்கு ஏன் கண்டனம் தெரிவிக்க வேண்டும்?

**விடை:** பணத்தைச் செலவு செய்கிறவர்கள் ஏதேனும் ஒன்றை நிச்சயமாக மனத்தில் வைத்திருப்பார்கள். உள்நோக்கம் எதுவுமில்லாமல் செலவு செய்கிறவர்களைக் காண்பது அரிது. சிலர் இம்மையில் பலனை எதிர்பார்த்துச் செலவு செய்கி றார்கள். வேறு சிலர் மறுமையின் பலனை மனத்தில் வைத்துக் கொண்டு செலவு செய்கிறார்கள். மொத்தத்தில் ஒவ்வொரு வருடைய மனத்திலும் சுயநலம் இருக்கத்தான் செய்கிறது.

அன்பளிப்பும் லஞ்சமும் வெளிப் பார்வைக்கு ஒன்றுபோல் தெரிந்தாலும், அவற்றிற்கிடையில் நிச்சயமாக வேற்றுமை யுண்டு. கொடுக்கிறவர்களும் பெறுகிறவர்களும் திருப்தியுடன் நடந்து கொள்கிறார்கள் என்பதில், ஒற்றுமை இருந்தாலும், அவற்றிற்கு அடியிலுள்ள நோக்கங்களைப் பொறுத்த மட்டில் வேற்றுமை இருக்கத்தான் செய்கிறது.

கொடுக்கிறவருக்கும் பெறுகிறவருக்குமிடையில் அன்பு வளரவேண்டும் எனும் உள்நோக்கத்திலிருந்தே அன்பளிப்பு வெளிப்படுகிறது. இந்த உள்நோக்கம் லஞ்சத்துக்குப் பொருந் தாது. லஞ்சம், கொடுக்கிறவருக்கும் பெறுகிறவருக்கும் இடையில் அன்பு வளரவேண்டும் எனும் நோக்கத்துடன் கொடுக்கப்படுவதில்லை. லஞ்சம் பெறுகிறவர், லஞ்சம் கொடுக்கிறவருக்குக் குறிப்பிட்ட ஒரு சட்டத்தை விட்டுக் கொடுக்க வேண்டும் எனும் தீய நோக்கத்துடனேயே பெரும் பாலும் லஞ்சம் கொடுக்கப்படுகிறது.

'லஞ்சம் கொடுக்கவும் கூடாது, வாங்கவும் கூடாது' என்று உங்களுக்குத் தெரியும். ஒரு மனிதன் கொடுக்கும் பணத்துக்காக



மார்க்கத்தின் சட்டத்தை அல்லது சட்டங்களைத் திரைபோட்டு மறைப்பதற்குச் சலுகை இல்லை.

**வினா :** கொடுக்கப்படும் அன்பளிப்புகளைப் பெற்றுக் கொள்ளலாமா? பெற்றுக் கொள்ளக் கூடாதா?

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதானால், அந்த அன்பளிப்புக்கு அடியில் ஒளிந்து கொண்டிருக்கும் நோக்கத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

சிலர் மறுமையின் நல்வாழ்வைக் குறிக்கோளாக வைத்து அன்பளிப்புக் கொடுக்கிறார்கள். மார்க்க ஞானிகள், சட்ட நிபுணர்கள் முதலியோருக்கு வரும் அன்பளிப்புகள் இத்தகை யவையே. எதை மனத்தில் கொண்டு அன்பளிப்புக் கொடுக்கப் படுகிறதோ, அதற்குத் துணை செய்யும் துணிவு இருந்தால் மட்டுமே இந்த அன்பளிப்பைப் பெற்றுக் கொள்ளலாம். அறிஞர் ஒருவர் சிரமப்படுகிறார் என்ற காரணத்தை வைத்து, அவருக்கு உதவி செய்யும் எண்ணத்துடன் ஒருவன் அன்பளிப்புக் கொடுத்தால், அந்த அன்பளிப்பைப் பெறுகிறவர் உண்மை யிலேயே சிரமப்படுகிறவராகத்தான் இருக்க வேண்டும். தேவையில்லாதபோது அதனைப் பெற்றுக் கொள்ளக் கூடாது.

மார்க்க அறிவு பெற்றிருக்கும் நீங்கள் மக்களுக்குத் தொண்டு செய்கிறீர்கள் என்று நினைத்துக்கொண்டு ஒருவர் அன்பளிப்புக் கொடுக்கிறாரா? உண்மையிலேயே நீங்கள் மக்களுக்குத் தொண்டு செய்யும்போதுதான் அதனைப் பெற்றுக் கொள்ளலாம். உங்களிடம் இருக்கும் அறிவு அந்த அன் பளிப்பை ஏற்றுக் கொள்ளுவதற்குரிய உரிமையை உங்களுக்குக் கொடுக்காது.

அரசாங்க அதிகாரிகளுக்குச் செல்லும் அன்பளிப்பில், வேறு நோக்கங்கள் இருக்கக்கூடும். அந்த அன்பளிப்பில் நேர்மைக்கு எதிரான நோக்கம் இருந்தால், அதனை ஏற்றுக் கொள்ளக்கூடாது. தெரிந்தோ தெரியாமலோ நாட்டில் நடக்கும் அட்டூழியத்தைத் தடை செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன்

ஓர் அதிகாரிக்கு அன்பளிப்பு கொடுக்கப்பட்டால் அதனை அவர் பெற்றுக் கொள்ளக்கூடாது. நாட்டில் நடக்கும் அட்டூழியத்தைத் தடுப்பது மேலதிகாரிகளின் கடமை. கடமையைச் செய்வ தற்காகக் கூலி பெறுவது கூடாது. இது போன்ற கட்டத்தில் கொடுக்கப்படும் அன்பளிப்பு லஞ்சமாக உருமாறுகிறது.

நாட்டின் அதிகாரி ஒருவர் உங்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் சலுகை காட்டுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் காட்டும் சலுகை சட்டத்துக்கு எதிரானதல்ல; சலுகை காட்ட வேண்டிய கடமையும் அவருக்குக் கிடையாது. இதுபோன்ற கட்டத்தில் நீங்கள் அன்பளிப்புக் கொடுக்கலாம். அதனை அவர் தாம் செய்த சலுகைக்குப் பிரதிபலனாகப் பெற்றுக் கொள் ளலாம். உங்களுக்குச் சலுகை காட்டும் வழியில் அவர் எடுத்துக் கொண்ட சிரமத்துக்கு இது ஓர் அன்புக் காணிக்கையாக இருக்கட்டும். இந்த அன்பளிப்பில் நிச்சயமாகத் தவறு கிடையாது.

இன்னும் சில வேளைகளில் வெறும் அன்பை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு அன்பளிப்புக் கொடுக்கப்படுகிறது. இங்குதான் அன்பளிப்பு எனும் வார்த்தை மிகப் பொருத்தம். இத்தகைய சூழலில் லஞ்சம் உருப்பெற முடியாது. அன்பை அடிப் படையாகக் கொண்ட லஞ்சம் கொடுக்கப்படுவதில்லை. விஷயம் தெரிந்தவர்கள் கொடுக்கும் அன்பளிப்பு இப்படித்தான் இருக்கும்.

இந்த அன்பளிப்புக்கு மார்க்கத்தில் அனுமதியுண்டு. ''அன் பளிப்புக் கொடுப்பதன் மூலம் ஒருவருக்கொருவர் நட்பை வளர்த் துக் கொள்ளுங்கள்'' என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் இது போன்ற அன்பளிப்பு மிகக் குறைவு என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

எனவே, இது போன்ற பிரச்சினைகளில், அடி மனத்தின் நோக்கத்தை வைத்துத்தான் தீர்ப்பு வழங்க வேண்டும்.

எல்லாம் தெரிந்தவனும் எங்கும் நிறைந்தவனும் இறைவன் ஒருவனே.